உதவி தடுப்பு அலுவலர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்	24	04, 05, 06 ஜூலை 2022	35,000		,,	தடுப்பு பணிப்பகத்தில் பயணியை தொடங்கும் வகையில் சுங்கச் சட்டம், உதவி தடுப்பு அலுவலர்களது கடமைகள் மற்றும் விசாரணை செய்கின்ற திறன்கள் என்பவற்றின் அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் உதவி தடுப்பு அலுவலர்களுக்கு தேவையான திறன்களை உருவாக்கியமை
உதவி தடுப்பு அலுவலர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்	34	29, 30 ஜூன் மற்றும் 01ஜூலை 2022	35,000		,,	பயணிகள் சேவைகள் பணிப்பகத்தில் பணியியை தொடங்கும் வகையில் உதவி தடுப்பு அலுவலர்களுக்கு தேவையான திறன்களை உருவாக்கியமை
கைத்தொழில் மற்றும் சேவைகள், இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் மற்றும் ஏற்றுமதிகள் பணிப்பகங்களுக்கு புதிதாக இடமாற்றம் பெற்றுவந்த அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டம்	17	08 மற்றும் 09 ஆகஸ்ட் 2022	17,000		,,	கைத்தொழில் மற்றும் சேவைகள், இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் மற்றும் ஏற்றுமதி பணிப்பகங்களுக்கு இடமாற்றம்பெற்றுவந்த அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்ததுடன் அவர்கள் தங்கள் கடமைகளை திறமையாகவும் பயன்மிக்கவகையிலும் தொடங்குவதற்கு ஏதுவாக அமைந்தமை
வழக்குத் தொடரல் மற்றும் விசாரணை குறித்த வேலைக்களரி	30	15, 16, 17 ஆகஸ்ட் 2022	31,936		,,	முறையான சுங்க விசாரணைகளை அதன் உரிய படிமுறையுடன் மேற்கொள்கின்ற அலவலர்களது அறிவினை மேம்படுத்தியமை மற்றும் அதில் பொருந்தத்தகு சட்டங்கள் மற்றும் நடைமுறைகளுடன் தங்களை பழக்கப்படுத்தல்
சுங்க பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் சுங்க அத்தியட்சகர்களுக்கான அசிகுடா வேல்ட் குறித்த பயிற்சி	29	17, 18 & 25 ஆகஸ்ட் 2022	6,576		,,	சிரேஷ்ட சுங்க பிரதிப் பணிப்பாளர்/சுங்க பிரதிப் பணிப்பாளர்களின் தொடர்புடைய பணியுடன் குறித்த அசிகுடா அமைப்பு பற்றிய அறிவு மற்றும் பயிற்சி வழங்கப்பட்டமை
சுங்க பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் சுங்க அத்தியட்சகர்களுக்கான திறன் விருத்தி பயிற்சித் திட்டம்	60	04, 05, 06 மற்றும் 07 ஒக்டோபர் 2022	847,644		,,	சுங்கச் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களின் பயன்பாடுகளுடன் திறமையான விசாரணை அதிகாரியாக ஆவதற்கு தேவையான நடைமுறைப் பயிற்சி அளிக்கப்பட்டமை
கைத்தொழில் மற்றும் சேவைகள்	15	08 ஆகஸ்ட்	7,000		,,	ஏற்றுமதி பணிப்பகத்திற்கு இடமாற்றம்பெற்றுவந்த அலுவலர்களின்

பிரிவுக்கு புதிதாக இடமாற்றம் பெற்றுவந்த அலுவலர்பளுக்கான பயிற்சித் திட்டம்		2022				திறன்களை விருத்தி செய்ததுடன் அவர்கள் தங்கள் கடமைகளை திறமையாகவும் பயன்மிக்கவகையிலும் தொடங்குவதற்கு ஏதுவாக அமைந்தமை
சுங்க உதவி அத்தியட்சகர்களுக்கான அசிகுடா வேல்ட் குறித்த பயிற்சி	10	06 மற்றும் 13 செப்டம்பர் 2022	4,900		,,	சுங்க உதவி அத்தியட்சகர்களின் தொடர்புடைய பணியுடன் குறித்த அசிகுடா அமைப்பு பற்றிய அறிவு மற்றும் பயிற்சி வழங்கப்பட்டமை
இயைபுமுறை பொருள் வகைப்படுத்தல் குறித்த உயர் பாடநெறி	26	12 - 16 மற்றும் 19 - 23அக்டோபர் 2022	56,000		உள்நாடு	நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் மேம்பட்ட வகைப்படுத்தல் பிரிவுகளில் ஏற்கனவே பெறுமதி மதிப்பீட்டாளர்களாக பணிபுரியும் அலுவலர்களது அறிவினை மேம்படுத்தியமை
உதவி தடுப்பு அலுவலர் - உயர் பாடநெறி	38	11, 12 மற்றும் 18, 19 ஒக்டோபர் 2022	31,100		,,	உதவி தடுப்பு அலுவலர்களின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய அறிவு மற்றும் திறன்களை உருவாக்கியமை மற்றும் வேலையின் தரத்தை மேம்படுத்துவதற்கு முக்கியமானதாக இருக்கின்ற அனுபவமிக்க அலுவலர்களுடையே அறிவினை பகிரந்து கொள்ளவும் உதவியாக இருந்தமை
சுங்க காவலர்களுக்கான திறன் விருத்தி பயிற்சித் திட்டம்	10	08 டிசம்பர் 2022	4,268		,,	தேவையான மென் திறன்களுடன் சுங்க காவலராக கடமைகளை நிறைவேற்றுவதற்கான பயிற்சி மற்றும் அறிவு வழங்கப்பட்டமை
அலுவலக ஊழியர்களுக்கான திறன் விருத்தி பயிற்சித் திட்டம்	17	02 நவம்பர் 2022	8,000		,,	அலுவலக ஊழியர்களால் பின்பற்ற வேண்டிய பணி நெறிமுறை மற்றும் அலுவலக நடைமுறைகளில் திறன்களை விருத்தி செய்தல்
முகாமைத்துவ சேவைகள் அலுவலர்களுக்கான திறன் விருத்தி பயிற்சித் திட்டம்	55	03 மற்றும் 04 நவம்பர் 2022	24,000		,,	முகாமைத்துவ சேவைகள் அலுவலர்களுக்கு தேவையான அறிவு மற்றும் திறன்களை விருத்திசெய்தது
சுங்க பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் சுங்க அத்தியட்சகர்களுக்கான அசிகுடா வேல்ட் குறித்த பயிற்சி	27	22, 24 மற்றும் 29 நவம்பர் 2022	8,250		,,	சுங்க பிரதிப் பணிப்பாளர்/சுங்க அத்தியட்சகர்களின் தொடர்புடைய பணியுடன் குறித்த அசிகுடா அமைப்பு பற்றிய அறிவு மற்றும் பயிற்சி வழங்கப்பட்டமை
பெறுமதி மதப்பீட்டாளர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்	28	19 – 23 மற்றும் 27, 28 டிசம்பர் 2022	84,000		,,	இயைபுமுறை குறியீடுகளை பயன்படுத்தி சிறந்த வகைப்படுத்தலினை பிரயோகப்படும்தும் வகையில் புதிதாக நியமிக்கப்பட்ட பெறுமதி மதிப்பிடல் அலுவலர்களது அறிவை மேம்படுத்தியமை
புதிதாக நியமிக்கப்பட்ட உதவி தடுப்பு அலுவலர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்	38	28, 29 மற்றும் 30 டிசம்பர் 2022	46,000		,,	பயணிகள் சேவைகள் பணிப்பகத்தில் பயணியை தொடங்கும் வகையில் உதவி தடுப்பு அலுவலர்களுக்கு தேவையான திறன்களை உருவாக்கியமை
புதிதாக நியமிக்கப்பட்ட உதவி தடுப்பு அலுவலர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்	37	19, 20 மற்றும் 21 டிசம்பர் 2022	42,180		,,	தடுப்பு பணிப்பகத்தில் பணியை தொடங்கும் வகையில் சுங்கச் சட்டம், உதவி தடுப்பு அலுவலர்களது கடமைகள் மற்றும் விசாரணை செய்கின்ற திறன்கள் என்பவற்றின் அறிவினை விருத்தி செய்யும் நோக்கில் உதவி தடுப்பு அலுவலர்களுக்கு தேவையான திறன்களை உருவாக்கியமை

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை

7.1 இணக்கப்பாட்டு அறிக்கை

இல	பொருத்தமான தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணங்கப்பட்டது / இணங்கப்படவில்லை)	இணக்கப்பாடு இன்மைக்கான விரிவான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கப்பாடு இன்மையினை தவர்க்கும் வகையில் முன்மொழியப்பட்ட உரிய நடவடிக்கைகள்
01	**பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுகள்	இணங்கப்பட்டது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக்கணக்கு	இணங்கப்பட்டது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக்கணக்குகள் (வர்த்தக முற்பணக்கணக்குகள்)	-		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	-		
1.5	விசேட முற்பணக் கணக்கு	இணங்கப்பட்டது		
1.6	ஏனைய	-		
02	**புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.2	ஆளுக்குரிய வேதனாதிகள் பதிவு /தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.8	கையிருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA –N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணங்கப்பட்டது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணங்கப்பட்டது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணங்கப்பட்டது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகளை கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு மேற்கொள்ளுதல்	இணங்கப்பட்டது		
04	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணங்கப்பட்டது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில்	இணங்கப்பட்டது		

	(NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்			
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணங்கப்பட்டது		
05	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	28 இணங்கப்பட்டது	02 முடியுறா நிலையில்	
06	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி. பி. 134 (2) DMA 2019 -1 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	2022 இல் வினியோகிக்கப்பட்ட நிதி ஒழுங்குவிதி 134(2) டீஎம்ஏ/1-2019 உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு ஏற்ப இணங்கப்பட்டது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	17	40	உடனடியாக பதிலினை பெறும் வகையில் பல நினைவூட்டல்களை வினியோகித்தல்
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்.	இணங்கப்பட்டது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	இணங்கப்பட்டது		
07	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA 2019 -1 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காண்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் 03 குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடைபெற்றன	நாட்டில் நிலவிய சுகாதார நிலைமைகள் மற்றும் போக்குவரத்து பிரச்சினைகள் காரணமாக	2022 மற்றும் அதற்குப் பின்னர் வருகின்ற வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றல்
08	**ஆதன முகாமைத்துவம்**			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி	இணங்கப்பட்டது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல.05/2016 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்படவில்லை	திட்டமிட்ட திகதியில் முடிக்கப்படவில்லை	1. ஆய்வு அறிக்கை கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2. கணக்கெடுப்புக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணங்கப்படவில்லை	திட்டமிட்ட திகதியில் முடிக்கப்படவில்லை	1. ஆய்வு அறிக்கை கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2. கணக்கெடுப்புக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணங்கப்படவில்லை	திட்டமிட்ட திகதியில் முடிக்கப்படவில்லை	1. ஆய்வு அறிக்கை கணக்காய்வு அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டது. 2. கணக்கெடுப்புக் குழுவின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.
09	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணங்கப்பட்டது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்து சம்பந்தமாகவும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணங்கப்பட்டது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணங்கப்படவில்லை	நடைமுறையிலுள்ள எரிபொருள் கட்டுப்பாடு/குறியீட்டின் கீழ் எரிபொளை வழங்குவதன் காரணமாக வாகனங்களின் எரிபொருள் நுகர்வு மீள-பரிசோதனை செய்யப்படவில்லை	எரிபொருள் நுகர்வு பிரச்சினைகளைக் கொண்ட வாகனங்களின் எரிபொருள் பாவனையை உரிய காலத்தில் மீள-பரிசோதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்
9.6	குத்தகைக் காலத்தின் பின்னர், குத்தகை வாகனங்களின் பதிவு புத்தகங்களின் முழுமையான உரித்து மாற்றப்பட்டிருத்தல்	இணங்கப்பட்டது		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றுப்படுத்தி அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
10.2	மீளாய்வு வருடத்தில் அல்லது அதற்கு முன்னைய வருடங்களிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	இணங்கப்பட்டது		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.		இணங்கப்பட வில்லை	நிலுவைத் தொகையை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணங்கப்பட்டது		
11.2	நி.பி. 94 (1) இன் படி செய்யப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து பயன்படுத்தியதன் பின்னர் வருட இறுதியில் எஞ்சிய ஏற்பாட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் தொடர்ந்திருக்கும்.	இணங்கப்பட்டது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணங்கப்பட்டது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல்.	இணங்கப்பட்டது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணங்கப்பட்டது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம்	இணங்கப்பட்டது	-	

	நடவடிக்கை எடுத்தல்			
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணங்கப்பட்டது	-	
14	முன்பணக் கணக்கு			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப்புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணங்கப்பட்டது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணங்கப்பட்டது		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறாதவாறு தற்காலிக இடைக்கால பணிமுற்பணத்தை வழங்கல்	இணங்கப்பட்டது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணங்கப்பட்டது		
15	வருமானக் கணக்கு			
15.1	விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணங்கப்பட்டது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	இணங்கப்பட்டது		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத்தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	இணங்கப்பட்டது		
16	மனித வள முகாமைத்துவம்			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணங்கப்பட்டது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணங்கப்பட்டது		
16.3	2017.09.20 எனும் தேதியிட்ட மு.சே.சுற்றறிக்கை இல. 04.்.2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணங்கப்பட்டது		
17	பொதுமக்களுக்கான தகவல் வழங்கல்			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் அட்டவணை ஒன்றை இற்றைப்படுத்தி பேணிவருதல்.	இணங்கப்பட்டது		
17.2	நிறுவனம் பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்.	இணங்கப்பட்டது		
17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணங்கப்பட்டது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.	செயல்பாட்டிலுள்ளது		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	செயல்பாட்டிலுள்ளது		
19	மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத்	இணங்கப்படவில்லை	மாறாக, உள்ளூர் பயிற்சித்திட்டங்	சுற்றறிக்கையின் பிரகாரம், மனித வள திட்டத்தினை

	திட்டம் தயாரித்தல்.		களுக்கான வருடாந்த செயல் திட்டத்தினை மனிதவள அபிவிருத்திப் பணிப்பகம் உருவாக்கியள்ளது. இந்த செயல் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், இந்த செயல் திட்டம் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவின் பயிற்சி தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளது	தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் எதிர்காலதத்தில் மேற்கொள்ளப்படும்
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணங்கப்படவில்லை	மேலே கூறப்பட்ட வருடாந்த செயல் திட்டம் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவிலுள்ள ஊழியர்களையும் உள்ளடக்கிய கேட்டரிங் பயிற்சி தேவைகள் குறித்து கவனம் செலுத்துகிறது. எனவே, படிநிலையிலுள்ள ஒவ்வொரு பிரிவுக்கும் ஆண்டதோறும் குறைந்த பட்சம் 12 மணிநேர பயிற்சியைப் பெறுகிறது. ஆனால் வேலை செய்கின்ற சூழலில் உள்ள சில தடைகள் காரணமாக அனைத்து ஊழியர்களும் பயிற்சியில் பங்கேற்க வாய்ப்பில்லை.	ஒரு கலண்டர் வருடத்திற்குள் பயிற்சி பெறும் ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணங்கப்படவில்லை	இது மனித வள அபிவிருத்தி பணிப்பகத்தின் கீழ் வராது. மாறாக, இது மனித வள முகாமைத்துவ பணிப்பகத்தின் கீழ் வருகிறது	
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத்	இணங்கப்படவில்லை	மேல்மட்ட சிவேஷ்ட	சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள படி,

	திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.		முகாமைத்துவம் மற்றும் நடுநிலை முகாமைத்துவம் ஆகியவற்றில் இருக்கும் அதிகாரிகள் செயல் திட்டத்தினை உருவாக்கவதில் கூட்டுப் பொறுப்பினைக் கொண்டுள்ளனர்.	ஒரு சிரேஷ்ட அதிகாரியினை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
20	கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்		இணங்கப்பட வில்லை	மதிப்பாய்வில் உள்ளது

8.1 சட்ட அமுலாக்கல் கொத்தணி

8.1.1 தடுப்புப் பணிப்பகம்

8.1.2 சமூக பாதுகாப்புப் பணிப்பகம்

8.1.2.1 போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு

8.1.2.2 பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமை பாதுகாப்புப் பிரிவு

8.1.2.3 நுகர்வோர் பாதுகாப்புப் பிரிவு

8.1.2.4 துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவு

8.1.3 மத்திய புலனாய்வுப் பணிப்பகம்

8.1.4 மத்திய விசாரணைகள் பணிப்பகம்

8.1.5 சட்ட விவகாரங்கள் பணிப்பகம்

8.1.6 இடர் முகாமைத்துவப் பணிப்பகம்

8.1.7 மத்திய அகற்றல் (விற்பனை) பணிப்பகம்


8.1.1 தடுப்புப் பணிப்பகம்

அறிமுகம்

தடுப்புப் பணிப்பகமானது இலங்கைச் சுங்கத்தின் பிரதான சட்ட அமுலாக்கற் பிரிவாக விளங்குகின்றது. இப்பணிப்பகமானது கொழும்புத் துறைமுகம், கொழும்பு சர்வதேச விமானநிலையம், ஏனைய துறைமுகங்கள், முதலீட்டு வலயங்கள் மற்றும் சுங்கத்தின் சகல அனைத்து செயற்பாட்டுப் பிரதேசங்கள் போன்றவற்றைக் கண்காணிப்புச் செய்வதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களாக;


- கள்ளக்கடத்தல், வர்த்தக மோசடிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்றவற்றைத் தடுத்தல்.
- மோசடிகளை கண்டறிதல், கள்ளக்கடத்தல் பொருட்களை பறிமுதல் செய்தல், புலனாய்வுகளை மேற்கொள்ளல், விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் வழக்கு விசாரணைகளை முன்னெடுத்தல்.
- உரிய அரசிறைச் சேகரிப்பை உறுதிப்படுத்தல்.
- நாட்டின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சுற்றால் சார்ந்த சிறப்பம்சங்களைப் பாதுகாத்தல்
- கொழும்புத் துறைமுகம், ஏனைய துறைமுகங்கள், பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தளை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேற்கொள்ளல்.
- படகுகளின் நடமாட்டத்தையும் மற்றும் எல்லைப்புற செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தல்.



உரு 01 : இலங்கைச் சுங்கத்தின் உப தடுப்பு அலுவலகத்தின் அமைவிடங்கள்

2022இல் இப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகள்			
1.1	**புதிய விடயங்கள்**		
1.1.1	அலுவலர்களால் தொடங்கப்பட்ட /கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள்		141
1.1.2	ஏனைய முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்		33
	பதிவு செய்யப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கை (1.1.1 + 1.1.2)		**174**
1.1.3	முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை		
	1.1.3.1	சுங்க குற்றமல்லாதவை தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்	18
	1.1.3.2	பிற பிரிவுகளுக்கு / கிளைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள்	0
	1.1.3.3	சாதாரண வாயில் ஊடாக செய்முறைப்படுத்துவதற்கு விடுவிக்கப்பட்ட விடயங்கள்	0


	1.1.3.4	தடுத்து நிறுத்துவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட வினியோகம்		0
	1.1.3.5	திறம்பட முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்		
		1.1.3.5.1	அபராதங்கள் / பறிமுதல்கள் /மேலதிக பதிவு என்பவை தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்	53
		1.1.3.5.2	மேலதிக பதிவு மாத்திரம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் (பெறுமதியிடல் தொடர்பில்)	6
		1.1.3.5.3	மேலதிக பதிவு மாத்திரம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் (தடுப்பு தொடர்பில்)	4
	(அ)	முடிவுறுத்தப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கை (1.1.3.1 தொடக்கம் 1.1.3.5.3)		**81**
1.1.4	முடிவுறுத்தப்படாத விடயங்கள்			
	1.1.4.1	முடிவுறுத்தப்படாத சுங்க விசாரணைகள் தொடர்பிலான விடயங்கள்		9
	1.1.4.2	முடிவுறுத்தப்படாத புலனாய்வு தொடர்பிலான விடயங்கள்		82
	1.1.4.3	தணிப்பிற்காக முறையீடுகள் நிலுவையிலுள்ள விடயங்கள்		1
	1.1.4.4	நடவடிக்கை பற்றிய அறிவித்தல்கள் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்		1
(ஆ)	முடிவுறுத்தப்படுவதற்கு நிலுவையிலுள்ள விடயங்களது மொத்த எண்ணிக்கை (1.1.5.1 தொடக்கம் 1.1..5.4)			**93**



உரு 02 : 2022இல் தடுப்பு பணிப்பகத்தினால் தொடங்கப்பட்ட புதிய சுங்க விடயங்களது நிலமை

1.2	**<u>முன்னைய விடயங்கள்</u>**			
1.2.1	ஆண்டின் தொடக்கத்தில் முடிவுறுத்தப்படாத விடயங்கள்			1447
1.2.2	ஆண்டுக் காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்			
	1.2.2.1	சுங்க குற்றமல்லாதவை தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்		160
	1.2.2.2	பிற பிரிவுகளுக்கு / கிளைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள்		7
	1.2.2.3	சாதாரண வாயில் ஊடாக செய்முறைப்படுத்துவதற்கு விடுவிக்கப்பட்ட விடயங்கள்		0
	1.2.2.4	தடுத்து நிறுத்துவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட வினியோகம்		0
	1.2.2.5	திறம்பட முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்		
		1.2.2.5.1	அபராதங்கள் / பறிமுதல்கள் /மேலதிக பதிவு என்பவை தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்	117
		1.2.2.5.2	மேலதிக பதிவு மாத்திரம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் (பெறுமதியிடல் தொடர்பில்)	28
		1.2.2.5.3	மேலதிக பதிவு மாத்திரம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் (தடுப்பு தொடர்பில்)	1
(இ)	1.2.2.6	முடிவுறுத்தப்பட்ட நீதிமன்ற வழக்குகள்		0
		ஆண்டுக்காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கை (1.2.2.1 தொடக்கம் 1.2.2.6)		**313**
1.2.3	முடிவுறுத்தப்படாத விடயங்கள்			
	1.2.3.1	முடிவுறுத்தப்படாத சுங்க விசாரணைகள் தொடர்பிலான		48

		விடயங்கள்	
	1.2.3.2	முடிவுறுத்தப்படாத புலனாய்வு தொடர்பிலான விடயங்கள்	959
	1.2.3.3	தணிப்பிற்காக முறையீடுகள் நிலுவையிலுள்ள விடயங்கள்	5
	1.2.3.4	நடவடிக்கை பற்றிய அறிவித்தல்கள் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்	59
	1.2.3.5	விற்றுத் தீர்க்கவேண்டிய பொருட்கள் குறித்த விடயங்கள்	42
	1.2.3.6	முடிவுறாத நியைிலுள்ள நீதிமன்ற வழக்குகள்	21
(ஈ)	முடிவுறுத்தப்படுவதற்கு நிலுவையிலுள்ள விடயங்களது மொத்த எண்ணிக்கை (1.2.3.1 தொடக்கம் 1.2.3.6)		**1134**



உரு : 2022ஆம் ஆண்டுக்கு முன்னதாக தொடங்கப்பட்ட முந்தைய சுங்க விடயங்களது நிலைமை

சாராம்சம்


ஆண்டுக் காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட மொத்த விடயங்கள் (அ + இ)	394
சுங்க குற்றமல்லாதவை தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்	178
பிற பிரிவுகளுக்கு / கிளைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள்	7
சாதாரண வாயில் ஊடாக செய்முறைப்படுத்துவதற்கு விடுவிக்கப்பட்ட விடயங்கள்	0
தடுத்து நிறுத்துவதற்கு முன்னர் எடுக்கப்பட்ட வினியோகம்	0
ஆண்டுக் காலப்பகுதியில் திறம்பட முடிவுறுத்தப்பட்ட மொத்த விடயங்கள் (1.1.4.5 + 1.2.2.5)	**23**
அபராதங்கள் / பறிமுதல்கள் /மேலதிக பதிவு என்பவை தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்	147
மேலதிக பதிவு மாத்திரம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் (பெறுமதியிடல் தொடர்பில்)	34
மேலதிக பதிவு மாத்திரம் தொடர்பில் முடிவுறுத்தப்பட்ட விடயங்கள் (தடுப்பு தொடர்பில்)	5
முடிவுறுத்தப்பட்ட நீதிமன்ற வழக்குகள்	0
ஆண்டின் இறுதியில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கை (ஆ+ ஈ)	**1227**
முடிவுறுத்தப்படாத சுங்க விசாரணைகள் தொடர்பிலான விடயங்கள்	53
முடிவுறுத்தப்படாத புலனாய்வு தொடர்பிலான விடயங்கள்	1034
தணிப்பிற்காக முறையீடுகள் நிலுவையிலுள்ள விடயங்கள்	5
நடவடிக்கை பற்றிய அறிவித்தல்கள் சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள்	64
விற்றுத் தீர்க்கவேண்டிய பொருட்கள் குறித்த விடயங்கள்	38
முடிவுறாத நியைிலுள்ள நீதிமன்ற வழக்குகள்	33

02. கைப்பற்றப்பட்டவை

2.1	ஆண்டின் தொடக்கத்தில் கைப்பற்றப்பட்ட வாகனங்களது எண்ணிக்கை	52
2.2	ஆண்டுக் காலப்பகுதியில் கைப்பற்றப்பட்ட வாகனங்களது எண்ணிக்கை	13
2.3	ஆண்டுக் காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட வாகனங்களது எண்ணிக்கை	14
2.4	ஆண்டின் இறுதியில் கைப்பற்றப்பட்ட வாகனங்களது மொத்த எண்ணிக்கை	51
2.5	ஆண்டின் தொடக்கத்தில் கைப்பற்றப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை	14
2.6	ஆண்டுக் காலப்பகுதியில் கைப்பற்றப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை	12
2.7	ஆண்டுக் காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட கொள்கலன்களது எண்ணிக்கை	13
2.8	ஆண்டின் இறுதியில் கைப்பற்றப்பட்ட கொள்கலன்களது மொத்த எண்ணிக்கை	13
2.9	சிகரெட்டுகளைக் (10,000 குச்சிகளைக் கொண்ட)கொண்ட பெட்டிகளது எண்ணிக்கை	400
2.10	மதுசார போத்தல்களின் எண்ணிக்கை	0
2.11	கைப்பற்றப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி	0

03. அறவீடுகள்

3.1	பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி		ரூபா.11,444,671.99
3.2	ஆண்டின் ஆரம்பத்தில் அறவிடப்படவேண்டிய அபராதங்கள் / பறிமுதல்கள்		ரூபா.199,057,275.00
3.3	ஆண்டுக் காலப்பகுதியில் விதிக்கப்பட்ட அபராதங்கள் / பறிமுதல்கள்		ரூபா.507,765,893.62
3.4	ஆண்டுக் காலப்பகுதியில் அறவிடப்பட்ட தீர்வை மற்றும் ஏனைய அறவீடுகள்		
3.4.1		சுங்கத் தீர்வை	ரூபா.50,862,476.00
3.4.2		மேலதிகக் கட்டணம்	0
3.4.3		பெ.சே.வரி	ரூபா.88,923,289.66
3.4.4		து.வி. அறவீடு	ரூபா.44,044,766.20
3.4.5		தே.க.வரி	0
3.4.6		உற்பத்தி வரி	0
3.4.7		இறக்குமதி செஸ் வரி	ரூபா.283,965.19
3.4.8		ஏ.அ.சபை செஸ் வரி	0
3.4.9		உற்பத்தி வரி	0
3.4.10		ஒருங்கிணைந்த வரி	0
3.4.11		படகுக் கட்டணங்கள்	0
3.4.12		காப்பறைக் கட்டணங்கள்	ரூபா.745,450
3.4.13		மேலதிக நேரம்	ரூபா.8,595,175.84
3.4.14		கணனிக் கட்டணம்	0
3.4.15		விசேட வைப்புகள்	ரூபா.400,000.00
3.4.16		ஏனைய அறவீடுகள்	ரூபா.60,282,055.00
3.4.17		விற்பனை நடவடிக்கைகள்	-
		மொத்தம்	**254,137,177.89**
3.5	ஆண்டுக் காலப்பகுதியில் அறவிடப்பட்ட அபராதங்களும் பறிமுதல்களும்		ரூபா.**415,172,226.62**
3.6	ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய அபராதங்கள் / பறிமுதல்கள்		ரூபா.291,650,942.00
3.7	**பெறுமதி மதிப்பிடல் பிரிவில் அறவிடப்பட்ட மேலதிக பதிவுகள்**		ரூபா.**33,104,661.00**



உரு 03 : அபராதங்கள் தொடர்பிலான அறவீடுகள்

04. உத்தரவாதங்கள் / வைப்புத்தொகைகள்

4.1	ஆண்டின் தொடக்கத்தில் வணிக உத்தரவாங்களது பெறுமதி	83,848,207.00
4.2	ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக உத்தரவாதங்களது பெறுமதி	9,427,404.00
4.3	ஆண்டுக் காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட வணிக உத்தரவாங்களது பெறுமதி	0
4.4	ஆண்டுக் காலப்பகுதியில் கோரப்பட்ட வணிக உத்தரவாங்களது பெறுமதி	0
	ஆண்டின் இறுதியில் வணிக உத்தரவாங்களது பெறுமதி	**93,275,611.00**
	ஆண்டின் தொடக்கத்தில் வணிக உத்தரவாங்களது மொத்த எண்ணிக்கை	2
	ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக உத்தரவாங்களது மொத்த எண்ணிக்கை	1
	ஆண்டுக் காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட வணிக உத்தரவாங்களது மொத்த எண்ணிக்கை	0
	ஆண்டின் இறுதியில் வணிக உத்தரவாங்களது மொத்த எண்ணிக்கை	**3**
4.5	ஆண்டின் தொடக்கத்தில் வங்கி உத்தரவாங்களது பெறுமதி	415,954,378.50
4.6	ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாதங்களது பெறுமதி	87,349,705.00
4.7	ஆண்டுக் காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட வங்கி உத்தரவாங்களது பெறுமதி	3,878,050.00
4.8	ஆண்டுக்காலப்பகுதியில் கோரப்பட்ட வங்கி உத்தரவாதங்கள் மற்றும் விசேட வைப்புகளாக சேமிக்கப்பட்டவை தொடர்பிலான பெறுமதி	0
	ஆண்டின் இறுதியில் வங்கி உத்தரவாங்களது பெறுமதி	**499,426,033.50**
	ஆண்டின் தொடக்கத்தில் வங்கி உத்தரவாங்களது மொத்த எண்ணிக்கை	31
	ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கி உத்தரவாங்களது மொத்த எண்ணிக்கை	9
	ஆண்டுக் காலப்பகுதியில் விடுவிக்கப்பட்ட வங்கி உத்தரவாங்களது மொத்த எண்ணிக்கை	2
	ஆண்டின் இறுதியில் வங்கி உத்தரவாங்களது மொத்த எண்ணிக்கை	38

8.1.2 சமூக பாதுகாப்புப் பணிப்பகம்

8.1.2.1 போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு

தொலை நோக்கு

நாட்டிற்குள் போதைப்பொருட்கள் மற்றும் உளமருட்சிப் போதைகள் போன்றவற்றைக் கடத்திக் கொண்டு வருவதைத் தடுத்து நிறுத்துவதில் முன்னோடியும் இயங்காற்றல் மிக்கதுமானதொரு முகவராக விளங்குதல் மற்றும் போதை முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களை இறக்குமதி செய்வதனையும் மற்றும் அவற்றின் சட்ட விரோதப் பாவனையையும் கண்காணித்தல் எமது தொலை நோக்காகும்.

பணி நோக்கு

- போதைப் பொருட்கள் மற்றும் உளமருட்சிப் போதைகளின் உபயோகம் மற்றும் அவற்றை சட்ட விரோதமாக கடத்திச் செல்லல் போன்றவற்றைத் தடுத்தல் மற்றும் அத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக போராடுதல்.
- போதைப்பொருள் குறித்தான சட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் ஏனைய அரசாங்க சட்ட சபைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றுடன் கூட்டுறவைப் பேணிப் பணியாற்றுதல்.
- போதைப்பொருள் மற்றும் உளமருட்சிப் போதைகளின் சட்டவிரோதக் கடத்தல் குறித்து பல்வேறு சர்வதேச சமவாயங்களின் கீழான தேசிய கடப்பாடுகளை அமுல்படுத்துவதை உறுதிப்படுத்தல்.
- சம்பந்தப்பட்ட வெளிநாட்டு அதிகாரசபைகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் கூட்டுறவைப் பேணி இணைந்து பணியாற்றுதல்.
- தற்போது காணப்படுகின்றதும் வளர்ந்து வருகின்றதுமான சவால்களை மதிப்பாய்வு செய்து அவற்றைப் பகுப்பாய்வு செய்யும் நோக்கில் பணியாட்களுக்கு பயிற்சி அளித்தல்.
- போதைப் பொருள் துஷ்பிரயோகம் பற்றிய சமூக அறிவினை வழங்கும் நோக்கில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்தல்.

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள்

- 1869ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க சுங்கக் கட்டளைச் சட்டம்
- 1984 ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, 1929ஆம் ஆண்டின் 17அம் இலக்க நஞ்சு, அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டளைச் சட்டம்.
- 2022ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நஞ்சு, அபின் மற்றும் அபாயகர ஔடதங்கள் (திருத்தச்) சட்டம்
- 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஒப்பனைச் சாதனங்கள் மற்றும் மருந்துகள் சட்டம்
- 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க போதைப் பொருட்கள் மற்றும் உளமருட்சிப் போதைகளின் சட்ட விரோதக் கடத்தலுக்கு எதிரான சமவாயம்.
- 2010 மே 10 ஆம் திகதிய 1653/7 ஆம் இலக்க, முன்னோடி இரசாயனப் பதார்த்தக் கட்டுப்பாட்டு அதிகாரசபை ஒழுங்குவிதிகள்.
- 1999 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க புகையிலை வரிச் சட்டம்
- புகையிலை வரி சட்ட ஒழுங்குவிதிகள், 2009 ஜூலை 17 ஆம் திகதிய 1610/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை
- 1993 ஆம் அண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவைச் சட்டம்.
- 2018 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க மதுவரிச் சட்டம்


இலங்கைச் சுங்கத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் ஆற்றப்பட்ட கடமைகள்

1. பண்டாரநாயக சர்வதேச விமானநிலையம் மற்றும் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றில் 24 மணிநேர கண்காணிப்பு
2. பண்டாரநாயக சர்வதேச விமானநிலையத்தில் சீசீரீவீ கண்காணிப்புக் கெமராக்கள் ஊடாக பயணிகளைப் பின்தொடர்ந்து கண்காணித்தல்.
3. பயண வழி, வருகின்ற நாடு, பயண முறை மற்றும் நடத்தை சார்ந்த தன்மை போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்ட இடரின் அடிப்படையில் பயணிகளை இனங்கண்டு அவர்கள் தொடர்பில் குறுக்கிடுதல்.
4. விமானம் மூலமான சரக்குகள், கப்பல் சரக்குகள், தபால் மற்றும் கூரியர் பொருட்கள் தொடர்பில் எழுமாறான கண்காணிப்பு
5. மத்திய அஞ்சல் பரிவர்தனை மற்றும் கூரியர் நிலையங்களில் தொடர்ச்சியாக சமூகமளித்தல் மற்றும் கண்காணித்தல்.
6. மத்திய அஞ்சல் பரிவர்தனையில் இடர் போக்குகளை உபயோகித்து, போதைப் பொருள் வருகின்ற நாட்டிலிருந்து வருகின்ற பொதிகளை எழுமாறாக மறித்து பரிசோதித்தல்.
7. ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக இடம்பெறக்கூடிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதிப் பொருட்களோடு போதைப் பொருட்கள் மற்றும் உளமருட்சிப் பதார்த்தங்கள் ஆகியவற்றின் கடத்தல்களை இனங்கண்டு அவற்றைத் தடுத்தல்.
8. நம்பத்தகு தகவல்கள் குறித்தான புலன்விசாரணைகளை மேற்கொள்ளல்.
9. வீடு வீடாகவும் அதே போன்று பொது மக்களுக்கும் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள அரசாங்க அலுவலர்களுக்கும் விழிப்புணர்வூட்டல்களையும் பயிற்சித் திட்டங்களையும் முன்னெடுத்தல்.

10. முன்னோடி இரசாயனப் பொருள் இறக்குமதிகள், கப்பல் மாற்றி ஏற்றுகைகள் மற்றும் ஏற்றுமதிகள் போன்றன தொடர்பில் விழிப்புடன் செயற்படல்
11. பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் போன்ற ஏனைய இயக்க முகவரகங்களுடன் இணைந்து கூட்டான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

அட்டவணை 01 : கடந்த 07 வருட காலப்பகுதியில் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் கண்டுபிடிப்புகள் (2016 – 2022)

போதைப் பொருள் வகைகள்	மொத்த அளவு (கி.கி)
கோகெயின்	1259.1
கஞ்சா	21.504
மெதம்பெடமைன்	43.202
கன்னாபிஸ்	29.568
ஹிரோயின்	19.52
காட் (Khat)	336.3
டயஸெபம் (Diazepam)	19.76
கஞ்சா எண்ணெய் (Cannabis oil)	0.202
மொத்தம்	**1729.156**




உரு 01 : கடந்த 07 வருட காலப்பகுதியில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்களின் மொத்த அளவு (2016 – 2022)

இவ்வருடம், மொத்தமாக 67 போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் பதிவுசெய்யப்பட்டதோடு, பறிமுதல் செய்யப்பட்ட போதைப்பொருட்களின் மொத்த நிறை 20.181 கிலோகிராம் ஆகும். 2022 ஆம் ஆண்டில், உகண்டா, கென்யா, பிரேசில், ஐக்கிய இராச்சியம், கனடா, நெதர்லாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்தே அதிகளவான பறிமுதல்கள் இனங்காணப்பட்டன.

கடந்த ஏழு வருட காலங்களுக்குள் (2016 தொடக்கம் 2022 வரை) 1729.156 கி.கி போதைப் பொருட்கள் பறிமுதல் செய்யப்படதுடன் இதில் கொகேயின், கஞ்சா, மெதம்பெட்டமைன், கன்னாபிஸ், காட், டயஸ்பாம் மற்றும் கஞ்சா எண்ணெய் என்பவை அடங்குகின்றன.


அட்டவணை 02 : கடந்த ஆறு வருட காலப்பகுதியில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் பற்றிய ஒட்டு மொத்த சாராம்சம்

போதைப் பொருள் வகைகள்	2016 (கி.கி)	2017 (கி.கி)	2018 (கி.கி)	2019 (கி.கி)	2020 (கி.கி)	2021 (கி.கி)	2022 (கி.கி)
கோகெயின்	1232.04	-	2.38	10.16	0.08	3.122	11.318
ஹஷிஷ்	-	0.08	15.74	3.05	-	2.634	-
மெதம்பெடமைன்	0.52	-	1.61	16.87	17.757	1.933	4.512
கன்னாபிஸ்	5.41	1.42	8.83	3.96	1.576	4.021	4.351
ஹிரோயின்	8.83	8.86	1.83	-	-	-	-
காட் (Khat)	-	32.00	199.64	73.50	31.16	-	-
டயஸெபம் (Diazepam)	-	-	19.76	-	-	-	-
கஞ்சா எண்ணெய் (Cannabis oil)	-	-	-	-	0.064	0.138	-



உரு 02 : கடந்த ஆறு வருட காலப்பகுதியில் பறிமுதல் செய்யப்பட்ட போதைப் பொருட்கள் பற்றிய ஒட்டு மொத்த சாராம்சம்

2016 - 2022 காலப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட போதைப் பொருட்களின் விரபங்கள்
கோகெயின்




வருடம்	அளவு (கி.கி)
2016	1232.04
2017	0
2018	2.38
2019	10.16
2020	0.08
2021	3.122
2022	11.318

2022 ஆம் ஆண்டில், 11.318 கி.கிராம் நிறையுடைய கோகேயின் தொடர்பிலான 07 பறிமுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட கோகேயின்களது அளவிலான திடீர் அதிகரிப்புக்கான காரணம், சட்டரீதியான கொள்கலனினுள் ஒழித்து சூட்சுமமான கடத்தல் முறையைப் பயன்படுத்தி இறக்கியேற்றுகின்ற துறைமுகங்கள் ஊடாக அதிகளவு கொகேயின்களைக் கடத்துவதற்கான முயற்சிகள் கண்டறியப்பட்டமையாகும். இருப்பினும், கடத்தல்காரர்கள் இறக்கியேற்றும் துறைமுகங்களில் சூட்சுமமாக மறைவில் இருக்கும் கடத்தல் பொருட்களை வெளியேற்றத் தவறிவிட்டனர். இதனல், இலங்கைச் சுங்கத்தால் அவற்றைக் கைப்பற்ற முடிந்தது.


ஹிரோயின்



வருடம்	அளவு (கி.கி)
2016	8.83
2017	8.86
2018	1.83
2019	0
2020	0
2021	0
2022	0

2022ஆம் ஆண்டில், ஹிரோயின் போதைப்பொருட்கள் பற்றிய பறிமுதல்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை


மெதம்பெட்டமைன்



வருடம்	அளவு (கி.கி)
2016	0.52
2017	0
2018	1.61
2019	16.87
2020	17.76
2021	1.93
2022	4.512

2022 ஆம் ஆண்டில், மொத்தமாக 21 சந்தர்ப்பங்களில் 4.512 கி.கி நிறையுடைய மெதம்பெட்டமைன் மாத்திரை கைப்பற்றப்பட்டமை பதிவாகியிருந்தன. இப்போதைப் பொருட்கள் நெதர்லாந்து, கனடா, ஐக்கிய இராச்சியம் மற்றும் மெக்சிகோ போன்ற நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகும்.


கணாபிஸ் (கஞ்சா)



வருடம்	அளவு (கி.கி)
2016	5.41
2017	1.42
2018	8.83
2019	3.96
2020	1.58
2021	4.02
2022	4.351

2022 ஆம் ஆண்டில், மொத்தமாக 4.351கி.கி நிறையுடைய கஞ்சாக்கள் (கன்னாபிஸ்) தொடர்பில் 39 விடயங்கள் பதிவாகியிருந்ததோடு, அவை பிரதானமாக கனடா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவையாகும்.


ஹஷிஷ் (Hashish)



வருடம்	அளவு (கி.கி)
2016	0
2017	0.08
2018	15.74
2019	3.05
2020	0
2021	2.63
2022	0

2022 ஆம் ஆண்டில், ஹஷிஷ் எனும் போதைப்பொருள் பறிமுதல் செய்ததாக அறிக்கையிடப்படவில்லை.

காட் (Khat)



வருடம்	அளவு (கி.கி)
2016	0
2017	32
2018	199.64
2019	73.5
2020	31.16
2021	0
2022	0

2022 ஆம் ஆண்டில், காட் எனும் போதைப்பொருள் பறிமுதல் செய்ததாக அறிக்கையிடப்படவில்லை

அட்டவணை 02 : 2016-2022 வரை கண்டுபிடிக்கப்பட்டவைகள் தொடர்பில் அவை கண்டுபிடிக்கப்பட்ட இடங்களின் அடிப்படையிலான தரவுகள்

கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்	2022 (கி.கி)	2021 (கி.கி)	2020 (கி.கி)	2019 (கி.கி)	2018 (கி.கி)	2017 (கி.கி)	2016 (கி.கி)	மொத்தம் (கி.கி)
ப.ச.வி. நிலையம்	8.683	3.027	-	19.28	18.77	8.86	18.1	76.72
அஞ்ஞல் மதிப்பீடு	10.757	-	39.19	83.76	222.8	33.5	0.52	390.527
டீ.எச்.எல்	-	2.234	0.24	2.44	-	-	-	4.914
யூ.பீ.எஸ்	0.741	2.044	16.36	2.05	-	-	-	21.195
கொழும்பு காகோ	-	4.583	3.35	-	-	-	-	7.933
தடுப்பு பணிப்பகம்	-	-	-	0.01	-	-	-	0.01
விமானப் பொதி	-	-	-	-	8.22	-	-	8.22
ஆர்.சீ.ரீ சாலை	-	-	-	-	-	-	1228.18	1228.18
ம.ச.பரிசோதனை	-	-	-	-	-	-	-	-
மிட்கோ	-	-	0.55	-	-	-	-	0.55
மொத்தம் (கி.கி)	**20.181**	**11.888**	**59.69**	**107.54**	**249.79**	**42.36**	**1246.8**	**1738.249**

2022 இல் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச ரீதியிலான செயற்பாடுகள்

லயன்பிஷ் (LIONFISH) **லயன்பிஷ் செயற்பாடு**

- போதைப்பொருள் மற்றும் சட்டவிரோதப் பொருட்கள்
- இன்ரபோல் இனால் மேற்கொள்ளப்பட்டன
- 2022 ஜுலை இல் இடம்பெற்றது.

நொக்கவுட் (KNOCKOUT) **நொக்கவுட் செயற்பாடு**

- புதிய உளநிலை மாற்றும் போதைப்பொருட்கள்
- INCB இனால் மேற்கொள்ளப்பட்டன
- 2022 டிசம்பர் இல் இடம்பெற்றது.

அட்டவணை 03 : 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட கண்டுபிடிப்புகள் பற்றிய ஒப்பீட்டாய்வு

2021 அளவு (கிராம்)		2022 அளவு (கிராம்)
-	காட்	-
4,021	கஞ்சா (CANNABIS)	4,351
1,933	மெதம்பெடமைன்	4,512
-	ஹிரோயின்	-
3,122	கோகெயின்	11,318
2,634	ஹஷிஷ் (Hashish)	-
138	ஹெம்ப் எண்ணெய் (HEMP OIL)	-
11,848	**மொத்தம்**	**20,181**

போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு தொடர்பிலான எங்களது மதிப்பீட்டாய்வு

பலங்கள் • அர்ப்பணிக்கப்பட்ட ஊழியர்கள் • அனுபவமிக்க அலுவலர்கள் • உடலைச் சோதனை செய்யும் ஒரு ஸ்கேனிங் இயந்திரம் கிடைத்தமை. • CCTV கண்காணிப்பு வசதி.	**பலவீனங்கள்** • பணியாளர்கள் பற்றாக்குறை. • உயர்தரமிக்க போதைப்பொருள் கண்டறிதல் பரிசோதனை கருவிகள் மற்றும் சாதனங்கள் இல்லாமை. • பயணிகளை இலக்குப்படுத்துகின்ற மற்றும் பின்தொடரத்தக்க தரவு நிரல் இல்லாமை.
வாய்ப்புகள் • போதைப்பொருள் கடத்தல் பற்றிய புதிய பயணப்பாதைகள் மற்றும் வழிமுறைகளை அடையாளங்காணல். • குறிப்பிட்டதொரு அளவிற்கு பிற தொடர்புபட்ட முகவர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கான வாய்ப்பு.	**அச்சுறுத்தல்கள்** • பகுப்பாய்வு அறிக்கைகளை பெறுவதிலான தாமதம். • நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்புகள் பற்றாக்குறை. • போதைப்பொருள் கண்டறிதல் நுட்பங்கள் மீதான சர்வதேச பயிற்சிகள் பற்றாக்குறை.

8.1.2.2 உயிர்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்புப் பிரிவு (BCNP)

பின்புலம்

சுற்றாடல் சார்ந்த குற்றச்செயல்கள் ஒரு தீவிரம்மிக்க உலகளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதோடு, இது இயற்கை உலகிற்கு மாத்திரமல்லாது, தேசிய மற்றும் சர்வதேச பாதுகாப்பு, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி அத்துடன் பூகோள சுகாதார விடயங்கள் போன்றவற்றிலும் பல்வேறு மேசமான விளைவுகளுக்கு வழியமைத்துள்ளன. விஞ்ஞானிகள், பூமியானது ஆறாவது உலக அழிவினை தற்போது அனுபவித்து வருவதாக நப்புவதோடு, இது மனிதன் எனும் தனியான இனத்தின் செயற்பாடுகளின் விளைவினால் மாத்திரம் இடம்பெறுவதாகவும் கூறுகின்றனர். தற்பொழுது, சுமார் 150,300 இற்கும் அதிகமான உயிரினங்கள் IUCN சிவப்புப் பட்டியலில் பட்டியலிடப்படுகின்றன. இவற்றில் சுமார் 42,100 இற்கும் கூடுதலான இனங்கள் அழிந்துபோகும் அபாயத்தில் உள்ளதோடு, இவற்றில் 41% நிலநீர் வாழ் உயிரினங்கள், 37% சுறா மீன்கள் மற்றும் 37% திருக்கை மீன்கள், 36% கட்டிட பவளப் பாறைகள், 34% ஊசியிலைக் காடுகள், 27% முலையூட்டிகள் மற்றும் 13% பறவைகள் போன்றன உள்ளடங்குகின்றன. இவற்றுக்கு மத்தியில், சட்டவிரோத வனசீவராசிகள் குறித்தான வர்த்தக நடவடிக்கையும் இந்த பல்வகைமை அழிவுக்கு ஒரு பாரிய பங்களிப்பினை செய்து வருகிறது. சட்டவிரோத வனசீவராசிகள் குறித்தான வர்த்தகமானது உலகின் நான்காவது பாரிய கட்டமைக்கப்பட்ட குற்றச் செயலாக கூறப்படுவதோடு,இது போதைப்பொருள் கடத்தல், மோசடிமிக்க நடவடிக்கைகள் மற்றும் ஆட்கடத்தலுக்கு அடுத்ததாக வருடமொன்றுக்கு சுமார் 23 பில்லியன் ஐ.அ.டொலர்கள் பெறுமதி கொண்டதாக இது மதிப்பிடப்படுகிறது.

வெப்பமண்டலத்தில் அமைந்துள்ள இலங்கையானது, பூமியில் உள்ள உயிரியல் பல்வகைமையினை உயர்வாகக் கொண்ட நாடுகளில் ஒன்றாக திகழ்கின்றது. மனித நடவடிக்கைகள் காரணமாக எமது அனேக பூர்வீக தாவர மற்றும் விலங்கினங்கள் அழிந்துபோகும் அபாயத்தை எதிர்கொண்டுள்ளன. மேலும்.இலங்கை அனேக பல்வேறுபட்ட கனிம வளங்களைக் கொண்டதொரு நாடாகும். அவற்றில் சில எமக்குத் தனித்துவம் வாய்ந்ததாக விளங்குவதோடு, உலகிலேயே அதியுயர் தரம் வாய்ந்ததாகவும் விளங்குகின்றன. இதன் விளைவாகவே, அத்தகைய வளங்களைக் கடத்தல் செய்கின்ற அனேக சம்பவங்கள் கடந்த காலங்களில் பதிவாகியுள்ளன.

இதற்கு அடுத்தபடியாக, கலாசார முக்கியத்துவம் வாய்ந்த சொத்துக்களைச் சூறையாடுவதானது கட்டமைக்கப்பட்ட நாடு கடந்ததொரு குற்றச் செயலின் பழமையான வடிவங்களில் ஒன்றாக விளங்குவதோடு, இது ஒரு உலகளாவிய ரீதியில் இடம்பெறுகின்ற நிகழ்வாகவும் மாறியுள்ளது. இது இலங்கைச் சுங்கத்திற்கான அக்கறைமிக்க விடயங்களின் பட்டியலில் மிகவும் முன்னுரிமை மிக்க விடயமாகும். கலாசார பாரம்பரியங்கள்கடத்தப்படுவதன் மூலம் தேசிய பூர்வீகச் சொத்துக்கள் அழிவடைவதோடு, இதுசில மிகவும் குறிப்பிடத்தக்கதும் விலைமதிப்பற்றதுமான கலாசாரப்

பொக்கிஷங்களைநடைமுறையில் அனுபவித்து வருகின்ற குறித்த சமூகத்தினை படிப்படியாக இழப்பதற்கும் வழியமைக்கிறது.நூதனசாலைகள்,தேவாலயங்கள், பிரத்தியேக கலைக்கூடங்ள் அல்லது அரச நிறுவனங்களிலிருந்து ஆயிரக்கணக்கானகலைப்பொருட்கள் ஆண்டுதோறும் களவாடப்படுகின்றன.பழங்கால ஆயுதங்கள் முதல் ஓவியங்கள் வரையான, நாணயங்கள் முதல் கடிகாரங்கள் வரையான மற்றும் சமயப் பொருட்கள் முதல் தொல்பொருள் கண்டுபிடிப்புகள் வரையான,உலகின் தொல்பொருள் சார்ந்த மற்றும் கலாசார பாரம்பரியம் சார்ந்த பல்லாயிரக் கணக்கான மாதிரிகள் திருடப்படுகின்றன.

இத்தகைய எல்லை தாண்டிய சட்டவிரோத செயற்பாடுகளை முறியடிப்பதற்கான அவசியத்தினைக் கருத்திற்கொண்டு,உயிர்ப்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்புப் பிரிவானது 1993 இல் தொடக்கி வைக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில், இந்த கிளை அலுவலகமானது உயிர்ப் பல்வகைமைப் பாதுகாப்புப் பிரிவு என அழைக்கப்பட்டதோடு, உலகிலுள்ள ஒரு சுங்க நிர்வாகத்தினுள் இதுபோன்ற விசேட நோக்கத்திற்காக முதன்முறையாகத் தாபிக்கப்பட்ட பிரிவாக நம்பப்படுகிறது.அது முதற்கொண்டு,அப் பிரிவானது மதிப்பிட முடியாத அருகிவருகின்ற தாவர மற்றும் விலங்கினங்களையும், இலங்கையின் இயங்கை வளங்கள் மற்றும் கலாசார மரபுரிமைகள் ஆகியவற்றையும் பாதுகாக்கும் நோக்கில் கணிசமானளவு பங்களிப்பினைச் செய்து வருகிறது. மேலும்,இப்பிரிவானது இலங்கைச் சுங்கத்தின் சமூக மற்றும் சுற்றாடல் சார்ந்த பாதுகாப்பு மூலோபாயக் குறிக்கோளினை கணிசமானளவு வலுப்படுத்தியுள்ளது.


எமது தொலைநோக்கு

உயிர்ப்பல்வகைமை மற்றும் கலாசார மரபுரிமையினைப் பாதுகாப்பதில் தெற்காசியாவில் மிகச் சிறந்த சுங்கப் பிரிவாகத் திகழ்தல்.

எமது பணிநோக்கு

வர்த்தக இலகுவாக்க வசதிகளை வழங்குகின்றன அதேவேளை, உயிர்ப்பல்வகைமை, கலாசார மற்றும் தேசிய மரபுரிமையினைப் பாதுகாப்பதற்கும், மற்றும் உரிய அரசிறையினை உறுதிப்படுத்துவதற்குமான சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.


கிளை அலுவலகக் கட்டமைப்பு



உயிர்ப்பல்வகைமை மற்றும் தேசிய மரபுரிமைகள் பாதுகாப்புப் பிரிவினால் நிறைவேற்றப்படும் முக்கிய தொழிற்பாடுகள்


- தாவர மற்றும் விலங்கினங்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட பொருட்களின் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
- கனிமங்கள் போன்ற ஏனைய இயற்கை வளங்களைக் கடத்துதலுடன் சம்பந்தப்பட்ட தேசிய சட்டங்களை அமுல்படுத்தல்.
- கலாசாரச் சொத்துக்கள் மற்றும் பாரம்பரியப் பொருட்களைக் கடத்துவதுடன் சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச சட்டங்களை அமுல்படுத்தல்.
- உரிமப்பத்திரம் மற்றும் அனுமதிப்பத்திரங்களில் கூறப்பட்ட நிபந்தனைகளுடன் இணக்கமுறுவதை உறுதிப்படுத்தல்.
- உயிரியல், இயற்கை மற்றும் கலாசார ரீதியில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை எல்லை தாண்டிக் கடத்திச் செல்வதை கண்காணிப்பதற்கும் அவற்றை ஒழுங்குபடுத்துவதற்குமான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பல்வேறு நிரல் முகவர்களுக்கான கொள்கை வழிகாட்டல்களை வழங்குதல்.

இயக்கப்பாடு சார்ந்த கட்டமைப்பு



2022 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை

- இவ்வாண்டுக் காலப்பகுதியில் கடத்தல் செயற்பாடுகள் மற்றும் சட்ட இணக்கமற்ற விடயங்கள் போன்றன உள்ளிட்ட 04 சம்பவங்களை இப்பிரிவு இடைமறித்து நிறுத்தியுள்ளது.



உரு 01 : 2022இல் வெவ்வேறுபட்ட பொருள் வகைகளின் அடிப்படையில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பறிமுதல்களின் எண்ணிக்கை

விபரம்	பெறுமானம்
தொடங்கப்பட்ட விடயங்களின் எண்ணிக்கை	04
முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	0
அறவிடப்பட்ட பறிமுதல்கள் மற்றும் அபராதங்களின் மொத்தத் தொகை (ரூபா)	2,010,000
அறவிடப்பட்ட மேலதிக பதிவுகளது மொத்த தொகை (ரூபா)	-
மொத்த விற்பனை நடவடிக்கைகள் (ரூபா)	5,536,999.80
2022ஆம் ஆண்டுக்கான மொத்த அறவீடுகள் (ரூபா)	7,546,999.80

.

2021ஆம் ஆண்டுக்கான மொத்த விடய புள்ளிவிபரங்கள்

பொருள் வகை	பறிமுதல் செய்யப்பட்டவைகளின் மொத்த அளவு
வல்லப்பட்டை	33.65 கி.கி
வல்லப்பட்டை எண்ணெய்	220 மில்லி லீற்றர்
பண்டையகால நாணயங்கள்	1880 எண்ணிக்கை

அட்டவணை 02 : 2022ஆம் ஆண்டில் இப்பிரிவினாலான பிராதான பறிமுதல்கள்

2022 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகள்

1. சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளின் அனுமதிப்பத்திரம் இன்றி வல்லப்பட்டையை (*Gyriops walla*) ஏற்றுமதி செய்வதற்கு முயற்சித்தமை

சட்டவிரோதமான முறையில் வல்லப்பட்டையை (*Gyriops walla*) ஏற்றுமதி செய்வதற்கான முயற்சியொன்று 2022.03.22 ஆந் திகதி இப்பிரிவினரால் கண்டறியப்பட்டது.

புலனாய்வுத் தகவல்கள் மற்றும் ஏனைய தகவல்களின் அடிப்படையில், இலங்கைக் கடவுச்சீட்டினைக் கொண்ட பயணியொருவர் சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளின் அனுமதிப்பத்திரங்களைப் பெறாது இலங்கையிலிருந்து வல்லப்பட்டையினை துபாய்க்கு ஏற்றுமதி செய்வதற்கு முயற்சித்திருந்தமை கண்டறியப்பட்டது. இது தொடர்பில் சோதனை மேற்கொண்ட போது, வல்லப்பட்டை மரத் துண்டுகளைக் கொண்ட இரண்டு பொதிகளை அலுவலர்கள் கண்டுபிடித்தனர். வல்லப்பட்டை தாவர இனமானது குறித்ததொரு பிரதேசத்திற்குரிய தாவர இனமாகுமென்பதோடு, இதன் நறுமணம் தொடர்பிலான பெறுமானமதியானது அண்மைக்காலத்திலேயே இனங்காணப்பட்டது. இது நறுமணங்களைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற ரெசின் எனப்படுகின்றதொரு பதார்த்தத்தை உற்பத்தி செய்வதோடு, இப்பதார்த்தம் ஏனைய நாடுகளில் உயர் விலைபெறுகின்றது. வல்லபட்டடையானது ஒரு காட்டு வாழ் தாவர இனமாகவிருந்த போதிலும், அதனை ஏற்றுமதி செய்வதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வன பாதுகாப்பு கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 469) ஆனது, நாட்டிலிருந்து வல்லப்பட்டையினை ஏற்றுமதி செய்வதற்கு தடைவிப்பதோடு அதற்கு வனப் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்தான ஒரு அனுமதிப்பத்திரம் அவசியமாகின்றது. மேற்கூறிய பயணி அத்தகைய ஏதேனும் அனுமதிப்பத்திரத்தினை சமர்ப்பிபதற்கு தவறியுள்ளார். விரிவான பரிசோதனையினையடுத்து 29.15கி.கி வல்லப்பட்டைத் துண்டுகள் இருந்தமை கண்டறியப்பட்டது.



பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வல்லப்பட்டை (*Gyriops walla*)

2. விமானச் சரக்கு சரிபார்ப்பு முனையத்தில் பண்டைய கால நாணயங்களைக் கொண்ட பெட்டி பற்றிய பறிமுதல்

2022.04.21 ஆம் திகதி விமானச் சரக்கு வகைப்படுத்தல் சாலையில் பண்டையக்கால நாணயங்களைக் கொண்ட பெட்டியொன்றினை கடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சியொன்று BCNP பிரிவினரால் முறியடிக்கப்பட்டது.
குறித்த தகவல்களின் அடிப்படையில், ஏற்றுமதியாளர் அப் பொதியினை 'நாணயங்கள்' என பிரகடனப்படுத்தி சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளிடமிருந்தான அனுமதிப்பத்திரத்தினை பெறாது அவற்றை இலங்கையிலிருந்து தாய்வானுக்கு கூரியர் பொதி மூலம் ஏற்றுமதி செய்வதற்கு முயற்சித்துள்ளார். பரிசோதனையின் போது அவை பண்டைக்கால நாணயங்களைக் கொண்ட பொதியென அலுவலர்கள் கண்டுபிடித்துள்ளனர். மேலும், இவை 25 நூற்றாண்டுகளிலான ரோமன் குற்றி நாயணங்கள் என தொல்பொருளியல் திணைக்களம் உறுதிப்படுத்தியுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்திடமிருந்தான அனுமதிப் பத்திரமின்றி பழங்கால பொருட்களை ஏற்றுமதி செய்தல் 1940 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க புராதனப்பொருட்கள் கட்டளைச் சட்டத்தினை (அத்தியாயம் 394) மீறும் வகையிலானதொரு குற்றச்செயலாகும். மேற்கூறப்பட்ட ஏற்றுமதியாளர் அத்தகைய அனுமதிப்பத்திரங்களை

சமர்ப்பிப்பதற்கு தவறியுள்ளார். விரிவான பரிசோதனையின் போது 1880 எண்ணிகையான புராதன கால நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.



விமானச் சரக்கு சரிபார்ப்பு முனையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றி நாயணங்களைக் கொண்ட பெட்டி

சந்திப்புகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், செயலமர்வுகள், விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய ஒத்துழைப்புடன் கூடிய பணிகள்

மாதம்	செயற்பாடு
ஜனவாரி	• பார்மியுலார் குழுக் கூட்டம் – ஆயுர்வேதத் திணைக்களம்
பெப்ரவரி	• உயிரியல் பாதுகாப்பு குறித்த கார்டாஜீனா நெறிமுறைக்கிணங்க தேசிய உயிரியல் பாதுகாப்பு கட்டமைப்பினை அமுல்படுத்தவது தொடர்பிலான 5ஆவது கருத்திட்ட கண்டிப்பான குழு கூட்டம்
மார்ச்	• கலாச்சாரப் பொருட்களை திருடுவதையும் மற்றும் கடத்துவதையும் தடுப்பதற்கான கருவிகள்
ஏப்ரல்	• சுங்க உதவி அத்தியட்சகர்களுக்கான புலமைச் சொத்துரிமை தொடர்பான பயிற்சி • சுங்கப் பரிசோதகர்களுக்கான திறன் விருத்தி
மே	• வனஜீவனக் குற்றங்களை எதிர்கொள்ளுதல் குறித்தான இலங்கை தேசிய பயிற்சி
செப்டம்பர்	• சுற்றாடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஓசோன் படல அறிவியல் பயிற்சி • வனஜீவன பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிராந்திய சுறா மற்றும் திருக்கை மீன் • சுற்றாடல் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட திறன் விருத்தித் திட்டம் • மீன்பிடித் துறையிலான குற்றங்கள் தொடர்பான தேசிய செயலமர்வு - இலங்கைக்கான நீல சுற்றுச்சூழல் திட்டம்
ஒக்டோபர்	• கடல் வெள்ளரி மீன் வளர்ப்பு மற்றும் பதப்படுத்தல், மறுசேமிப்பு மற்றும் குறைவடைந்த வன வளங்களை முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றில் தொழில் நுட்ப உதவி பற்றிய தொடக்கச் செயலமர்வு.
நவம்பர்	• தகுதிவாய்ந்த பெண்கள் - இற்கான பிராந்திய கூட்டம் - • பிராந்திய ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் வகையில் தகுதிவாய்ந்த பெண்கள் - மீன்பிடிகள் குற்றச் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கான பிராந்தியக் கூட்டம் • இரசாயன, உயிரியல் மற்றும் வெடிக்கும் தன்மையுடையவை சார்ந்த கடர்சார் தொலை தூர விழிப்புணர்வு பயிற்சி • ஆபத்தான நோய்க் கிருமிகளின் தேசிய இருப்புகளது வளர்ச்சி குறித்த திட்டம் - இலங்கை • அரசதுறை அதிகாரிகளுக்கான திறன் விருத்தித் திட்டம் - சட்டவிரோத சுற்றுச்சூழல் நடவடிக்கைகள் குறித்து ஊழலுக்கு எதிரான புத்தாக்க நடவடிக்கை.

8.1.2.3 பாவனையாளர் பாதுகாப்புப் பிரிவு

பாவனையாளர் பாதுகாப்புப் பிரிவானது, நாட்டின் நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களுக்கு எதிராக இறக்குமதி செய்யப்படுகின்ற சரக்குகளின் தரம் மற்றும் தரநியமங்களைக் கட்டுப்படுத்தி அவற்றை கண்காணிக்கும் நோக்கில் 2011 இல் தாபிக்கப்பட்டதாகும். பாவனையாளர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவானது இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பிலான புலமைச் சொத்துரிமைகள் பற்றிய பிரச்சினைகளளைப் பேணுவதற்கான இலங்கைச் சுங்கத்தின் முக்கிய பிரிவாகும். மேலும், நாங்கள் ஏனைய சம்பந்தப்பட்ட முகவரகங்களுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு சர்வதேச சமவாயங்களின் கடப்பாடுகளை அமுல்படுத்துவதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் பங்களிப்புச் செய்கின்றோம்.

பிரதான தொழிற்பாடுகள்

1. ஏதேனும் மீறல்கள் மற்றும் மோசடிகளை எதிர்க்கும் நோக்கில், சுங்கச் சட்டங்கள் தொடர்பில் எடுத்துக்கூறப்படுகின்ற புலமைச் சொத்துரிமைச் சட்டம், இலங்கை கட்டளைகள் நிறுவகச் சட்டம், தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்தல் அதிகாரசபைச் சட்டம், நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சுகாதாரத் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு போன்றவற்றின் தேவைப்பாடுகள் குறித்தான கட்டுப்பாட்டினை அமுல்படுத்தல். மேலே கூறப்பட்டுள்ள அதிகாரசபைகளால் மேற்கொள்ளப்படும் அனைத்து இறக்குமதிகளும், அவை சுங்க வளாகங்களில் இருந்து வெளியாக்கப்படும் முன்னர் பாவனையாளர் பாதுகாப்பு பிரிவுக்கு (CPU) இற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.
2. இந்த நோக்கத்திற்காக, மேற்படி அதிகாரசபைகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற ஒப்புதல் பதிவுகளை பேணுதல்.
3. சம்பந்தப்பட்ட அதிகார சபைகளுடன் தொடர்பான மேற்படி வியடம் பற்றிய சுங்க நடைமுறைகளை இற்றைப்படுத்தல்.
4. அவசியமானவிடத்து இப்பிரிவிலிருந்தான பணியாளரை பரிசோதனை மேற்கொள்ளும் இடங்களில் அமர்த்துதல்.
5. அடையாளங்காணப்பட்டுள்ள சுங்க கட்டளைச்சட்டங்கள் மற்றும் பிற தொடர்புடைய சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ளப்படும் ஒழுங்குவிதிகளை மீளாய்வு செய்தல்.
6. மேற்படி செயற்பாடுகள் தொடர்பான கட்டளைச் சட்டங்கள் மற்றும் சட்டங்களோடு சேர்த்து வாசிக்கப்படுகின்ற சுங்கக் கட்டளைச் சட்டத்திற்கேற்ப சட்டங்களை பிரயோகித்தல்.
7. நிராகரிக்கப்பட்ட பொருட்களின் மீள் ஏற்றுமதி மற்றும் பிற அபாயகரமான பொருட்களின் இறக்குமதிகளைக் கண்காணித்தல்
8. மேற்படி விடயம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச பேரவைகளில் இலங்கைச் சுங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தல்.
9. புலமைச் சொத்துரிமைச் சட்டம் மற்றும் சுற்றாடல் பற்றிய விடயங்களுக்காக தேசிய தொடர்புகொள்ளல் மையமாகத் தொழிற்படல்.
10. குறித்த விடயம் தொடர்பில் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தல்.
11. தேசிய மற்றும் சர்வதேச செயற்பாடுகளில் உலக சுங்க அமைப்பு, இன்டபோல், EUROPOL மற்றும் சுற்றாடல் அதிகார சபை என்பவற்றுடனான கூட்டிணைந்து செயற்படல்.

பிரதான செயற்பாடு –01 :

புலமைச் சொத்துரிமையின் கீழான பொருட்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) உரிமையாளர்கள் பற்றிய உத்தியோகபூர்வ பட்டியலைப் பெறுதல் :- • பதிவு செய்யப்பட்ட வியாபாரக் குறியீடுகளை பெறல் ; (இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை;) மற்றும் புலமைச் சொத்துரிமையின் கீழான பொருட்கள் தொடர்பிலான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரிக்கும் வகையில் சுங்கப்பிரகடனம் செய்முறைப்படுத்தும் சகல அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு தரவினை பரப்புதல் ;	100%	100%	
(2) புலமைச் சொத்துரிமையுடன் தொடர்புபட்ட பொருட்களை இறக்குமதி செய்தலுடன் தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடனம் செய்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ளல்	100%	100%	
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டிற்காக மேலே(2)இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%	
(4) குறித்த உரிமப்பத்திரம் உடையோர்களுக்கு சுங்க நடைமுறைகள் தொடர்பிலான அறிவினை விருத்தி செய்தல்.	100%	100%	

பிரதான செயற்பாடு - 02 :

இலங்கை தரநிர்ணயங்களின் கீழான பொருட்களுடன் தொடர்பான ஒழுங்குவிதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) பொருட்களது உத்தியோகபூர்வ பட்டியலைப் பெறுதல் :- • இலங்கை தரநிர்ணய நிறுவகத்திடமிருந்தானவை ; • இறக்குமதிக்காக இலங்கைத் தரநிர்ணய சான்றிதழ் அவசியப்படுபவை; மற்றும் சகல சுங்கப்பிரகடன செய்முறைப்படுத்தல் அலுவலகங்களுக்கும் அமுல்படுத்தல் அலுவலகங்களுக்கும் உரிய தரவினை பரப்புதல் ;	100%	100%	
(2) இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் நிராகரிப்பு பட்டியலில் உள்ள பொருட்களின் இறக்குமதியுடன் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் பற்றி சுங்கப்பிரகடனம் செயன்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத்திட்டங்களை மேற்கொள்ளல்	100%	100%	
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டு கட்டுப்பாட்டிற்காக மேலே(2)இல் தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%	
(4) நுகர்வோர்களை பாதுகாப்பதற்காக புதிய ஒழுங்குவிகளை வடிவமைத்தல் மற்றும் வர்த்தக நடவடிக்கைக்கு வசதியளித்தல்	100%	100%	

பிரதான செயற்பாடு - 03 :

புலமைச் சொத்துரிமை சட்டத்தினை அமுல்படுத்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) புலமைச் சொத்துரிமை சட்டத்தினை அமுல்படுத்தல் தொடர்பில் சுங்க அலுவலர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம்	100%	100%	
(2) புலமைச் சொத்துரிமை மீறப்பட்ட பொருட்கள் பற்றிய சந்தேகத்திற்கிடமான இறக்குமதி பொருட்களை இடைமறித்தல்.	100%	100%	
(4) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 125(அ) மற்றும் 125 (ஆ) ஆகியவற்றுக்கு இணங்க "செயற்பாட்டுக்கான பிரயோகம்" தொடர்பில் செயற்படல்	100%	100%	
(4) புலமைச் சொத்துரிமை மீறப்பட்ட பொருட்களின் பறிமுதல் தொடர்பில் அறிக்கையிடல்.	100%	100%	
(5) குறித்த பெறுபேறுகளை உலக சுங்க அமைப்பு மற்றும் றிலோ என்பவற்றிற்கு அவ்வப்பொழுது அறிக்கையிடல்.	100%	100%	

பிரதான செயற்பாடு 04 :

மொன்றீல் நெறிமுறையினால் ஆதரவளிக்கப்பட்ட ஓசோன் படையின் ஆற்றலை குறைக்கின்ற மூலப்பொருட்களை இறக்குமதி செய்தல் தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல் மிக்க தன்மையினை அதிகரித்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	அடையப் பெறாதவிடத்து, அதற்கான காரணம்
(1) சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவில் பதிவு செய்வதற்கு முன்பதாக தேவையான அலுவலக பொருட்களது பட்டியலொன்றினை பெறல் மற்றும் இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தினை பெறல் அத்தோடு, சகல சுங்கப்பிரகடனச் செயலாக்க அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு குறித்த அத்தரவுகளை விநியோகித்தல்.	100%	100%	
(2) சிறந்த இணக்கப்பாடு/அமுல்படுத்துகைக்காக ஓசோன் படையைப் பாதிக்கும் பொருட்கள் தொடர்பிலும் மற்றும் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திர தேவைப்பாடுகள் தொடர்பிலும் சுங்கப்பிரகடண செயலாக்க மற்றும் அமுல்படுத்தல்	100%	100%	

அலுவலர்களுக்கு விழிப்புணர்வூட்டல் திட்டங்களை ஆரம்பித்தல்.			
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாடு தொடர்பில் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளையும் உள்ளீடு செய்து, சரக்கு வெளியாக்கல் முகவர்களுக்கான பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%	
(4) மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக, ஓசோன் படையைப் பாதிக்கும் பொருட்கள் பற்றி பெறப்படுகின்ற தரவுகளை தேசிய ஓசோன் பிரிவுக்கு வழங்குதல்.	100%	100%	
(5) ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் பற்றிய சுயவிபரம் மற்றும் இலக்கு	100%	100%	

பிரதான செயற்பாடு 05 :

பாசல் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆபத்தினை விளைவிக்கத்தக்க கழிவுகள், எல்லைக்கு அப்பால் இடம்பெறும் அசைவுகள் தொடர்பான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதில் ஆற்றல்மிக்க தன்மையினை அதிகரித்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) பொருட்கள் தொடர்பிலான அலுவலக பட்டியல்களை பெறல் • பாசல் பேரவையிலான இணைப்பு I மற்றும் IIIஇல் உள்ளடக்கப்பட்டுள்ளவை; • இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தனை வேண்டுதல் மற்றும் சகல சுங்கப்பிரகடணம் செயலாக்க அலுவலர்களுக்கும் அமுல்படுத்தல் அலுவலர்களுக்கும் தரவுகளை விநியோகம் செய்தல்.	100%	100%	
(2) பிற அரச முகவரகங்களிடமிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் சிறந்த இணக்கப்பாடு / அமுல்படுத்தல் என்பவற்றிற்காக, சுங்கப்பிரகடனச் செயலாக்க மற்றும் சட்ட அமுலாக்க அலுவலகங்களுக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பில் அறிவூட்டும் வகையிலான விழிப்புணர்வூட்டல் திட்டங்களை முன்னெடுத்தல், • பாசல் சமவாயத்தின் கீழ் வருகின்ற ஆபத்து விளைவிக்கத்தக்க கழிவுகள்; • இலங்கைக்குள் இறக்குமதி செய்யத்தடைசெய்யப்பட்ட ஆபத்தினை விளைவிக்கத்தக்க ஏனைய பொருட்கள்; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுகின்ற, சுற்றாடல் கூருணர்வுமிக்க ஏனைய பொருள்கள்; • ஆபத்தினை விளைவிக்கத்தக்க அனுப்புபொருட்களை கண்டுபிடிக்கின்ற சந்தர்ப்பத்தில், எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள்	100%	100%	
(3) சிறந்த இணக்கப்பாட்டு கட்டுப்பாடு தொடர்பில் மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உட்படுத்தி சரக்கு வெளியாக்கல் முகவர்களுக்கான பயிற்சித் திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%	
(4) ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பொருட்களின் சுயவிபரம் மற்றும் இலக்கு	100%	100%	

பிரதான செயற்பாடு 06 :

ஸ்ரொக்ஹோம் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள மோசமான முறையில் உடல் அங்கங்களை அசுத்தமடையச் செய்கின்றவற்றின் இறக்குமதி தொடர்பிலான ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தவதில் ஆற்றல் மிக்க செயற்பாட்டினை அதிகரித்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) தொடர் சோதன மாசுறுகை பற்றிய உத்தியோகபூர்வப் பட்டியலினை பெறல் :- • ஸ்ரொக்ஹோம் பேரவையிலான அ, ஆ மற்றும் இ ஆகிய இணைப்புகளில் பட்டியல்படுத்தப்பட்டவை; • இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுபவை (இணைப்பு ஆ: மட்டுப்படுத்தப்பட்ட பாவனை) ; மற்றும் சகல சுங்கப்பிரகடணம் செயலாக்க மற்றும் அமுல்படுத்தல் அலுவலர்களுக்கு உரிய தரவுகளைப் பரப்புதல் ;	100%	100%	
(2) சேதனப் பொருளின் தொடர் மாசுறுகை பற்றி அறிவூட்டும் நோக்கில் சுங்கப்பிரகடன செயன்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களுக்கு விழிப்புணர்வுத்திட்டங்களை மேற்கொள்ளல்	100%	100%	
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் மேலே(2)இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை வழங்குவதன் மூலம் சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%	
(4) ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பொருட்களின் சுயவிபரம் மற்றும் இலக்கு	100%	100%	

பிரதான செயற்பாடு 07 :

றொட்டேடம் பேரவையில் உள்ளடக்கப்பட்டுள்ள முன்-தகவலளிக்கப்பட்ட இணக்கப்பாட்டினை அமுல்படுத்துவதிலான வினைத்திறனை அதிகரித்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) ஆபத்தினை விளைவிக்கத்தக்க இரசாயனங்கள் மற்றும் பூச்சி கொல்லிகள் தொடர்பில் அலுவலக பட்டியல்களை பெறல் :- • றொட்டேடம் சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளவை ; • இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை; • பூச்சிகொலிகள் பற்றிய பதிவாளரின் முன்கூட்டிய பதிவுகள் அவசியமானவைகள்; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக பூச்சிகொல்லிகள் பற்றிய பதிவாளரின் சிபாரிசின் பேரில் வினியோகிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியமானவைகள்; மற்றும் சகல சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரிய தரவினை பரப்புதல் ;	100%	100%	
(2) பூச்சிகொல்லிகளின் இறக்குமதி செய்தலுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடணச் செயலாக்க மற்றும் சட்ட அமுலாக்க அலுவலர்களுக்கு அறிவூட்டும் வகையிலான விழிப்புணர்வுத்திட்டங்களை மேற்கொள்ளல்.	100%	100%	
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் வகையில் மேலே(2)இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளை வழங்குவதன் மூலம் சரக்கு வெளியாக்கல் முகவர்களின் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%	

பிரதான செயற்பாடு 08 :

இரசாயன ஆயுதங்கள் சமவாயத்தின் கீழ் வருகின்ற பொருட்களுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகளின் அமுல்படுத்துகையில் பயனுறுதித்தன்மையினை அதிகரித்தல் (இரசாயன ஆயுதங்களை விருத்தி செய்தல், தயாரித்தல், கிடங்கில் களஞ்சியப்படுத்தல் மற்றும் அவற்றை உபயோகித்தல் என்பவற்றினை தடைசெய்தல் மற்றும் அவற்றினை அழித்தல் தொடர்பிலான சமவாயம்)

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) இரசாயனங்கள் பற்றிய உத்தியோகபூர்வ பட்டியல்களை பெறல் :- • இரசாயன ஆயுதங்கள் சமவாயம்; • இலங்கைக்குள் இறக்குமதி செய்ய தடைசெய்யப்பட்டவை; • இறக்குமதி செய்வதற்கு முன்பதாக இறக்குமதிக் கட்டப்பாட்டு அனுமதிப்பத்திரம் அவசியப்படுபவை; மற்றும் சகல சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் அலுவலகங்கள் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்கள் என்பவற்றிற்கு உரிய தரவினை பரப்புதல் ;	100%	100%	
(2) அபாயகரம் மிக்க இரசாயனங்களை இறக்குமதி செய்தலுடன் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சுங்கப்பிரகடணம் செய்முறைப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் அலுவலகங்களில் கடமைபுரியும் அலுவலர்களை விழிப்புணர்வூட்டல்	100%	100%	
(3) சிறந்த தன்னார்வ இணக்கப்பாட்டிற்காக மேலே(2)இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளை உள்ளடக்கி சரக்கு வெளியாக்கல் முகவர்கள் பயிற்சி திட்டத்தினை விருத்தி செய்தல்.	100%	100%	
(4) ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பொருட்களின் சுயவிபரம் மற்றும் இலக்கு	100%	100%	

பிரதான செயற்பாடு 09 :

திணைக்களத்துடன் தொடர்புபட்ட ஏனைய ஈடுபாட்டாளர்கள் மற்றும் அரச முகவர்களுடனான கூட்டிணைப்பினை அதிகரித்தல்

பிரதான செயற்பாடுகள்	இலக்கு	உண்மை	இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்
(1) இலங்கை தர நிர்ணயம், NIPO, சுகாதார அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, விவசாயத் திணைக்களம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பவற்றுடனான சந்திப்புக்களை ஏற்பாடு செய்தல்	100%	100%	
(2) சம்பந்தப்பட்ட ஈடுபாட்டாளர்களுக்கு விழிப்புணர்வுத் திட்டங்களை ஒழுங்கு செய்தல்	100%	100%	
(3) நுகர்வோர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஏனைய முகவர்களுடன் கூட்டான செயற்பாடுகளை ஏற்பாடு செய்தல்	100%	100%	
(4) வெகுசன ஊடகம் மூலம் நுகர்வோர் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புணர்வு திட்டங்கள்	100%	100%	
(5) உலக சுங்க அமைப்பு, உலக புலமைச் சொத்துரிமை அமைப்பு, இன்ரபோல், ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்ட அமுலாக்கல் துறை, USPTO,UNODC மற்றும் UNEP போன்ற சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைத்துச் செயற்படல்	100%	100%	

பிரதான செயற்பாடு 10 : திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்			
பிரதான செயற்பாடுகள்	**இலக்கு**	**உண்மை**	**இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்**
(1) செயலமர்வு, பயிற்சித்திட்டம் மற்றும் மாநாடுகள் (உள்ளூர்/சர்வதேசம்) என்பவற்றிற்கு அலுவலர்களை நியமித்தல்	100%	100%	
(2) சுங்க அலுவலர்களுக்கான பயிற்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.	100%	100%	
(3) நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பில் வெளிக்கள ஆராய்ச்சிக்காக அலுவலர்களை ஊக்கப்படுத்தல்.	100%	100%	
(4) சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிற தொடர்புபட்ட முகவரகங்களுக்கு பகுப்பாய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	100%	100%	

பிரதான செயற்பாடு 10 : திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்			
பிரதான செயற்பாடுகள்	**இலக்கு**	**உண்மை**	**இதனை அடையப்பெற முடியாதவிடத்து, காரணம்**
(2) செயலமர்வு, பயிற்சித்திட்டம் மற்றும் மாநாடுகள் (உள்ளூர்/சர்வதேசம்) என்பவற்றிற்கு அலுவலர்களை நியமித்தல்	100%	100%	
(2) சுங்க அலுவலர்களுக்கான பயிற்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்.	100%	100%	
(3) நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாடுகள் தொடர்பில் வெளிக்கள ஆராய்ச்சிக்காக அலுவலர்களை ஊக்கப்படுத்தல்.	100%	100%	
(4) சுங்கப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிற தொடர்புபட்ட முகவரகங்களுக்கு பகுப்பாய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	100%	100%	

2022ஆம் ஆண்டிலான செயலாற்றுகை

இலங்கை கட்டளைகள் நிறுவனம் தொடர்பிலான விடயங்கள்


பதிவு செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கை	31
இலங்கை கட்டளைகள் நிறுவன விடயங்களுக்கு விதிக்கப்பட்ட மொத்த அபராதம் (ரூபா)	33,797,000
இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டவைகளின் மொத்த அளவு	(இணைப்பு I /II)

புலமைச் சொத்துரிமை குறித்தான விடயங்கள்

பதிவு செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கை	10
பதிவு செய்யப்பட்ட புலமைச் சொத்துரிமை விடயங்கள் தொடர்பில் அறவிடப்பட்ட மொத்த அபராதம் (ரூபா)	20,510,000.00

சுற்றாடல் பாதுகாப்பு தொடர்புபட்ட விடயங்கள்

பதிவு செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கை	0
விடயங்கள் தொடர்பில் விதிக்கப்பட்ட மொத்த அபராதம் (ரூபா)	-
மீள் ஏற்றுமதி செய்யப்பட்டவைகளது மொத்த அளவு	-



இணைப்பு - I

2022 ஆம் ஆண்டில் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள்

தொ.இல	விவரம்	அளவு
1	13அ சொகெட்	7528 துண்டுகள்
2	மாற்று மின்னோட்ட அவுட்லற்	2 துண்டுகள்
3	இணைப்பிகள்	12000 துண்டுகள்
4	பெற்றரிகள்	223020 துண்டுகள்
5	மிதிவண்டி டயர்கள்	600 துண்டுகள்
6	மிதிவண்டி ரியுப்கள்	600 துண்டுகள்
7	டின்களில் அடைக்கப்பட்ட மீன்	15712 அட்டைப் பெட்டிகள்
8	பீங்கான் பொருட்கள்	20492 துண்டுகள்
9	சங்கிலி இணைப்பு வேலி கட்டுமானம்	300 பொதிகள்
10	Clodem குடிபானம்	96 அட்டைப் பெட்டிகள்
11	குழாய்கள்	6500 துண்டுகள்
12	ஊக்கம் தரும் பானம்	50 அட்டைப் பெட்டிகள்
13	பதனிடாத தேங்காய் எண்ணெய்	249.14 மெ.தொ
14	சோப்புத் தூள்	40 அட்டைப் பெட்டிகள்
15	எல்போ பொருத்துதல்கள்	8 அட்டைப் பெட்டிகள்
16	மின்சார கேத்தல்கள்	4156 துண்டுகள்
17	ஆற்றல் பானங்கள்	2730 அட்டைப் பெட்டிகள்
18	விசிறிகள்	69825
19	ஜின்ஜர் ஏலே	138 அட்டைப் பெட்டிகள்
20	எல்.பீ எரிவாயுக்கான குழாய்	847 உருளைகள்
21	கூட்டினை தாங்கும் தட்டுகள்	13121 அட்டைப் பெட்டிகள்
22	ஐஸ் கிறீம்	130 பொதிகள்
23	எல்.பீ எரிவாயு ஒழுங்குபடுத்தி	13008 துண்டுகள்
24	எல்.ஈ.டீ பல்புகள்	1000 துண்டுகள்

தொ.இல	விவரம்	அளவு
25	மிருதுவான இரும்பிலான ஏன்சல்	853 துண்டுகள்
26	பாஸ்தா	750 அட்டைப் பெட்டிகள்
27	மின்சார வயர்	15040 அலகுகள்
28	பிளக் டொப்புகளும்	27640 துண்டுகள்
29	பீ.வீ.சீ குழாய்	775 உருளைகள்
30	பீங்கான் பாத்திரங்கள்	2096 அட்டைப் பெட்டிகள்
31	RCCB	620 துண்டுகள்
32	சிவப்பு நிற பிளவுபடுத்திய பருப்பு	1000 பொதிகள்
33	குறைந்த வளைவுடைய T வடிவ குழாய்	840 துண்டுகள்
34	ஸ்பாக்லிங் சாறுகள்	1300 அட்டைப் பெட்டிகள்
35	சோயா சட்னி	290 அட்டைப் பெட்டிகள்
36	சோயா சட்னி	1170 போத்தல்கள்
37	சீனி	4320 பொதிகள்
38	தெம்பூட்டும் நீர்	116 அட்டைப் பெட்டிகள்
39	தக்காளி சட்னி	100 அட்டைப் பெட்டிகள்
40	பற்பசை	360 உருப்படிகள்
41	மஞ்சள் துண்டு	13464 கி.கி
42	யுனிவேசல் அடப்டர்கள்	250 துண்டுகள்
43	சுவர் சுவிச்சுகள்	11700 துண்டுகள்
44	யுனிவேசல் சுவிச்ட் சொகெட்ஸ்	230 துண்டுகள்
45	யூ-பீ.வீ.சீ பொருத்துகைகள்	20004 துண்டுகள்
46	யூ-பீ.வீ.சீ பொருத்துகைகள்	93 அட்டைப் பெட்டிகள்
47	காற்றுப்புகா குடுவைகள்	13380 துண்டுகள்
48	காற்றுப்புகா குடுவைகள்	100 அட்டைப் பெட்டிகள்

இணைப்பு - II

2022 இல் இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் நிராகரிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட செய்யப்பட்ட பொருட்கள்

தொ.இல	விவரம்	அளவு
1	காலணிகள்	2680 சோடிகள்
2	பணப்பை	800 துண்டுகள்
3	குழந்தை நடைப்பயிற்சி வண்டி	42 துண்டுகள்
4	R/C பொம்மைகள்	4500 துண்டுகள்
5	பொம்மைகள்	2696 துண்டுகள்
6	ஏயாபெட்கள்	119 துண்டுகள்
7	வெற்று பொதிகள்	100 துண்டுகள்
8	ஹேன்ஸ்பிறி	10790 துண்டுகள்
9	தொலைபேசி பெற்றிகள்	3725 துண்டுகள்
10	தொலைபேசி கேபிள்கள்	486 துண்டுகள்

தொ.இல	விவரம்	அளவு
11	தொலைபேசி சார்ஜர்கள்	3150 துண்டுகள்
12	தொலைபேசி கவர்கள்	2750 துண்டுகள்
13	தொலைபேசி மேல்,கீழ் மூடிகள்	765 துண்டுகள்
14	தண்ணீர் போத்தல்கள்	576 துண்டுகள்
15	முடி வெட்டுபவை மற்றும் ஆடை சீராக்குபவை	3600 துண்டுகள்
16	ஏல்.ஈ.டீ விளக்குகள்	10000
17	பணப்பைகள்	232 துண்டுகள்
18	மசகு எண்ணெய்	401 கலன்கள்
19	எண்ணெய் வடிகட்டிகள்	100 துண்டுகள்
20	காற்று வடிகட்டிகள்	936 துண்டுகள்

8.1.2.4 துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவு

அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவானது, எல்லை தாண்டிய குற்றச் செயல்களைக் கண்காணிக்கும் நோக்கில், உலக சுங்க அமைப்பகம் / போதைப்பொருட்கள் மற்றும் குற்றச் செயல்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினது கொள்கலன் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும். தற்போது இப்பிரிவானது சமூக பாதுகாப்புப் பணிப்பகத்தின் நோக்கெல்லையின் கீழ் காணப்படுகிறது. மேலும், இப்பிரிவானது கப்பல் இயக்குநர்கள்/ சரக்கு அறிக்கையாளர்களிடமிருந்து முன்கூட்டியே சரக்குகள் பற்றிய தகவல்களைப் பெறுவதோடு, விமான இயக்குநர்களிடமிருந்தான பயணிகள் தகவல்களையும் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, மேற்கொள்ளப்படுகின்ற இடர் பகுப்பாய்வின் அடிப்படையில் புலன்விசாரணைகளை மேற்கொண்டு அதற்பிரகாரம் பொருத்தமான நடவடிக்கைகளுக்கு வழியமைத்தல். மேலும், இப்பிரிவானது விமானச் சரக்கு அனுப்பு பொருட்களுக்கான முன்கூட்டிய தகவல்களை வானூர்தி செயற்படுத்துனர்களிடமிருந்து பெறுதல் பற்றிய செயலாக்கதினையும் மேற்கொண்டு வருகிறது.

இப்பிரிவின் தொழிற்பாடுகள் வருமாறு :

அ. உரிய நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக சந்தேகத்திற்கிடமான பொருட்களை கண்காணிக்கும் வகையில் ஆகாய மற்றும் கடல் மார்க்க பொருட்களுக்கான முன்கூட்டிய இலத்திரனியல் பொருள் பட்டியல்களை பெறுதலும் மற்றும் அவற்றை ஒழுங்குபடுத்துதலும்.

ஆ. இலத்திரனியல் பொருட்பட்டியல்களைப் பயன்படுத்தி கொள்கலனில் அடைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் பிற பொருட்களை இனங்கண்டு, அவற்றை துறைமுக கட்டுப்பாட்டு பிரிவிலுள்ள கருவிகளை பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

இ. உலக சுங்க அமைப்பினால் வழங்கப்பட்ட சரக்கு இலக்குப்படுத்தல் முறைமையினை கண்காணித்துப் பேணுதல்.

ஈ. பிற சர்வதேச மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுடன் ஒத்துழைப்பினைக் கட்டியெழுப்புதல்.

கிடைக்கத்தகு கருவிகள்

சரக்கு சோதனை முறை

World Customs Organization
Cargo Targeting System (CTS)

அசிகுடா அமைப்பு



சு.அ வலைப்பினல் மற்றும்
தே.சு.அ வலைப்பின்னல்

கென்டயினர்கொம் (Containercomm)





இப்பிரிவின் ஏனைய தொழற்பாடுகள்

- கப்பல் முகவர்களால் மேலதிக நேர கொடுப்பனவுச் சேகரிப்புக்களைக் கண்காணித்தல்.
- சரக்குப் போக்குவரத்தினைக் கண்காணிப்பதற்காக, கப்பல் முகவர்கள், பொருள் அனுப்பு முகவர்கள் மற்றும் விமான நிலைய முகவகள் ஆகியோரினால் கப்பல் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படுவதைக் கண்காணித்தல்.
- இலங்கைச் சுங்கத்தில் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் போக்குவரத்துச் செய்யப்படுகின்ற கடல்மார்கச் சரக்குகள், விமானச் சரக்குகள் மற்றும் பயணிகள் பொதிகள் என்பவற்றினை கண்காணிக்கவும், புலனாய்வு செய்யவும், தடுத்து வைக்கவும் மற்றும் விசாரணை செய்வதற்குமான நோக்கில் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல் மீதான ஐக்கிய நாடுகள் அலுவலகம் மற்றும் உலக சுங்க அமைப்பு ஆகியவற்றினால் முன்னெடுக்கப்பட்ட கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்தல் மற்றும் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல் மீதான ஐக்கிய நாடுகள் அலுவலகம் மற்றும் உலக சுங்க அமைப்பு ஆகியவற்றுடன் கூட்டிணைந்து செயற்படல்.
- திணைக்களத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் அபாயகரமான பொருட்கள், பைர் ஸ்கோப் கருவி, மற்றும் இரசாயனப் பரிசோதனை கருவி மற்றும் TruNarc போன்ற ஸ்கேனிங் உபகரணங்களை இயக்கும் நோக்கில் சரக்கு இலக்கு முறைமை மற்றும் அசிகுடா நிகழ்ச்சித்திட்டங்களை உபயோகித்தல் அத்துடன் தேவைப்படும் பட்சத்தில் ஏனைய பிரிவுகளுக்கும் தமது உதவிகளை வழங்குதல்.

அபாயகரமான பொருட்கள்



TruNarc





- உலகளாவிய கொள்கலன் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தி அவற்றைக் கண்காணிப்பதில் ஈடுபட்டுள்ள சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுடனான கூட்டிணைந்த பணிகளுக்கு வசதியளித்தல்.

- சுங்கத்தின் தொழிற்பாட்டின் கீழ் வருக்கூடிய சட்டவிரோதப் பொருட்கள், கடத்தற் பொருட்கள், போதைப் பொருட்கள், நாடு கடந்த குற்றங்கள் ஆகியவற்றை கண்காணித்தல், தடுத்து நிறுத்துதல் மற்றும் அவற்றைத் தடை செய்வதோடு, சுங்கக் கட்டளைச் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புபட்ட சட்டங்களுக்கு இணங்க அத்தகைய இறக்குமதிகள், ஏற்றுமதிகள், பயணிகள் பொருட்கள், பொதிகள் அல்லது இறக்கி ஏற்றல் சரக்குகளை நிறுத்துதல், தடுத்து வைத்தல், புலனாய்வு செய்தல் மற்றும் விசாரணை செய்தல் போன்ற பணிகள் தொடர்பில் போதைப்பொருள் பிரிவு, சமூக பாதுகாப்புப் பிரிவு, இடர் முகாமைத்துவ பிரிவு மற்றும் தடுப்புப் பிரிவு ஆகியவற்றுடனான புலனாய்வு நடவடிக்கைகளிலும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளிலும் ஈடுபடல்.

செயலாற்றுகை பற்றிய சாராம்சம்

அ. வருடாந்த சாராம்சம்

தொடர் இல	விபரம்	அறவிடப்பட்ட தொகை (ரூபா)
1	2022 ஆம் ஆண்டுக்கான மொத்த தணிக்கப்பட்ட பறிமுதல்கள்	199,386,140.00
4	2022 இற்கான கப்பல் மேலதிக நேர அறவீடுகள்	68,155,877.00
மொத்தம்		**267,542,017.00**

ஆ. குறித்த விடயங்களின் நிலைமைகள் மற்றும் அறவீடுகள்

மாதம்	தொடங்கப்பட்ட விடயங்கள்	முடிவுறுத்தப்பட்ட விடயங்கள்	மொத்த அறவீட்டுத் தொகை (ரூபா)
ஜனவரி	3	5	26,516,000.00
பெப்ரவரி	1	3	150,000.00
மார்ச்	8	7	17,150,000.00
ஏப்ரல்	6	3	7,820,000.00
மே	2	5	12,800,000.00
ஜூன்	3	3	40,000,000.00
ஜூலை	2	3	14,000,000.00
ஓகஸ்ட்	1	1	100,140.00
செப்டம்பர்	1	1	4,100,000.00
ஒக்டோபர்	6	1	56,250,000.00
நவம்பர்	2	1	5,500,000.00
டிசம்பர்	1	0	15,000,000.00
முழு மொத்தம்	**36**	**33**	**199,386,140.00**

இ. கப்பல் மேலதிக நேர அறவீடுகள்

மாதம்	அறவிடப்பட்ட தொகை (ரூபா)	கப்பல்களது எண்ணிக்கை
ஜனவரி	8,589,950.00	272
பெப்ரவரி	5,372,575.00	272
மார்ச்	5,514,865.00	322
ஏப்ரல்	6,966,057.00	292
மே	2,999,736.00	273
ஜூன்	8,187,637.00	284
ஜூலை	8,978,710.00	274
ஓகஸ்ட்	8,434,062.00	290
செப்டம்பர்	5,645,220.00	283
ஒக்டோபர்	3,807,483.00	312
நவம்பர்	2,575,990.00	323
டிசம்பர்	10,897,234.00	321
மொத்தம்	77,969,519.00	3518


ஆ. 2022 ஆம் ஆண்டுக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க பறிமுதல்கள்

பொருள் வகை	பறிமுதல் செய்யப்பட்ட மொத்த அளவு	அலகுகள்
கோகெயின்	355.881	கி.கி
இரும்புக் கீலங்கள்	74,881	கி.கி

2022ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்திற்கு எதிரான அடைவுகளின் ஒப்பீட்டாய்வு


<u>ஆ. வருமான குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்</u>

பிரதான செயற்பாட்டு இல 01 : சந்தேகத்திற்கிடமான பொருட்கள் குறித்தான சட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கான அபராதங்களை விதித்தல்.



பிரதான செயற்பாட்டு இல 02 : ஒருங்கிணைந்த கட்டணங்களின் அறவீடு

வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்ட மொத்த சரக்குக் கப்பல்கள் மற்றும் கொள்கலன் கப்பல்கள் தொடர்பிலான மேலதிக நேர கட்டணங்கள் துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவினால் அறவிடப்படுகின்றன. இதன் சீரான செய்முறைக்காக தானியக்க முறையூடன் கூடிய புதிய முறைகள் மற்றும் நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.



ஆ. கட்டுப்பாடு குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்

போதைப்பொருள் மற்றும் எல்லைப்புறப்பகுதியிலான பிற குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கான கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டத்தினை தாபித்தல்

i. கட்டுப்பாடு குறிக்கோள்களின் கீழ் பின்வரும் பிரதான தொழிற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன:

- ''CENCOMM''எனும் உலகளவில் இயக்கப்படும் தொடர்பாடல் பாதுகாப்புத் தளமானது பராமரிக்கப்பட்டு வருகிறது.
- போதைப்பொருள் மற்றும் எல்லைப்புறப் பகுதியிலான குற்றங்களைப் பற்றிய தகவலைப் பெற்றுக்கொள்ளும் வகையில் *விமானச் சரக்குத் தொடர்பாடல்* மற்றும் *கொள்கலன் தொடர்பாடல்* பற்றிய எச்சரிக்கைகள் பெறப்பட்டன.
- UNSCR எச்சரிக்கைகள் பெறப்பட்டதுடன் அவைCTS ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டன.

ii. **போதைப்பொருள் மற்றும் பிற நாடுகடந்த குற்றங்களின் இடர் பற்றி விவரக்குறிப்பும் மதிப்பீட்டாய்வும்**

இடர் விவரக்குறிப்பானது துறைமுக கட்டுப்பாட்டு பிரிவு பணியாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு தொடர் செயன்முறையாகும். இச்செயன்முறையானது, இடர் காரணிகளின் செயற்திறன் தொடர்பில் பகுப்பாய்வு செய்து அவற்றை உறுதிப்படுத்தல், சுங்க பிரதேசங்களினுள் மேற்பார்வை செய்தல் மற்றும் சந்தேகத்திற்கிடமான செயல்பாடுகளுக்கான காரணிகளை அடையாளங்காணல், நாட்டின் எல்லைகளுக்கிடையிலான சர்வதேச குற்றங்களுடன் தொடர்புபட்ட இடர்கள் குறித்தான மதிப்பாய்வு மற்றும் விவரக்குறிப்பு மேற்கொள்ளல் போன்ற விடயங்களில் ஈடுபடுகிறது.

iii. இணக்கமுறாத கப்பல் முகவர்களுக்கு எதிராக சட்டங்களை அமுல்படுத்தல்

இலத்திரனியல் சரக்குப்பட்டியலினை சமர்ப்பிப்பதில் சட்ட ஏற்பாடுகளை ஒழுங்குபடுத்துமாறு கப்பல் முகவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

இ. வியாபார வசதியளித்தல் குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்

சட்டவிரோத வர்த்தகங்களை அடையாளப்படுத்தும் நோக்கில் இடர் காரணிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருவதோடு, புதிய பிரகடனங்களை அவர்கள் மேற்கொள்ளும் போது தானியக்க விழிப்பூட்டல்களை ஏற்படுத்தும் வகையிலான விவரக்குறிப்புகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஈ. முன்கூட்டிய இ-சரக்குப்பட்டியலிடலை ஊக்குவித்தல் (CTS / ASYCUDA)

கப்பல் முகவர்கள் தங்கள் சரக்குப்பட்டியலினை இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. மேலும் உலக சுங்க அமைப்பு மற்றும் UNODC உதவியுடன், சமர்ப்பிக்கப்பட்ட சரக்குப்பட்டியல்கள் இப்போது CTS பிரயோகத்தின் மூலம் உள்ளீர்க்கப்பட்டு வருகின்றன.

அலுவலர்களின் திறன் விருத்தி

1. துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவில் இணைக்கப்பட்ட அலுவலர்களின் திறனை விருத்தி செய்யும் நோக்கில் UNODC - WCO கெள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் தெற்காசிய மற்றும் தென் கிழக்காசிய மீன்பிடித் துறை சார்ந்த குற்றங்கள் குறித்த நிகழ்ச்சித் திட்டமனது இடம்பெற்றது. மீன்பிடி குற்றங்கள் என்பது சட்டவிரோத மீன்பிடித்தல், ஆவண மோசடி, போதைப்பொருள் கடத்தல் மற்றும் பணமோசடி அடங்கலாக மீன்பிடித் துறையில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளைக் குறிக்கும் ஒரு தெளிவான வரையறை இன்றிய சட்டக் கோட்பாடாகும். இது மீன்பிடி இருப்புகளை குறைவடையச் செய்வதுடன் பிராந்தியத்தில் மனித மற்றும் பொருளாதார பாதுகாப்பை சிதைக்கிறது. மாலைதீவு மற்றும் இலங்கையில் மீன்பிடி குற்றங்களைத் தடுப்பதில் கடல்சார் சட்ட அமுலாக்கல் முயற்சிகளை ஆதரிக்கும் வகையில் வழிகாட்டுதல் செயலமர்வினை நடத்துவதற்கான முன்னெடுப்பு எடுக்கப்பட்டது. கடல்சார் சட்ட அமுலாக்கல் துறையில் பணிபுரியும் இலங்கை அதிகாரிகளின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதே இந்த வழிகாட்டல் செயலமர்வவின் நோக்கமாகும். இந்த வேலைக்களரியானது இடை-முகவர் நிறுவன ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்கு வழியமைத்ததோடு, மேலதிக திறன் விருத்தி நடவடிக்கை குறித்து கொழும்பில் ஏற்கனவே தொழிற்பட்டுவரும் UNODC-WCO சார்ந்த துறைமுக கட்டுப்பாட்டுப் பிரிவின் கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஆதரவளிப்பதாகவும் விளங்குகின்றது.



2. நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்து போராடும் வகையில், இலங்கையின் துறைமுகம் மற்றும் விமான நிலையத்தில் ஒரு நீடுறுதி மிக்க சட்ட அமுலாக்கல் கட்டமைப்பாக UNODC-WCO கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டம் விளங்குகிறது. இந்தப் பிரிவானது, தேசிய அச்சுறுத்தல்களை மதிப்பீடு செய்து அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்தல் மட்டுமல்லாது, நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களின் நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படக் கூடிய பிராந்திய மற்றும் உலகளாவிய அச்சுறுத்தல்களை குறைப்பதற்கும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. சந்தேகத்திற்கு இடமின்றி, இடர் விவரக்குறிப்பு மற்றும் இலக்குப்படுத்தல் ஆகியன மிகவும் இன்றியமையாத அம்சமாக விளங்குவதோடு, இவை கிடைக்கத்தகு வளங்களின் சிறப்பான உபயோகத்தினை உறுதிசெய்கின்ற அதேவேளை, இந்த அமுலாக்கல் நடவடிக்கைகளின் வினைத்திறனையும் பயனுறுதியையும் அதிகரிக்கிறது.

3. ஏனைய சர்வதேச மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுடனான ஒத்துழைப்பினை கட்டியெழுப்புதல்





"பெண்களின் தலைமைத்துவத்தை வலுப்படுத்தும் வகையில் பாலின சமத்துவத்தை முதன்மைப்படுத்தல்" எனும் தலைப்பிலான நீல அமுலாக்கல் பற்றிய பாலின மற்றும் தலைமைத்துவச் செயலமர்வானது தாய்லாந்தின் பெங்கொக்கில் நடைபெற்றது. UNODC-WCO கொள்கலன் கட்டுப்பாட்டுத் திட்டத்திலான பாலினம்/தலைமைத்துவ செயலமர்வானது இலங்கை மற்றும் மாலைதீவு பெண் அலுவலர்களுக்காக நடைபெற்றது. இக்கூட்டமானது மீன்பிடி குற்றங்களை கையாளுவதில் கடல்சார் அமுலாக்கல் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க எதிர்பார்கின்ற நோர்வே-நிதியிடப்பட்ட "நீல அமுல்படுத்தல் திட்டம்" அத்தியவசியமானதொரு பாகமாகும். இந் நிகழ்வின் பிரதான குறிக்கோள்கள் பாலின-உணர்வுமிக்க தலைமைத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகள் சார்ந்த ஈடுபாடு போன்ற அம்சங்கள் ஊடாக பெண் சட்ட அமுல்படுத்தல் அலவலர்களது முகாமைத்துவ திறனை விரைவுபடுத்தி பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்துவதுவதாகும்





4. UNODC-WCO கொள்கலன் திட்டம் ; TruNarc போதைப்பொருள் பகுப்பாய்வி மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் குறித்த பயிற்சி

போதைப்பொருள்கள் மற்றும் குற்றம் குறித்த ஐக்கிய நாடுகள் அலவலகமானது UNODC-WCO கொள்கலன் திட்டம் தொடர்பாக தனது பாராட்டுக்களை வழங்கியுள்ளது. கடுமையான பணியிட உபாதைகள் மற்றும் நோய்களை ஏற்படுத்தும் அபாயங்களை குறைக்க போதைப்பொருள் அடையாளம் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் என்பவற்றிற்கு போதைப்பொருள் TruNarc பகுப்பாய்வி/ Raman Spectrometer இனை பயன்படுத்துவதனை குறித்த நான்கு நாள் ஒருங்கிணைந்த நடைமுறை பயிற்சிச் செயலமர்வு நடைபெற்றது. இந்த உபாதைகள் மற்றும் நோய்கள் இரசாயன, கதிரியக்க, உடல் ரிதியான, மின்சார, இயந்திர அல்லது ஏனைய பணியிட அபாயங்களுடன் தொடர்புகொள்ளுவதால் ஏற்படலாம். இந்த நடவடிக்கைக்கு ஐக்கிய அமெரிக்க அரசு பூரண ஆதரவளித்தது. இந்த பயிற்சிச் செயலமர்வானது ஒஸ்றியா நாட்டின் வியன்னாவிலுள்ள UNDOC இன் ஆய்வகம் மற்றும் அறிவியல் பிரிவு வளாகத்தில் இடம்பெற்றது.





குறிப்பிடத்தக்க சாதனைகள்

அ. 355.81கி.கி நிறையுடைய கோகெய்ன் பறிமுதல் செய்யப்பட்டன.





ஆ. மரக்கட்டைகளுக்குள் மறைத்துவைக்கப்பட்ட போதைப் பொருள்கள் - தவாறன எச்சரிக்கை





இ. புதிய ஓரெஞ்சு பழத்தினுள் மறைத்துவைக்கப்பட்ட போதைப் பொருள்கள் - தவாறன எச்சரிக்கை





8.1.3 மத்திய புலனாய்வுப் பணிப்பகம்

அறிமுகம்

மத்திய புலனாய்வுப் பணிப்பகமானது, அரசிறை இழப்புக்களைத் தவிர்த்தும் "சமூக ரீதியான பாதுகாப்பு" தொடர்பான கடப்பாடுகளைப் பேணி, நேர்மையான வர்த்தகர்களுக்கு வசதியளித்தல் தொடர்பிலான திணைக்களத்தின் இலக்கினை அடையும் நோக்கில், சம்பந்தப்பட்ட புலனாய்வுகளை வினைத்திறன்மிக்கதாகவும் உரிய நேரத்திலும் மற்றும் துல்லியமாகவும் தொழிற்பாட்டு பிரிவிற்கு மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கும் வழங்குவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

பொதுவாக, இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு :

- தேவையான புலனாய்வுகளை சமர்ப்பிப்பதன் மூலம் உயர் தரத்திலான தீர்மானம் மேற்கொள்கைக்கு உதவுதல்.
- சரக்கு மற்றும் பயணிகள் வெளியாக்கத்திலுள்ள புலனாய்வு மூலமான கட்டுப்பாட்டு முறைமையின் தொழிற்பாட்டை வலியுறுத்தல்.
- எல்லைக் குறுக்காக இடம்பெறுகின்ற சரக்கு போக்குவரத்துகள் தொடர்பான தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.
- புலனாய்வுத் தகவல்களை உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் பகிர்ந்துகொள்வதற்கான தேசிய தொடர்பு கொள்கை மையமாகவும் மற்றும் மத்திய நிலையமாகவும் செயற்பட்டு, அமுலாக்கல் தொடர்பிலான உதவிகளை வழங்கல்.

பிரதான தொழிற்பாடுகள்

1. தகவல்களை சேகரித்தல்
2. 24மணி நேர பொது மக்கள் தகவல் பெறல் கருமபீடத்தினை பேணலும் முகாமை செய்தலும்.
3. தகவலினை பகுப்பாய்வு செய்தலும் மற்றும் விருத்திசெய்தலும்
4. தகவலினைப் பரப்புதல் : உள்நாட்டில் பணிப்பகங்கள் ஊடாகவும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுடாகவும்.
5. சர்வதேச சுங்க தகவல் முறைமையுடனான கூட்டிணைப்பு.
6. ஆசிய மற்றும் பசுபிக் பிராந்திய ஒற்றர் இணைப்பு அலுவலகத்தற்கான தேசிய தொடர்பு நிலையமாகவும் மற்றும் சர்வதேச அமுல்படுத்தல் ஒருங்கிணைப்புக்கான "குவியல் நிலையமாகவும்" செயற்படல்.
7. CSI அலுவலகம், ஸ்கேனிங் பிரிவு மற்றும் குறித்த கொள்கலன் சாலை செயற்படுத்துனர்கள் ஆகியோர்களுடன் கொள்கலன் பாதுகாப்பு பூர்வாங்க செய்முறையினை ஒருங்கிணைத்தல்.
8. சரக்குப்பட்டியல்களை மீளாய்வு செய்வதன் மூலம், புலனாய்வு அடிப்படையில் உயர் இடர் சரக்குகளை இடைமறித்தல் மற்றும் விசாரணைகளை மேற்கொள்ளல்
9. சுங்க விசாரணைகளை மேற்கொள்ளுதலும் மற்றும் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கலினை தொடுத்தலும்.
10. முன்னர் குற்றமிழைத்தவர்களது தரவு நிரல்களைப் பேணல்
11. தேசிய சுங்க அமுல்படுத்தல் வலைப்பின்னல் தரவு நிரல்களைப் பேணல்
12. இலங்கைச் சுங்கத்தின் மத்திய புலனாய்வு பணிப்பகமானது புதிதாக நிறுவப்பட்ட எல்லைப்புற இடர் மதிப்பீட்டு நிலையத்தின் ஒரு அங்கமாக விளங்குவதோடு, இது ஏனைய 09 புலனாய்வு அதிகாரசபைகளைக் கொண்டுள்ளது.

2022 ஆம் ஆண்டிலான செயலாற்றுகை

அட்டவணை 1 : பெறப்பட்ட மற்றும் விநியோகிக்கப்பட்ட தகவல்கள்

	2019	**2020**	**2021**	**2022**
பொது தகவல் பெறப்படும் கருமபீடம் ஊடாக பெறப்பட்ட தகவல்களது எண்ணிக்கை	73	50	43	36
பிற மூலகங்களில் இருந்து (பெக்ஸ், கடிதங்கள், செய்திகள்)	21	11	42	21
மொத்தம்	**94**	**61**	**85**	**57**
நடவடிக்கை எடுப்பதற்காக பிற கிளைகளுக்கு பங்கிடப்பட்ட தகவல்களது எண்ணிக்கை	84	53	84	57

அட்டவணை 2 : பகிர்ந்தளிக்கப்பட்ட தகவல் எச்சரிக்கைகளது எண்ணிக்கை

	2019	2020	2021	2022
றிலோ / உலக சுங்க அமைப்பின் சுங்க அமுல்படுத்தல் வலைப்பின்னல் எச்சரிக்கைகள்	01	-	14	04

அட்டவணை 3 : முன்னர் குற்றமிழைத்தவர்களது விபரங்கள் தொடர்பாக பல்வேறு கிளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டவைகளது எண்ணிக்கை

	2019	2020	2021	2022
முன்னர் குற்றமிழைத்தவர்களது தரவு நிரல் அறிக்கைகளது எண்ணிக்கை	108	166	106	104

அட்டவணை 4 : சுங்க இல்ல முகவர் மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பிலான பதிவுகளின் எண்ணிக்கை

	2019	2020	2021	2022
சுங்க இல்ல முகவர்கள் உரிமம் புதுப்பித்தல்கள்	6626	6866	6386	6367
இலங்கை துறைமுக அதிகார சபை சரக்கு மேடை உதவியாளர் உரிமங்கள் (ஏ அனுமதி)	2356	1418	1508	1545

அட்டவணை 5 : கொள்கலன் பாதுகாப்பு பற்றிய முன்னெடுப்பின் கீழ் ஸ்கேன் செய்யப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை

		2019	2020	2021	2022
கொள்கலன்களது மொத்த எண்ணிக்கை		385	215	373	418

அட்டவணை 6 : உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விசாரணை மற்றும் புலனாய்வு முகவர்களுடனான தொடர்பு

முகவர்	வேண்டுகோள்களது எண்ணிக்கை				பெறப்பட்ட பதில்களது எண்ணிக்கை			
	2019	2020	2021	2022	2019	2020	2021	2022
டி.ஆர்.ஐ. - இந்தியா	29	08	10	26	08	-	01	10
றிலோ மற்றும் பிற முகவர்கள்	15	14	16	13	01	03	09	-

அட்டவணை 7 : தேசிய சுங்க அமுலாக்கல் வலைப்பின்னல் தரவுத்தளம்

		2019	2020	2021	2022
செல்லுபடியான விடயங்களின் எண்ணிக்கை		1,704	1,301	1,225	850

அட்டவணை 8 : சட்ட அமுல்படுத்தல் குறித்தான செயலாற்றுகை

		2019	2020	2021	2022
இவ்வாண்டுக் காலப்பகுதியில் தொடங்கிவைக்கப்பட்ட / கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களது எண்ணிக்கை		05	20	12	27
இவ்வாண்டுக் காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை		11	22	10	11
அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா.)		16,569,279	6,884,723	15,655,090	62,812,600

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயல் திட்டத்திற்கு எதிராக மதிப்பிடப்பட்ட செயலாற்றுகை

அடைவுகள்

1. கடத்தல் செயற்பாடுகளை எதிர்த்து போராடுவதற்கும் மற்றும் சட்டரீதியான வர்த்தகத்தை எளிதாக்குவதற்குமாக திணைக்களத்தின் அனைத்து முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு மட்டங்களுக்குமான புலனாய்வு சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

அ. முறையான உளவுத்துறை பகுப்பாய்வு தொடர்பில் அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல்
ஆ. சேகரிக்கப்பட்ட தகவல்களிலிருந்து புலனாய்வு சார்ந்த பகுப்பாய்வு
இ. புலனாய்வு அறிக்கைகளைத் தயாரித்து விழிப்பூட்டல்களை வழங்குதல்
ஈ. ஏற்புடைய அனைத்து மட்ட அலுவலர்களுக்கும் புலனாய்வுத் தகவல்களை வழங்குதல்
உ. கோரப்படுகின்றவாறு முன்னைய குற்ற அறிக்கைகளை வழங்குதல்

2. எல்லைப் புறப் பாதுகாப்பினையும் சரக்கு மற்றும் பயணிகளின் நகர்வுடன் தொடர்புபட்ட பிற இணக்கப்பாட்டு நடவடிக்கைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளுடனான ஒத்துழைப்பு

அ. உலக சுங்க அமைப்பு, றிலோ ஏ பி, டீ.ஆர்.ஐ இந்தியா மற்றும் என்.சீ.பீ போன்ற பிற சர்வதேச அதிகார சபைகள் என்பவற்றுடன் ஒத்துழைத்துச் செயற்படல்
ஆ. உலக சுங்க அமைப்பு, றிலோ குறித்தான செயல்பாடுகளில் காத்திரமான பங்கேற்பு
இ. தகவல் பரிமாறலுக்காக உள்நாட்டு அதிகார சபைகளுடன் (மத்திய வங்கி,PNB, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்) தொடர்பாடல்
ஈ. சீ.எஸ்.ஐ அலுவலகம், ஸ்கேனிங் பிரிவு மற்றும் சம்பந்தப்பட்ட முனைய இயக்குனர்களுடன் சீ.எஸ்.ஐ. ஆய்வு தொடர்பான ஒருங்கிணைப்பில் கலந்துகொள்ளல்

3. புலனாய்வுத் தகவல்களை சேகரித்து அவற்றைப் பாதுகாத்தல் தொடர்பிலான துல்லியத் தன்மை மற்றும் வினைத்திறன் ஆகியவற்றை மேம்படுத்தல்.

அ. பொது தகவல் பெறுதல் கருமபீடம் மற்றும் அதன் பதிவுகளை 24 X 7 மணிநேரமும் திறம்பட பேணுதல்.
ஆ. முன்னைய குற்றங்கள் தொடர்பிலான தரவுத்தளத்தை பராமரித்தல்
இ. தேசிய சுங்க அமுல்படுத்தல் வலைப்பின்னல் மற்றும் அதனது பயனர்களை காத்திரமாகப் பாரமரித்தல் தேசிய சுங்க அமுல்படுத்தல் வலையமைப்பினுள் பதியப்பட்ட பறிமுதல் விடயங்களை உரிய நேரத்திலும் மற்றும் காத்திரமாகவும் சரிபார்த்தல்.
ஈ. அலுவலர்களுக்கு தேசிய சுங்க அமுல்படுத்தல் வலையமைப்பு பற்றிய பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல்

8.1.4 மத்திய விசாரணைப் பணிப்பகம்

அறிமுகம்

மத்திய விசாரணைப் பணிப்பகமானது, சுங்கத் திணைக்களத்தின் குறிக்கோள்களுடன் தொடர்பினையுடைய ஏனைய இயக்கம் சார்ந்த பணிப்பகங்களினால் கண்டறியப்படுகின்ற சுங்கச் சட்டம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட சட்டங்களின் மீறுகைகள் தொடர்பில் புலனாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. மேலும் இது மத்திய வழக்குப் பதிவினைப் பேணுவதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

எனவே, இப் பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களாக :

- சகல சுங்க விசாரணைகளையும் ஒருமைப்படுத்தி அவற்றை தொழில்வாண்மைத்துவத் தன்மையில் முன்னெடுத்தல்.
- மத்திய வழக்குப் பதிவினை மிகவும் வினைத்திறனாகவும் பயனுறுதிமிக்க வகையிலும் பேணுதல்.
- வெகுமதி பகிர்ந்தளிப்பினை ஒருமைப்படுத்துவதுடன் அவற்றை வெளிப்படையான முறையில் மேற்கொள்ளல்


பிரதான தொழிற்பாடுகள்

- பிற பணிப்பகங்களினால் (வருவாய் செயலணி மற்றும் தடுப்புப் பணிப்பகங்கள் நீங்கலாக) கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களை விசாரணை செய்தல்.
- சுங்க மீறுகைகளைக் கண்டறிந்து அவற்றினை விசாரணை செய்தல்.
- மத்திய வழக்குப் பதிவினைப் பேணுதல்.
- வருவாய் செயலணி மற்றும் தடுப்புப் பணிப்பகங்களினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை முன்னேற்றங்களை கண்காணித்தல்.
- மத்திய வழக்கு பதிவில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களை இற்றைப்படுத்தல்.
- திணைக்களத்தில் முடிவுறுத்தப்பட்ட சகல விடயங்கள் தொடர்பில் வெகுமதிகளை பகிர்ந்தளித்தல்.

செயலாற்றுகை


2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட விடயங்களது மொத்த எண்ணிக்கையும் தற்போதைய நிலமையும்

மாதம்	பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	முடிவுறுத்தப்பட்டவை	விசாரணை நிலையிலுள்ளவை	நிலுவையிலுள்ள அறவீடுகள்	CDD இற்கு பரிந்துரைக்கப்பட்டவை	நிலுவையிலுள்ள விசாரணைகள்
ஜனவரி	6	5	1			0
பெப்ரவரி	13	11	1			1
மார்ச்	12	7	1	2	1	1
ஏப்ரல்	7	7				0
மே	2	1	1			0
ஜூன்	4	2	1			1
ஜூலை	0	0				0
ஓகஸ்ட்	4	0				4
செப்டம்பர	4	4				0
ஒக்டோபர்	2	0		1	1	0
நொவம்பர்	1	0				1
டிசம்பர்	0	0				0
மொத்தம்	**55**	**37**	**5**	**3**	**2**	**8**




2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கை (மாதாந்த அடிப்படையில்)

மாதம்	பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை
ஜனவரி	6
பெப்ரவரி	13
மார்ச்	12
ஏப்ரல்	7
மே	2
ஜூன்	4
ஜூலை	0
ஓகஸ்ட்	4
செப்டம்பர	4
ஒக்டோபர்	2
நொவம்பர்	1
டிசம்பர்	0
மொத்தம்	**55**




2015 முதல் 2022 வரையான ஆண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கையும் தற்போதை நிலமையும்

வருடம்	2015	2016	2017	2018	2019	2020	2021	2022	Total
பதிவு செய்யப்பட்ட மொத்த விசாரணை விடயங்கள்	577	329	420	290	383	342	86	55	2,482
அபராதங்கள் விதிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டவை	50	140	205	106	215	120	47	32	915
மேற்கொண்டு நடவடிக்கை இல்லை என்ற அடிப்படையில் முடிவுறுத்தப்பட்டவை	252	117	150	121	109	62	8	5	824
பதிவு செய்யப்பட்டவை (புலனாய்வுகள், விசாரணைகள், அகற்றப்பட்டவை, நீதிமன்ற வழக்கு, போன்ற)	272	71	64	61	57	157	30	18	730




2015 தொடக்கம் 2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மத்திய விடயப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட விடயங்களின் மொத்த எண்ணிக்கை

வருடம்	விடயங்களது எண்ணிக்கை
2015	5,916
2016	4,682
2017	5,464
2018	3,055
2019	3,505
2020	3,303
2021	2,627
2022	2,199




2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியின் போதான மொத்த அறவீடுகள்

மாதம்	மொத்த அறவீடுகள் (ரூபா)
ஜனவரி	80,334,526
பெப்ரவரி	65,670,000
மார்ச்	59,724,532
ஏப்ரல்	57,535,000
மே	18,200,000
ஜூன்	7,850,000
ஜூலை	5,900,000
ஓகஸ்ட்	38,550,000
செப்டம்பர	29,301,511
ஒக்டோபர்	181,200,000
நொவம்பர்	20,500,000
டிசம்பர்	213,010,614
மொத்தம்	**777,776,183**



2018 தொடக்கம் 2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியின் போதான மொத்த அறவீடுகள்

வருடம்	மொத்த அறவீடுகள் (ரூபா)
2018	225,522,861
2019	374,818,935
2020	207,607,101
2021	370,750,707
2022	777,776,183



2002.12.31 இலுள்ளவாறாக இப்பணிப்பகத்தில் பேணப்பட்ட வங்கி உத்தரவாதங்கள்

வங்கி உத்தரவாதங்களின் மொத்த எண்ணிக்கை	44
வங்கி உத்தரவாதங்களின் மொத்தப் பெறுமதி	469,141,220

44 எண்ணிக்கையான வங்கி உத்தரவாதங்களில் பின்வருவன நீதிமன்ற வழக்குகளைக் கொண்டுள்ளன

நீதிமன்ற வழக்குடைய வங்கி உத்தரவாதங்களின் எண்ணிக்கை	4
நீதிமன்ற வழக்குடைய வங்கி உத்தரவாதங்களின் பெறுமதி	285,021,414

8.1.5 சட்ட விவகாரங்கள் பணிப்பகம்

அறிமுகம்

சட்ட விவகாரப் பணிப்பகமானது திணைக்களத்தின் பிரதான சட்ட ஆலோசகராகத் திகழ்வதோடு, நீதிமன்ற வழக்குகளை நிர்வகித்து அவற்றை மேற்பார்வை செய்கின்ற அதேவேளை, சட்டமா அதிபர் திணைக்களத்துடனான ஆவணத் தொடர்புகள் போன்றவற்றுக்கும் பொறுப்பாக விளங்குகின்றது. இந்தப் பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களாக, சுங்கத் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்கள் குறித்துமான சட்ட ஆலோசனைகளை வழங்குதல், வழக்காடுதல் விடயங்களை எதிர்கொள்ளல் மற்றும் திணைக்களத்தின் தொழிற்பாடுகள் யாவும் சட்ட வரையறையினுள் வினைத்திறன் மிக்க முறையிலும் காத்திரமாகவும் இடம்பெறுவதை உறுதிப்படுத்தல் போன்றன விளங்குகின்றன.
இப்பணிப்பகமானது ஒரு பிரதிப் பணிப்பாளர், இரண்டு அத்தியட்சகர்கள், ஆறு உதவி அத்தியட்சகர்கள், ஒரு பரிசோதகர் மற்றும் ஒரு காவலர் ஆகியோரின் உதவியுடன் பணிப்பாளர் ஒருவரின் தலைமையின் கீழ் இயங்குகின்றது.

பிரதான தொழிற்பாடுள்

- சட்ட சிக்கல்கள் குறித்து உதவி தேவைப்படும் போது, அலுவலர்களுக்கு ஆலாசனை வழங்குதல்
- திணைக்கள மட்டத்தில் தீர்க்கமுடியாத ஒருசில பிரச்சினைள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையினைப் பெறல்
- திணைக்களத்தின் பிற அலுவலர்களுடனான சட்ட ஆலோசனைகளுக்கு ஏற்பாடுசெய்வதில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்பினை மேற்கொள்ளல்

செயலாற்றுகை

உச்ச நீதிமன்ற மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள்

2022 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை	**42**
உச்ச நீதிமன்ற விண்ணப்பங்கள்	4
மேல் முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள்	23
மாவட்ட நீதிமன்ற விண்ணப்பங்கள்	11
உயர் நீதிமன்ற விண்ணப்பங்கள்	4

2022ஆம் ஆண்டிலிருந்தான வழக்குகள்	**47**

2022ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட விண்ணப்பங்கள்	**3**
உச்ச நீதிமன்ற விண்ணப்பங்கள்	2
மேல் முறையீட்டு நீதிமன்ற விண்ணப்பங்கள்	1

ஏனைய சட்ட விடயங்கள்

வழங்கப்பட்ட உள்ளக சட்ட அபிப்பபிராயங்களின் எண்ணிக்கை	71
ஆதரவளிக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளின் எண்ணிக்கை	2
ஆதரவளிக்கப்பட்ட உள்நாட்டு உடன்படிக்கைகளின் எண்ணிக்கை	6
சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து கோரப்பட்ட சட்ட அபிப்பபிராயங்களின் எண்ணிக்கை	15
சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட சட்ட அபிப்பபிராயங்களின் எண்ணிக்கை	10
ஆதரவளிக்கப்பட்ட உயர் நீதிமன்றம் / மாவட்ட நீதிமன்றம் /நீதவான் நீதிமன்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை	8
சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பங்கேற்ற கலந்துரையாடல்களது எண்ணிக்கை	87

8.1.6 இடர் முகாமைத்துவப் பணிப்பகம்

உலக சுங்க அமைப்பின் தரநியமங்கள் பற்றிய SAFE வேலைச்சட்டகத்தினைப் பொருந்திக் கொள்ளும் நோக்குடன் இலங்கைச் சுங்கமானது இடர் முகாமைத்துவப் பிரிவினைத் தாபித்தது. இப்பிரிவின் திறனாற்றலை அதிகபட்சம் விரிவாக்கம் செய்து காத்திரமான இடர் முகாமைத்துவத்துவ இலக்குகளை வளப்படுத்தும் நோக்குடன் இப் பிரிவானது பின்னர் ஒரு பணிப்பகத்தின் தரத்திற்கு இடர் முகாமைத்துவப் பணிப்பகமாக 2021 இல் நிலைமாற்றம் செய்யப்பட்டது.


இடர் முகாமைத்துவப் பணிப்பகமானது இலங்கைச் சுங்கத்தில் சட்ட அமுலாக்கல் மற்றும் இலகுவாக்கல் பற்றிய எண்ணக்கருக்களை சமநிலைப்படுத்துவதற்கான இடர் முகாமத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையிலான நடைமுறைகளைப் பரிந்துரைத்து, அறிமுகம் செய்து மற்றும் அது பிரயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துகின்றது. சுங்கத்தின் ஒரு நவீன கருவியாக இடர் முகாமைத்துவ உபயோகத்தின் எதிர்கால பலன்களை உணர்ந்துகொள்ளும் நோக்கில், இடர் முகாமைத்துவக் கோட்பாடுகள் தொடர்பில் பயிற்சி பெற்ற ஊழியர்களையும் மற்று சர்வதேச சுங்க நிறுவனங்களில் கடைப்பிடிக்கப்படுகின்ற சிறந்த நடைமுறைகளையும் பொருந்திக் கொள்கின்றது.

தற்போது, இடர் முகாமைத்துவப் பணிப்பகமானது முறைமைகள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் இலக்குடன் குறித்த இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கான செயன்முறையினை முன்னெடுத்து வருகிறது. இந்த இலக்கினை சிறப்பாக அடைந்துகொள்வதற்கு இப் பணிப்பகமானது அதன் தொழிற்பாடுகளை நான்கு தனியான குழுக்களாக பிரித்துள்ளது:

1. சரக்குத் தேர்வுத்திறன்
2. செயன்முறை மீள்-பொறிமுறையாக்கம்
3. அனுமதிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர்கள்
4. விசாரணை

இடர் முகாமைத்துவப் பணிப்பகத்தின் இயக்கம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் பின்வரும் நிறுவனக் கட்டமைப்பின் பிரகாரம் முன்னெடுக்கப்படுகின்றன.

இடர் முகாமைத்துவப் பணிப்பகம் - நிறுவனக் கட்டமைப்பு



1. சரக்குத் தேர்வுத்திறன்

இடர்-மைய சரக்கு வெளியாக்கல் செயன்முறையினை முன்னுரிமைப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நோக்கில் குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் (IMF), உலக வங்கி (IBRD), சர்வதேச வர்த்தக மையம் (ITC) மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) ஆகிய நான்கு சர்வதேச நன்கொடை நிறுவனங்கள் இலங்கைச் சுங்கத்திற்கு சமுகமளித்தன. திணைக்களத்தினுள் தற்போதுள்ள இடர் முகாமைத்துவ முறைமையினை மதிப்பாய்வு செய்த மேற்படி நன்கொடை நிறுவனங்கள் பரிந்துரைத்தவாறு குறித்த தேர்வுத்திறன் குழு 2019 ஜனவரியில் உருவாக்கப்பட்டது. தேர்வுத்திறன் குழுவிலுள்ள பகுப்பாய்வுக் குழுவினர் குறித்த இடர் பிரதேசங்களை இனங்கண்டு இடர் விபரங்களை உருவாக்கும் நோக்கில் இறக்குமதித் தரவுகளை தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்கின்றனர். பின்னர் இந்த அபிவிருத்திகள் தொடர்பில் இடர் முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கை செய்யப்படுவதோடு, இதனைத் தொடர்ந்து குழுவின் அங்கீகாரத்துடன் இடர் விபரங்கள் தேர்வுத்திறன் பற்றிய அளகோலுடன் இணைக்கப்படுகின்றன. இது அஸிகுடா முறைமையின் தேர்வுத்திறன் மாதிரி ஊடாக உயர் இடர் சரக்குகளை இலக்காகக் கொண்டிருக்கும்.

2022 இல் சரக்கு தேர்வுத்திறனின் அடைவுகள்

அ. சரக்கு இறக்குமதிகள் தொடர்பில் தொடர்ச்சியான இடர் பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டது.

ஆ. பொருளாதாரத்திலும் வர்த்தக முறைகளிலும ஏற்படும் மாற்றங்கள் தொடர்பில் எழக்கூடிய பிரச்சினைத் தீர்ப்பதற்கு ஏதுவான வகையில், தேர்வுத்திறன் பற்றிய விதிமுறைகளை மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இ. இறக்குமதிகளின் அளவு, சோதனை கூடம் மற்றும் ஸ்கேனர் போன்றவற்றின் கொள்திறன் கருத்திற்கொள்ளப்பட்டு, சுங்கக் கட்டுப்பாடு மற்றும் வர்த்தக இலகுவாக்கத்திற்கான பௌதீக மற்றும் மனித வளங்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் நோக்கில் விதிமுறைகள் மாற்றப்பட்டன.

ஈ. DBRA1 இறக்குமதிகளை இலக்குப்படுத்தியதொரு இடர் பகுப்பாய்வு முன்னெடுக்கப்பட்டது.

உ. DBRA1 இறக்குமதிகளுக்கான தானியக்க தேர்வுத்திறன் விதிமுறைகள் அமுல்படுத்தப்பட்டன.

ஊ. ஸ்கேன் பரிசோதனைக்குப் பரிந்துரைக்கப்படுகின்ற DBRA1 கொள்கலன்களின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கான தேவைப்பாடு இனங்காணப்பட்டதோடு, பல் கொள்கலன் சரக்குகளுக்கான கொள்கலன்களைப் பிரித்து ஒரு பகுதி சரக்குகளை மாத்திரம் பரிசோதனைக்கு அனுப்புகின்ற அதேவேளை, பரிசோதிக்கப்பட்ட குறித்த சரக்குகளின் பெறுபேறுகளின் பிரகாரம் எஞ்சிய பகுதி சரக்குகளை துறைமுகத்திலிருந்து நேரடியாக வெளியாக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டது. தேவைப்பட்ட வேளையில், அனைத்துக் கொள்கலன்களையும் பரிசோதனைக் கூடத்திற்கு மீள அனுப்பி வைப்பதன் மூலம் சுங்கக் கட்டுப்பாடுகள் எப்போதும் உறுதிசெய்யப்பட்டன.

2. செயன்முறை மீள்-பொறிமுறையாக்கம்

முன்னெடுக்கப்படுகின்ற இடர் மதிப்பாய்வுகளின் உதவியுடன், செயன்முறை மீள்-பொறிமுறையாக்கல் குழுவானது குறித்த செயன்முறையிலுள்ள குறைபாடுகள் மற்றும் இடைவெளிகளை இனங்காணும் வகையில் தற்போதுள்ள செயன்முறை தொடர்பிலான ஒரு முழுமையான செயலாக்கத் தொடர்பினை மேற்கொண்டு வருகிறது. தற்போதுள்ள முறைமைகள் மற்றும் பரிந்துரைகளில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் சுங்கப் பிரதிப் பணிப்பாளர் உள்ளிட்ட சிரேஷ்ட முகாமைத்துவத்தின் அவதானத்திற்கு அறிக்கை செய்யப்படுகின்றன. சிரேஷ்ட முகாமைத்துவத்தின் ஒப்புதலுடன், இடர் முகாமைத்துவப் பணிப்பகத்தின் நெருங்கிய மேற்பார்வையின் கீழ் குறித்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த நடைமுறைப்படுத்தலானது ஏதேனும் தடைகள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை இனங்காணும் வகையில் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டு வரும். இது மேலதிக மேம்பாடுகளுக்கு இட்டுச் செல்லவதற்கு பயன்மிக்கதாக விளங்கும்.

2022 இல் செயலாக்க மீள்-பொறிமுறையாக்க அடைவுகள்

அ. கூரியர் பொதிச் சேவை வழங்குனர்களுடன் பூர்வாங்க கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

ஆ. நுழைவாயில் இயக்கம் பற்றிய திணைக்களக்க கட்டளைகளுக்கு இணங்க குறித்த நடைமுறைகளை ஒழுங்கமைப்புச் செய்யும் வகையில், NCT நுழைவாயிலில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைப்பாடுகள் தயாரிக்கப்பட்டு அவை துறைமுக அதிகார சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இ. முதலீட்டுச் சபை தொடர்பில் வினைத்திறன் மிக்க சரக்குப் பரிசோதனையினை மேற்கொள்வதற்காக CVT இல் உட்கட்டமைப்பினை விருத்தி செய்யும் வகையில் முதலீட்டுச் சபை மற்றும் சுங்கத்திலுள்ள ஏனைய பணிப்பகங்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றப்பட்டது.

3. விசாரணைகள்

மிகவும் அனுபவம் பெற்ற விசாரணை அதிகாரிகளைக் கொண்ட இந்தக் குழுவானது, தற்போதைய சுங்கச் செயன்முறைகளில் உள்ள இடர் பிரதேசங்களையும் குறைபாடுகளையும் இனங்காணும் நோக்குடன் பல்வேறு மோசடிகளைக் கண்டுபிடித்து அவற்றை விசாரணை செய்து வருகிறது. இத்தகைய விசாரணைகளின் பிரதான நோக்கம் யாதெனில், பல்வேறு இடர் பிரதேசங்களை இனங்கண்டு அவற்றை தேர்வுத்திறன் மற்றும் மீள்-பொறிமுறையாக்க குழுவிற்கு, அவர்களின் இலக்குகளை அடைவதற்கு உதவும் வகையில் உபயோகிப்பதாகும். 2022 இல் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் சாராம்சம் ஒன்று கீழே தரப்படுகிறது.

அட்டவணை 01 – 2022 இல் இடம்பெற்ற விசாரணைகள் பற்றிய அடைவுகள்

1	முன்னெடுக்கப்பட்ட மொத்த விசாரணைகளின் எண்ணிக்கை	125
2	நிறைவுசெய்யப்பட்ட மொத்த விசாரணைகளின் எண்ணிக்கை (e-CCR இற்றைப்படுத்தப்பட்டவை)	86
3	தெரிவிக்கப்பட்ட விசாரணைகளின் மொத்தக் கட்டளைகள் (நிறைவுசெய்யப்பட்டவை+அகற்றப்பட்ட பொருட்களுடன் + நிலுவையிலுள்ள கொடுப்பனவு+ வங்கி உத்தரவாதம் கொண்டு விடுவிக்கப்பட்டவை)	109
4	வெற்றிகரமான விசாரணைகளின் மொத்தம் (ஒரு அறவீட்டினைக் கொண்டவை)	99
5	மேற்கொண்டு நடவடிக்கை இல்லை என்ற அடிப்படையிலான மொத்த விசாரணைகள்	10
6	விசாரணை செய்யப்பட்டு வருகின்ற விடயங்களின் எண்ணிக்கை	16
7	வெற்றியளிப்பு வீதம்	90.83%
8	மொத்த அறவீடு (ரூபா.)	903,387,651.46
9	ஒரு வெற்றியளிப்பு விசாரணை பற்றிய சராசரி அறவீடு (ரூபா.)	9,125,127.79
10	இது வரை செலுத்தப்பட்ட மொத்த அறவீட்டுத் தொகை (ரூபா.)	709,731,430.26

4. அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் நிகழ்ச்சித்திட்டம்

உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக இலகுவாக்கல் உடன்படிக்கை 2017 பெப்ரவரி 22 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தபொழுது, எல்லைப்புற வர்த்தக நடவடிக்கைகள் பற்றிய வெளிப்படைத்தன்மை மற்றும் எதிர்வுகூறும் திறன் ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் குறிப்பீடு செய்யப்பட்ட, மேற்படி உடன்படிக்கையின் தரநியமங்களை எதிர்கொள்வதற்கான பல்வேறு கடப்பாடுகளை இலங்கை கொண்டிருந்தது. ஆதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் (AEO) நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பிப்பது மேற்படி கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கான ஒரு தலையாய தேவைப்பாடாக விளங்கியதோடு, இந்த நோக்கத்திற்காகவே AEO அமுல்படுத்தல் குழுவும் தாபிக்கப்பட்டது. AEO எண்ணக்கருவானது, உயர் மட்ட விநியோகத் தொடர் பாதுகாப்பு, நிதி சார்ந்த உறுதிப்பாடு மற்றும் சுங்கத்தின் சட்டத்திற்கு தொடர்ச்சியான இணக்கப்பாடு ஆகியவற்றை பின்பற்றிய சட்டத்திற்கு இணங்கிச் செல்லக்கூடிய உண்மையான இறக்குமதியாளர்களுக்கும் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கும் இலகுவாக்க வசதியை வழங்குவதனையே இலக்காகக் கொண்டதாகும். இத் தரப்பினர் குறைவான பரிசோதனை, முன்னுரிமை பெற்ற வெளியாக்கல், வழக்கமான பெறுமதி மதிப்பீட்டுப் பரிந்துரையிலிருந்து விலக்களிப்புப் பெறல் போன்ற வசதிகளைப் பெறுவதன் மூலம் பயனடையக் கூடும்.

2022 இல் அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் நிகழ்ச்சித்திட்டம் பற்றிய அடைவுகள்

அ. விண்ணப்பப் படிவங்களை சரிபார்க்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டதோடு, தெரிவுசெய்யப்பட்ட மூன்று வர்த்தகர்கள் 2022 ஜனவரியில் CEO ஆக அங்கீகரிக்கப்படவுள்ளனர்.

ஆ. இலங்கைச் சுங்கத்தின் AEO நிகழ்ச்சித்திட்டமானது 2022 ஜனவரியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இ. AEO இணையத்தளம் விருத்தி செய்யப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

ஈ. AEO இற்கான இயக்கப்பாட்டு வழிகாட்டல் நிறைவுசெய்யப்பட்டு AEO இணையகத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டின் செயல்திட்டத்திற்கமைய இடர் முகாமைத்துவப் பணிப்பகத்தின் செயலாற்றுகை

கட்டுப்பாட்டுக் குறிக்கோள்களின் கீழான பிரதான செயற்பாடுகள்

தொ. இல	குறிக்கோள்கள்	உபாயம்	செயற்பாடுகள்	பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள்	நிலமை
1.	இணக்கமான பொருளாதார இயக்குனர் திட்டத்தினை மேம்படுத்தல்	இணக்கமான பொருளாதார இயக்குனர் திட்டத்திற்காக கூடுதலாக கம்பனிகளை வரவழைத்தல்	1. விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளல் 2. திரையிடல் பயன்பாடுகள் 3. கம்பனயின் செல்லுபடித்தன்மையினை செயல்படுத்தல்	1. மாதமொன்றிற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2. ஒரு மாதத்திற்கு மேற்கொள்ளப்படும் சரிபார்ப்புகளின் எண்ணிக்கை 3. இணக்கமான பொருளாதார இயக்குனர் அந்தஸ்துகளுடன் வழங்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 4. இணக்கமான பொருளாதார இயக்குனர் கம்பனிகளிடமிருந்தான வருமான விகிதம்	இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் லொஜிஸ்ரிக் மற்றும் போக்குவரத்து பட்டய நிறுவம் ஆகியவற்றின் உதவியுடன் வர்த்தக சமூகத்திற்கான விழிப்புணர்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. AEO இணையகத்தளம் விருத்தி செய்யப்பட்டதோடு, அதன் இணைப்பு தற்போது பொதுமக்களுக்கு கிடைக்கின்றது.
2.	அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் திட்டத்தினை தொடங்குதல்	இணக்கமான பொருளாதார இயக்குனர் கம்பனிகளில் பொருத்தமான வேட்பாளர்களை பதவியுயர்த்துவதன் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் திட்டத்தினை அதிகார பூர்வமாக தொடங்குதல்	1. விழிப்புணர்வுத் திட்டங்களை மேற்கொள்ளல் 2. திரையிடல் பயன்பாடுகள் 3. கம்பனயின் செல்லுபடித்தன்மையினை மேற்கொள்ளல்	1. ஒரு மாதத்திற்கான விண்ணப்பதாரர்களது எண்ணிக்கை 2. ஒரு மாதத்திற்கு மேற்கொள்ளப்படும் சரிபார்ப்புக்களின் எண்ணிக்கை 3. அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் அந்தஸ்துகளுடன் வழங்கப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை 4. அதிகாரமளிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் கம்பனிகளிடமிருந்தான வருவாய் சதவீதம்	AEO/CEO நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, 2022.01.20 முதற்கொண்டு இயங்கி வருகிறது. மூன்று நிறுவனங்களுக்கு CEO தகைமை வழங்கப்பட்டது.
3.	AEO/CEO சரிபார்ப்பு குழுவினை வலுப்படுத்தல்	AEO/CEO மதிப்பீட்டாளர்களாக அதிகாரிகளை நியமித்தல் மதிப்பீட்டாளர்களை பயிற்றுவித்தல்	விழிப்பணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ளல் 1. மதிப்பீட்டாளர்களுக்கான பயிற்சித்திட்டங்களை மேற்கொள்ளல் 2. பயிற்சியாளர் திட்டங்களை மேற்கொள்ளல்	1. மாதமொன்றிற்கு விண்ணப்பித்த அலுவலர்களின் எண்ணிக்கை 2. காலாண்டிற்கு மேற்கொள்ளப்படும் பயிற்சிகளின் எண்ணிக்கை 3. காலாண்டிற்கு பயிற்சி பெற்ற அலுவலர்களது எண்ணிக்கை	
4.	பரிசோதனைகளில் இருந்து குறைவான-இடர் சரக்குகளது விலக்களிப்பு வழங்குவதனை	தெரிவுமுறை அளவுகோலினை ஆராய்ந்து திருத்துதல்	இறக்குமதி தரவு / போக்குகள் பகுப்பாய்வு செய்தல் கடந்த கால பதிவுகள் / மோசடிகளை பகுப்பாய்வு செய்தல்	1. மாதமொன்றிந்கான விலக்களிப்பபுகளின் எண்ணிக்கை 2. மொத்த இறக்குமதிகளில் இருந்தான விலக்களிப்புகளின்	பல் கொள்கலன்களுடனான சரக்குகளுக்கான கொள்கலனை பிரித்துச் சோதனை செய்யும் பொறிமுறை அறிமுகம் செய்யப்பட்டது, இது BOI இறக்குமதிகள் மற்றும் டீ-கிளைகளுக்கு மேலும் விரிவாக்கம் செய்யப்பட்டது.

	அதிகரிதத்ல்	இடர் மட்டத்தின் அடிப்படையில் வர்த்தகர்களை வகைப்படுத்தல்	பதிவு விபரங்களை பகுப்பாய்வு செய்தல்	விகிதம் 3. பரிசோதனைக்காக தெரிவு செய்யப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை	கிடைக்கத்தகு தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதோடு, சரக்குத் தேர்வுத்திறனில் உபயோகிக்கப்படுகின்ற இடர் மிக்க வர்த்தகர்களின் பட்டியல்கள் மீளாய்வு செய்யப்பட்டு அவை மீளாய்வு செய்யப்பட்டன.
		இடர் மட்டத்தின் அடிப்படையில் சுங்க இல்ல முகவர்களை வகைப்படுத்தல்	பதிவு விபரங்களை பகுப்பாய்வு செய்தல்		
5.	மாற்றியேற்றல் சரக்கினை இலத்திரனியல் அறிக்ளையிடலினை அமுல்படுத்தல்	உள்வருகின்ற மற்றும் வெளிச் செல்லுகின்ற மாற்றியேற்றல்களுக்கான சரக்குப் பட்டியலினை இலத்திரனியல் மூலம் சமர்ப்பித்தலினை கட்டாயமாக்கல்	சரக்குப் பட்டியலினை இலத்திரனியல் மூலம் சமர்ப்பிப்பதற்கான பொறிமுறையினை வடிவமைத்து அதனை அறிமுகப்படுத்தல்	பொருந்தாது	பிரேரிக்கப்பட்ட சரக்குமேடை நிர்வாகப் பிரிவினைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
		மாற்றியேற்றல்களுக்கான தானியங்கு தள்ளபடி முறையினை அமுல்படுத்தல்	ஏற்றுமதியின் போது மாற்றியேற்றல்கள் தள்ளபடி செய்வதற்கான பொறிமுறையினை முறையினை வடிவமைத்து அதனை அறிமுகப்படுத்தல		
6.	உள்வருகின்ற சரக்கிற்கான இலத்திரனியல் ஏற்பமைவினை அறிமுகப்படுத்தல்	இலத்திரனியல் ஏற்பமைவினை வடிவமைத்து அதனை அறிமுகப்படுத்தல்	அசிகுடா முறைமையூடாக ஏற்பமைவினை சமர்ப்பிப்பதற்கும் மற்றும் பிடியாணைக்குமான பொறிமுறையினை அறிமுகப்படுத்தல்	பொருந்தாது	பிரேரிக்கப்பட்ட சரக்குமேடை நிர்வாகப் பிரிவினைக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
7.	முதலீட்டுச் சபை சரக்கு வெளியாக்கலினை ஒழுங்குபடுத்தல்	முதலீட்டுச் சபைசரக்கிற்கான இடர்-அடிப்படையிலான தேர்வினை அறிமுகப்படுத்தல்	அளவுகோலினை தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்தல்	1. பரிசோதனைக்காக தெரிவு செய்யப்பட்ட முதலீட்டுச் சபை கொள்கலன்களது எண்ணிக்கை 2. பரிசோதனைக்காக தெரிவு செய்யப்பட்ட முதலீட்டுச் சபை கப்பல்களது சதவீதம்	முதலீட்டுச் சபையின் பரிந்துரைக்கு இணங்க முதலீட்டுச் சபைப் பட்டியல்கள் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன. முதலீட்டுச் சபை சரக்கு தொடர்பில் கொள்கலன் பிரிப்புப் பொறிமுறை பிரயோகிக்கப்பட்டது.
		முதலீட்டுச் சபை பரிசோதனை சாலையில் வசதிகளை மேம்படுத்தல்	முதலீட்டுச் சபை பரிசோதனை சாலையில் வசதிகளை மேம்படுத்தல்		
8	இலங்கைச் சங்கத்திற்கான இடர் முகாமைத்துவ முறைமையொன்றினை பெற்றுக் கொள்ளல்	பொருத்தமானதொரு இடர் முகாமைத்துவ முறைமையினை தெரிவு செய்து அதனைப் பெற்றுக் கொள்ளல்	பொருத்தமானதொரு இடர் முகாமைத்துவ முறைமையினை தெரிவு செய்தல்	பொருந்தாது	மேல் மட்ட முகாமைத்துவத்தினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்
			இடர் முகாமைத்துவ முறைமையினைப் பெற்றுக் கொள்ளல்.		
			இடரினை தானாக மதிப்பிடுவதற்காக அசிகுடா முறைமையுடன் தொடர்புபடுத்தல்		

8.1.7 மத்திய அகற்றல் (விற்பனை) பணிப்பகம்

மத்திய அகற்றல் பணிப்பகமானது, பறிமுதல் செய்யப்பட்ட / கைவிடப்பட்ட பொருட்களை அகற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும், சம்பந்தப்பட்ட உள்ளக மற்றும் வெளியக அதிகார சபைகளுடனான ஒத்துழைப்புடன் ஒருமுகப்படுத்தும் நோக்கில் அமுல்படுத்தல் கொத்தணியின் கீழ் புதியதொரு பணிப்பகமாக 2019 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

தோலைநோக்கு

இலங்கை சுங்கத்தில் பறிமுதல் செய்யப்பட்ட / கைவிடப்பட்ட பொருட்களை அகற்றுவதற்கான செயல்முறைக்கு வசதியளிக்கின்ற அதேவேளை, அரசிறையினை சேகரித்தல் மற்றும் அரசின் சமூக பாதுகாப்புச் சட்டத்தினை அமுல்படுத்தல் ஆகியவற்றின் மூலம் சிறந்த இயங்காற்றல்மிக்க, காத்திரமான சேவை வழங்குனராகத் திகழ்தல்.

பணிநோக்கு

மத்திய அகற்றல் பணிப்பகமானது பின்வரும் விடயங்களுக்காக அர்ப்பணிக்கப்படுகிறது:

- இலங்கை சுங்கத்தின் சகல அகற்றல் செயல்முறையினையும் ஒருமுகப்படுத்தி அதற்கு வசதியளித்தல்.
- விலைவுமனு விற்பனை ஊடாக வருமானத்தினை சேகரித்தல்.
- பொருட்களை அழிக்கும் போது சமூக பொருளாதார விடயங்களைப் பேணுதல்.
- பங்கீடுபாட்டாளர்கள் சிறந்த சேவைகளை அடையப்பெறும் வகையில் அவர்களை இயலச் செய்கின்ற அதேவேளை, அகற்றல் சட்டங்களை அமுல்படுத்தல்.

இப் பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள்

- கேள்வு விற்பனவுகளை முன்னெடுத்தல்.
- விற்பனை செய்யப்படாத பொருட்களை அழித்தல்
- மோட்டார் வாகன போக்குவரத்து பதிவாளர் பிரிவில் மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதற்காக இணைப்பினை ஏற்படுத்தல்
- இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் கீழ் இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் மேற்கொள்ளப்படும் கேள்வு விற்பனைகள்/கேள்வு கூறல் விற்பனைகள் தொடர்பில் வசதியளித்தல்

சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள்

1. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு - இறக்குமதி மற்றும் ஏற்றுமதியின் கால வரையறை
2. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 105(2) ஆம் பிரிவு – பணிப்பாளர் நாயகம் கப்பலேற்றுவதற்கான பொருட்களை தடுத்துவைத்தல்.
3. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 109ஆம் பிரிவு – முப்பது நாட்களினுள் வெளியாக்கப்படாத பொருட்களை விற்பனை செய்வதற்கான அதிகாரம்.
4. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 154ஆம் பிரிவு – பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள், ஒரு மாதத்திற்குள் உரிமை கோரப்படாவிட்டால், அவை உபயோகமற்றவையென அகற்றப்படுதல் வேண்டும் அல்லது உரியவாறு கையாளப்படல் வேண்டும்.
5. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 162 ஆம் பிரிவு – பறிமுதல் செய்யப்படுகின்ற அல்லது உபயோகமற்றதென அகற்றப்படுகின்ற கப்பல்கள் மற்றும் சரக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரைக்கு இணங்க அகற்றப்படுதல்.
6. 06/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை
7. 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைச் சொத்துரிமைச் சட்டம்.
8. 1969ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டம்.
9. 1979ஆம் ஆண்டின் 51ஆம் இலக்க இலங்கை துறைமுக அதிகாரசபைச் சட்டம் (பிரிவு. 39/39 (6)/84/(84 (2)/84 (3)).
10. 1979ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்.
11. 1984ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க இலங்கை கட்டளைகள் நிறுவனச் சட்டம்.
12. 1980ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க உணவு சட்டம்.
13. 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச் சட்டம்.
14. 2011ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க துறைமுகம் மற்றும் விமானநிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம்.
15. 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம்.
16. 1999ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க தாவர பாதுகாப்புச் சட்டம்.
17. 1942ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க தாவர மற்றும் விலங்கின கட்டளைச்சட்டம்.
18. 1947ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க வன கட்டளைச்சட்டம்.
19. 1996ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்.
20. 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இலங்கை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம்.

2022 ஆம் ஆண்டுக்கான மத்திய அகற்றுகைப் பணிப்பகத்தின் செயலாற்றுகை


1. கேள்வு விற்பனைகள்

1.1 2022 இல் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கை

அட்டவணை 1.1:2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கை

கேள்வு வகை	மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கை	
	2021	2022
பொதுவானவை	10	8
வாகனம்	10	8
விசேடமானவை	5	2
மொத்தம்	25	18

இப்பணிப்பகமானது 8 பொதுக் கேள்வு விற்பனைகள்,8 வாகன கேள்வு விற்பனைகள் மற்றும் பொருட்களை அகற்றும் நடைமுறைக்கான சாதகமற்ற நிலைமைகள் காரணமாக 2 விசேட கேள்வு விற்பனைகள் உள்ளிட்ட 18 கேள்வு விற்பனைகளை மொத்தமாக மேற்கொண்டுள்ளது.




உரு 1.1.1: 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கை

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கை பற்றி ஒப்பீட்டினை மேற்படி உரு காட்டுகிறது.

அட்டவணை 1.2: 2022 இல் கேள்வு விற்பனைகள் மூலம் பெறப்பட்ட அறவீடுகள்

வகை	2021 இல் பெறப்பட்ட அறவீடுகள் (ரூபா)	விகிதம்
பொதுவானவை	1,073,033,159	82.64
விசேடமானவை	6,453,279	0.50
வாகனம்	218,895,679	16.86
மொத்தம்	**1,298,382,117**	**100**




உரு 1.1.2: 2022 இல் மொத்த அறவீடுகள்

2022 ஆம் ஆண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கேள்வு விற்பனைகள் மூலம் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா **1,298.38 மில்லியன்கள்** ஆகும். அதேவேளை, பொதுவான கேள்வு விற்பனைகள் மூலமாக சேகரிக்கப்பட்ட மொத்தம் ரூபா **1,073.03 மில்லியன்** ஆகுமென்பதோடு, இது 2022 இல் பெறப்பட்ட மொத்த அறவீடுகளில் 82.64% சதவீதமாகும்.

விசேட கேள்வு விற்பனைகள் மற்றும் வாகன கேள்வு விற்பனைகள் மூலமான அறவீடுகள் முறையே 0.5% மற்றும் 16.86% ஆகும். வாகனம் பற்றிய கேள்வு விற்பனைகள், ஏனைய இரண்டு வகைகளுடன் ஒப்பிடுகையில் ஒரு கணிசமான வேறுபாட்டினைக் காண்பிப்பதனை நோக்கலாம். இது சுங்க வளாகமுற்றத்தில் உள்ள பறிமுதல் செய்யப்பட்ட வாகனங்களை அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கும் நோக்கில் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட கொள்கை நடவடிக்கைகளின் தாக்கத்தினையே பிரதிபலிக்கிறது.

1.2 பொதுவான பொருட்களது வினியோகம் தொடர்பிலான அறவீடு

பொதுவான பொருட்களானது விசேட மற்றும் பொது ஆகிய இரு கேள்வு விற்பனையிலும் கேள்வு ஒப்பந்தத்திற்கு விடப்படுகின்றன. சுங்கத்தின் கேள்வு விற்பனைகள் மூலமான அறவீடுகளில் பாரிய பங்களிப்புச் செய்த பொருட்கள் பற்றிய விபரம் பின்வருமாறு.




உரு 1.2 : 2022 இல் பொதுவான பொருட்களது வினியோகம் தொடர்பிலான அறவீடு

பொது கேள்வு விற்பனையில் மிகவும் கணிசமானளவு பங்களிப்புச் செய்யும் அம்சமாக பெறுமதி மிக்க பொருட்கள் (தங்கம் மற்றும் ஆபரணங்கள்) விளங்குகின்றன. ஏனெனில், இவை பொதுவான பொருட்கள் மூலமான நிகர அறவீடுகளில் 61% சதவீதம் பங்களிப்புச் செய்கின்றன. உயிரியல் மற்றும் கலாசாரப் பொருட்கள் பொதுவான அறவீடுகளில் 1% சதவீதம் பங்களிப்புச் செய்கின்ற அதேவேளை, ஏனைய பொருட்களும் அவற்றின் பண மதிப்பினை பொறுத்து 38% சதவீத பங்களிப்பினை வழங்குகின்றன.

1.3 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு


1.3.1 பொதுவான பொருட்கள்



உரு 1.3.1 : 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் பொதுவான பொருட்கள் மூலம் பெறப்பட்ட அறவீடுகள்

மேலே உரு 1.3.1 இன் பிரகாரம், சுங்கத்தின் கேள்வு விற்பனை மூலம் விற்கப்பட்ட பொதுவான பொருட்களிலிருந்து பெறப்பட்ட மொத்த அறவீடுகள் 2021 ஐ விட 2022 இல் அதிகரிப்பினை காண்பிக்கின்றது. 2021 இல் பொதுவான பொருட்கள் கிட்டத்தட்ட ரூபா 1,486 மில்லியன் தொகையினையும் 2022 இல் கிட்டத்தட்ட 1,073 மில்லியன் தொகையினையும் ஈட்டிக் கொள்வதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது


1.3.2 வாகனங்கள்




உரு 1.3.2 : 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் விற்கப்பட்ட வாகனங்கள் மூலமான அறவீடுகள்

உரு 1.3.2 இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு, சுங்கத்தின் கேள்வு விற்பனை மூலமாக பெறப்பட்ட மொத்த வருமானங்கள் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆணடில் 183% அதிகரிப்பினை காண்பிக்கின்றது. 2021 இல் கேள்வு விற்பனை மூலமாக விற்கப்பட்ட 30 வாகனங்கள் தொடர்பில் கிட்டத்தட்ட ரூபா 77 மில்லியன் தொகை பெறப்பட்ட அதேவேளை, 2022 இல் சுங்கத்தின் கேள்வு விற்பனை மூலம் 18 வாகனங்கள் விற்பனை செய்யப்பட்டதோடு, இதன் மூலம் ரூபா 218 மில்லியன் ஆன தொகை சேகரிக்கப்பட்டது.

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான மொத்த அறவீடுகள் தொடர்பிலான ஒப்பீட்டாய்வு



உரு 1.3.3 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கிடையிலான கேள்வு பற்றிய ஒப்பீட்டாய்வு



உரு 1.3.4 2021 மற்றும் 2022 ஆண்டிலான மொத்த அறவீடுகள்

மேலே உரு 1.3.3 இன் பிரகாரம், 2021 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டில் கேள்வு விற்பனைகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பனை எங்களால் காண முடிகிறது. உரு 1.3.4 ஆனது 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் கேள்வு விற்பனைகளில் இருந்தான மொத்த அறவீடுகளை காட்டுகின்றன.

2. மீளளிக்க முடியாத வைப்புக்கள் பற்றிய அறவீடு

விலைமனுதாரரினால் விலைமனு கோர எதிர்பார்க்கப்படுகின்ற ஒவ்வொரு பொருட்களுக்குமாக அக்குறித்த விலைமனுதாரருக்கு விநியோகிக்கப்படுகின்ற விலைமனுக் கோரல் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் ஒரு மீளளிக்க முடியாத வைப்புத் தொகை சேகரிக்கப்படுகின்றன. மத்திய அகற்றல் பணிப்பகத்தினால் முன்னெடுக்கப்படும் கேள்வு விற்பனையின் மீளளிக்க முடியாத வைப்புக்கள், அரச நிதிச் சுற்றுநிருபம் 06/2016 இற்கு இணங்க மத்திய அகற்றல் பணிப்பகத்தின் 1450 ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் விநியோகத்துடன் 2020.05.26 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப் பெறும் வகையில் திருத்தப்பட்டுள்ளன.

அட்டவணை 2: மீளளிக்க முடியாத வைப்புக்கள் பற்றிய அறவீடுகள்

மீளளிக்க முடியாத வைப்புக்கள்	அறவீடுகள்	விலைமனுக் கோரல் படிவங்களின் எண்ணிக்கை	கேள்வுகளின் எண்ணிக்கை
2021	3,378,900	1,642	25
2022	1,645,800	1,098	18

1450 ஆம் இலக்க திணைக்களக் கட்டளை விநியோகிக்கப்படுவதற்கு முன்னர், விலைவுமனுவின் பெறுமதி எவ்வளவாக இருப்பினும், ஒவ்வொரு விலைமனுவிற்கும் மீளளிக்க முடியாத வைப்புத் தொகையாக ரூபா 300/- செலுத்த வேண்டுமென இருந்தது. 1450 ஆம் இலக்க திணைக்களக் கட்டளை விநியோகிக்கப்பட்ட பின்னர், விலைமனுக் கோரல் படிவ செலவுகள் விலைமனுவின் பெறுமதிக்கு ஏற்ப வேறுபட்டது.

மேற்படி அட்டவணையை பகுப்பாய்வு செய்யும் பட்சத்தில், புதிய திணைக்களக் கட்டளைக்கு ஏற்ப மீளளிக்க முடியாத மற்றும் மீளளிக்க முடியுமான வைப்புக்களின் பெறுமதி அதிகரிப்பானது விலைமனுதாரர்களைப் பாதிக்கவில்லை என்பதுடன் இந்த நடைமுறையானது அரசாங்க வருமானத்தில் ஒரு கணிசமான வருமான அதிகரிப்புக்கு வழியமைத்துமுள்ளது எனும் முடிவிற்கு வரமுடியும்.

3. பொருட்களை அழித்தல்

விற்பனைக்கு உதவாத பொருட்கள் (காலாவதியான பொருட்கள், குறித்த அங்கீகாரத்தை வழங்குகின்ற அதிகாரசபையின் நியமங்களுடன் உடன்படாத பொருட்கள்) பொருள் அழிவுக்கு உட்படுத்தப்படலாம். மத்திய அகற்றல் பணிப்பகமானது சம்பந்தப்பட்ட கிளை அலுவலகத்தின்/அதிகாரசபையின் வேண்டுகோளின் பேரில் அத்தகைய பொருட்களை அழிப்பதற்கான வசதிகளை வழங்கும்.

அட்டவணை 3: பொருட்களை அழித்தல் தொடர்பிலான விபரங்கள்

அழிப்பதற்கான கோரிக்கைகள்	பெறப்பட்டவை	முன்னெடுக்கப்பட்டவை	நிலுவையிலுள்ளவை
இதர கோரிக்கைகள்	113	**64 (56.64%)**	49
இலங்கைத் துறைமுக அதிகார சபையின் கோரிக்கைகள்	25	**19 (71.43%)**	06
மொத்தம்	**138**	**83**	**55**

மத்திய அகற்றல் பணிப்பகமானது 2022 ஆம் ஆண்டில் 83 வெற்றிகரமான அழிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இருப்பினும் பணிப்பகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்தில் குறித்த ஆண்டுக்கான இலக்காக 30 அழிவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இது இப் பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்பட்டதொரு பாரிய சாதனை என்றே கூற முடியும்.

இலங்கை துறைமுக அதிகாரசபையினால் கோரப்பட்ட பொருள் அழிப்புக்களில் 71.43%வை நிறைவு செய்யப்பட்டுள்ள அதேவேளை, 56.64% இதர கோரிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. பொருத்தமான பொருள் அழிப்புத் தரப்பினர்களை நியமித்தலிலான தாமதம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட தரப்பினர் ஒத்துழைப்பு வழங்கத் தவறியமை போன்றன நிலுவையிலுள்ள பொருள் அழிப்புக்களுக்கான பாரிய தடையாக விளங்குகின்றன.

உள்ளக கிளை அலுவலகங்களிலிருந்து கிடைக்கப் பெறுகின்ற அழிப்புக் கோரிக்கைகளுக்கான பொருள் அழிக்கும் தரப்பினர்கள், கொள்முதல் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்ற கேள்வு நடைமுறைகள் மூலமாக நியமிக்கப்படுகின்றனர். இருப்பினும், கேள்வு மனுக்கள் ஊடாக பொருள் அழிப்புக்கான பொருத்தமான தரப்பினரை நியமிப்பதற்கு குறித்த முறைமையில் சில தடங்கல்கள் உள்ளதாகத் தெரிகிறது. ஏனெனில், ஆர்வமுடைய பொருள் அழிப்புத் தரப்பினர்கள், குறிப்பிட்ட அழிப்பு நடவடிக்கைக்கு தமக்கு ஏற்படக்கூடிய உண்மையான செலவு பற்றிய எந்தவொரு அறிவும் இன்றி தெரிவுசெய்யப்படவுள்ள கேள்வுமனுவில் குறைந்த தொகைக்காகவே விலைமனுக்களைச் சமர்ப்பிக்கின்றனர்.

பொருள் அழிப்புத் தரப்பினர் தெரிவு செய்யப்பட்டதும், அவர்கள் சமர்ப்பித்த கேள்வுமனுத் தொகையினுள் குறித்த பொருள் அழிப்பிற்காக சம்பந்தப்பட்ட அதிகாரசபையிடமிருந்தான அவசியமான ஒப்புதல்களை வழங்குவதன் மூலம் மத்திய அகற்றல் பணிப்பகத்தின் தேவைப்பாடுகள் தொடர்பில் அவர்களால் எதனையும் பெற முடியாது. இத்தகைய பிரச்சினைகள் காரணமாக குறித்த தரப்பினர் தாம் சமர்ப்பித்த விலைமனுத் தொகைக்கு ஏற்ப குறித்த பொருள் அழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க விரும்புவதில்லை.

ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு குறிப்பிட்டுக் கூறப்படுகின்ற பொருட்களுக்கென ஒரு உடன்படிக்கையின் அடிப்படையில் பொருள் அழிப்புத் தரப்பினர்களை நியமிப்பதற்கான ஏதேனும் நடைமுறைகள் விருத்தி செய்யப்படுமிடத்து இத்தகைய பிரச்சினைகளை குறைத்துக் கொள்ள முடியும். இத்தகையதொரு செயன்முறையானது, பொருள் அழிப்பு முகவருக்கும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டதொரு உடன்படிக்கையின் அடிப்படையில் பீடி இலைகளை அழிப்பதற்கென ஏற்கனவே நடைமுறையில் இருந்து வருவதோடு, இது பீடி இலைகளை அழிக்கும் நடவடிக்கையினை சீராக முன்னெடுப்பதற்கு வழியமைத்தது.

4. மஞ்சள் மற்றும் வாகனங்கள் தொடர்பிலான அகற்றுகை

4.1 மஞ்சள் குறித்த அகற்றுகை

பறிமுதல் செய்யப்பட்ட 16 மெற்றிக் தொன் நிறையுடைய மஞ்சள், வாசனைத்திரவியங்கள் இணைந்த தயாரிப்பு சந்தைப்படுத்தல் சபைக்கு ஒப்படைக்கப்பட்டதோடு இது தொடர்பில் அரசாங்கத்துக்கு 2.38 மில்லியன் வருமானம் கிடைக்கப்பெற்றது.

4.2 அரசாங்க நிறுவனங்களுக்கு வாகனத்தினை அகற்றுதல்

பல அரச நிறுவனங்கள் மூலம் நிதி அமைச்சுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு ஏற்ப, அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பேரில் விடுவிப்புச் செய்வதற்காக பல்வேறு அரச நிறுவனங்களுக்கு வாகனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

4.3 **தேயிலை அகற்றுகை**

கைப்பற்றப்பட்ட இரண்டு தேயிலை கொள்கலன்கள் சேதன உரங்களை தயாரிப்பதற்காக இலங்கை இராணுவத்திடம் கையளிக்கப்பட்டன.

4.4 **ஆப்பிள் அகற்றுகை**

24,906 கி.கிராம் எடையுள்ள காலாவதியான ஆப்பிள்களைக் கொண்ட கைவிடப்பட்ட கொள்கலன் ஒன்று தெஹிவளை தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

5. 2022 ஆம் ஆண்டுக்கான பிரேரிக்கப்பட்ட செயற்திட்டத்திற்கு எதிரான செயலாற்றுகை

பிரதான செயற்பாடுகள்	எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	குறிப்புகள்
பொதுவான பொருட்கள் மற்றும் வாகனங்களுக்கான 30 கேள்வு விற்பனைகளை முன்னெடுத்தல்	18 கேள்வு விற்பனைகள் முன்னெடுக்கப்பட்டன.	கொவிட்-19 நோய்த் தொற்று காரணமாகும்
10 விசேட கேள்வு விற்பனைகளை முன்னெடுத்தல்	02 கேள்வு விற்பனைகள் முன்னெடுக்கப்பட்டன.	கொவிட்-19 நோய்த் தொற்று காரணமாகும்
கிட்டத்தட்ட 70 அழிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்	83 அழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.	அடையப்பட்டது
இலங்கை துறைமுக அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்ற கேள்வு நடவடிக்கையில் விற்பனை செய்யப்படும் பொருட்களை பரீட்சித்து அவற்றுக்கான பெறுமதிகளை வழங்குதல் மற்றும் அரசுக்கான உரிய வருமானத்தினை அறவிட்டுக்கொள்ளல்.	பெறுமதிகள் வழங்கப்பட்டு உரிய வருமானமும் அறவிடப்படுகிறது	அடையப்பட்டது
கைவிடப்பட்ட சரக்குகளைப் பரீட்சித்து அவற்றை அகற்றுதல்	நடைமுறை இடம்பெற்று வருகிறது	அடையப்பட்டது

8.2 அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணி

8.2.1 பிரகடனங்கள் பணிப்பகம்

8.2.1.1 நீள அறை

8.2.1.2 மோட்டார் வாகனப் பிரிவு

8.2.1.3 "டீ" பிரிவு

8.2.2 கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகம்

8.2.3 முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்புப் பணிப்பகம்

8.2.4 மத்திய சரக்குப் பரிசோதனைகள் பணிப்பகம்

8.2.5 ஏற்றுமதிகள் பணிப்பகம்

8.2.1 பிரகடனப்படுத்தல் பணிப்பகம்

அறிமுகம்

சகல கடல் மார்க்க சரக்குகள் தொடர்பில் அந்தந்த இறக்குமதியாளர்களால் சுங்கப் பிரகடனம் சமர்ப்பிக்கப்பட்டவுடன் சுங்கப் பிரகடனங்கள் செயலாக்கப்படும் இடமாக பிரகடனப்படுத்தல் பணிப்பகம் விளங்குகின்றது.

இப் பிரகடனப்படுத்தல் பணிப்பகமானது பின்வரும் பிரிவுகளை கொண்டுள்ளது.

- 'டீ' கிளை
- நீள அறை
- மோட்டார் வாகனப் பிரிவு

இப் பிரிவுகள் யாவும் அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணியின் கீழ் தொழிற்படுகின்றன.

இப்பணிப்பகத்தின் நோக்கம்

இப்பணிப்பகத்தின் பிரதான நோக்கமானது இறக்குமதி செய்கின்ற பொருட்கள் தொடர்பில் பிரகடனங்களைச் செய்முறைப்படுத்தல் வசதிகளை வழங்குதலாகும். இக்குறிக்கோளினை நிறைவேற்றும் வகையில் பின்வருவனவற்றுக்கான ஏற்பாடுகளை இப்பணிப்பகம் விசேடமாக மேற்கொண்டுள்ளது,

- சரக்குக விபரங்களை இலத்திரனியல் முறையில் பெறுதல்.
- சுங்கப் பிரகடனங்களை DTI ஊடாகப் பெறுதல்.
- சுங்கப் பிரகடனங்கள் தொடர்பிலான தீர்வைகள் மற்றும் பிற வரிகளை ஒன்லைன் ஊடாகவும் வங்கிகள் மூலமாகவும் மேற்கொள்ளல்.
- தெரிவு செய்யப்பட்ட இறக்குமதியாளர்களுக்கு துரித வழிமுறையுடன் கூடிய செயன்முறை வசதிகளை வழங்குதல்.
- அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய அலுவலர்களைக் கொண்டு சுங்கப் பிரகடனங்களை செய்முறைப்படுத்தல்.
- இலங்கைத் துறைமுக அதிகார சபை, எஸ்.ஏ.ஜீ.ரீ மற்றும் சீ.சீ.ஐ.ரீ சாலைகளில் இருந்து முழுக் கொள்கலன் (FCL) சுமைகொண்டவற்றினை அகற்றுவதற்கான வாயில் அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல்.

தன்னியக்க செயலாக்கம் தற்போது பின்வருவனவற்றின் ஊடாக முழுமையாக செயல்படுத்தப்பட்டுள்ளது : "அசிகுடா வேல்ட்" இறக்குமதியாளர்களுக்கு சுங்கப் பிரகடனங்களை எவ்வித தாமதமின்றி செய்முறைப்படுத்த உதவுகிறது. சுங்கப் பிரகடனத்தின் அனைத்து விபரங்களும் இப்போது நீள அறையில் (2ஆம் மாடி) "அசிகுடா முறைமையில்" பதிவு செய்யப்படுகின்றன. இது DTI வசதிகளைப் பயன்படுத்தி பயனர்கள் அவர்களது அலுவலகங்களில் இருந்து நேரடியாக அவர்களது சுங்கப்பிரகடனங்களை சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக அமைகின்றது.

இப் பணிப்பகத்தின் குறிக்கோள்கள்

- இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் வெளியாக்குதலுக்கு வசதியளித்தல்.
- பொருட்களை உரியவாறு வகைப்படுத்துவதனூடாக அரசிறை ஒழுக்குகளை/ வெளிநாட்டு நாணய மாற்று இழப்புக்களைக் குறைத்தல்.
- சுங்கக் கட்டளைச்சட்டம் மற்றும் தொடர்புபட்ட பிற சட்டங்களுக்கிணங்க அமுல்படுத்தல் செயற்பாடுகளை "டீ" கிளையூடாக மேற்கொள்ளல்.
- இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் அரசுக்குரிய அரசிறையை மதிப்பிட்டு அவற்றைச் சேகரித்தல்.
- நிதி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான கருத்திட்டப் பொருள் வெளியாக்கலுக்கு வசதியளித்தல்.
- சலுகை அனுமதிப்பத்திரங்களை கொண்டவர்களது வாகனங்கள்/ சரக்குகளை விரைவாக வெளியாக்ககுவதற்கு வசதியளித்தல்.
- தற்காலிக சுங்கப் பிரகடனங்களுக்கு எதிரான பொருட்களை வெளியாக்கல் தொடர்பில் பல்வேறு அரச திணைக்களங்கள்/ பிற அமைப்புகள்/ பொதுமக்கள் ஆகியோருக்கு வசதியளித்தல்.
- அரச கொள்கைக்கிணங்க தீர்வை மற்றும் பிற வரிகள் தொடர்பான தீர்வைத் தள்ளுபடி/விலக்களிப்புகளை வழங்க வசதியளித்தல்.
- மட்டுப்படுத்தப்பட்டவை மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை திறம்பட செயல்படுத்துவதை நிர்வாகித்தல்

இப்பணிப்பகத்தின் பணியாளர்களது பொறுப்புகள்

நீள அறை அலுவலர்கள், அரசுக்கான உரிய அரசிறையினைச் சேகரிக்கும் அதேவேளை, தாமதமின்றி விரைவாக சுங்கப் பிரகடனங்களைச் செயன்முறைப்படுத்தவும் மற்றும் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களின் வெளியாக்கத்தையும் உறுதிப்படுத்துகின்றனர். இவ் அலுவலர்கள், பொருட்களை வெளியாக்குவதற்குத் தேவையான இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர், உணவு மற்றும் ஒளடதங்கள் அதிகாரசபை, சீனி ஆராய்ச்சி நிறுவனம்,தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை, இலங்கை தர நிர்ணயம், அணுசக்தி அதிகாரசபை,

தொலைத்தொடர்பாடல்கள் மற்றும் சுகாதார சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமண சபை சான்றிதழ் மற்றும் துறைமுக கப்பலேற்று அவதானிப்பு அறிக்கை போன்ற உத்தரவாதப் பத்திரங்கள் மற்றும்/ அல்லது விசேட அங்கீகாரம் தேவையான பொருட்கள் தொடர்பில் கண்காணிப்பாகவும் உள்ள அதேவேளை, இறக்குமதியாளர்களால் நிறைவேற்றப்படவேண்டிய பின்வருகின்ற விடயங்கள் தொடர்பில் விசேட கவனமும் செலுத்துகின்றனர்

- அனுப்பப்பட்ட பொருட்களின் வெளியாக்கல் கோரிக்கைக்கான அதனைக் கொண்டுவரும் கப்பலில் இருந்தான அங்கீகாரம்
- சரக்கு பற்றிய முழு விபரம்
- இயைபு முறைப் பெயரேட்டின் அடிப்படையில் அமையப்பெற்ற சுங்க இறக்குமதிகள் இறுப்புப் பட்டியலில் உள்ளவாறு சரியாக பொருட்களை வகைப்படுத்தல்
- பொருத்தமான நாணய வகையினைப் பயன்படுத்தி, செல்லுபடியாகும் நாணயமாற்று விகித்தில் பெறுமதியை பிரகடனப்படுத்தல்.
- விதிக்கத்தகு நாணய வகையினை (நாணய மாற்று விகிதம்) பயன்படுத்தி பெறுமதிகளை பிரகடனப்படுத்தல்.
- சரக்குக்கான கொடுப்பனவு தொடர்பிலான (வெளிநாட்டு சொவணி) பரிமாற்றம் ஏற்றுக்கொள்ளப்பட்ட/ அனுமதிக்கப்பட்ட வங்கியூடாக மேற்கொள்ளல்.
- ஏற்புடையவாறான, தேவையான அதிகாரமளிக்கப்பட்ட ஆவணங்கள், அனுமதிப் பத்திரங்கள், உத்தரவாதப்பத்திரங்கள்,மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றினை இணைத்தல்

மேற்கூறப்பட்டவாறாக இப்பணிப்பகமானது அதன் தொழிற்பாடுகளுக்கிணங்க 03 பிரதான பிரிவுகளை கொண்டுள்ளன.

8.2.1.1 நீள அறை

வரலாற்று ரீதியில், உண்மையாகவே சுங்க நிருவாகத்தின் ஒரு நீள அறையாக இது காணப்பட்டதோடு, இந்நவீன காலத்திலும் கூட இது ஒரு நீள அறையாகவே காணப்படுகிறது. இது ஆசியாவிலுள்ள அனேக பிரித்தானிய காலணித்துவ நாடுகளிலும் மற்றும் டென்மார்க், நெதர்லாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த சுங்க அமைப்புகளிலும் இது பொதுவான சிறப்பம்சமொன்றாகவுள்ளது. சுங்கமானது பிரதானமாக அரசிறை தொடர்பிலான அரச நிறுவனமாகவிருப்பதனால் நீள அறையின் முக்கித்துவம் பிரதானமானதாகும். இதன் ஒட்டுமொத்த இலக்குகள் சமூகப் பாதுகாப்புக் கடப்பாடுகளைப் பேணுவதற்காக இருந்த போதிலும், உரிய அரசிறையினைச் சேகரிப்பதற்கான முன்னுரிமையானது குறைவடைந்ததில்லை.

சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10 ஆம் பிரிவானது சுங்கத் தீர்வையினை விதிப்பதற்கு சுங்கம் அதிகாரம் கொண்டுள்ளது எனவும் 47 ஆம் பிரிவானது பெறப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட பொருட்களது உண்மையானது சரியானதுமானதொரு பிரகடனம் செய்வதற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களது உரிமையாளர்கள் வேண்டப்படுகின்றனர். மற்றும் அத்தகைய பொருட்கள் தொடர்பில் செலுத்தத்தகு (தீர்வைகள் போன்றன) சகல தீர்வைகளும் செலுத்தவும் வேண்டப்படுகிறது.

சுங்கமானது சுங்கத் தீர்வைகளை மட்டுமல்லாது **இதர பல்வேறு வரிகளையும் அறவீடுகளையும் சேகரிப்பதற்கான வசதியினை செய்துள்ளது. அதாவது ;**

பெறுமதி சேர் வரி	பே.சே.வரி
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	து.வி.அ
விசேட பண்ட அறவீடு	ச.ப.அ
உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரி	உற்பத்தி வரி
பிற அரச நிறுவனங்கள் சார்பிலான செஸ் வரி	செஸ் வரி

சுங்கப் பிரகடன செய்முறை அலுவலர்கள் இயைபுமுறைக்குறியீடு தொடர்பில் இலகுவான கண்காணிப்பு மற்றும் கையாளுகை தொர்பில் சுங்கப் பிரகடன செய்முறைக்காக 05பிரிவுகளாக வகுத்துள்ளனர். (ஒரு பிரிவில் இரண்டு சுங்க அத்தியட்சகர்கள் மற்றும் நான்கு பிரதி அத்தியட்சகர்கள் (பெறுமதி மதிப்பீட்டாளர்கள்) உள்ளனர்). கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சுங்கப்பிரகடனம் செய்முறைக்காக ஒவ்வொரு பிரிவுக்கம் ஒதுக்கப்படுகிறது.

- ஏ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 0 - 9
- பீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 1 - 8
- சீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 2 - 7
- டீ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 3 - 6
- ஈ பிரிவு - சுங்கப்பிரகடன இலக்கத்தின் இறுதி இல. 4 - 5

சுங்கப் பிரகடனங்களைச் சமர்ப்பித்தல்

இறக்குமதியாளர்கள் சுங்கப் பிரகடனத்தினை இலத்திரனியல் மூலமாக சமர்ப்பித்தல் வேண்டும். பின்வரும் ஆதார ஆவணங்கள் சுங்கப்பிரகடனத்துடன் பீ.டீ.எப் வடிவில் அல்லது ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்களாக பதிவேற்றப்படல் வேண்டும்.

- ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டு
- விநியோகக் கட்டளை
- பொருள் விலைப்பட்டியல் (என்.எப்.ஈ. அடிப்படையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்த்து வங்கி மூலம் கையெழுத்திட்டு முத்திரிரை குறிக்கப்பட்டிருத்தல்)
- பொதியிடப்பட்ட பட்டியல்

- இயைபு முறைக் குறியீட்டு வகைப்படுத்தலுக்குத் தேவைப்படும் ஏதேனும் தொழில்நுட்பத் தகவல்
- பொருளுக்கான உற்பத்தி செய்யப்பட்ட நாட்டை நிரூபிப்பதற்கான ஆவணங்கள்
- மட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள் இறக்குமதி செய்யப்படவிருப்பின், இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப் பத்திரம், இலங்கை கட்டளைகள் நிறுவனம் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களிடமிருந்தான அனுமதிப் பத்திரம்/ உத்தரவுப் பத்திரம்.
- வரவுக் கடிதம், தந்தி மூலமான பரிமாற்றம் போன்ற கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது நிரூபணம்
- ஏதேனும் விசேட சான்றிதல் (வெளிநாட்டு ராஜதந்திரிகள், தீர்வைத் தள்ளுபடி, சுகாதார சான்றிதழ், பூச்சிகொல்லிகள் சான்றிதழ், நறுமண சபை சான்றிதழ் மற்றும் துறைமுக கப்பலேற்ற அவதானிப்பு அறிக்கை போன்றவை)

சுங்கக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 12, 43 மற்றும் அட்டவணை "ஆ" ஆகியன, பொருட்களை இறக்குமதி செய்யும் வேளையில் ஏதேனும் பிற சட்டத்தின் கீழ் அமுலில் உள்ள சகல மட்டுப்படுத்தப்பட்டவைகள் மற்றும் தடைசெய்யப்பட்டவைகளை நடைமுறைக்குக் கொண்டுவருமாறு சுங்கத்தை வேண்டுகின்றன. இவ்விசாலமான ஏற்பாடுகள் காரணமாக, தற்போது அமுலிலுள்ள அனேக சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் கட்டளைச்சட்டங்களை சுங்கம் அமுல்படுத்த வேண்டியுள்ளது. இவற்றில், முதன்மையும் பிரதானமுமாகவிருப்பது 1969 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுச் சட்டமாகும்.

8.2.1.2 மோட்டார் வாகனப் பிரிவு

அசிக்குடா எனும் மென்பொருளானது தற்போது எக்சஸ் வலையமைப்பில் தொழிற்படுவதோடு, இதனைத் தனியார் வங்கிகளுடன் இணைத்து, வாகனங்களை இறக்குமதி செய்தல் தொடர்பில் அனுப்பப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணியை சுங்கத்தினால் பரீட்சிக்க முடிவதோடு, இறக்குமதி செய்யப்படுகின்ற வாகனங்கள் பற்றிய விபரங்கள் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு இணைவழி ஊடாக அனுப்பப்படுகின்றன. இதன் மூலம் சுங்கத் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் தீர்வைகள் மற்றும் பிற வரிகளை செலுத்தாத வாகனங்களைப் பதிவு செய்தல் தடுக்கப்படுகிறது. சுங்கப் பிரகடனங்கள் செயன்முறைப்படுத்தப்படும் போது அதிகாரிகள் பின்வரும் விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகின்றனர் :

- அன்பளிப்பு வாகனங்கள் மற்றும் அதிகூடிய காலத்தைக் கொண்ட வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம்.
- அரச அதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முதலீட்டுச்சபை அதிகாரிகள் ஆகியோருக்கான இறக்குமதி உத்தரவுப் பத்திர சலுகைகளும் நிபந்தனைகளும்.
- வெளிநாட்டு ராஜதந்திரிகள் மற்றும் அரச சார்பற்ற அமைப்பு ஆகியவற்றுக்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்படும் தீர்வை இலவசச் சான்றிதழ்கள்.
- கருத்திட்டங்களுக்காக இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் தொடர்பிலான தற்காலிக சுங்கப்பிரகடனம்

  வாகனங்களுக்கான சுங்கப்பிரகடனங்களை செய்முறைப்படுத்தும் போது இப்பிரிவிலுள்ள அலுவலர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்தல் வேண்டும்.
  என்பவற்றுக்கிணங்க பொருட்கள் சரியாக விபரிக்கப்பட்டுள்ளமை
- பதிவுச் சான்றிதழ்
- பரிசோதனைச் சான்றிதழ்
- விலைப்பட்டியல்
- வாகன சாலைகளில் அவற்றைப் பரிசோதனை மேற்கொள்கின்ற மதிப்பீட்டாளரின் பரிசோதனை அறிக்கை
- விலைப்பட்டியலுக்கேற்ப வாகனத்தின் வயது சரியாக பதியப்பட்டுள்ளமை
- உற்பத்தி செய்த நாடு சரியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை.
- கப்பல் கட்டணங்கள் சரியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை,
- பிரகடனப்படுத்தப்பட்ட மேலதிக விடயங்களுடன் பரிசோதனைச் சான்றிதழ் இணங்குதல்.
- பல்வேறு வர்த்தமான அறிவித்தல் மூலம் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளரால் பிரகடனப்படுத்தப்பட்ட தற்காலிக இடைநிறுத்தல் வகைகளுக்கு கீழான பொருட்களாக இருந்தாலும், இதன் போது, வாகன வெளியாக்கலுக்கான அனுமதி சுங்கப் பிரதிப் பணிப்பாளரால் (மோட்டார் வாகனம்) வழங்கப்படல் வேண்டும்.

8.2.1.3 "டீ" கிளை

டீ - கிளையானது இப்பணிப்பகத்தின் செயலகமாகக் கருதப்பட முடியும். ஆரம்பத்தில் சுங்க கட்டுப்பாட்டாளர் நாயகம் 200 ஆண்டுகளுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட வேளையில் இவரின் கீழ் விடயம் ஏ, விடயம் பீ, விடயம் சீ, மற்றும் விடயம் டீ ஆகிய விடயங்களைக் கையாளுவதற்காக நான்கு இலிகிதர்கள் பணியாற்றியிருந்தனர். காலப்போக்கில் விடயம் ஏ பிரிவானது இலிகிதர் "துறைமுக அறவீடுகளைக்" கையாண்டு வந்ததோடு, இதுவே பின்னர் இலங்கைத் துறைமுக அதிகாரசபையாக மாறியது. பழைய டீ கிளையானது திறைசேரிக்கும் சுங்கத்திற்கும் வரலாற்று ரீதியான ஒருங்கிணைப்பினைப் பேணியிருந்ததோடு, தீர்வைத் தள்ளுபடி மற்றும் விலக்களிப்புகளை வழங்குதல், பொருள் பட்டியல்களைப் பெறுதல் போன்ற அத்தகைய செயற்பாடுகளை இன்னும் அதன் அசல் நாமத்தில் மேற்கொண்டு வருகிறது.

'டீ' கிளையானது இறக்குமதியாளர்களுக்கு/பொதுமக்களுக்கு வசதிகளை வழங்கும் வகையில் பல்வேறு கூறுகளாக்கப்பட்டுள்ளன. அவை :

- டீ.ஆர்.ஏ பிரிவு
- வங்கி உத்தரவாதக் பிரிவு

- தீர்வை விலக்களிப்புப் பிரிவு
- தொகையான சரக்கினை கண்காணிக்கும் பிரிவு
- காணே பிரிவு
- கப்பற் சரக்குப்பட்டியல் பிரிவு
- விசாரணைப் பிரிவு
- சுங்க பிரதிப் பணிப்பாளரின்(டீ) தலைமையிலான மோட்டார் வாகன சலுகை அனுமதியை ஆய்வு செய்து நீக்கம் செய்யும் பிரிவு

டீ கிளையினால் கையாளப்படுகின்ற ஒருசில முக்கியமானதும் பிரசித்தி பெற்றதுமான தொழிற்பாடுகள்

- நிதி அமைச்சினால் வழங்கப்படும் தீர்வை விலக்களிப்புகள் தொடர்பான விடயங்களை பதிவு செய்தலும் தீர்வையற்றவை எனும் அடிப்படையில் அத்தகைய பொருட்களை வெளியாக்க வசதியளித்தலும்.
- பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரசிறைக் காப்புக் கட்டளைக்கிணங்க தீர்வை விலக்களிப்புகளையும் சலுகைகளையும் வழங்குதல்.
- வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சினால் வினியோகிக்கப்படும் வெளியாக்கல் சான்றிதழின் அடிப்படையில் ராஜதந்திரி உத்தியோகத்தர்களது தனிப்பட்ட பொதி மற்றும் அலவலக பொருட்கள் என்பவற்றினை வெளியாக்க அனுமதித்தல்.
- பல்வேறு வர்தத்க உடன்படிக்கையின் கீழ் இறக்கமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் தீர்வை இலவசம் அல்லது முன்னுரிமை விகிதங்கள் எனும் அடிப்படையில் வழங்குதல்.
- நிதி, திட்டமிடல் அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கிணங்க தாமதக் கொடுப்பனவின் கீழ் அரச நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட பொருட்களை வெளியாக்க வசதியளித்தல்.
- பல்வேறு காரணங்களின் விளைவாக உடனடியாக பூர்த்தி செய்ய முடியாதிருக்கும் சுங்கப் பிரகடனங்களை தற்காலிக அடிப்படையில் அல்லது நிகழ்வொன்றுக்காக இறக்குமதி செய்யப்பட்டு அந்த நிகழ்வு முடிவுற்றதும் அத்தகைய பொருட்களை மீள ஏற்றுமதி செய்ய வசதியளித்தல்.
- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் தீர்மானிக்கப்பட்டவாறாக தேவைப்படுகின்ற கருத்திட்ட பொருட்களை மீள் எற்றுமதி தொடர்பில் பதிவினை மேற்கொள்ளுதலும் கண்காணித்தலும்.
- கப்பற் சரக்குப் பட்டியல்களை பெறுதல் மற்றும் கப்பல் முகவர்களால் சமர்ப்பிக்கப்பட்டவாறாக அவை தொடர்பில் திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- தற்காலிக சுங்கப்பிரகடனங்கள் விடயத்தில் வங்கி உத்தரவாதங்கள்/கூட்டுறவு உத்தரவாதங்களை பாதுகாத்தலும் சுங்கப்பணிப்பாளரினால் (பிரகடனங்கள்) தீர்மானிக்கப்பட்டவாறான பிற விடயங்களை பாதுகாத்தலும்.
- கண்காணிப்பு நோக்கங்களுக்காக சி.பி.டி கானே அல்லது எ.ரி.எ கானே திட்டத்தின் கீழ் தற்காலிகமாக இறக்கமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை பதிவு செய்தல்.
- குவியலாக கொண்டுவரப்படும் பொருட்களை கண்காணித்தல் மற்றும் மேலதிக அறவீடுகளை அறவிடவேண்டின் அதனை அறவிடல்.
- நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட தீர்வை விலக்களிப்புக்கு இணங்க வழங்கப்பட்ட தீர்வை விலக்களிப்பு தொடர்பாக அறிக்கைகள் தயாரித்தல்.
- இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் /சுங்க ஒழுங்கு விதிகள் தொடர்பிலான மீறுகைகளை கண்டுபிடித்தல் மற்றும் எதனோல் மற்றும் மோட்டார் வாகனத்தினது வெட்டப்பட்ட பாகங்களது கண்டுபிடிப்பு போன்றவற்றிற்கு சுங்கக் கட்டளைச்சட்டத்தின் எற்பாட்டிற்கு அமைய நடவடிக்கை எடுத்தல்.
- அரச சார்பான மற்றும் அரச சார்பற்ற முகவர்களுடன் கூட்டிணைப்பினை ஏற்படுத்தல்.

இப்பணிப்பகத்தின் செயலாற்றுகை

	விபரம்	மொத்தம்
	DRAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை (தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்)	74
	DRAஇன் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை (தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்)	25
	DRAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை (சீ.பீ.சீ/ஐ.ஓ.சீ)	179
	DRAஇன் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்கள் (சீ.பீ.சீ/ஐ.ஓ.சீ)	2
DRA		
1	DRAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை (ஏனையவை)	543
2	DRAஇன் கீழ் பூர்த்திசெய்யப்பட்ட தற்காலிக சுங்கப் பிரகடனங்கள் (ஏனையவை)	134
3	பதிவு செய்யப்பட்ட டீ.சீ.பீ கானே இனது எண்ணிக்கை	5
4	பதிவு செய்யப்பட்ட ஏ.ரீ.ஏ கானே இனது எண்ணிக்கை	7
5	ஏ.டீ பதிவுகளது எண்ணிக்கை	121
6	பதிவு செய்யப்பட்ட களஞ்சியப்படுத்தல் உரிமங்களின் எண்ணிக்கை	119
7	பதிவு செய்யப்பட்ட பூரண விபரமற்ற பட்டியல்களின் எண்ணிக்கை	0
8	பதிவு செய்யப்பட்ட தொகைச் சரக்குப் பதிவுகளது எண்ணிக்கை	353
9	பூர்த்திசெய்யப்பட்ட தொகைச் சரக்குப் பதிவுகளது எண்ணிக்கை	44

10	மொத்தத் தொகைச் சரக்கு பற்றிய கண்காணிப்பு கட்டணங்கள் (ரூபா)	3,530,000
11	பதிவு செய்யப்பட்ட FRIC களின் எண்ணிக்கை	50
தள்ளுபடிகளும் / விலக்களிப்புகளும்		
1	ISFTAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	4799
2	PSFTAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	719
3	SAFTAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	281
4	APTAஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	183
5	SAARCஇன் கீழ் பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	0
6	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (புகையிரதத் திணைக்களம்)	03
7	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (நகர அபிவிருத்தி அதிகாரசபை)	48
8	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி)	45
9	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (நீர் வழங்கல் சபை)	0
10	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (விமான சேவைகள் அமைச்சு)	6
11	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (உமா ஓயா கருத்திட்டம்)	10
12	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (இராஜதந்திரச் சேவை)	864
13	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தகு சக்தி அமைச்சு)	1
14	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (தேசிய மரபுரிமைகள் அமைச்சு)	0
15	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)	0
16	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (விமான மற்றும் விமான சேவைகள் அமைச்சு)	31
17	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (தொழில்நுட்ப அமைச்சு)	2
18	திணைக்களங்கள்/கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடிகள் (தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை)	316
19	சுகாதார பணிப்பாளர் நாயகம்	105
20	ஒத்திவைக்கப்பட்ட பெ.சே.வரி	
21	ஏனையவை (தே.க.வரி/உற்பத்தி வரி/செஸ் வரி/து.வி.அ.அறவீடு)	4635
22	விலக்களிப்புப் பட்டியலின் கீழான தீர்வைத் தள்ளபடிகள்	
23	சலுகைகள் பட்டியலின் கீழான தீர்வை சலுகைகள்	
19அ தள்ளுபடிகள்		
1	பால்மா	485
2	பொதுவானவை	4194
வாகனச்சலுகை அனுமதிகள்		
1	பொதுவானவை	
2	பொ.நி சுற்றறிக்கை	இருக்கவில்லை
3	பாராளுமன்ற உறுப்பினர்கள்	
4	வெளிநாட்டு அமைச்சின் சுற்று நிருபத்தின் கீழானவை	
5	மாகாண சபை	
வங்கி உத்தரவாதம்		
1	இவ்வாண்டுக் காலப்பகுதியில் பேணப்பட்ட உத்தரவாகங்களின் எண்ணிக்கை	175
2	பேணப்பட்ட உத்தரவாதங்களின் மொத்தப் பெறுமதி (ரூபா)	8,367,437,404.00
3	விடுவிக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்களது எண்ணிக்கை	82
4	விடுவிக்கப்பட்ட உத்தரவாதங்களது மொத்தப் பெறுமதி (ரூபா)	2,946,592,793.00
5	பெறப்பட்ட செலுத்துகை காசோலைகளினதும் வங்கியில் வைப்புசெய்யப்பட்ட காசோலைகளினதும் எண்ணிக்கை	25
6	வைப்பிலிடப்பட்ட காசோலைகளின் மொத்தப் பெறுமதி (ரூபா)	333,806,999.00
சரக்குப் பட்டியல்		
1	கப்பல் சரக்குப்பட்டியல் திருத்தங்களின் எண்ணிக்கை	2690
2	அறவிடப்பட்ட அபராதங்களின் மொத்தத் தொகை (ரூபா)	89,293,260.00
நீள அறை / மோட்டார் வாகனப் பிரிவு குறித்தான அபராதங்கள்		
1	அபராதங்களுடன் பதிவு செய்யப்பட்ட சுங்கப்பிரகடனங்களின் எண்ணிக்கை	2716
2	அறவிடப்பட்ட அபராதங்களின் மொத்தத் தொகை (ரூபா)	3,221,159,132.02

2022ஆம் வருடத்திற்கான அரசிறை சேகரிப்பு (ரூபா)

பிரிவு	வருவாய் சேகரிப்பு
நீள அறை	
CBHQ1	312,147,992,278.87
CCCO	1,750.00
CBPP1	10,561,593.00
CBPS1	1,664,750.00
CBCDU	1,090,100.00
CEMPC	16,620,840.00
CBLR	40,290,377.00
மோட்டார் வாகனம்	
CBMV	2,378,566,671.00
HBIM	3,419,698,840.00
டீ பிரிவு	
DBRA	140,548,563,646.00
முழு மொத்தம்	**458,565,050,845.87**

சுங்கப்பிரகடன செய்முறைகளின் மொத்த எண்ணிக்கை - 2022

பிரிவு	சுங்கப் பிரகடனங்களின் மொத்த எண்ணிக்கை
நீள அறை	
CBHQ1	181417
CCCO	4
CBPP1	137
CBPS1	4585
CBCDU	92
CEMPC	69
CBLR	11
மோட்டார் வாகனம	
CBMV	1221
HBIM	1928
டீ பிரிவு	
DBRA	2135
மொத்தம்	**191599**

8.2.2 கைத்தொழில்கள் மற்றும் சேவைகள் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகமானது, குறிப்பிட்ட நடைமுறைகளின் கீழ் வர்த்தக மற்றும் கைத்தொழில் துறைகளின் தேவைப்பாடுகளுக்கான வெளியாக்கத்தினை இலகுபடுத்தும் நோக்கில் பாதுகாப்பு/ பிணையிடலின் பேரில் தற்காலிகக் களஞ்சியப்படுத்தலுக்கான பொருள் இறக்குமதி தொடர்புடைய சுங்க தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. மேலும் விசேடமாக, இலங்கை முதலீட்டுச் சபை போன்ற தொடர்புபட்ட வரிசை அதிகாரங்களுக்கிடையில் பொருத்தமான ஒருங்கிணைப்போடு இலங்கையில் இறக்குமதி தொடர்பான சம்பிரதாயப் போக்கின் வகைப்படுத்தலுக்கான பாதையினைக் கண்டுகொள்ளும் நோக்கில் உற்பத்தி செய்கை/ ஏற்றுமதிக் கைத்தொழில் துறையினை ஊக்குவிக்கிறது.

பிரதான பிரிவுகளும் மற்றும் அவற்றினது கூறுகளும்

- பொது நிருவாகம்
- வங்கி உத்தரவாதம் / கூட்டுறவு உத்தரவாதம் /பெ.சே.வரி வித்தியாசம் / என்ட்ரபோட் நிர்வாகம் மற்றும் தீனீத் முறைமை பிரிவு.
- பிணைவிசாரணைகள் மற்றும் உள்வருகை செய்முறைப் பிாவு
- கருத்திட்ட மற்றும் களஞ்சியசாலை பேணுகைப் பிரிவு
- அஞ்சல் பொதி மதிப்பிட்டுப் பிரிவு
- தீர்வையற்ற கடைக்கான பொருள் வினியோக பிணைக் கூறு

பிரதான தொழிற்பாடுகள்

இப்பணிப்பகமானது அரசாங்கத்தின் வியாபார வசதியளித்தல் பற்றிய கொள்கைகளை அமுல்படுத்தல் / நிருவகிப்பதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு:

- **பொது நிருவாகம்**

  - ❖ பணிப்பகத்தில் மனித வளங்கள் செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்

- **வங்கி உத்தரவாதமற்றும் என்ட்ரபோட் வியாபாரக் கண்காணிப்பு பிரிவு**

  - ❖ வங்கி உத்தரவாதம் தொடர்பான நிருவாகம்
  - ❖ என்ட்ரபோட் வியாபாரப்பொருட்களுக்கு அங்கீகாரத்தினை வழங்குதல்
  - ❖ சுங்க பிரகடன செய்முறைக்கான அங்கீகாரம்
  - ❖ தீனீத் முறைமை பிரிவின் செயற்பாடுகளை கண்காணித்தல்

- **பிணை தொடர்பிலான விசாரணை மற்றும் உள்வருகைச் செய்முறைப் பிரிவு**

  - ❖ TIEP I & TIEP IV தொடர்பிலான புதிய பதிவுகளை மேற்கொள்ளல்
  - ❖ TIEP I & TIEP IVஎன்பவற்றினை புதுப்பித்தல்
  - ❖ INFAC இயக்குனர்களைப் பதிவு செய்தல்
  - ❖ புதிய IBG இயக்குனர்களைப் பதிவு செய்தல்
  - ❖ IBG இயக்குனர்களைப் புதுப்பித்தல்
  - ❖ தற்போதுள்ள இருப்புகளை சரிபார்ப்பதற்காக கள விஜயங்களை மேற்கொள்ளல் மற்றும் மேற்படித் திட்டத்தினை கண்காணித்தல்/கட்டுப்படுத்தல்.
  - ❖ ஏற்றுமதி செயன்முறையினைச் சரிபார்த்தல்.
  - ❖ பிணை பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளல்.

- **கருத்திட்டம் மற்றும் களஞ்சியசாலைப் பேணுகைப் பிரிவு**

  - ❖ புதிய பிணைக் களஞ்சியசாலைகளுக்கான / களஞ்சியசாலைகள் குறித்தான வசதிகளுக்கான விண்ணப்பங்களை பெறுதல்.
  - ❖ விண்ணப்பங்கள் தொடர்பிலான ஆவணங்களை நுண்ணாய்வு செய்தல்.
  - ❖ சாத்தியப்பாட்டினை உறுதிசெய்வதற்காகவும் மற்றும் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் இணக்கப்பாடு தொடர்பிலும் பிரேரிக்கப்பட்ட தளத்திற்குச் சென்று மேற்பார்வை செய்தல்.
  - ❖ பிரேரிக்கப்பட்ட ஏதேனும் (i) பிணைக்களஞ்சியசாலையை அல்லது/(ii) முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம்/நிதி அமைச்சுக்கு சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஊடாக பரிசோதனை செய்து அனுப்புவதன் பேரிலான பிணைவசதியை மற்றும் அதற்கிணக்க,(ii) தற்காலிக அடிப்படையில் புதிய பிணைவசதி தொடர்பில் நியமிப்பதனைப் பரிந்துரைக்கின்ற அதேவேளை,(i) அமைச்சின் ஒப்புதலைப் பெறுவதன் பேரில் பிணைக்களஞ்சியசாலைகளை நிறுவுதல்.
  - ❖ களஞ்சியசாலைக் குறியீடுகளை விநியோகித்தல்.

- ❖ களஞ்சியசாலை உரிமையாளர் / களஞ்சியசாலை இயக்குனர்களுக்கான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாடடல்களை வழங்குதல்.
- ❖ பிணைக் களஞ்சியசாலைகளுடன் சம்பந்தப்பட்ட திணைக்களக் கட்டளைகளை கொள்கை, திட்டமிடல் ஆராய்ச்சிப் பணிப்பகத்தின் உதவியுடன் வெளியிடல்.
- ❖ பிணைக்களஞ்சியசாலைகளை அவ்வப்போது புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ❖ களஞ்சியசாலைக்கான சாத்தியமான செல்லுபடியாகும் கால நீடிப்புகளை பரிந்துரைத்தல்.
- ❖ பிணைக் களஞ்சியச் செயற்பாட்டிலிருந்து அகற்றுவதற்குான விண்ணப்பங்களை மேற்கொள்ளல்.
- ❖ உரிமம் பெற்ற கப்பல் எரிபொருள் சேமிப்பக விநியோகத்தர்களுடன் தொடர்புபட்ட வழிகாட்டிகாட்டல்கள் மற்றும் சுங்க நடைமுறைகளை வகுத்தல் மற்றும் குறித்த இணக்கப்பாடு தொடர்பில் கண்காணித்தல்.
- ❖ களஞ்சியசாலை பேணுகை நடவடிக்கைகள்

- **அஞ்சல் பொதி மதிப்பீட்டுப் பிரிவு**

  - ❖ இப்பிரிவானது அஞ்சல் மூலமான பொதிச் செயற்பாடுகள் குறித்தான சகல வசதிகளையும் வழங்குகிறது.

- **தீர்வையற்ற கடைக்கான பொருள் வினியோக பிணைப் பிரிவு**

  - ❖ தீர்வையற்ற கடைகளுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்தல்.

- **வங்கி உத்தரவாதம் மற்றும் என்ட்ரபோட் வியாபார கண்காணிப்பு பிரிவு**

  கூட்டுறவு / தனிப்பட்ட உத்தரவாங்களின் எண்ணிக்கை

உத்தரவாத புதுப்பித்தல்கள்	134
புதிய உத்தரவாதங்கள்	04

  வங்கி உத்தரவாங்களின் எண்ணிக்கை

ஏற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவாதங்கள்	
கோரிக்கைவிடுக்கப்பட்ட உத்தரவாதங்கள்	13
விடுவிக்கப்பட்ட உத்தரவாதங்கள்	1218

- **பிணை விசாரணை மற்றும் ஏற்றுமதிச் செய்முறைக்கான தற்காலிக இறக்குமதி பிரிவு**

2021ஆம் ஆண்டிலிருந்தான வழக்குகள்	21
2022இல் ஆரம்பிக்கப்பட்ட வழக்குகள்	11
முடிவுறுத்தப்பட்ட மொத்த வழக்குகளிள் (முன்னைய வருடம் உள்ளடங்கலாக)	08
2021 இற்கான நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	12
2020 இற்கான நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை	16
பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	116,381,082

ஏற்றுமதி வசதியளித்தல் பிரிவு (ஏ.மு.த.இ பிரிவு)

ஏ.மு.த.இ I – புதிய	40
ஏ.மு.த.இ IV – புதிய	12
ஐ.பீ.ஜீ – புதிய	09
ஏ.மு.த.இ I – புதுப்பித்தல்கள்	328

- **கருத்திட்ட மற்றும் களஞ்சியசாலை பேணுகைப் பிரிவு**

பிணைக் களஞ்சியசாலைகளின் செயற்பாடுகள்

பிணைப் புதுப்பித்தல்கள்	89
சிபாரிசு செய்யப்பட்ட புதிய பிணைகள்	27
பிணைக் களஞ்சிய செயற்பாடுகளிலிருந்து நீக்கப்பட்டவை	-
நடாத்தப்படுகின்ற பிணை களஞ்சியசாலைகள் தொடர்பான புதுப்பித்தல்	16

சேகரிக்கப்பட்ட கட்டணங்கள் (ரூபா) :

O/E	(ரூபா
பதிவு	(ரூபா
புதுப்பித்தல்	(ரூபா
ஆவணப்படுத்தல்	(ரூபா

அஞ்சல் பொருள் மதிப்பிடல் பிரிவு

1. விடுவிக்கப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி (ரூபா) :
2. அறவிடப்பட்ட மொத்த வரிகள் (ரூபா) :

மாதம்	அதிவேக அஞ்ஞல் சேவை (ரூபா)	அஞ்சல் பொதி பெறுமதி மதிப்பிடல் - விமானம், கப்பல் மூலமான தபால் (ரூபா)	மாதம்	அதிவேக அஞ்ஞல் சேவை (ரூபா)	அஞ்சல் பொதி பெறுமதி மதிப்பிடல் - விமானம், கப்பல் மூலமான தபால் (ரூபா)
ஜனவரி	1,502,008.00	2,195,209.00	ஜூலை	1,362,906.00	1,977,690.00
பெப்ரவரி	1,128,275.00	2,322,790.00	ஓகஸ்ட்	1,580,458.00	2,711,697.00
மார்ச்	1,559,650.00	3,024,582.00	செப்டம்பர்	2,566,786.00	4,754,260.00
ஏப்ரல்	1,781,532.00	2,509,329.00	ஒக்டோபர்	4,241,714.00	5,194,356.00
மே	1,336,677.00	2,387,512.00	நவம்பர்	2,324,276.00	4,091,564.00
ஜூன்	1,364,338.00	3,257,451.00	டிசம்பர்	1,533,954.00	4,046,477.00
			மொத்தம்	**22,282,574.00**	**38,472,917.00**

8.2.3 முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்புப் பணிப்பகம்

அறிமுகம்

முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்பு பணிப்பகமானது சட்டபூர்வமான வியாபார செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதனை உறுதிசெய்கின்ற அதேவேளை, இலங்கைச் சுங்கம், இலங்கை முதலீட்டுச் சபை, முதலீட்டுச் சபை முதலீட்டாளர்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்கள் போன்றோர் மத்தியில் சம்பந்தப்பட்ட நிருவாக மற்றும் இயக்கப்பாடு சார்ந்த தொழிற்பாடுகளை ஒருங்கிணைக்கின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

- முதலீட்டுச் சபை சார்ந்த இறக்குமதி பொருட்களை பரிசோதித்தலும் கண்காணித்தலும்.
- முதலீட்டுச் சபைச்சரக்குகள் கொண்டுள்ள உள்ளடக்கம் மற்றும் அளவுகளைச் சரிபார்த்தல்.
- முதலீட்டுச் சபை சார்ந்த தொழிற்முயற்சிகள் குறித்தான உள்ளூர் விற்பனைகள் மற்றும் கழிவு அகற்றல் செயன்முறை தொடர்பில் வசதியளித்தல்.
- பிரதான மையச் செயற்பாடுகளுக்கு வசதியளித்தல் மற்றும் அவற்றைக் கண்காணித்தல்.
- முடிவுறுத்தப்பட்ட முதலீட்டுச் சபைக் கருத்திட்டச் சொத்துக்களின் திரவத்தன்மையினைக் கண்காணித்தல்.

இப் பணிப்பகமானது முதலீட்டுச் சபைக் கம்பனிகளுக்கான இலத்திரனியல் சுங்கப் பிரகடனச் சோதனை நடைமுறையினை 2020 ஆம் ஆண்டுக் காலத்தில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளது. இதனால், முதலீட்டுச் சபை கம்பனிகள் இலங்கை சுங்கத்திற்கு சமூகமளிக்காமலேயே அவர்களது இறக்குமதி சுங்கப் பிரகடனங்களை சமர்பிக்கவும் மற்றும் செயன்முறைப்படுத்தவும் முடியும்.

முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்பு பணிப்பகத்தின் அலுவலர்கள் இக்குறித்த இலத்திரனியல் சுங்கப் பிரகடனங்களை செயலாக்கம் செய்து அதனை கணினி முறைமைச் செய்திகளாக குறித்த பிரகடனப்படுத்துனருக்கு அறிவிக்கின்றனர். நாடு கொவிட்-19 போன்றதொரு தொற்று நோயை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் இத்தகைய இலத்திரனியல் சுங்கப்பிரகடன செயலாக்கம் மிகவும் பயனள்ளதாக விளங்குகின்றது.
மேலும் இப்பணிப்பகமானது, முதலீட்டுச் சபையுடன் தொடர்புபட்ட தகவல்களை அதன் கம்பனிகளுக்கு விரைவான முறையில் வழங்கும் நோக்கில், முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்பு பணிப்பகத்துக்கானதொரு தனியான இணையப் பக்கத்தினை இலங்கைச் சுங்கத்தின் இணையத்தளத்தில் அறிமுகம் செய்துள்ளது.

செயலாற்றுகை

மாதம்	உள்ளூர் விற்பனை மூலமான அறவீடுகள் (ரூபா)	உள்ளூர் அகற்றுகை பற்றிய பரிசோதனை/சரிபார்ப்பு கட்டணம் (ரூபா)	கண்காணிப்புக் கட்டணங்கள் (ரூபா)	சுங்க சீல் கட்டணங்கள் (ரூபா)	வங்கி உத்தரவாத கோரிக்கைகள் (ரூபா)	விசாரணைகள் மூலமான அறவீடுகள் (ரூபா)	நுண்ணாய்வு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை
ஜனவரி	161,675,588.00	1,734,000.00	22,500.00	4,900.00	-	21,000,000.00	3,508
பெப்ரவரி	190,391,269.00	1,718,000.00	38,000.00	11,500.00	-	94,000,000.00	3,497
மார்ச்	225,125,211.00	2,374,000.00	30,000.00	5,400.00	8,849,922.00	11,500,000.00	3,060
ஏப்ரல்	246,532,647.00	1,316,000.00	22,500.00	4,200.00	-	135,594.00	3,290
மே	238,546,241.00	1,584,000.00	31,500.00	6,000.00	-	14,200,000.00	4,087
ஜூன்	227,442,099.00	2,016,000.00	36,750.00	8,200.00	-	17,000,000.00	3,616
ஜூலை	297,611,527.00	1,750,000.00	21,750.00	6,300.00	-	-	3,255
ஓகஸ்ட்	370,765,165.00	1,916,000.00	46,500.00	9,700.00	-	3,500,000.00	3,664
செப்டம்பர்	370,385,263.00	2,052,000.00	29,250.00	5,800.00	45,000.00	3,542,572.00	3,057
ஒக்டோபர்	559,584,411.00	1,940,000.00	27,750.00	7,600.00	-	2,500,000.00	2,821
நவம்பர்	361,456,174.00	2,468,000.00	44,250.00	11,200.00	-	1,500,000.00	2,933
டிசம்பர்	490,066,418.00	2,246,000.00	36,000.00	10,700.00	-	21,700,000.00	2,642
மொத்தம்	**3,739,582,013.00**	**23,114,000.00**	**386,750.00**	**91,500.00**	**8,894,922.00**	**190,578,166.00**	**39,430**

8.2.4 மத்திய சரக்குப் பரிசோதனைகள் பணிப்பகம்

அறிமுகம்

அதிகாரமளிக்கப்பட்ட சுங்க அதிகாரியினால் இறக்குமதி செய்யப்பட்ட கடல் மார்க்கச் சரக்குகள் சோதனை செய்யப்படுவதானது சுங்க வெளியாக்கல் நடைமுறையிலுள்ள பிரதான தொழிற்பாடுகளுள் ஒன்றாக விளங்குகிறது. மத்திய சரக்கு பரிசோதனைப் பணிப்பகமானது பிரதானமாக இடர் மதிப்பீடுகளின் அடிப்படையில் இந்தத் தொழிற்பாட்டிற்கு விஜயம் செய்கின்றது. இந்தப் பிரிவின் தலைமை அலுவலகமானது ஆர்.சீ.ரீ பரிசோதனைச் சாலையில் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அதன் கிளை அலுவலகங்களை கொழும்பு கப்பற்துறைமுகம், சிலோன் சிப்பிங் லைன்ஸ் மற்றும் இரு கிறேலைன் சாலைகள் ஆகியவற்றில் அமையப்பெற்றுள்ளது. இந்தப் பணிப்பகங்களானது உத்தியோகபூர்வமான 2000.08.23 இல் தாபிக்கப்பட்டது. சுங்கப் பிரகடனங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை துல்லியமாக ஆராய்ந்து, எந்தளவுக்கு பரிசோதனை முன்னெடுக்கப்பட வேண்டுமென்பது பற்றிய தீர்மானம் எடுக்கப்படும்.

பணிப்பகத்தின் கட்டமைப்பு

மத்திய சரக்குப் பரிசோதனை பணிப்பகமானது அரசிறை மற்றும் சேவைகள் கொத்தணியிள் கீழ் வருவதுடன் இது சுங்கப் பணிப்பாளர் ஒருவரின் தலைமையின் கீழ் தொழிற்படுகின்றது. இப்பணிப்பகத்தின் கீழ் 11 பிரிவுகள் செயற்படுகின்றன.

- ஆர்.சீ.ரீ பரிசோதனைச் சாலை
- கிறேலைன் - I
- கிறேலைன் - II
- எச்.ஆர்.சீ (உயர் இடர் சரக்கு) அலுவலகம்
- ஜே.சீ.ரீ அலுவலகம்
- பீ.கியூ களஞ்சியசாலை
- சீ.வீ.ரீ – ஒறுகொடவத்தை
- ஐ.சீ.டீ – புதிய நுகே வீதி, பெலியகொடை
- கைட் பீர் அலுவலகம்
- ஜே.சீ.ரீ ஸ்கேனிங் கூறு
- ஆர்.சீ.ரீ ஸ்கேனிங் கூறு

பரிசோதனை நடைமுறை

பரிசோதனைக்குட்படும் பொருட்களது வகைகள்

- வீட்டுப் பாவனைக்கான இறக்குமதிகள்
- முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைக் கொண்ட தொழில் முயற்சியாளர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகள்.

தெரிவுமுறை

ஒவ்வொரு முழு கொள்கலன் சுமைக்குமான சம்பந்தப்பட்ட பரிசோதனையானது அசிகுடா முறைமை மூலம் (இலத்திரனியல் தெரிவுமுறை) தெரிவு செய்யப்படுகின்றது. பரிசோதனை நிலையம் தெரிவு செய்யப்பட்டதும், சுங்கப் பிரகடனம் மற்றும் தொடர்புபட்ட ஆவணங்கள் சரக்கு மேடை பிரதிநிதினால் குறித்த பரிசோதனை சாலைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இப்பிரிவுக்கு பொறுப்பாயுள்ள சுங்க பிரதிப் பணிப்பாளர் இடர் அடிப்படையிலான மதிப்பீட்டின் பேரில் பரிசோதனைக்கான வாயிலினை தெரிவு செய்வார்.

இடர் அடிப்படையிலான சரக்குப் பரிசோதனை

- முழு கொள்கலன் சரக்கு

உயர் இடர்மிக்க சரக்கு :- இவ்வகை சரக்கானது அசிகுடா முறைமை மூலம் தெரிவு செய்யப்படுவதுடன் கிறேலைன்-II சாலையிலுள்ள உயர் இடர் சரக்கு அலுவலகத்தில் பரிசோதனை செய்யப்படும்.
நடுத்தர இடர் கொண்ட சரக்கானது இப்பிரிவின் சுங்க பிரதி பணிப்பாளரினால் தெரிவு செய்யப்படுவதுடன் அவை கிறேலைன்-I மற்றும் கிறேலைன்-II சாலைகளிலுள்ள விரிவான பரிசோதனைச்சாலை வாயிலின் கீழ் பரிசோதிக்கப்படும்.
குறைந்த இடர் கொண்ட முழுக் கொல்கலன்களானது இப்பிரிவின் சுங்கப் பிரதிப் பணிப்பாளரினால் தெரிவு செய்யப்படுவதுடன் அவை ஆர்.சீ.ரீ, கிறேலைன் -I கிறேலைன் - II சாலைகளில் எழுமாறான வாயிலின் கீழ் பரிசோதிக்கப்படும்.
சுங்கத்துடனான வழித்தொடர் பதிவுகள் இணக்கப்பாட்டு மட்டத்தின் அடிப்படையில், வெளிநிலை பரிசோதனைகளை அனுமதிக்கும் நோக்கத்திற்காக மத்திய சரக்குப் பரிசோதனை பணிப்பகத்தின் பிரதான அலவலகத்தில் கம்பனிகள் பற்றிய பட்டியலொன்று பேணப்படுகின்றது. இதற்கிணங்க, தெரிவு செய்யப்பட்ட குறைவான இடர் கொண்ட பொருட்கள், நியமிக்கப்பட்டதொரு குழுவினால் பொருள் உடைமையாளரால் பெயர் குறிப்பிடப்படும் வளாகத்தில் வைத்து பரிசோதனை செய்வதற்கு அனுமதிக்கப்படும்.

- சில்லறை கொள்கலன்களில் அடங்கிய பொருட்கள்

சில்லறை சரக்குக் கொள்கலனானது, துறைமுகத்திற்குள்ளேயுள்ள களஞ்சியசாலையில் அல்லது புதிய நுகே வீதி களஞ்சியசாலையில் பிரிக்கப்பட்ட பின்னர், ஜே.சீ.ரீ, பீ.கியூ மற்றும் புதிய நுகே வீதி களஞ்சியசாலையில் பணிபுரியும் சரக்குப் பரிசோதனை பணிப்பக அலுவலர்களால் பரிசோதனை செய்யப்படும்.

முதலீட்டுச் சபைக்கு அனுப்பப்படுகின்ற பொருட்களது பரிசோதனை

சுதந்திர வர்த்தக வலயத்திற்கு வெளியே நிறுவப்பட்டுள்ள முதலீட்டுச் சபைக்குரிய தொழில் முயற்சியாளர்களுக்கு அனுப்பப்படுகின்ற பொருட்கள் சீ.வீ.ரீ (முதலீட்டுச் சபை) இல் வைத்துப் பரிசோதனை செய்யப்படும்.

செயலாற்றுகை

விபரம்		மொத்தம்
பதிவு செய்யப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை	எல்.சீ.எல்	99,506
	எப்.சீ.எல்	92,176
பதிவு செய்யப்பட்ட கொள்கலன்களது (எப்.சீ.எல்) எண்ணிக்கை	20'&40'	137,628
சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை		183,159
பரிசோதனைகளது வகை	ஆம்பர்	72,774
	விவிவான	23,446
	உயர் இடர் சரக்கு	8,165
	ரெட்	14,403
	ஏனையவை (ஏ. நோ.த.இறக்குமதி போன்ற)	43,125
	முதலீட்டுச் சபை	24,564
எல்.சீ.எல் களது எண்ணிக்கை		92,329
பரிசோதனைகளது வகை	ஆம்பர்	24,218
	விவிவான	5,920
	உயர் இடர் சரக்கு	-
	ரெட்	-
	ஏனையவை (ஏ. நோ.த.இறக்குமதி போன்ற)	13,444
	முதலீட்டுச் சபை	47,165
எப்.சீ.எல் களது எண்ணிக்கை		96,129
பரிசோதனைகளது வகை	ஆம்பர்	48,556
	விவிவான	19,033
	உயர் இடர் சரக்கு	-
	ரெட்	12,135
	ஏனையவை (ஏ. நோ.த.இறக்குமதி போன்ற)	944
	முதலீட்டுச் சபை	15,461
கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களது ண்ணிக்கை		81
மேலதிக பதிவுகளாக அறவிடப்பட்ட சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை		2,926
அறவீடுகள் (ரூபா)		211,227,435
கண்டுபிடிப்புகள் (ரூபா)	அபராதமும் மேலதிக பறிமுதல்களும்	155,212,414
	விற்றுத்தீர்த்தவை	32,595,966
மேலதிக நேரம் (ரூபா)	பொதுவானவை	10,082,933
	முதலீட்டுச் சபை	12,167,072
ஏனைய கட்டணங்கள் (ரூபா)	அறவிடப்பட்ட காப்பறைக் கட்டணம்	1,166,300
	முத்திரையிடல் (சீல்) கட்டணங்கள்	2,750

மேலதிக பதிவுகள் தொடர்பிலான அறவீடுகள் (பெறுமதி மதிப்பிடல்) ரூபா		**1,000,330,835**
இறக்குமதி சுங்கத் தீர்வை		201,891,921
EIC		147,734,523
து.வி.அ.அறவீடு		246,937,610
பெ.சே.வரி		370,848,423
வி.ப.அறவீடு		7,884,103
ஏனையவை		25,034,255
		-
மேலதிக பதிவுகள் தொடர்பிலான அறவீடுகள் (ஏனையவை) ரூபா		**408,129,248**
இறக்குமதி சுங்கத் தீர்வை		97,912,929
EIC		121,129,285
து.வி.அ.அறவீடு		77,109,895
பெ.சே.வரி		106,240,198
வி.ப.அறவீடு		862,250
ஏனையவை		4,874,691
மொத்தம்		1,625,754,715

உத்தரவாதம் குறித்த விபரங்கள்	
பதிவு செய்யப்பட்ட வங்கி உத்தரவாதங்களது எண்ணிக்கை	33
விடுவிக்கப்பட்ட வங்கி உத்தரவாதங்களது எண்ணிக்கை	192
பதிவு செய்யப்பட்ட தனிப்பட்ட உத்தரவாதங்களது எண்ணிக்கை	1,136
விடுவிக்கப்பட்ட தனிப்பட்ட உத்தரவாதங்களது எண்ணிக்கை	393

சீ.வீ.ரீ மற்றும் முதலீட்டு வசதியளித்தல் நிலையம்

	சீ.வீ.ரீ	
	இறக்குமதி	ஏற்றுமதி
சுங்கப் பிரகடனங்களது எண்ணிக்கை	6,247	14,698
கொள்கலன்களது எண்ணிக்கை	7,079	8,358
வெளியாக்கப்பட்ட எல்.சீ.எல் களது எண்ணிக்கை	1,634	19,306
மேலதிக பதிவுகள் தொடர்பிலான அறவீடுகள் (ரூபா)	5,075,604	
அபராதங்களும் மேலதிக பறிமுதல்களும் (ரூபா)	21,112,594	
பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது எண்ணிக்கை		
கண்டுபிடிக்கப்பட்ட விடங்களது எண்ணிக்கை		

8.2.5 ஏற்றுமதிகள் பணிப்பகம்

அறிமுகம்

ஏற்றுமதிகள் பணிப்பகமானது, மாற்றியேற்றுதல் ஊடாக சர்வதேச சட்டபூர்வமான சரக்குப் போக்குவரத்தினை ஊக்குவிப்பதன் மூலம் குறித்த நடைமுறைகளை எளிமைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதிச் சுங்கப்பிரகடனங்கள் தொடர்பில் ஈ-செயலாக்கத்தினை அறிமுகம் செய்தல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக மொத்த ஏற்றுமதிகள் மற்றும் மீள்-ஏற்றுமதிகளுக்கான வெளியாக்கல்களை இலகுபடுத்தும் வசதிகளை வழங்குகிறது. மேலும் இப் பணிப்பகமானது நாட்டின் காலாசார, சுற்றாடல் மற்றும் சமூகம் சார்ந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது.

பிரதான தொழிற்பாடுகள்

01. கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்கமாகவும் நாட்டிலிருந்து எற்றுமதி செய்வதற்கு தொடர்புபட்ட சகல விடயங்களுக்கும் ஆஜராகுதல்.
02. நாட்டிலிருந்தான சகல பொருட்களையும் ஏற்றமதி செய்வதற்கு தொடர்புபடும் சகல விடயங்களுடனும் தொடர்பினை வைத்திருத்தல்
03. பாதுகாப்புக் காரணம் கருதியும் மற்றும் சுங்க நோக்கங்களுக்காகவும் ஏற்றுமதிச் சரக்குகளை பரிசோதனை செய்தல்.
04. ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் ஏற்றுமதித் தீர்வை, செஸ் வரி மற்றும் உரிமைத் தொகை ஆகியவற்றினை சேகரித்தல்.
05. கொழும்பு மற்றும் அதனைச் சுற்றுப்புற பிரதேசங்களில் அமையப்பெற்றள்ள கொள்கலன் கையாளும் நிலையங்களை முகாமை செய்தல்
06. எம்.சீ.சீ குத இல்லங்களை முகாமை செய்தல்.
07. கானே ஊடாக தற்காலிய இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை இலகுபடுத்தல்.
08. மீள் கொடுப்பனவு கோரிக்கைகள் தொடர்பில் அங்கீகாரம் வழங்குதல்.
09. கப்பல் சான்றிதழ்களை வினியோகித்தல்.
10. தீர்வைத் தள்ளுபடி தொடர்பிலான ஆவணங்களை சான்றுபடுத்தல்.
11. இலவச மீள் இறக்குமதிச் சான்றிதழினை பதிவு செய்தல்.
12. மூலப்பொருட்களது ஒழுங்குவிதிகள் தொடர்பில் வர்த்தகத் திணைக்களத்திற்கு கப்பலேற்றுகையினை சான்றுபடுத்ததுதல்.
13. பொருட்களை இறக்கி ஏற்றல் தொடர்பிலான செயற்பாடுகளை இலகுபடுத்தல்.
14. தேசிய வியாபார புள்ளி விபரங்களை வழங்குதல்.
15. தேசத்தின் நலன் கருதி சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் சுற்றாடல் ஆகியவற்றினை பாதுகாத்தல்.
16. ஏனைய அரச முகவர்கள் மற்றும் தனியார் துறையினர் அடங்கலாக திணைக்களத்துடன் தொடர்புடைய சகலருடனுமான உறவினை விருத்தி செய்தல்.
17. வியாபார செய்முறைகளை திறமையாகவும் வினைத்திறனுடனும் தொடர்ந்து விருத்தி செய்வதற்கு தேவையான முறைமைகளையும் நடைமுறைகளையும் அமுல்படுத்தல்.
18. ஏற்றுமதி வியாபாரத்தினை இலகுபடுத்துவதற்காக தகவல் மற்றும் தொழில்நுட்ப தொடர்பாடல்களை முடியுமனவரை உபயோகித்தல்.

ஏற்றுமதிகள் தொடர்பிலான அரசிறை - 2022

	ஏற்றுமதிகள் அலுவலகம், ஏற்றுமதி வசதியளித்தல் நிலையம் மற்றும் சீ.எப்.எஸ் சாலைகள் (CBEX1) குறித்தான வருவாய் (ரூபா)	விமானச் சரக்குப் பணிப்பகத்திலான ஏற்றுமதி அலுவலகம் (KTEX1) குறித்தான வருவாய் (ரூபா)	மொத்தம் (ரூபா)
ஏற்றுமதித் தீர்வைகள்	22,029,880	4	22,029,884
ஏற்றுமதி அபிவிருத்திச் சபை செஸ் வரி	1,487,542,441	302,400	1,487,844,841
செஸ் வரி - இறப்பர்	286,916	29	286,945
செஸ் வரி - தேயிலை	509,407,596	1,149	509,408,745
தேயிலை மருத்துவ உதவி செஸ் வரி	445,311	-	445,311
செஸ் வரி - தெங்கு	176,866,251	1,767	176,868,018
ஏற்றுமதி குழு கட்டணம்	89,128,250	31,054,750	120,183,000
வெளிநிலை பரிசோதனைக் கடடணம்	12,771,208	-	12,771,208
உரிமைத் தொகை அறவீடு	49,632	-	49,632
திருத்தம் தொடர்பிலான கட்டணங்கள், திருத்தம் தொடர்பிலான அபராதங்கள் மற்றும் இரத்துச் செய்தல் தொடர்பிலான கட்டணங்கள்	5,426,385	2,663,700	8,090,085
தண்டங்களும் மற்றும் மேலதிக பறிமுதல்களும்	0	150,000	150,000
மேலதிக நேரக் கட்டணம்	23,915,090	31,500,016	55,415,106
கப்பலேற்றல் சான்றிதழ் கட்டணங்கள்	175,350	-	175,350
கணனிக் கட்டணம்	40,325,600	27,064,500	67,390,100
மொத்தம்	**2,368,369,910**	**92,738,315**	**2,461,108,225**

செயலாற்றுகை

1. சமர்ப்பிக்கப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட சுங்கப் பிரகனங்களது எண்ணிக்கை

i. ஏற்றுமதி அலுவகம்	- 82,864
ii. விமாச் சரக்கு	- 63,658
மொத்தம்	**- 146,522**

2. குழு தொடர்பிலான மனுக்கள்

அ. பரிசோதனைகளது எண்ணிக்கை	- 11,895

3. நடைமுறைக் கணக்குகள்

i. நடைமுறைக்கணக்குகளை வைத்திருப்பவர்களது எண்ணிக்கை	- 125
ii. செயற்படுத்தப்படும் நடைமுறைக்கணக்குகளது எண்ணிக்கை	- 79
iii. இக்காலப்பகுதியிலான சேமிப்பு (ரூபா)	- 7,914,806,712.00
iv. இக்காலப்பகுதியில் பற்றுவைக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	- 6,415,492,578.00

4. வேண்டுகோளுக்கிணங்க வினியோகிக்கப்பட்ட FRIC களது எண்ணிக்கை	- 496
5. களஞ்சிய பற்றுச்சீட்டுக்களின் எண்ணிக்கை	- 111
6. வினியோகிக்கப்பட்ட கப்பல் சான்றிதழ்களது எண்ணிக்கை	- 684
7. சேகரிக்கப்பட்ட கப்பல் சான்றிதழ்கள் கட்டணங்கள் (ரூபா)	- 175,350.00
8. சுங்கக் குற்றங்களுக்காக அறவிடப்பட்ட அபராதம் (ரூபா)	- 150,000.00

8.3 கூட்டுறவுக் கொத்தணி

8.3.1 கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் சர்வதேச விவகாரங்கள் பணிப்பகம்

8.3.2 இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம்

8.3.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகம்

8.3.4 மத்திய பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம்

8.3.5 விசேட சேவைகள் பணிப்பகம்

8.3.1 கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் சர்வதேச விவகாரங்கள் பணிப்பகம்

அறிமுகம்

கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் சர்வதேச விவகாரங்கள் பணிப்பகமானது, பிரதானமாக கொள்கை, இறுப்புப் பட்டியல் தொடர்பான விடயங்கள் மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கு பொறுப்புடையதாகவுள்ளது. இதன் விரிவான இலக்குகளும் குறிக்கோள்களும் பின்வருமாறு சுருக்கமாக குறிப்பிடப்படலாம் :

- திணைக்களக் கொள்கைகளை வகுப்பதில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உதவியாகவிருப்பதோடு அத்தகைய கொள்கையினை உரிய பணிப்பகங்களால் அமுல்படுத்தப்படுவதற்கான நடைமுறைக்கு மாற்றுவதற்கு உதவுதல், மேலும் அத்தகைய தீர்மானங்களை அறிந்து கொள்ளவும் அவற்றின் இணக்கப்பாட்டிற்கும் அலுவலர்களுக்கு அறிவித்தல்.
- துறைசார் அமைச்சுகள் மற்றும் திணைக்களங்கள் வேண்டுகின்ற போது,
    - பொருளாதார அபிவிருத்தி/ வியாபார கொள்கைகள், அத்துடன்
    - அத்தகைய கொள்கைகளை இறுப்பு தொடர்பிலான நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு மாற்றுதல்
    - போன்ற விடயங்களில் அவர்களுக்கு உதவியாகவிருத்தல்
- அமுல்படுத்தல் மற்றும் தகவல் தெரிவிப்பு நோக்கில் இறுப்பு நடவடிக்கைகளை அலுவலர்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவித்தல்.
- சகல இறுப்புகளுடன் தொடர்புபட்ட விசாரணைகளுக்கு சமூகமளித்து இறுப்புடன் தொடர்புபட்ட சர்ச்சைகளைத் தீர்த்து வைப்பதோடு, தேசிய சுங்க இறுப்புப் பட்டியலினை மிகவும் அண்மைய இற்றைப்படுத்தல் நிலையில் வைத்திருப்பதனை உறுதிப்படுத்தல்.
- பொதுமக்களுக்களின் இணக்கப்பாட்டினை மேம்படுத்தவதற்காக அவர்களுக்குத் தேவையான தகவலினை திணைக்கள உதவி கருமபீடம் ஊடாக கிடைக்கச் செய்வதனை உறுதிப்படுத்தல்.
- உலக சுங்க அமைப்பகம், அதனது பிராந்திய அலுவலகங்கள் மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புகளிலும் (உலக வர்த்தக அமைப்பகம் மற்றும் MEAs க்கான செயலகங்கள்) மற்றும் இருபக்க, பல்பக்க வியாபார பேச்சுவார்த்தைகளிலும் இலங்கைச் சுங்கம் சார்பில் பிரதிநிதித்துவப்படுத்தல்.
- திணைக்கள நோக்கெல்லையினை அடைவதற்காக, உலக சுங்க அமைப்பகத்தின் சிபாரிசுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை தனது கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கேற்ப அமைத்துக் கொள்ளல்.

பிரதான தொழிற்பாடுகள்

- திறைசேரியினால் உருவாக்கப்படும் இறுப்புக் கொள்கைகளை திணைக்களக்கட்டளைகள் ஊடாக அமுல்படுத்தலும்
- திணைக்களக் கட்டளைகள் ஊடாக சுங்க கொள்கைத் தீர்மானங்களை முறைப்படுத்துதலும் அமுல்படுத்துததலும்
- இறக்குமதி இறுப்பு வழிகாட்டியினை இற்றைப்படுத்துதலும் மற்றும் பேனுதலும்
- திணைக்களத்திலுள்ள அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் நலன்கருதி தேசிய இறுப்பு வழிகாட்டியினை புத்தக வடிவிலும் குறுவட்டு வடிவிலும் வெறியிடுதல்
- இறுப்புக் கொள்கைகளை முறைப்படுத்துவதில் தேவையேற்படும் போது இயைபுமுறைப்படுத்தப்பட்ட முறைமையில் தேசிய உபபிரிவுகளை உருவாக்குவற்கு திறைசேரிக்கு உதவுதல்
- திணைக்களத்தின் வருடாந்த செயற்திட்டத்தினை தயாரித்தல்
- சம்பந்தப்பட்ட பணிப்பகங்களது செயலாற்றுகை மீளாய்வு மூலம் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினைத் தயாரித்தல்
- கடித மற்றும் தொடர்புபட்ட விடயங்களுக்கு கலந்து கொள்வதன் மூலம் உலக சுங்க அமைப்பகம், உலக சுங்க அமைப்பக ஆசிய-பசுபிக் காரியாலயம், உலக வர்த்தக அமைப்பு, ஏனைய சர்வதேச அமைப்புகள் மற்றும் சுங்க நிருவாகங்கள் என்வற்றுடன் தொடர்பு நிலையமாக செயற்படல்
- ஏனைய சுங்க நிருவாகங்களுடன் சுங்க கூட்டிணைப்பு மற்றும் பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கைகளுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு சமூகமளித்தல்
- முன்னுரிமை வியாபார உடன்படிக்கைகள் மற்றும் இலவச வர்த்தக உடன்படிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு சமூகமளித்தல
- பெயரேட்டுக் குழு, வர்த்தக இலகுபடுத்தல் குழு மற்றும் இடர் முகாமைத்துவக் குழு என்பவற்றின் செயலக தொழிற்பாடுகளுக்கு சமூகமளித்தலும் மற்றும் ஏனைய தொழில்நுட்ப குழுக்களது செயற்பாடுகளை கூட்டிணைத்தலும்
- இறுப்பு, வியாபாரம் மற்றும் வெளியாக்கல் நடைமுறைகள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட விடயங்களில் ஆராய்ச்சியினை மேற்கொள்ளல்
- செயல்முறைக் கையேட்டு நடைமுறையினை தயாரித்தலும் இற்றைப்படுத்தலும்.
- நாணயமாற்று விகிதங்கள் அறிவித்தல்களை தயாரித்தலும் வெளியிடுதலும்
- பொது மக்கள் தொடர்பு மற்றும் சுங்க தகவல் நிலையம் என்பவற்றிற்கு சமூகமளித்தல்
- வருடாந்தம் நிகழும் உலக சுங்கத் தினத்தினை ஒழுங்கமைத்தலும் ஒருங்கிணைத்தலும்

2022 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட திணைக்களக் கட்டளைகள்

பதிவு செய்யப்பட்ட திகதி	திணைக்களக் கட்டளை இல	தொடர்புபட்ட பிரிவு	விடயம்
03.01.2022	562 W	பொ.பெ.குழு	பொருள் பெயரிடல் குழு
03.01.2022	1539	விசேட பண்ட அறவீடு	உருளைக் கிழங்கு மற்றும் பெரிய வெங்காயம் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
03.01.2022	1414 E	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	29/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
06.01.2022	1384 R	து.வி.அ.அ	மருத்துவ உபகரங்கள் தொடர்பிலான து.வி.அ.அறவீடு விலக்களிப்பு
06.01.2022	1516 A	NIVDU	சரியான பெறுமதி மதிப்பீட்டு பிரகடன படிவமொன்றினை பெறுவதற்கான வழிபாட்டுதல்
11.01.2022	1384 S	து.வி.அ.அ	குழாய்கள், வால்வுகள், கால்நடை தயாரிப்புகள், பிற உயிர் தாவரங்கள் தொடர்பிலான து.வி.அ.அறவீடு
11.01.2022	1540	அரசிறைக் காப்புக் கட்டளை	01/2022 ஆம் இலக்க அரசிறை காப்புக் கட்டளை
11.01.2022	1541	விசேட பண்ட அறவீடு	அரிசி மற்றும் சீனி தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
11.01.2022	1453 X	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	01/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
11.01.2022	1542	செஸ் வரி	செஸ் வரி (இ.மு குறியீடு 0306, 1006, 3917, 4009, 8307)
13.01.2022	1453 Y	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	02/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
03.03.2022	1543	விசேட பண்ட அறவீடு	சோளம் மற்றும் தானியச் சோளம் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
03.03.2022	1544	விசேட பண்ட அறவீடு	மெகரல், உளுந்து, விதைகள், குரக்கன் மற்றும் ஏனையவை தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
09.03.2022	1198 M	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	03/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
09.03.2022	1545	அரசிறைக் காப்புக் கட்டளை	02/2022 ஆம் இலக்க அரசிறை காப்புக் கட்டளை
09.03.2022	1546	விசேட பண்ட அறவீடு	யோகட், வெண்ணெய் பேரீச்சம்பழம், பழம் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
10.03.2022	1547	செஸ் வரி	ஆடைகள் மீதான செஸ் வரி
18.03.2022	1198 N	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் - 1198 எம் ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
21.03.2022	1547 A	செஸ் வரி	1547ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம் (ஆடைகள் தொடர்பிலான செஸ் வரி)
28.03.2022	1548	விசேட பண்ட அறவீடு விலக்களிப்பு	பேரீச்சம்பழம் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
29.03.2022	1198 O	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் - 1198 எம் ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
31.03.2022	1198 P	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	முதலீட்டுச் சபை வலயங்களில் இருந்து ஆக்கப்பெற்ற பொருட்களை வெளியாக்குதல்
05.04.2022	1549	வி.வி.பி	விசேட விசாரணைப் பிரிவினை நிறுவுதல்
12.04.2022	1198 Q	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்
18.04.2022	1550	விசேட பண்ட அறவீடு	மாசி, பச்சைப்பயறு தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
04.05.2022	1551	நிறுத்தி வைத்தல்	எம்/எஸ் டெலிசக் மாகட்டிங் தொடர்பிலான சுங்க வசதிகளை இடைநிறுத்தல்
13.05.2022	1552	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள் (செலுத்துகை விதிமுறை)
19.05.2022	1553	செஸ் வரி	செஸ் வரி (இ.மு குறியீடு 0306, 1006, 3917, 4009, 8307)
19.05.2022	1554	விசேட பண்ட அறவீடு	சிவப்பு வெங்காயம், பூண்டு, எலுமிச்சை, சல்மன், பட்டணி, மிளகாய், முகக் கவசம் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
24.05.2022	1553 A	செஸ் வரி	1553ஏ ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
01.06.2022	1555	அரசிறைக் காப்புக் கட்டளை	அரசிறை காப்புக் கட்டளை
01.06.2022	1556	விசேட பண்ட அறவீடு	விசேட பண்ட அறவீடு
01.06.2022	1557	மேலதிகக் கட்டணம்	சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235அத்தியாயம்) பிரிவு 10அ இன் கீழான கட்டளை

01.06.2022	1198 R	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்
01.06.2022	1552 A	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்
01.06.2022	1558	பெ.சே.வரி	2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பிரிவு 10அ இன் கீழான கட்டளை
01.06.2022	1555 A	அரசிறைக் காப்புக் கட்டளை	1555ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
06.06.2022	1552 B	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	1552ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
15.06.2022	1559	விசேட பண்ட அறவீடு	உருளைக் கிழங்கு, பெரிய வெங்காயம், அரிசி சீனி தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
27.06.2022	1552 C	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	1555ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
30.06.2022	1552 D	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	06/2022 ஆம் இலக்க தொழிற்பாட்டு விதிமுறைகள் (1552ஆம் திணைக்கட்டளைக்கான திருத்தம்)
30.06.2022	1560	நிறுத்தி வைத்தல்	எம்/எஸ் குளோறி சிஸ்ரம் தொடர்பிலான சுங்க வசதிகளை இடைநிறுத்தல்
19.07.2022	1561	பிணை	சீதுவையிலுள்ள "குளொபல் பார்க்" பொது பிணைக் குத இல்லத்தில் பின்பற்றப்படவுள்ள தொழிற்பாட்டு விதிமுறைகள்
22.07.2022	1551 A	நிறுத்தி வைத்தல்	எம்/எஸ் டெலிசக் மாகட்டிங் தொடர்பிலான சுங்க வசதிகளை இடைநிறுத்தல் இனை ரத்துச் செய்தல்
27.07.2022	1562	இ.த.நி.நி	இலங்கை தரநிர்ணயதிற்கு மசகு எண்ணெ மற்றும் கிறீஸ்களது சரிபார்ப்பு இணக்கம்
29.07.2022	1316 L	உற்பத்தி	1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் - பிரிவு 3இன் கீழான கட்டளை
29.07.2022	1552 E	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 08ஆம் இலக்க தொழிற்பாட்டு விதிமுறைகள்
04.08.2022	1414 F	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	07/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
09.08.2022	1453 Z	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	08/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
09.08.2022	1563	அரசிறைக் காப்புக் கட்டளை	அரசிறை காப்புக் கட்டளை (தீர்வை விலக்களிப்புகள்)
09.08.2022	1564	விசேட பண்ட அறவீடு	விசேட பண்ட அறவீடு (விலக்களிப்புகள்)
09.08.2022	1565	செஸ் வரி	செஸ் வரி (செஸ் வரி விலக்களிப்புகள்)
10.08.2022	876 A	பிணையிடல் மையம்	2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க மைய ஒழுங்குவிதிகள் - 2012ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழான கட்டளை
10.08.2022	1566	விசேட பண்ட அறவீடு	நெத்தலி கருவாடு, கருவாடு, குரக்கன் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
10.08.2022	790 B	பொதி	வணிக இயல்புடையதும் வணிக அளவுகளிலுமான பொருட்களைக் கொண்ட பயணிகள் பொதி மற்றும் அன்பளிப்பு பார்சல்களது வெளியாக்கல்
22.08.2022	1384 T	து.வி.அ.அ	துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு
24.08.2022	1453 AA	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2002ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்
24.08.2022	1453 AB	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2002ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்
25.08.2022	1453 AC	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	10/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
31.08.2022	1227 M	மேல்முறையீட்டுக் குழு	மேல்முறையீட்டுக் குழு
31.08.2022	1567	பெ.சே.வரி	2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பிரிவு 10அ இன் கீழான கட்டளை
05.09.2022	1552 F	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	11/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
05.09.2022	1453 AD	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	12/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
05.09.2022	1568	விசேட பண்ட அறவீடு	சோளம் மற்றும் தானியச் சோளம் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
07.09.2022	790 C	பொதி	வணிக இயல்புடையதும் வணிக அளவுகளிலுமான பொருட்களைக் கொண்ட பயணிகள் உடன் வராத பொதி மற்றும் அன்பளிப்பு பார்சல்களது வெளியாக்கல்
12.09.2022	1453 AE	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்
14.09.2022	1453 AF	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	13/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
14.09.2022	1453 AG	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	முதலீட்டுச சபை ஏற்றுமதி சார்ந்த திட்டங்களது பட்டியல்

15.09.2022	1563 A	அரசிறைக் காப்புக் கட்டளை	1563ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
15.09.2022	1564 A	விசேட பண்ட அறவீடு	1564ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
16.09.2022	1565 A	செஸ் வரி	1565ஆம் இலக்க திணைக்களக் கட்டளைக்கான திருத்தம்
19.09.2022	1552 G	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்
20.09.2022	1569	பரிசோதனை	கொள்கலன்களை மீள பரிசோதனை செய்தல்
22.09.2022	1453 AH	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	14/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
23.09.2022	1453 AI	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022 செப்டம்பர் 12ஆந் திகதி வெளியிடப்பட்ட 13/2022ஆம் இலக்க தொழிற்பாட்டு அறிவுறுத்தலுக்கான திருத்தம்
23.09.2022	1570	விசேட பண்ட அறவீடு	பெரிய வெங்காயம், உப்பு தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
23.09.2022	790 D	பொதி	வணிக இயல்புடையதும் வணிக அளவுகளிலுமான பொருட்களைக் கொண்ட பயணிகள் உடன் வராத பொதி மற்றும் அன்பளிப்பு பார்சல்களது வெளியாக்கல்
26.09.2022	1453 AJ	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதிகள்
30.09.2022	1571	நிறுத்தி வைத்தல்	எம்/எஸ் பொஸ்டன் டிவைசஸ் பிறைவட் லிமிடட்டுக்கான சுங்க வசதிகளை இடைநிறுத்தல்
30.09.2022	1572	சமூக பாதுகாப்பு பங்களிப்பு	சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு
06.10.2022	1572 A	சமூக பாதுகாப்பு பங்களிப்பு	சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - விலக்களிப்புப் பட்டியல்
06.10.2022	1573	செஸ் வரி	செஸ் வரி - விலக்களிப்பு (இ.மு குறியீடு 3920.10.90, 3926.90.99, 4811.59.10)
06.10.2022	1423 C	தே.ம.ஒ.அ.சபை	மூன்றாம் தரப்பினரால் பதிவுசெய்யப்பட்ட மருந்து மற்றும் மருத்துவ கருவிகளை இறக்குமதி செய்வதற்கான தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்துதல் அதிகார சபையிடமிருந்தான ஒப்புதல்
06.10.2022	1414 G	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	15/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
06.10.2022	1384 V	து.வி.அ.அ	து.வி.அ. அறவீடு - விலக்களிப்புகள் (இ.மு குறியீடு - 3920.10.20, 3926.90.99, 3920.10.90, 4811.59.10, 5603.11.00)
07.10.2022	1572 B	சமூக பாதுகாப்பு பங்களிப்பு	சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீடு - விலக்களிப்புப் பொருட்கள்
07.10.2022	1574	பெ.சே.வரி	2022ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் பிரிவு 2ஆ இன் கீழான கட்டளை
07.10.2022	1575	அரசிறைக் காப்புக் கட்டளை	05/2022 ஆம் இலக்க அரசிறை காப்புக் கட்டளை
11.10.2022	1572 C	சமூக பாதுகாப்பு பங்களிப்பு	2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டம் - குறித்த திட்டங்களுக்கான விலக்களிப்புகள்
12.10.2022	1552 H	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க செலுத்துகை விதிமுறை குறித்த இறக்குமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்
12.10.2022	1571 A	நிறுத்தி வைத்தல்	சரியான பெறுமதி மதிப்பீட்டு பிரகடன படிவமொன்றினை பெறுவதற்கான வழிபாட்டுதல்
13.10.2022	1576	விசேட பண்ட அறவீடு	மீன், சோளம், பருப்பு, மஞ்சள் பருப்பு, மெங்குஸ்தான் பழம் மற்றும் கிவி பழம் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
18.10.2022	1572 D	ச.பா.ப.அறவீடு	2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூக பாதுகாப்பு பங்களிப்பு அறவீட்டுச் சட்டத்தின் கீழ் விலக்களிக்கப்பட்ட இ.மு குறியீட்டுப் பட்டியல்
21.10.2022	1577	இஸ்லாமிய புத்தங்கள்	இஸ்லாமிய சமய நூல்கள் மற்றும் வெளியீடுகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வது தொடர்பாக பின்பற்றப்படவேண்டிய வழிகாட்டுதல்கள்
25.10.2022	1453 AK	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்
31.10.2022	1453 AL	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022.08.23ஆந் திகதிய 2294/30 ஆம் இலக்க வர்த்தமான அறிவித்தலிலான வேறுபாடு
31.10.2022	1578		அசிகுடா கொள்கலன் அனுமதிப்பத்திரத்தினை அழல்படுத்தல்
01.11.2022	15521	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்
01.11.2022	11985	இறக்குமதி கட்டுப்பாட்டு	2022ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இறக்குமதி மற்றும்

		அனுமதி	ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்
04.11.2022	606 C	நுகர்வோர் விவகாரங்கள்	2304/34 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரங்கள் அதிகார சபை வர்த்தமான அறிவித்தலின் கீழான வழிகாட்டுதல்
14.11.2022	1579	அரசிறைக் காப்புக் கட்டளை	06/2022 ஆம் இலக்க அரசிறை காப்புக் கட்டளை
14.11.2022	1580	செஸ் வரி	செஸ் வரி (வரவு செலவுத்திட்டம்)
28.11.2022	1581	நிறுத்தி வைத்தல்	எம்/எஸ் எல்.எம்.ஜே. இன்ரநெஷனல் லங்கா தொடர்பிலான சுங்க வசதிகளை இடைநிறுத்தல்
29.11.2022	1453 AN	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	18/2022 தொழிற்பாட்டு விதிமுறைகள்
30.11.2022	1582	பொதி	பயணி உடன் வராத பொதி குத இல்லங்களுக்கு தொடர்பான "புளு புக்" இணக்க முறையினை அறிமுகப்படுத்தல்
30.11.2022	1583	விசேட பண்ட அறவீடு	யோகட், வெண்ணெய், டீஸ், பழங்கள், மெகரல் தொடர்பிலான விசேட பண்ட அறவீடு
30.11.2022	1584	மேலதிகக் கட்டணம்	சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10அ பிரிவின் கீழான சுங்கத் தீர்வை தொடர்பிலான மேலதிகக் கட்டணம்
02.12.2022	1552 K	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க செலுத்துகை விதிமுறை குறித்த இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்
09.12.2022	1198 T	இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதி	2022ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகள்

பீ.எல் பதிவு

திகதி	பீ.எல் இல	குறிப்புகள்
09.02.2022	874	வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021
09.02.2022	875	இயைபு முறைத் தலைப்பு – 2022 திருத்தங்கள்
03.03.2022	876	ஆசிஹப் டீ.ஜீ.எம்.ரீ திட்டம் (ASYHUB DGMT Project)
03.03.2022	877	ஆசிஹப் (ASYHUB) புலமைச்சொத்துரிமை புரிந்துணர்வு உடன்படிக்கை
10.03.2022	878	நிலையான வளர்ச்சி இலக்குகள்
11.03.2022	879	பங்களாதேஷ் மற்றும் இலங்கை இடையே முன்மொழியப்பட்ட முன்னரிமை ஒப்பந்தம்
30.03.2022	880	"இந்தியாவின் கடன் வசதியின் கீழ் 2022ஆம் ஆண்டிற்கான அத்தியவசிய பொருட்களின் இறக்குமதி" எனும் தலைப்பின் கீழ் 2022.03.05ஆந் திகதியிடப்பட்டு வினியோகிக்கப்பட்ட அமைச்சரவையின் 3(இ) பந்திக்கேற்ப சுங்கத்தில் விசேட விசாரணைப் பிரிவினை நிறுவுதல்
08.04.2022	881	ஐக்கிய இராச்சிய எச்.எம் அரசிறை மற்றும் சுங்கம் மற்றும் இலங்கைச் சுங்கம் இடையே சுங்க பரஸ்பர நிர்வாக ஒப்பந்தம்

சர்வதேச விவகாரங்கள்

இலங்கைச் சுங்கம் தொடர்பிலான சர்வதேச உடன்படிக்கைகளின் செயலாற்றுகை

கைச்சாத்திடப்பட்டு அமுல்படுத்தப்படாதவைகள்			
தொ. இல	**தரப்பினர்கள்**	**உடன்படிக்கை வகை**	**நிலைமை**
1	இலங்கை மற்றும் துருக்கி	சுங்க நிறுவனம்	2021.11.26 ஆந் திகதி ஒப்பிடமிடப்பட்டது, துருக்கியின் இறுதி தீர்மானம் எதிர்பார்க்கப்படுகிறது.
2	இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம்	சுங்க நிறுவனம்	2017.11.18 ஆந் திகதி ஒப்பிடமிடப்பட்டது, இறுதி அறிவித்தலானது (குறிப்பு மேற்கோள் - 2019 ஒக்டோபர் 18 ஆந் திகதிய L/E/GEN/914) மூலம் அனுப்பப்பட்டது மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தரப்பின் பதிலுக்காக காத்திருக்கப்படுகிது.
மேலதிக செயன்முறைக்காக தொடர்புபட்ட அதிகார சபைகளுக்கு அனுப்பப்பட்டவை			
3	இலங்கை மற்றும் ரஷ்யா	சுங்க நிறுவனம்	முறையான நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதுடன் விரைவில் ஒப்பமிடப்படும்
4	இலங்கை மற்றும் பங்களாதேஷ்	சுங்க நிறுவனம்	திருத்தப்பட்ட வரைவானது சட்ட அலுவல்கள் பணிப்பகம் ஊடாக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு 2021.10.11 ஆம் திகதி அனுப்பி வைக்கப்பட்டதுடன், அவர்களது உடன்பாடு நிலுவையிலுள்ளது.
5	இலங்கை மற்றும் மாலைதீவு	சுங்க நிறுவனம்	சமீபத்தில் மறுசீரமைக்கப்பட்ட சட்டமா அதிபரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைவு உடன்படிக்கை மாலைதீவு தரப்பினருக்கு அனுப்பப்பட்டதுடன்

			அவர்களது பதிலுக்காக காத்திருக்கப்படுகிறது.
6	இலங்கை மற்றும் ஜோர்தான்	சுங்க நிறுவனம்	முடிவு பெறாத நிலையில் உள்ளது
7	இலங்கை மற்றும் மெக்சிகோ	சுங்க நிறுவனம்	முடிவு பெறாத நிலையில் உள்ளது
8	இலங்கை மற்றும் கட்டார்	சுங்க நிறுவனம்	முடிவு பெறாத நிலையில் உள்ளது
9	இலங்கை மற்றும் வியட்நாம்	சுங்க நிறுவனம்	முடிவு பெறாத நிலையில் உள்ளது
10	இலங்கை மற்றும் உக்ரேன்	சுங்க நிறுவனம்	முடிவு பெறாத நிலையில் உள்ளது
11	இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா	சுங்க ஒத்துழைப்பு	அமைச்சரவையின் ஒப்புதலை பெறுவதற்காக நிதி அமைச்சின் வர்த்தக மற்றும் முதலீட்டுத் திணைக்களத்துடன் தொடர்புடையது
12	இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியம்	சுங்க ஒத்துழைப்பு	நிலுவையில் உள்ளது – (இலங்கைச் சுங்கத்தால் மதிப்பாய்வு செய்யப்படுகிறது)
13	பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (பிம்ஸ்ரெக்)	சுங்க நிறுவனம்	முடிவு பெறாத நிலையில் உள்ளது
14	பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (பிம்ஸ்ரெக்)	தோற்றத்தின் விதிகள்	முடிவு பெறாத நிலையில் உள்ளது
15	பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (பிம்ஸ்ரெக்)	வியாபார வசதியளித்தல்	முடிவு பெறாத நிலையில் உள்ளது
16	பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (பிம்ஸ்ரெக்)	கடலோர கப்பல் போக்குவரத்து	முடிவு பெறாத நிலையில் உள்ளது
17	பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு (பிம்ஸ்ரெக்)	இடைத்தங்கள், இறக்கியேற்றல் மற்றும் வாகன போக்குவரத்து நடவடிக்கைகள்	முடிவு பெறாத நிலையில் உள்ளது

இதற்கு மேலதிகமாக, பின்வரும் உடன்படிக்கைகள் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளன.

கைச்சாத்திடப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளவை

தொ. இல	தரப்பினர்கள்	உடன்படிக்கை வகை	நிலைமை
1	இலங்கை மற்றும் ஈரான்	சுங்க நிறுவனம்	2007.11.27 இல் கையொப்பமிடப்பட்டது
2	இலங்கை மற்றும் பாகிஸ்தான்	சுங்க நிறுவனம்	2010.11.28 இல் கையொப்பமிடப்பட்டது
3	இலங்கை மற்றும் சீனா	புரிந்துணர்வு உடன்படிக்கை	2014.09.16 இல் கையொப்பமிடப்பட்டது
4	இலங்கை மற்றும் இந்தியா	சுங்க நிறுவனம்	2015.03.13 இல் கையொப்பமிடப்பட்டது

மேலும், பின்வரும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் சுங்க ஒத்துழைப்பு மற்றும் வியாபார வசதியளித்தல் அதிகாரம் சுங்க மேலதிக பணிப்பாளர் (கூட்டுறவு) நாயகத்தின் தலைமையின் கீழ் உருவாக்கப்பட்டதொரு உப குழுவால் மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

இலங்கை - இந்தியா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
இலங்கை - சீனா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்
இலங்கை - தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

சுங்க விசாரணை மையம்

சுங்க விசாரணை மையமானது, சுங்கத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் பிற அரசாங்க நிறுவனங்கள், வியாபாரிகள், மற்றும் ஏனைய ஆர்வம்மிக்க தரப்பினர்கள் போன்றோர் சம்பந்தப்பட்ட விசாரணைகளை முன்னெடுக்கும் நோக்கிலும், மற்றும் சர்வதேச வர்த்தகம் சம்பந்தப்பட்ட அறிவு மற்றும் விழிப்புணர்வூட்டல்களைக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை வலுவூட்டும் நோக்கிலும், சர்வதேச சுங்க தினம் 2020 ஐ முன்னிட்டு 2020.01.28 ஆம் திகதி கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பணிப்கத்தில் தாபிக்கப்பட்டது.

கொள்கைத் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் சர்வதேச விவகாரங்கள் பணிப்பகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள்

சர்வதேச சுங்க தின விழா

8.3.2 இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகம்

அறிமுகம்

பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுகளை மேற்கொள்வதே இலங்கை சுங்கத்தின் இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் பிராதன பொறுப்பாக விளங்குகின்றது. பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுகள் பற்றிய தொழிற்பாடானது முதன்முதலில் 2000 ஆம் ஆண்டில் பெறுமதி மதிப்பிடல் பணிப்பகத்தின் கீழ் வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு கிளையாக நிறுவப்பட்டது. இந்தக் கிளை அலுவலகமானது, பிந்திய கணக்காய்பு மற்றும் பொருள் பட்டியல் அலகினையும் (PAMU) கணக்கய்வு மற்றும் பரிசோதனைக் கிளை அலுவலகத்தினையும் (A&ID) ஒன்றிணைத்து தாபிக்கப்பட்டதாகும்.

பொருளாதார வளர்ச்சியில் வர்த்தகம் ஒரு இயங்கு சக்தியாக விளங்குவதோடு, எப்போதும் விரிவாக்கம் பெறக்கூடிய சர்வதேச வர்த்தகத்தின் அளவுகள் மற்றும் பொருள் வெளியாக்கத்தினைத் துரிதப்படுத்த வேண்டியதன் தேவை போன்றவற்றுக்கு மத்தியில், எல்லைப் புறத்தில் காணப்படக் கூடிய குறுகிய காலத்தினுள் அனைத்துச் சரக்குகளுக்கும் அறவிடப்பட வேண்டிய தீர்வை பற்றிய உறுதியான தீர்மானத்தினை மேற்கொள்வது சுங்கத்தினால் சாத்தியமற்றதாக உருவெடுக்கிறது. மோசடிமிக்க சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள் இல்லாதவிடத்து எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு வழங்குகின்ற அதேவேளை, சரக்கு வெளியாக்கத்தினைத் தாமதப்படுத்துவது எந்தவகையிலும் பொருத்தமானதல்ல. இதனால், அனேக நிர்வாக அமைப்புகள் இடர் முகாமைத்துவத் தொழில்நுட்பங்களை உபயோகித்து தெரிவுசெய்யப்படுகின்ற மற்றும் இலக்குப்படுத்தப்படுகின்ற பரிசோதனைகளை மேற்கொள்கின்ற அதேவேளை, வெளியாக்கலுக்குப் பின்னரான நிலைமை மீது தமது கட்டுப்பாடுகள் தொடர்பில் தற்போது அக்கறை செலுத்துகின்றனர். தமது வளங்களை வினைத்திறன் மிக்கதாக உபயோகிக்கும் நோக்கில், சரக்கு வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்விற்கு இயங்காற்றல் மிக்கதொரு இடர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் இன்றியமையாததாக விளங்குகின்றது.

சர்வதேச வர்த்தகத்தின் அபிவிருத்தி மற்றும் உலக வர்த்தக அமைப்பின் சுங்க பெறுமதி மதிப்பிடல் உடன்படிக்கையினை வெற்றிகரமாக அமுல்படுத்தல் போன்றவற்றுக்கு மத்தியில், அர்ப்பணிப்பு மிக்கதொரு பணிப்பகமானது சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பணிப்பகம் எனும் பெயரில் 2010 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. 883ஆம் இலக்க திணைக்களக் கட்டளையின் பிரகாரம், இணக்கப்பாடு மிக்க வர்த்தகர்களுக்கு வசதியளிப்பதற்கான தேவைப்பாடு, மற்றும் சுங்க வெளியாக்கல் செயன்முறையிலுள்ள குறைபாடுகள் மற்றும் மோசடிகளை இனங்காணல் போன்றவற்றைக் கருத்திற் கொண்டு இடர் முகாமைத்துவ அலகானது தாபிக்கப்பட்டது. இதனால், இது கூட்டுறவுக் கொத்தணியினுள் ஒரு பணிப்பகமாக கொண்டுவரப்பட்டு 2013 செப்டம்பர் 26 ஆம் திகதி முதற்கொண்டு செயல்வலுப் பெறும் வகையில் "இணக்கப்பாடு மற்றும் வசதியளிப்புப் பணியகம்" என பெயரிடப்பட்டது
இருப்பினும், பின்னர் இடர் முகாமைத்துவ அலகானது இணக்கப்பாடு மற்றும் வசதியளிப்புப் பணியகத்திலிருந்து பிரிக்கப்பட்டு மேலதிக தொழிற்பாடுகள் பொறுப்பளிக்கப்பட்டு மத்திய புலனாய்வுப் பணிப்பகத்தின் கீழ் இயங்கியது. தற்போது, "இணக்கப்பாடு மற்றும் வசதியளிப்புப் பணிப்பகமானது" சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவு, தேசிய இறக்குமதி பெறுமதி மதிப்பீட்டுத் தரவுத்தள அலகு மற்றும் மீளளிப்புக் கிளை அலுவலகம் போன்றவற்றைக் கொண்டுள்ளது.

இணக்கப்பாடு மற்றும் வசதியளிப்புப் பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்று, வர்த்தக இலகுவாக்கத்திற்கும் சுங்கக் கட்டுப்பாட்டிற்கும் இடையிலான சமநிலையினை உறுதிப்படுத்துவதாகும். சரக்கு வெளியாக்கலுக்கும் பின்னரான கணக்காய்வும் அத்தகையதொரு சுங்கக் கட்டுப்பாடாகவே விளங்குகின்றது. சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுச் செயன்முறை என்பது, சுங்கமானது குறித்த சரக்குகளை வெளியாக்கிய பின்னர் இடம்பெறுகின்ற ஒரு கட்டமைக்கப்பட்ட பரிசோதனையாகும். இந்தப் பரிசோதனை சம்பந்தப்பட்ட வர்த்தகத் தரவுகள், விற்பனைத் தொடர்புகள், நிதி சார்ந்த மற்றும் நிதி சாராத பதிவுகள், பௌதீக இருப்புகள் மற்றும் வர்த்தகர்களின் ஆதனங்கள் போன்ற தொடர்பில் இடம்பெறக்கூடும். வர்த்தகர்களின் இணக்கப்பாடுகளை அளவீடு செய்தல் மற்றும் அதனை மேம்படுத்தல் போன்றனவே இதன் நோக்கமாகும். சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, உலக வர்த்தக அமைப்பின் சுங்கப் பெறுமதி மதிப்பிடல் உடன்படிக்கையுடனான இணக்கப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் சுங்கத்தின் கட்டுப்பாடுகள் வினைத்திறன் மிக்கதாகத் திகழ்வதை உறுதிப்படுத்துகின்ற அத்தியவசியமிக்கதொரு கருவியாகும் என நிரூபித்துள்ளது. மேலும் இது வினைத்திறன் மிக்கதொரு சுங்க இடர் முகாமைத்துவ மூலோபாயத்தினை அமுல்படுத்துவதில் ஒரு வகிபாகத்தினை வழங்கி வருவதோடு, இது இணக்கப்பாடுகளை அளவிடுவதன் மூலம் ஒவ்வொரு வர்த்தகருக்குமான இடர் மட்டத்தினைக் கணிப்பிடுவதற்கும் மற்றும் பெறுபேற்றின் அடிப்படையில் எதிர்காலக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பதற்கும் சுங்கத்தினை இலகுவாக்குகின்றது.

இடர்-மைய சரக்கு வெளியாக்கலின் பின்னரான அணுகுமுறை ஒன்றினைப் பிரயோகிப்பதன் மூலம், சுங்க நிர்வாகத்தினால் தமது வளங்களை வினைத்திறன் மிக்க வகையில் உபயோகிப்பதற்கு இலக்குப்படுத்தக்கூடியதாக இருப்பதோடு, சட்டத்திற்கு முழுமையாகவும் தன்னார்வமாகவும் இணக்கமுறுகின்ற வர்த்தகர்கள் மத்தியில் வெற்றிகரமான கூட்டாண்மைகளை உருவாக்கவும் வழியமைக்கிறது.

சுங்கப் பிரகடனங்களின் துல்லியத்தன்மை மற்றும் நம்பகத்தன்மையைச் சரி பார்த்தல் மற்றும் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதியளிக்கின்ற அதேவேளை, சுங்கத் தேவைப்பாடுகளுடன் இணக்கமுறுவதை உறுதிப்படுத்தல் போன்றனவே சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் பிரதான குறிக்கோள்களாகும். சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, சர்வதேச வர்த்தகத்திற்கு இலகுவளிக்கின்றதோடு, வணிகச் சமூகத்திற்கான சுங்க நடைமுறைகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் சிறந்த புரிதலை வழங்கின்ற அதேவேளை, சுங்கத்துடனான தமது இணக்கப்பாட்டினை மேம்படுத்துவதற்கு வர்த்தகர்களை ஊக்குவிக்கின்றது.


சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுகளில் இரண்டு பிரதான வகைகள் காணப்படுகின்றன. அவையாவன, பரிமாற்ற-மையக் கணக்காய்வு (TBA) மற்றும் முறைமை-மையக் கணக்காய்வு (SBA) என்பனவாகும். பரிமாற்ற-மைய கணக்காய்வு என்பது, இறக்குமதி அல்லது ஏற்றுமதிப் பிரகடனம் ஒன்றின் குறிப்பான விபரங்களைப் பரிசோதிப்பதாகும். இங்கு ஏதேனும் ஒரு கேள்வி எழும்பட்சத்தில், சுங்கக் கணக்காய்வாளர்

இறக்குமதியாளரை/சரக்குதாரரை அல்லது அவரது முகவரை தொலைபேசி ஊடாக அல்லது மின்னஞ்சல் ஊடாக மேலதிக விபரங்களை வேண்டித் தொடர்புகொள்வர். வேண்டப்பட்ட சான்றுகள் சுங்க அலுவலகத்திலுள்ள சுங்க கணக்காய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படும். முறைமை-மையக் கணக்காய்வு என்பது, இறக்குமதியாளர் அல்லது ஏற்றுமதியாளரின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பற்றியதொரு முறைமை சார்ந்த மதிப்பீடாகும். இது உணரப்பட்ட பலங்கள் மற்றும் பலவீனங்கள் தொடர்பில் ஆராய்ந்து பரிசோதனை செய்யும் வகையில் விளங்குகிறது. இந்தக் கணக்காய்வானது, சமர்ப்பிக்கப்படுகின்ற சுங்கப் பிரகடனங்களின் துல்லியத் தன்மையினைச் பரிசோதித்தல் மற்றும் வணிக நடவடிக்கை தொடர்பில் சம்பந்தப்பட்ட சட்ட இணக்கப்பாட்டு மட்டம் குறித்தானதொரு கருத்தினை வகுப்பத்தல் மற்றும் உறுதிசெய்யப்பட்ட பலவீனங்களை சரிசெய்வதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டுள்ளது.

மேற்படி இரண்டு பிரதான கணக்காய்வு வகைகளுக்கும் மேலதிகமாக, சரக்கு வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வானது மேலும் இரண்டு கணக்காய்வு வகைகளைக் கொண்டுள்ளது. அதாவது, கருப்பொருள்-மைய கணக்காய்வுகள் மற்றும் விசாரணை வகைக் கணக்காய்வு போன்றனவே அவையாகும். இலங்கை போன்ற நாட்டினைப் பொறுத்தவரை, சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற பெரும்பாலான வர்த்தகர்கள் முறைசாரா வர்த்தகர்களாவர். இத்தகைய வர்த்தகர்கள் தொடர்பிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கே கருப்பொருள்-மைய கணக்காய்வுகளும் விசாரணை வகைக் கணக்காய்வுகளும் எமக்கு அவசியமாகின்றன.

கடந்த காலப்பகுதியில் ஆசிய அபிவிருத்தி வங்கி நிபுணர் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதன் மூலம் இலங்கைச் சங்கத்தில் பொருள் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு முறைகளை நடைமுறைப்படுத்துவதில் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளது. முறைமை மைய கணக்காய்வுகள் உள்ளிட்ட கணக்காய்வின் புதிய பகுதிகளை உள்ளடக்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி சுங்க அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளது. முறைமை மைய கணக்காய்வுகளின் நோக்கம் இறக்குமதியாளர்களின் இடர் மட்டத்தினை கண்டறிவதாகும். இணக்கப்பாட்டுப் பொருளாதார இயக்குனர் /அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் பற்றிய நிலைப்பாட்டினை வழங்குவதன் மூலம் இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கானதொரு உள்ளீடாக இணக்கப்பாடு மிக்க வர்த்தகர்களுக்கு விரிவான வசதிகளை வழங்கும் நோக்கில் அதற்கானதொரு அளவுகோலாக முறைமை-மையக் கணக்காய்வுகளின் பெறுபேறுகளை பயன்படுத்த முடியும்.

இப்பணிப்பகத்தின் நிறுவன கட்டமைப்பு




வரைபடம் 1.1

31.12.2022 ஆந் திகதி இருந்தவாறான அலுவலர்கள்

DC- 01 ⟹ DDC- 02 ⟹ SC- 09 ⟹ DSC- 02 ⟹ ASC- 30

வரைபடம் 1.2

இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் பிரிவுகளும் தொழிற்பாடுகளும்



உரு 1.3

8.3.2.1 வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வு

வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வு அல்லது கணக்காய்வை அடிப்படையாகக் கொண்ட கட்டுப்பாடுகள் என்பது மீளாய்வு செய்யப்பட்ட கியோடோ சமவாயத்தினால் குறித்த நடவடிக்கைகளாக வரையறுக்கப்படுகிறது. இந்நடவடிக்கைகள் சுங்கமானது குறித்த நபரின் பிரகடனங்களின் உண்மைத்தன்மை மற்றும் அதிகாரத்தன்மைகளை அந்நபரின் தொடர்புபட்ட புத்தகங்கள், பதிவேடுகள், வர்த்தக முறைமைகள் மற்றும் வணிகத் தரவுகள் ஆகியவற்றைப் பரிசோதனை செய்வதன் ஊடாக உறுதி செய்வதன் மூலம் மேற்கொள்ளப்படக்கூடியனவாகும். வெளியாக்கலுக்கு பின்னரான கணக்காய்வானது சுங்கத்திற்கும் ஏனைய எல்லைப்புற அதிகார அமைப்புகளுக்கும் கடினமானதொரு கட்டுப்பாட்டு முறையியலாகும். ஏனெனில், இது கண்டிப்பான பரிமாற்ற மைய கட்டுப்பாட்டுச் சூழலிலிருந்து ஒரு வலிமையான கணக்காய்வு மைய நிருவாகத்திற்கு மாறுவதன் ஊடாக அவர்கள் பல்-அடுக்கு இடர் மைய கட்டுப்பாட்டு அணுகல் முறையினை பிரயோகிப்பதற்கு வழியமைப்பதாகவுள்ளது.பரிமாற்ற மையக் கட்டுப்பாடுகள் என்பது பொருட்களின் பௌதீகப் பரிசோதனை, பெறுமதி சரிபார்ப்பு, அவற்றின் உற்பத்தியிடம் மற்றும் வகைப்பாடு, மாதிரிப்பொருள், சான்றிதழ், உரிமம் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் ஆகியவற்றின் சரிபார்ப்பு போன்ற செயற்பாடுகளின் போதான ஒவ்வொரு பிரத்தியேக கப்பலேற்றுகைக்கும் பிரயோகிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டு முறைகளாகும்.

(மூலம்: உலக சுங்க அமைப்பு)

வெளியாக்கத்திற்குப் பின்னரான கணக்காய்வுகள் ஒவ்வொரு விடயமாகத் தனித்தனியாகக் கொண்டு, இலக்குப்படுத்தப்பட்ட செயற்பாட்டாளர் மீது அவதானம் செலுத்துவதன் அடிப்படையில், சமுதாயம் மற்றும் வர்த்தகர் தொடர்பான இடர் பகுப்பாய்வு குறித்து தெரிவுசெய்வதன் அடிப்படையில், அல்லது வருடாந்த கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டவாறு திட்டமிடப்பட்ட ஒழுங்குமுறையான வழிமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட முடியும். மேலும், இக் கணக்காய்வானது குறித்த சில பொருளாதார நடவடிக்கையாளர்களை விசேடமாக கையாளும் வகையிலும் பயன்படுத்தப்பட முடியும்.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவின் பிரதான குறிக்கோள்கள்

சுங்கச் சட்டத் தேவைப்பாடுகளுக்கு இணங்க சுங்கப் பிரகடனங்கள் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்துவதே சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவின் ஒட்டுமொத்தக் குறிக்கோளாகும். பின்வருவன குறிப்பான குறிக்கோள்களாக விளங்குகின்றன:

- சட்டபூர்வமாகச் செலுத்த வேண்டிய அரசிறை கணிப்பிடப்பட்டு அத்தொகை செலுத்தப்படுவதை உறுதிப்படுத்தல்.
- இலங்கையிலுள்ள உள்வரவு மற்றும் வெளியேறுகை வாயில்களில் குறைந்தபட்ச தலையீடுகளுடன் சர்வதேச வர்த்தகத்திற்கு வசதியளித்தல்.
- சம்பந்தப்பட்ட அனைத்து ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாட்டினை அதிகரித்தல்.
- சுங்கப் பிரகடனங்களிலான முரண்பாடுகளைச் சரிசெய்தல்.
- நபர் ஒருவர் பொருத்தமான கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணுவதை உறுதிப்படுத்தல் மற்றும் சுங்கப் பிரகடனங்கள் யாவும் சரியானதும் துல்லியமானதுமாகும் என்பதை அவர்களது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் உறுதி செய்வதை உறுதிப்படுத்தல்.
- சுங்கக் கட்டுப்பாட்டிலான விளைவுத்திறனை உறுதிப்படுத்தல்.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் பிரதான தொழிற்பாடுகள்

- கணக்காய்வுத் திட்டங்களை விருத்தி செய்தல்
- அசிகுடா முறைமையிலுள்ள வர்த்தகர்களின் கடந்த காலப் பதிவுகளை உபயோகித்து கணக்காய்வு செய்யப்படுவதற்கான நபர் ஒருவரைத் தெரிவு செய்தல்.
- கருமபீடக் கணக்காய்வு மற்றும் ஏனைய அவசியமான கணக்காய்வு முறைகளை மேற்கொண்டு கணக்காய்வுகளுக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளல்.
- கருமபீடக் கணக்காய்வானது ஏதேனும் முரண்பாடுகளைச் சுட்டிக்காட்டுமாயின், களவிஜய கணக்காய்வுகளை முன்னெடுத்தல்.
- கணக்காய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்படுகின்ற மோசடிகளை புலன்விசாரணை செய்தல்.
- புலன்விசாரணைகள் மற்றும் அறிக்கைகளை நிறைவுசெய்தல்.
- ஏதேனும் மோசடி மிக்க நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளதா என்பதைச் சோதனை செய்வதற்கான விசாரணைகளை முன்னெடுத்தல்.
- குறித்த குற்றச் செயலானது சுங்க மீறுதலை உறுதிப்படுத்தும் வகையில் போதுமான சான்றினைக் கொண்டிருப்பின், அபராதங்களை விதித்தல் மற்றும் ஏனைய சீராக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அவசியமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- கணக்காய்வுக்கு உட்படுபவருக்கு பின்னூட்டல்களை வழங்குதல்.
- இறுதியாக இடர் முகாமைத்துவச் செயன்முறைக்கானதொரு உள்ளீடாக உபயோகிக்கும் நோக்கில் குறித்த தகவல்களைக் கொண்டு மத்திய புலன்விசாரணை அலகின் தரவுத்தளத்தினை இற்றைப்படுத்தல்.
- அவசியமான நவீன மாற்றங்களை மேற்கொள்ளும் நோக்கில் ஒட்டுமொத்த கணக்காய்வுச் செயன்முறையினையும் மதிப்பாய்வு செய்தல்.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வில் சரிபார்க்க வேண்டிய விடயங்கள்

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது, கீழே வழங்கப்பட்டுள்ள அட்டவணைக்கு ஏற்ப ஒரு முக்கிய சுங்கப் பிரகடனத்திற்கும் தேவையான ஒவ்வொரு விடயங்கள் மீதும் கவனம் செலுத்துவதோடு, அதற்கிணங்க குறித்த கம்பனிகளின் இணக்கப்பாட்டு மட்டத்தினையும் கணிப்பிடுகின்றது. அதன் பின்னர், சம்பந்தப்பட்ட கம்பனிகள் தொடர்பில் ஏதேனும் முரண்பாடுகள் அல்லது மோசடியான செயற்பாடுகள் உள்ளனவா என்பது பற்றி தீர்மானிக்கின்றது. அவ்வாறு இருப்பின், மேலதிக பதிவுகள் மூலம் குறித்த அரசிறை மீட்டெடுக்கப்படுகிறது அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 235) பிரகாரம் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு அது சரி செய்யப்படுகிறது.

தொடர்புபட்ட பொருட்கள் அடிப்படையிலான தீர்வை	தீர்வை விகிதம் தொடர்புபட்ட பொருட்கள்	தீர்வைத் தொகை தொடர்புபட்ட பொருட்கள்	ஏனையவை
- பெறுமதி - அளவு - நாணயம் - நாணயமாற்று விகிதம்	- வகைப்படுத்தல் - பொது விகிதங்களது விண்ணப்பங்கள் - முன்னுரிமை விகிதங்கள்	- விலக்களிப்புகள் - நியாயமானமுறையில் தீர்மானிக்கப்பட்ட தொகை - சரியான தீர்வைக்கணிப்பீடு	- மட்டுப்படுத்தப்பட்டவைகள் - தடைசெய்யப்பட்டவைகள் - இறக்குமதி அனுமதிப்பத்திரம் - புலமைச் சொத்துரிமை - CITES - உரிமத் தொகை - நாணயமாற்றுக் கட்டுப்பாடு

சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு (PCA) மேற்கொள்ளப்பட முன்னர் சுங்க வெளியாக்கலில்/ அல்லது வெளியாக்கலுக்கு முன்னரான சரிபார்ககையின் பொழுது மேற்படி பொருட்கள் பரிசோதிக்கப்பட முடியும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அவற்றுக்கிடையிலான தேவையற்ற இரட்டிப்பினைத் தவிர்க்கும் வகையிலும் மற்றும் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் சிறப்புத் தகுதியினை அதிகரித்து அதன் குறைபாட்டினைக் குறைக்கும் வகையிலும் வெளியாக்கலின் பின்னரான கணக்காய்விலான அணுகுமுறையானது சுங்க வெளியாக்கலில் (வெளியாக்கலுக்கு முன்னரான சரிபார்க்கை) ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட முடியும். வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வானது (PCA) அதன் அதிகாரிகள் சுங்கப் பிரகடனத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மாத்திரம் அல்லாது கணக்காய்வுக்குரியவரின் வளாகத்தில் கடந்த சில காலமாக பேணப்பட்டு வந்த கணக்கீட்டுப் பதிவேடுகள் போன்ற சம்பந்தப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவுகளையும் பரிசோதனை செய்வதற்கும் அவர்களை இயலச் செய்தமையினை ஒரு சிறப்பம்சமாகக் குறிப்பிட முடியும். சரக்கு வெளியாக்கத்திலிருந்தான 3 மாதங்களினுள் மாதிரிகள் அழைப்பிக்கப்படுகின்றன. குறுங்கால அறவீடுகள் இரண்டு வருடங்களினுள் மீட்கப்படுவதோடு,

ஏதேனுமொரு மோசடி கண்டறியப்படின், கருத்திற்கொள்ளத்தக்க காலப் பகுதி எவ்வாறிருப்பினும் பறிமுதல் செய்யும் வகையில் அபராதம் விதிக்கப்படும்.

நியமதர இயக்கப்பாட்டு நடைமுறை (SOP)

இலங்கை உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதியாக்க உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. மேற்படி உடன்படிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வெளியாக்கலுக்குப் பின்னரான கணக்காய்வானது "C" வகை குறித்தான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது. இதனால் "C" வகைக்குரிய அர்ப்பணிப்புக்களை அமுல்படுத்துவதற்கு ஒரு நன்கொடையாளர் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். இதற்கிணங்க, உலக சுங்க அமைப்பு மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றின் நியமதரங்களுக்கு அமைய பொருத்தமான வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு முறைமையினைத் தாபித்து அதனை அமுல்படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு பணிப்பகத்தின் பணியாட்டொகுதியினருக்கு பயிற்சியளித்தலுக்கான தொழில்நுட்ப உதவியை ஏற்கனவே வழங்கியுள்ளதோடு, வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வின் கையேடு ஒன்றாக உபயோகிக்கப்படவுள்ள நியமதர இயக்கப்பாட்டு நடைமுறை (SOP) ஒன்றை வரைவு செய்வதற்கான தொழில்நுட்ப உதவியையும் வழங்கியுள்ளது. வரைவு SOP ஆனது ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளதோடு, அது அண்மிய எதிர்காலத்தில் பிரசுரிக்கப்படும்.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு தொடர்பிலான பயிற்சித் திட்டங்கள்

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப உதவியின் ஒரு பகுதியாக, வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு பிரிவிலுள்ள அலவலர்களுக்கான பயிற்சி ஒரு தொடர்ச்சியான திட்டமாக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படுகிறது. முதலாவது பயிற்சி அமர்வானது 2019ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டதுடன் அதைத் தொடர்ந்து பயிற்சித்திட்டங்கள் 2021 மற்றும் 2022 இல் நடாத்தப்பட்டன.

இடர் முகாமைத்துவ பணிப்பகத்தினால் (RMD) நடத்தப்பட்ட CEO/AEO நிகழ்ச்சித்திட்டம் பற்றிய வசதியளிப்பு

இடர் முகாமைத்துவ பணிப்பகமானது, எல்லைப்-புற பரிமாற்றங்களுடன் சம்பந்தப்படுகின்ற நேரம் மற்றும் செலவு என்பவற்றினை குறைப்பதன் மூலம் சரக்குகளின் நகர்வு, விடுவிப்பு மற்றும் வெளியாக்கலை துரிதமாக்குவதன் மூலம் உலகளாவிய வர்த்தகத்தை பாதுகாத்து அவற்றுக்கு வசதியளிப்பதனை நோக்காகக் கொண்டு, உலக சுங்க அமைப்பின் SAFE தரநியம வேலைச்சட்டகம் மற்றும் உலக வர்த்தக அமைப்பின் வியாபார வசதியளித்தல் உடன்படிக்கை என்பவற்றுக்கு இணங்க குறித்த CEO/AEO திட்டத்தினை ஆரம்பித்துள்ளது.
இந்த AEO திட்டமானது இரண்டு மட்டங்களில் சான்றிதழ்களை வழங்குகிறது. அதாவது, சட்டபூர்வ மற்றும் இயக்கப்பாடு சார்ந்த உயர் இணக்கப்பாட்டினைக் கொண்ட இயக்குநர்களுக்கான இணக்கமான பொருளாதார இயக்குநர் (CEO) மற்றும் CEO தேவைப்பாட்டிற்கு மேலாக, விநியோகத் தொடர் பாதுகாப்புத் தரநியமங்களைப் உயர்வாகப் பேணுகின்ற இயக்குனர்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார இயக்குனர் (AEO) என்பனவாகும்.

8.3.2.2 தேசிய இறக்குமதிப் பெறுமதி மதிப்பிடல் தரவுத்தள பிரிவு

தேசிய இறக்குமதிப் பெறுமதி மதிப்பிடல் தரவுத்தளப் பிரிவானது (NIVDU) இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் கீழ் 2021 ஜனவரி 11ஆந் திகதி நிறுவப்பட்டது. ஒரு முழுமையான தொழிற்பாடுடைய பெறுமதி மதிப்பீட்டு தரவுத்தளத்தை நிறுவுவதற்கான பணியானது 1990 களில் இருந்து இலங்கைச் சுங்கத்தில் முயற்சிக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பில் பல்வேறு அளவிலான வெற்றிகளுடன் கூடிய பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கடந்த கால அனுபவங்கள் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரால் (ஓய்வு பெற்ற) ஜீ. விஜித ரவிபிரிய அவர்களின் வழிகாட்டலின் கீழ், தேசிய இறக்குமதி பெறுமதி மதிப்பிடல் தரவுத்தள பிரிவானது 3 கட்டத்திலான அபிவிருத்தித் திட்டம் ஒன்றை முன்மொழிந்தது. பயனுறுதிமிக்க அபிவிருத்தி வட்டத்தினை மேற்கொள்ளும் வகையில், 'மதிப்பீட்டு தரவுத் தளம்' மற்றும் 'மதிப்பீட்டு இணையத்தளம்' ஆகியன 2021 ஜுன் 23 ஆந் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.
மதிப்பீட்டுத் தரவுத்தளமானது பொருட்களின் மேற்கோள் மதிப்பீட்டுப் பெறுமதிகளைக் கொண்டதாகும். இறக்குமதிப் பிரகடனங்களை மதிப்பீடு செய்யும் போது, பொருட்களுக்காக பிரகடனப்படுத்தப்பட்ட பெறுமதியைத் தீர்மானிக்க சுங்க அதிகாரிகள் இந்த தரவுத் தளத்தினை உபயோகிக் முடியும். அந்த வகையில் இது ஒரு இடர் மதிப்பீட்டுக் கருவியாகவும் விளங்குகிறது. ஒரு மதிப்பீட்டு தரவுத்தளமானது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கான பெறுமதிகள் அல்லது பெறுமதி வீச்சுக்களைக் குறிப்பிடுவதில்லை. இது பொருட்களை குறைத்து மதிப்பிடுதல் அல்லது அதிகம் மதிப்பிடுதல் பற்றிய சாத்தியப்பாட்டினைக் கண்டறிவதற்கு சுங்க அதிகாரிகளுக்கானதொரு கருவியாக விளங்குகிறது. எனவே, இலங்கைச் சுங்கமானது இந்த மேற்கோள் மதிப்பீடுகளின் அடிப்படையில் மாத்திரமே பெறுமதிகளை ஏற்பதோ அல்லது நிராகரிப்பதோ இல்லை. இந்தத் தரவுத்தளமானது பிரகடனப்படுத்தப்பட்ட பெறுமதிகளின் இடர் மட்டங்களை மதிப்பிடுவதற்கு உதவுகிறது.

<u>என்ன வகையான பெறுமதிகள் மதிப்பீட்டுத் தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன ?</u>

ஏற்புடையதெனக் கருதப்படக்கூடிய இரண்டு வகையான பெறுமதிகள் உள்ளன.

பரிமாற்றப் பெறுமதிகள்

முன்னராக பிரகடனப்படுத்தப்பட்ட பெறுமதிகள் அவற்றின் நம்பகத்தன்மைக்காக மதிப்பிடப்பட்டு தேசிய இறக்குமதிப் பெறுமதி மதிப்பிடல் தரவுத்தளப் பிரிவு அதிகாரிகளால் தேர்தெடுக்கப்படுகின்றன. இது கருத்திட்ட அபிவிருத்தியின் இரண்டாம் கட்டத்தில் ஒரு மென்பாகத் தீர்வு மூலம் உதவியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ள ஒரு கடினமான பணியாகும்.

பரிமாற்றம்-சாரா பெறுமதிகள்

இந்த வகைத் தரவானது பல்வேறு உறுதிப்படுத்தப்பட்ட மூலங்களிலிருந்து பெறப்படுகின்றது. பரிமாற்றம்-சாரா பெறுமதிகள் எனப்படுவது, ஒரு குறிப்பான பரிமாற்றத்தின் அடிப்படையின் மீதல்லாத சரக்குகளின் பெறுமானங்களாகும். உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஒபெக் மசகு எண்ணெய்யின் விலை இத்தகையதொரு பெறுமதியாகக் கருதப்பட முடியும்.

2021 ஏப்ரலில், தேசிய இறக்குமதிப் பெறுமதி மதிப்பிடல் தரவுத்தளப் பிரிவானது (NIVDU) ட்றிஜ்ட் சந்தைப் புலனாய்வுத் தரவுக்கான அணுகலைக் கொள்வனவு செய்தது. இது உலகளாவிய சந்தைகளிலிருந்தான பெருந்தொகையான விவசாய மற்றும் உணவுப் பொருட்களின் மேற்கோள் பெறுமதிகளை எங்களது மதிப்பீட்டு தரவுத்தளத்தில் இற்றைப்படுத்திப் பேணுவதற்கு உதவுகிறது. மேலும், இலங்கைச் சுங்கமானது பெறுமதிப் போக்குகள், முன்னறிவிப்புகள் மற்றும் எச்சரிக்கைகள் பற்றிய பெறுமதி மிக்க தரவுகளை பெறுகிறது.
NIVD பிரிவானது தற்போது நான்கு உறுதிப்படுத்தப்பட்ட தரவு மூலங்களில் இருந்து பரிமாற்றம்-சாரா தரவைப் பெறுகிறது. மேலும், மதிப்பீட்டுத் தரவுத் தளத்தை வலுப்படுத்தும் வகையிலும் மற்றும் அதன் வினைத்திறனை மேம்படுத்தும் வகையிலும் புதிய வழிமூலகங்கள் முனைப்புடன் அடைவதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுப் பிரிவிலான செயலாற்றுகை - 2022


விபரம்	2022
இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	87
முடிவுறுத்தப்பட்ட கணக்காய்வுக்குப்பின்னரான விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கலாக)	61
மேற்கொள்ளப்பட்ட முறைமை மையக் கணக்காய்வுகளின் எண்ணிக்கை	5
கணக்காய்வின் பின்னர் நிரூபிக்கப்பட்ட குற்றங்களதும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை	53
விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	1,241,730,804
சேகரிக்கப்பட்ட விற்பனை வரும்படிகளது மொத்தத் தொகை(ரூபா)	-
மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	10,107,147
அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	1,156,461,867

2018 தொடக்கம் 2022 வரையிலான செயலாற்றுகை

	2018	2019	2020	2021	2022
இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	102	179	91	119	87
முடிவுறுத்தப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கலாக)	61	52	39	35	61
கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை	61	52	8	27	53
அறவிடப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது மொத்தத் தொகை (ரூபா)	604,850,139	458,422,599	72,295,530	811,681,718.68	1 ,146,354,720
பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது மொத்தப் பெறுமதி(ரூபா)	இருக்கவில்லை	இருக்கவில்லை	இருக்கவில்லை	25,496,969.00	9,468,662
மேலதிக பதிவுகளாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தெகை(ரூபா)	56,653,753	4992	இருக்கவில்லை	16,304,877.00	10,107,147
அறவிடப்பட்ட மொத்தத் தொகை (ரூபா)	**661,503,892**	**458,327,591**	**72,295,530**	**853,483,564.68**	**1 ,156,461,867**


செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு (2018 – 2022)

வருடம்	இவ்வாண்டுக் காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை	முடிவுறுத்தப்பட்ட வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வு விடயங்களது எண்ணிக்கை (முன்னமே பதிவுசெய்யப்பட்டவை அடங்கலாக)	கணக்காய்வு மூலம் நிரூபிக்கப்பட்ட குற்றங்களும் மற்றும் விதிக்கப்பட்ட அபராதங்கள் /பறிமுதல்களது எண்ணிக்கை
2018	102	61	61
2019	95	52	52
2020	91	39	8
2021	119	35	27
2022	87	61	53




வருவாய் சேகரிப்பு

வருடம்	சேகரிக்கப்பட்ட வருமானம் (ரூபா)
2018	661,503,892
2019	458,327,591
2020	72,295,530
2021	853,483,564.68
2022	1,156,461,867



2018, 2019,2020,2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மற்றும் முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை

வருடம்	பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை
2018	102	61
2019	95	51
2020	91	8
2021	119	35
2022	87	53



8.3.2.3 மீளளிப்புக் கிளை

மீளளிப்புக் கிளையானது கூட்டுறவுக் கொத்தணியின் கீழான இணக்கப்பாடு மற்றும் வசதியளித்தல் பணிப்பகத்தின் ஒரு பகுதியாகும். இப்பிரிவானது, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளது தீர்வைகள் மற்றும் கட்டணங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மேலதிக செலுத்துகைகளை மீளளித்தல் மற்றும் சுங்கக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 235) பிரிவு 18 மற்றும் 22 என்பவற்றின் கீழ் எந்தவொரு துறைமுகத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் எந்தவொரு வெளிநாட்டுத் துறைமுகத்திற்கும் மீள் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பிலான மீளளித்தலை பிரதானமாகக் கையாளுகின்றது.


சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ், ஒரு இறக்குமதியாளர் தன்னால் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் மிகையாகச் செலுத்திய தீர்வைகள் மற்றும் கட்டணங்களை, அவை செலுத்தப்பட்ட நாளில் இருந்து இருபத்தி நான்கு மாதங்களுக்குள் அதற்கான கோரிக்கையினை மேற்கொள்ளுமிடத்து, குறித்த இறக்குமதியாளர் அதனை மீளப் பெறுவதற்கு தகுதியுடையவராவர். சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ், இறக்குமதியாளர் எந்தவொரு வெளிநாட்டு துறைமுகத்திலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் மற்றும் எந்தவொரு வெளிநாட்டுத் துறைமுகத்திற்கும் மீள் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு பத்தில் ஒன்பது பங்கிற்கும் மேற்படாத தீர்வைக் கழிப்பிற்கும் தகுதியுடையவராவர்.

மீளளிப்புக் கோரிக்கைகளது நிலைமை

	2022
புதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை	93
நிறைவடைந்த நிதி மீளளிப்புகளின் (முன்பு பதிவு செய்யப்பட்டவை உள்ளடங்கலாக) எண்ணிக்கை	79
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகளின் எண்ணிக்கை	15

மீளளிப்புக் கோரிக்கைகளது நிலைமை – கடந்த காலங்கள் (2018 தொடக்கம் 2022 வரை)

வருடம்	2018	2019	2020	2021	2022
பதிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள்	219	155	53	75	93
நிறைவடைந்த நிதி மீளளிப்புகள் (முன்பு பதிவு செய்யப்பட்டவை உள்ளடங்கலாக)	49	36	45	96	79
நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள்/ கோரிக்கைகள்	3	15	7	32	15



முடிவுரை

நிதி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்ட அரசிறை இலக்குகளை அடைந்துகொள்வதில் 2022 ஆம் ஆண்டு ஒரு சவால்மிக்க வருடமாக சுங்கத் திணைக்களத்திற்கு விளங்கியது. இலங்கைப் பொருளாதாரத்தினைப் பாதுகாக்கும் நோக்கில் காலத்திற்குக் காலம் எடுக்கப்பட்ட அரசாங்கக் கொள்கைத் தீர்மானங்களுக்கு ஏதுவாக, பொருட்கள் இறக்குமதி மீது பல்வேறுபட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளும் கொடுப்பனவு விதிமுறைகளும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களத்தின் ஊடாக அறிமுகம் செய்யப்பட்டிருப்பதனை அவதானிக்க முடிகிறது.

மேற்படி சூழமைவின் கீழ், இயக்கப்பாட்டு மற்றும் இலகுவாக்கல் பணிப்பகத்திற்கு வழங்கப்பட்ட இலக்குகளையும் குறிக்கோள்களை எதிர்கொள்வதற்கான அதன் நாளாந்த தொழிற்பாடுகளை முன்னெடுப்பதிலும் பணிப்பகமானது பல சவாலகளை எதிர்கொண்டது. இருப்பினும், ஒரு உயர் மட்டச் செயலாற்றுகையோடு தனக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றவும் மற்றும் தனது இலக்குகளை அடைந்துகொள்ளவும் இப் பணிப்பகத்தினால் இயலுமாக இருந்தது.

2022 ஆம் ஆண்டில், சரக்கு வெளியாக்கலின் பின்னரான கணக்காய்வுக் கிளை அலுவலர்கள் கணக்காய்வுக்குப் பின்னரான 87 விசாரணைகளை பதிவுசெய்துள்ளதோடு, அவர்களால் 61 விசாரணைகளை நிறைவுசெய்யவும் முடிந்துள்ளது. சுங்கக் குற்றங்களுடன் சம்பந்தப்பட்ட கணக்காய்வுக்குப் பிந்திய விசாரணைகளின் எண்ணிக்கை 53 ஆகும். மேலதிக அறவீடாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூபா 10,107,147.00 ஆகும். அபராதம்/ பறிமுதல்களாக அறவீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை ரூபா. 1,146,354,720.00 ஆகும்.

செயலாற்றுகை பற்றிய தரவுகளை பகுப்பாய்வு செய்யும் போது, கடந்த 4 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டிலேயே அதிகூடிய தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளமையினை அவதானிக்க முடிகிறது. பதிவுசெய்யப்பட்டுள்ள விசாரணைகளின் எண்ணிகையுடன் ஒப்பிடுகையில், நிறைவுசெய்யப்பட்ட விசாரணைகள் 70 சதவீதமாகும். நிறைவுசெய்யப்பட்ட விசாரணைகளில் 87 சதவீதமானவை சுங்கக் குற்றங்களுடன் தொடர்புடையவைகளாகும் என்பதோடு, அவை அபராதங்கள் மற்றும் பறிமுதல்களைக் கொண்டுள்ளன என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். இது வர்த்தகர்களின் இணக்கப்பாட்டு மட்டமானது திருப்தியான அளவில் இல்லை என்பதையே எடுத்துக் காட்டுவதோடு இது இன்னமும் 13 சதவீதம் வரை மட்டுமே உள்ளது என்பதையும் எடுத்துக் காடுகிறது.

இந்தப் பணிப்பகத்துடன் இணைந்துள்ள பண மீளளிப்புக் கிளையானது பணம் மீளளிப்புக்கான 93 விண்ணப்பங்களைப் பெற்றுள்ள அதேவேளை, இவற்றில் 79 மீளளிப்புக் கோரிக்கைகளை இக் கிளை அலுவலகம் நிறைவுசெய்துள்ளதோடு, இது 85 சதவீதமாக உள்ளது.

இங்கு இறுதியாகக் குறிப்பிட வேண்டியதொரு முக்கிய விடயம் யாதெனில், நிர்வாகமானது ஆளணியினை அதிகரித்து அவர்களுக்கான பயிற்சிகளை அவ்வப்போது வழங்குவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்தில், இணக்கப்பாடு மற்றும் இலகுவாக்கல் பணிப்பகத்தின் செயலாற்றுகையினை மேலும் வினைத்திறன் மிக்க முறையில் மேம்படுத்த முடியும்.

8.3.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பணிப்பகம்

அறிமுகம்

இப் பணிப்பகத்தின் குறிக்கோள் யாதெனில், தொழில்நுட்பசேவைகளை வழங்கல் மற்றும் சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தை ஆணையிடுதலுடன் தொடர்பிலான வசதிகளை திணைக்களத்திற்கு வழங்குதல் மற்றும் இடையுறா இணையச் சேவையினை தொடர்ந்தும் வழங்கல் போன்றனவாகும். சுங்கப் பிரகடனச் செயலாக்கத்தின் தானியக்கமானது வினைத்திறன்மிக்க மற்றும் பயன்மிக்க சுங்க நிர்வாகம் ஒன்றுக்குத் தேவையான விரைவான, தரமிக்க மற்றும் நம்பகமான தகவல் முறைமைகளை உறுதிப்படுத்துகின்றது. இப்பணிப்பகமானது அனைத்து சுங்கப் பிரகடனங்களையும் துணை ஆவணங்களையும் இலத்திரனியல் முறையில் சமர்ப்பிப்பதனைப் பேணும் வகையிலான மேலும் புதிய வினைத்திறன்மிக்க அம்சங்களையும் கணினி அடிப்படையிலான பழுது-காப்பு முறைமைகளையும் நிறுவிவருகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

- தன்னியக்க முறையினை பயன்படுத்தி நிறுவன இலக்குகளை அடைவதற்கு உதவுதல்.
- முறைமை வலைப்பின்னல், கணனிப் பாகங்கள் மற்றும் தரவு நிரல்களைத் திறம்படப் பராமரித்தல்.
- சுங்க முகாமைத்துவம்,சுங்கத்தின் பிற பிரிவுகள்,பிற அரச முகவரகங்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் ஆகியவர்களுக்கும் சரியான தகவல்களை உரிய வேளையில் வழங்குவதோடு அறிக்கைகளையும் சமர்ப்பித்தல்.
- பூகோள முன்னேற்றங்களுடன் இணைந்து செல்லுவதற்கு ஏற்றவாறு அசிகுடா, சரக்குக் கட்டுப்பாட்டு முறைமை,மோட்டார் கட்டுப்பாட்டு முறைமை, மற்றும் தினீத் முறைமைகளை விரிவாக்குவதற்காக மதிப்பீடுகள் மற்றும் பயனளிக்கும் தரமுயர்த்தல்களை மேற்கொள்ளல்.
- விரும்பிய செயற்பாட்டு இலக்குகளை எய்துவதற்காக தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப பணிப்பக அலுவலர்களினது கணனித் திறமைகளையும் தொழில்சார் தரத்தையும் விரிவாக்கல்.
- தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப அறிவு தொடர்பிலான பயிற்சிகளையும் திணைக்களத்துக்கான தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப மொடியுள்களை இயக்குதல் பற்றிய பயிற்சிகளையும் வழங்குதல்.

1. முறைமை மேம்பாடுகள்	
பணி	**நிலை**
அசிகுடா வேல்ட் முறைமையில் இறக்குமதி பணம் அனுப்பும் நடைமுறைகளை ஒருங்கிணைத்தல்	நிறைவடைந்துள்ளது
விமானச் சரக்கு குறித்த சரக்குப்பட்டியல் நடைமுறைகளை தானியங்குதல்	நிறைவடைந்துள்ளது
துறைமுக அதிகாரசபைக்கு இடையே உரிய மற்றும் பாதுகாப்பான தரவு தொடர்பாடலினை பேணுதல்	நிறைவடைந்துள்ளது
சுங்கப் பிரகடனம் குறித்த இற்றைப்படுத்தல்கள் மற்றும் நிலை மாற்றங்கள் குறித்து வர்த்தகர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிப்பதற்கான விழிப்பானதொரு முறைமை	நிறைவடைந்துள்ளது
பயணி உடன் வராத குத இல்லங்களில் அசிகுடா முறைமையில் சுங்கப் பிரகடனங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் வரிகளை சேகரிப்பதனை தானியங்குபடுத்தல்	நிறைவடைந்துள்ளது
சுங்க தலைமை அலுவலகத்திலுள்ள பழைய/தற்போதுள்ள வலைப்பின்னல் உட்கட்டமைப்பினை இற்றைப்படுத்தல்	நிறைவடைந்துள்ளது
பாதிப்புகளைத் தணிக்க இறுதி மைய சாதனங்களின் பாதுகாப்பினை மேம்படுத்தல்	நிறைவடைந்துள்ளது
இலங்கைச் சுங்கத்தின் பயன்பாட்டிற்காக இலங்கை இராணுவத்தினால் முன்மொழியப்பட்ட உள்ளக தபாலிடல் மற்றும் ஆவண ஓட்ட முகாமைத்துவ முறைமை	நிறைவடைந்துள்ளது
விமான நிலையத்தில் தீர்வையற்ற கொடுப்பனவு முறைமையினை எளிதாக்க அரச கணக்குகள் குழுவின் கட்டளைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதொரு கணனி அமைப்பு	நிறைவடைந்துள்ளது
இலங்கைச் சுங்கத்தின் தற்போதைய இணையத்தளத்தை புதுப்பித்தலும் பராமரித்தலும்	நிறைவடைந்துள்ளது
இலங்கைச் சுங்கத்திலுள்ள முறைமைகள் தொடர்பாக இலங்கை கணனி அவசர தயார்நிலைக் குழுவால் வழங்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பான பின்னூட்டல்கள்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
ஏனைய அரச நிறுவனங்களை அசிகுடா முறைமையில் ஒருங்கிணைத்து அவர்களது ஒப்புதல் செய்முறையினை தானியக்கமாக்குதல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
சுங்க இல்ல முகவர்கள் அவர்களது குறித்த TIN இலக்கங்களுடன் சமர்ப்பித்த சுங்கப் பிரகடனங்களுக்கு வர்த்தகர்களிடமிருந்து ஒப்புதல்களைப் பெறுவதற்கானதொரு முறைமை	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
காகிதமற்ற சுங்கப் பிரகடன செயலாக்கத்திற்கான டிஜிட்டல் கையொப்பம்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது

சுங்க அசிகுடா வேல்ட் மற்றும் சர்வதேச தரநிர்ணயங்கள் இணக்க கப்பல் தரவு வழங்குனர்களின் ICT முறைமைகளுக்கிடையே ASYHUB இனை நிறுவுவதன் மூலம் உலகளாவிய கடல்சார் வர்த்தகத்தை டிஜிட்டல் மயமாக்குதல்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
ஏற்றுமதி பணிப்பகத்தில் ஏற்றுமதி பிரிவின் தானியங்கு - காகிதமற்ற செயலாக்கம் நிறுவப்படல் வேண்டும்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது
பிணை பணிப்பகத்தில் பிணைப்பிரிவின் தானியங்கு - காகிதமற்ற செயலாக்கம் நிறுவப்படல் வேண்டும்	இடம்பெற்றுக்கொண் டிருக்கிறது

2. முறைமை பேணுகை	
பணி	**இற்றைப்படுத்து கைகளது எண்ணிக்கை**
வரிவிதிப்பு விதிமுறை இற்றைப்படுத்தல் மற்றும் இறுப்பு இற்றைப்படுத	216
கணினி முறைமையிலுள்ள தவறுகளை சரிசெய்த	523
கட்டுப்பாட்டு அட்டவணை இற்றைப்படுத்தல்கள்	405
தரவுத்தளச் செயலாற்றுகையினை நவீனப்படுத்தல்	257

3. புள்ளிவிபரவியல்கள் மற்றும் அறிக்கையிடல்				
வகை	**கோரப்பட்டவை**	**நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**	**சேகரிக்கப்பட்ட கட்டணம் (ரூபா)**
அறிக்கைகளின் எண்ணிக்கை – சுங்கத்திற்கு வெளியில் இருந்தானவை	3548	3548	0	1,624,550
அறிக்கைகளின் எண்ணிக்கை – சுங்கத்திலிந்தானவை	984	984	0	

4. கணக்காய்வு			
வகை	**ஆரம்பித்துவைக்கப்பட்டவை**	**நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
விடயங்களின் எண்ணிக்கை	47	35	12
	தடுத்துவைக்கப்பட்டவை	**விடுவிக்கப்பட்டவை**	
கொள்கலன்களின் எண்ணிக்கை	44	35	
	குறைக்கப்பட்ட பறிமுதல்கள் (ரூபா)	**அபராதம் (ரூபா)**	**மேலதிக பதிவு**
அறவீட்டுத் தொகை (ரூபா)	27,229,050	275,000	999,372

5. உதவிக் கருமபீடம்		
அறிக்கையிடப்பட்ட பிரச்சினைக்குரிய விடயங்களின் வகை	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
WH,CDN, Blend Sheet, பணம் அனுப்புதல் மற்றும் சுங்கப் பிரகடனம் போன்ற சிக்கல்களைக் கையாளுதல்	1452	இல்லை
இ-செலுத்துகை பற்றிய சிக்கல்கள்	1052	இல்லை
THINETH முறைமை சிக்கல்களைத் தீர்த்தல்	213	இல்லை
கையடக்கத் தொலைபேசி உடனடிச் சேவை மூலமாக வாடிக்கையாளர் உதவி	நாளாந்தம் 200-250 வரையிலான அழைப்புகள்	இல்லை
சுங்க விண்ணப்பப்பத்திரம் கையாளுகை	158	இல்லை
இ-கப்பல் பொருட்பட்டியல் பதிவு மற்றும் தவறு சரிப்படுத்தல்	643	இல்லை

6. வலைப்பின்னல் நிர்வாகம்		
பணி	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
போர்டிநெட் உள்ளக பையர்வோல் நிர்வாகப் பணிகள்	291	இல்லை
செக் பொயின்ட் வெளியக பயர்வோல் நிர்வாகப் பணிகள்	580	இல்லை
APN றவுட்டர் விநியோகம் மற்றும் தொலைதூர இடங்களுக்கான அமைப்பாக்கம்	201	இல்லை
வலைப்பின்னல் பேணுகை பணிகள்	842	இல்லை
பிரதான வலைப்பின்னல் சிக்கல்களை சரி செய்தல் மற்றும் சரிப்படுத்துதல்கள்	483	இல்லை

7. முறைமை நிர்வாகம்		
பணி	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
சிம்றா (Zimbra) மின்னஞ்ஞல் சேவையக நிர்வாகம் மற்றும் கண்காணிப்புப் பணிகள்	≈550 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
சிம்றா (Zimbra) பயனர் பதிவு மற்றும் அமைப்பாக்கப் பணிகள்	≈203 (வேண்டுகோள்களின் பேரில்)	இல்லை
IBM AIX சேவையகக் கண்காணிப்பு மற்றும் நிர்வாகப் பணிகள்	≈454 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
Oracle VMware நிர்வாகப் பணிகள்	≈453 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
முன்னேற்பாட்டுச் சேவையகக் கண்காணிப்பு மற்றும் அமைப்பாக்கம்	≈456 (தினசரி கண்காணிப்புடன்)	இல்லை
அவசியமான மென்பொருட்களை சேவையகங்களில் நிறுவுதல்	75	இல்லை
ஒழுங்குமுறையான சேவையக நிர்வாகப் பணிகள் (புதுப்பித்தல், சேமிப்பகத்தினை விரிவாக்கல் போன்ற)	≈151	இல்லை
முனைப்பான கோப்பக பயனர் பதிவு மற்றும் அமைப்பாக்கம்	230	இல்லை
Oracle EXAData நிர்வாகப் பணிகள்	≈149	இல்லை
EXSI Dell Node VM அமைப்பாக்க மாற்றங்கள்	26	இல்லை
VM நினைவக அமைப்பாக்க மாற்றங்கள்	24	இல்லை
புதிய VM சேவையக ஏற்பாடளிப்பு மற்றும் அமைப்பாக்கம்	8	இல்லை

8. இணையத்தளம்		
பணி	**பெறப்பட்டவை மற்றும் நிறைவு செய்யப்பட்டவை**	**முடிவுறாதவை**
இணையத்தளத்தில் இறுப்பு மாற்றங்களை இற்றப்படுத்தல்	27	இல்லை
இணையத்தளத்தில் நாணயமாற்று விகிதங்களை வெளியிடுதல்	54	இல்லை
இணையத்தளத்தில் கேள்வு விற்பனையினை வெளியிடுதல்	25	இல்லை
மனிதவள அபிவிருத்தி பணிப்பகத்தின் முகப்புப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்	1	இல்லை
BCNP வலைப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்	1	இல்லை
முகப்புப்பக்க பதாகை குறித்த இடர் முகாமைத்துவ பிரிவின் அறிவித்தல்களை வெளியிடுதல்	1	இல்லை
முதலீட்டுச் சபை ஒருங்கிணைப்பு முகப்புப்பக்கத்தினை இற்றைப்படுத்தல்	1	இல்லை
தீர்வைத் திருத்த வர்த்தமானிப் பத்திரிகைகளை வெளியிடுதல்	1	இல்லை
இறக்குமதியாளர்களுக்கு ஒன்லைன் பதிவு தொடர்பிலான அறிவித்தல்களை வெளியிடுதல்	1	இல்லை
BCNP இணையப்பக்கத்தில் சர்வதேச அமைப்புகளின் பட்டியலை இற்றைப்படுத்தல்	1	இல்லை
முகப்புப் பக்கத்தில் சுங்கத்துடன் தொடர்புடைய உள்ளக திணைக்களங்களின் விபரங்களை இற்றைப்படுத்தல்	1	இல்லை
முகப்புப்பக்கத்தில் பதாகை ஆவணங்களை இற்றைப்படுத்தல்	1	இல்லை
இணையத்தில் அசிகுடா மாற்று இணைப்பை இற்றைப்படுத்தல்	1	இல்லை
நீள் அறையின் அங்கீகரிக்கப்பட்ட கொவிட்-19 புதிய வெளியாக்கல் பற்றிய நடைமுறையினை வெளியிடுதல்	1	இல்லை

8.3.4 மத்திய பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம்

அறிமுகம்

பெறுமதி மதிப்பீட்டின் படி தீர்வைகளை விதிப்பதற்கு ஏற்புடையவிடத்து,அத்தகைய இறக்குமதிப் பொருட்களின் விலைகளை மதிப்பீடு செய்வதற்கான பொறுப்பினை மத்திய பெறுமதி மதிப்பீட்டுப் பணிப்பகம் கொண்டுள்ளது.கேள்வு விற்பனைகளுக்காகஒதுக்கப்படுகின்ற கைவிடப்பட்ட மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் பெறுமதி மதிப்பிடலும் இப்பணிப்பகத்தின் கீழ் வருகின்றது. இப்பணிப்பகமானது,சுங்கக் கட்டளைச் சட்டத்தின்பிரிவு 51, 52 மற்றும் அட்டவணை-உ உடன் கூட்டிணைக்கப்பட்டுள்ள உலக வர்த்தக அமைப்பின் சுங்க பெறுமதியிடல் உடன்படிக்கையிலுள்ள மதிப்பீட்டுக் கொள்கைகளைநிர்வகித்து வருகிறது. மேலும், இப்பணிப்பகமானது அரச-தனியார் பங்காண்மையினருக்கு வசதியளித்து அதன் விருத்திக்கு ஆதரவளித்துவருகின்ற அதேவேளை தொழிற்பாட்டுப் பிரிவுகளுக்கிடையிலான பகிர்வுக்கான பெறுமதித் தரவினைத் திரட்டி அவற்றைத் தொகுத்துக்கொள்வதற்கான நவீன கருவிகள் மற்றும் ஆராய்ச்சி வசதிகள் போன்றவற்றை உபயோகித்தும் வருகிறது.

மத்திய பெறுமதி மதிப்பிடல் பணிப்பகத்தின் தலைமைக் காரியாலயமானது, ஒறுகொடவத்தையிலுள்ள ரேன்க் கொள்கலன் சாலையில் அமையப்பெற்றுள்ளது. இப்பணிப்பகமானது சுங்க மேலதிகப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு) அவர்களின் கீழ் வருவதோடு, அதன் தொழிற்பாட்டு தலைவர்களாக இரண்டு சுங்க பிரதிப் பணிப்பாளர்கள் காணப்படுகின்ற அதேவேளை இப்பணிப்பகத்தின் பணிப்பாளர் ஒட்டுமொத்த மேற்பார்வைக்குப் பொறுப்பாகவுள்ளார்.

7 மதிப்பீட்டாளர்களின் (பிரதிச் சுங்க அத்தியட்சகர்கள்) ஆதரவினைக் கொண்ட 8 சுங்க அத்தியட்சகர்கள் மற்றும் 10 உதவிச் சுங்க அத்தியட்சகர்கள் ஆகியோரின் கீழ் வருகின்ற இயக்கப்பாட்டு மேற்பார்வையானது, புலன்விசாரணைகள், ஆராய்ச்சி, பதிவுகள், பிந்திய நுழைவு மாற்றம், கட்டண சரிபார்ப்பு மற்றும் உத்தரவாத முகாமைத் தொழிற்பாடுகள் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுகிறது.

இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள்

- சுங்க பெறுமதி மதிப்பீடு தொடர்பான கொள்கை விடயங்களில் மதிப்பீட்டுக் குழுவுக்கு உதவுதல்.
- பெறுமதியிடல் கருவிகளை விருத்தி செய்தல் (பெறுமதியிடல் தரவுத் தளங்கள் மற்றும் அவ்வப்போதைய எச்சரிக்கைகள் அடங்கலாக) பெறுமதியிடல் சட்டத்தின் ஒரே சீரான பிரயோகம் மற்றும் வினைத்திறன் மிக்க நடவடிக்கைக்கான சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றை விருத்தி செய்தல்
- பொருட்களது பெறுமதி சரிபார்ப்பு
- பெறுமதியிடலில் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில் அரச-தனியார் பங்காண்மையை வளர்த்துக்கொள்ளல் மற்றும் பெறுமதியைத் தேடிப் பெறுவதில் பொதுமக்களின் பங்களிப்பினையும் வரவேற்றல்.
- அடிக்கடி விலை மாறும் பொருட்களின் பெறுமதியிடல் போக்கினைக் கண்காணித்தல் மற்றும் சரியான நடவடிக்கையினை மேற்கொள்ளல்
- பெறுமதி மதிப்பீட்டு வழிகாட்டல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நடைமுறைகள் ஆகியன காத்திரமான முறையில்பிரயோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான பெறுமதி மதிப்பீட்டு மேற்பார்வைகள்/விசாரணைகளை முன்னெடுத்தல்.
- சுங்க பெறுமதி மதிப்பீட்டு விடயங்களை சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்புகள் மற்றும் பிற வெளிநாட்டு மூலங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதோடு,பரிமாற்றவிலைநிர்ணயத்துடன் தொடர்பான சிக்கல்களுக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்குதல்.

2022 ஆம் ஆண்டிலான செயலாற்றுகை

பெறுமதி மதிப்பிடல் (தலைமை அலுவலகம்)

மாதம்	பெறப்பட்ட பதிவுகளின் எண்ணிக்கை	மீளமைக்கப்பட்ட பெறுமதி தொடர்பிலான பதிவுகளின் எண்ணிக்கை	சரிசெய்யப்பட்டவைகளின் சதவீதம்	அறவிடப்பட்ட தொகை (ரூபா)
ஜனவரி	1,035	666	64.35%	161,908,100.00
பெப்ரவரி	1,150	773	67.22%	140,321,155.00
மார்ச்	1,065	582	54.65%	109,684,573.00
ஏப்ரல்	867	405	46.71%	122,498,186.00
மே	602	300	49.83%	85,905,778.00
ஜூன்	573	256	44.68%	93,209,007.00
ஜூலை	358	136	37.99%	68,459,191.00
ஆகஸ்ட்	316	157	49.68%	126,660,162.00
செப்டம்பர்	412	232	56.31%	178,854,932.00
ஒக்டோபர்	654	374	57.19%	251,229,133.00
நவம்பர்	734	415	56.54%	191,754,301.00
டிசம்பர்	677	395	58.35%	177,259,607.00
மொத்தம்	**8,443**	**4,691**	**55.56%**	**1,707,744,125.00**


பெறுமதி மதிப்பிடல் (விமானச் சரக்கு இல்லம்)

மாதம்	பெறப்பட்ட பதிவுகளின் எண்ணிக்கை	மீளமைக்கப்பட்ட பெறுமதி தொடர்பிலான பதிவுகளின் எண்ணிக்கை	சரிசெய்யப்பட்டவைகளின் சதவீதம்	அறவிடப்பட்ட தொகை (ரூபா)
ஜனவரி	345	10	3%	247,242.00
பெப்ரவரி	314	7	2%	172,025.00
மார்ச்	414	19	5%	562,485.00
ஏப்ரல்	219	14	6%	616,918.00
மே	221	23	10%	1,177,463.00
ஜூன்	201	25	12%	746,402.00
ஜூலை	274	35	13%	853,384.00
ஆகஸ்ட்	370	14	4%	555,835.00
செப்டம்பர்	286	10	3%	516,769.00
ஒக்டோபர்	292	10	3%	3,039,120.00
நவம்பர்	359	12	3%	1,179,535.00
டிசம்பர்	364	13	4%	1,431,270.00
மொத்தம்	**3659**	**192**	**5%**	**11,098,448.00**

முந்தைய ஆண்டுகளுடன் செயல்திறன் ஒப்பீட்டாய்வு

வருடம்	2019	2020	2021	2022
ஆற்றுப்படுத்தப்பட்ட சுங்கப் பிரகடனங்களின் எண்ணிக்கை	24,869	18,450	16,591	8,443
சுங்கப்பிரகடனங்களின் எண்ணிக்கை - பெறுமதிகள் மீளமைக்கப்பட்டவை	10,473	7,709	9,082	4,691
சுங்கப்பிரகடனங்களின் எண்ணிக்கை- பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்டவை	14,396	10,741	7,509	3,752
பெறுமதி சரிசெய்தலின் சதவீதம்	42.11%	41.78%	54.74%	55.56%
மேலதிக பதிவுகள் மூலம் அறவிடப்பட்ட தொகை	1,913,753,705.00	1,183,973,883.00	1,690,444,675.88	1,707,744,125.00

முந்தைய ஆண்டுக்கு எதிராக, அறவிடப்பட்ட மேலதிக பதிவு பற்றிய ஒப்பீட்டாய்வு



பெறுமதி மதிப்பிடல் விசாரணை பிரிவின் செயலாற்றுகை

	தொகை
பதிவு செய்யப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	49
முடிவுறுத்தப்பட்ட விடயங்களது எண்ணிக்கை	33
விதிக்கப்பட்ட அபராதம் (ரூபா)	117,564,544
அறவிடப்பட்ட அபராதம் (ரூபா)	86,322,627

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயல் திட்டத்திற்கு எதிராக கணிப்பிடப்பட்ட செயலாற்றுகை

அரசிறைக் குறிக்கோள்களின் கீழ் திட்டமிடப்பட்ட பிரதான நடவடிக்கை

செயற்பாடுகள் /துணைச் செயற்பாடுகள்	குறிப்புகள்
உரிய வருவாயினை சேகரித்தல்	
சந்தேகத்திற்கிடமான சரக்குகளை கண்காணித்து அதற்கேற்ப நடவடிக்கை எடுத்தல்	அடையப்பட்டது
இடர் முகாமைத்துவ பிரிவுடன் இணைந்து இடர் மதிப்பீட்டை மேம்படுத்தல்	அடையப்பட்டது

கட்டுப்பாட்டுக் குறிக்கோள்களின் கீழ் திட்டமிடப்பட்ட பிரதான செயற்பாடுகள்

செயற்பாடுகள் /துணைச் செயற்பாடுகள்	குறிப்புகள்
தொற்றுநோய்களில் CVDஇன் அதிகபட்ச இணக்கம், தடையின்றி செயல்படுவதை உறுதிசெய்தல் மற்றும் இடர் சுயவிவரங்களை இற்றைப்படுத்தலுக்கான உதவியினை வழங்குதல்.	
1. பெறுமதி மதிப்பிடல் விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் குறித்து ஊழியர்களுக்கு பயிற்சியளித்தல்	அடையப்பட்டது
2. மனித தலையீட்டினை குறைப்பதன் மூலம் கொவிட்-19 தொற்றுநோயை எதிர்கொள்ளத் தேவையான பொறிமுறையினை அறிமுகப்படுத்தல்	அடையப்பட்டது
3. வருவாய் உணர்திறன் பண்டங்களது இயைபு முறை குறியீடுகளை அவ்வப்போது இடர் முகாமைத்தவ பிரிவுக்கு கண்டறிந்து வழங்குதல்.	அடையப்பட்டது

வியாபார வசதியளித்தல் பற்றிய குறிக்கோள்களின் கீழ் திட்டமிடப்பட்ட பிரதான நடவடிக்கை

செயற்பாடுகள் /துணைச் செயற்பாடுகள்	குறிப்புகள்
குறிப்பு பெறுமதிகளுக்கு நெருங்கிய சார்பினை பின்பற்றுதல். இயக்க நடைமுறைகளை மீளாய்வு செய்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் வெளியிடுதல்	
1. NIVDU தரவுத்தளத்திற்கான மாறாநிலை குறிப்பு	அடையப்பட்டது
2. CVD க்குள் குறிப்பு பெறுமதிகளுக்கு நெருங்கிய சார்பினை பின்பற்றுதல்	அடையப்பட்டது
3. தீர்மானங்களில் மாறாமை.	அடையப்பட்டது
4. பெறுமதி நடைமுறைகளை மீளாய்வு செய்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் இற்றைப்படுத்தல்	அடையப்பட்டது
5. சரியான நேரத்தில் பங்குதாரர்களின் கவனத்திற்கு இற்றைப்படுத்தல்களை கொண்டுவரல்	அடையப்பட்டது
6. செயல்முறையில் உள்ள சிக்கல்களைக் கண்டறிய அவ்வப்போது நேர-விடுவிப்பு ஆய்வுகள்	அடையப்பட்டது

8.3.5 விசேட சேவைகள் பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகத்தின் குறிக்கோளானது திணைக்களம் மற்றும் திணைக்களத்துடன் தொடர்புடையவர்கள் ஆகியோருக்கான சேவைகளை வழங்குதலாகும். இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள் தொடர்பில் உரிய இயைபுமுறைக் குறியீட்டினைத் தீர்மானித்தல், இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் இரசாயணப் பொருட்களைப் பகுப்பாய்வு செய்தல், இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்கான இரத்தினக் கல், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை மதிப்பிடல், சுங்க இல்ல முகவர்களுக்கு அனுமதிப்பத்திரங்களை வினியோகித்தல் மற்றும் இறக்குமதி/ ஏற்றுமதி சுங்கப் பிரகடனங்களை இலகுபடுத்தல் வசதிகளை செயன்முறைப்படுத்தும் வகையில் அசிக்குடா முறைமைகளில் ஏற்றுமதியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவு செய்தல் போன்ற சேவைகள் இப்பணிப்பகத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதான தொழிற்பாடுகள் :

1. பண்டங்கள் / பொருள் வகைப்படுத்துகை
2. இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தலும் வகைப்படுத்தலும்.
3. இரத்தினக்கற்கள், பெறுமதிமிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்களை அடையாளப்படுத்தல், வகைப்படுத்தல் மற்றும் விலை மதிப்பிடல்.
4. சுங்க இல்ல முகவர்களுக்கான உரிமங்களை வழங்கல், மற்றும் இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களைப் பதிவு செய்தல்.

8.3.5.1 பொருள் வகைப்படுத்தல் பிரிவு

இப் பிரிவானது, இறக்குமதி செய்யப்படும்/ ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களுக்கு சரியான இயைபுமுறைக் குறியீட்டினைத் தீர்மாணிப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. சுங்கப் பிரகடனம் செயன்முறைப்படுத்துகின்ற பிரிவு அல்லது சரக்குப் பரிசோதனைப் பிரிவுகள் ஆகியவற்றிலான பொருட்களது இயைபுமுறைக் குறியீடு தொடர்பில் ஏதேனும் பிரச்சினைகள் எழும் போது அவர்கள் அதனை இப்பிரிவுக்கு அனுப்புவார்கள். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில், இப்பரிவானது MSDS மற்றும் ஏனைய வழிமுறையூடாகச் செல்லுகின்ற சர்ச்சைக்குரிய பொருள் தொடர்பில் மிகவும் பொருத்தமான இயைபுமுறைக் குறியீட்டினை பிரேரிப்பதன் மூலம் உள்ளக ஆலோசனையொன்றை வழங்குகிறது.

வியாபார இலகுபடுத்தலில் ஒரு அளவீடாக, இப்பிரிவான இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படவிருக்கும் பொருட்களுக்கான முன்கூட்டிய இறுப்பு வகைப்படுத்தல் வசதியினை விநியோகிக்கின்றது. இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள் குறித்த விண்ணப்பத்தினைப் பூரணப்படுத்தி அதனை இப்பிரிவுக்கு சமர்ப்பிப்பதன் மூலம் இவ்விதிமுறைகளைப் பெறமுடியும். விண்ணப்பமானது சுங்கத் திணைக்களத்தின் வெப் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். இவ் விதிமுறை ஒரு முறை விநியோகிக்கப்பட்டதும், அதே தயாரிப்பாளரிடமிருந்து இறக்குமதி செய்யப்படும் அதே பொருள் தொடர்பில் இது விநியோகிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும்.

எவ்வாறிருப்பினும், ஏதேனும் சுங்கப்பிரகடன பதிவு மையத்திலிருந்தான சுங்கப் பிரகடனங்களை ஆற்றுப்படுத்துகின்ற அலுவலர்கள் அல்லது வழங்கப்படும் தீர்ப்புக்களுடன் உடன்படாத இறக்குமதியாளர்கள்/ஏற்றுமதியாளர்கள், தமது பொருட்களை பொருள் வகையேட்டுக் குழுவிற்கு ஆற்றுப்படுத்த முடியும் அல்லது உலக சுங்க அமைப்பக இயையுபடுத்தப்பட்ட முறைமைக் குழுவிற்கு கூட, சுங்கத்திணைக்களம் ஊடாக தமது பொருட்களுக்கான உரிய வகைப்படுத்தலைப் பெறுவதற்காக சமர்ப்பிக்க முடியும்.

விபரம்	வருடம்			
	கடந்தகால முன்னேற்றம்	31/12/2022 இலுள்ளவாறு முன்னேற்றம்		
விண்ணப்ப வருடம்	2021	2021*	2022	ஒட்டு மொத்த முன்னேற்றம்
முன்கூட்டிய வகைப்படுத்தல் விதிமுறைகள்				
பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	725	215	296	511
வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளின் எண்ணிக்கை	510	169	220	389
முடிவு செய்யப்படாத விண்ணப்பங்கள்	215	46	76	122
நிறைவு விகிதம்	70.34%	78.60%	74.32%	76.13%
உள்ளக ஆலோசனை விதிமுறைகள்				
பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை	1080	322	446	768
வினியோகிக்கப்பட்ட விதிமுறைகளின் எண்ணிக்கை	758	227	344	571
முடிவு செய்யப்படாத விண்ணப்பங்கள்	322	95	102	197
நிறைவு விகிதம்	70.19%	70.50%	77.13%	74.35%
* விண்ணப்பங்கள் 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்டு 2022 ஆண்டில் முடிக்கப்பட்டன.				

8.3.5.2 சுங்க ஆய்வுகூடப் பிரிவு

இப்பிவானது, ஏற்றுமதி செய்யப்படும் / இறக்குமதி செய்யப்படும் இரசாயனங்கள் மற்றும் அதனோடு இணைந்த தயாரிப்புகளை அடையாளப்படுத்தல் தொடர்பில் திணைக்கள மற்றும் திணைக்களத்துடன் தொடர்புபட்டவர்களுக்கு உதவும் வகையில் நிறுவப்பட்டதாகும். இரசாயன மாதிரிகள் மற்றும் அதனோடிணைந்த தயாரிப்புகள் அவை சந்தேகத்திற்கிடமாக இருப்பின் அவற்றின் மாதிரிகள் மேலதிக பகுப்பாய்வுக்காக இவ் இரசாயன கூடத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. மேலும், இரசாயன மாதிரிகள் மற்றும் அதனோடிணைந்த தயாரிப்புகளின் வகைப்படுத்தல் தொடர்பில் சச்சரவுகள் எழும்பொழுது, அது பற்றிய அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்வதற்காக குறித்ததயாரிப்புடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இப்பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.


இப்பிரிவானது ஒரு தொழிற்நுட்ப கூறாகவிருந்துகொன்டு, பல்வேறு பேரவைகள் மற்றும் நடைமுறை ஒழுங்குவிதிமுறைகள் என்பவற்றினை அமுல்படுத்துவதில் திணைக்களத்துடன் தொடர்புபட்ட ஏனையவர்களுடன் கூட்டிணைப்பினையும் பேணியுள்ளன.

செயலாற்றுகை

பகுப்பாய்வு கணட்டணமாக அறவீடுசெய்யப்பட்ட தொகை : ரூபா. 30,000.00


		பெறப்பட்டவை	முடிவுறுத்தப்பட்டவை	நிறைவு விகிதம்
சுங்கப் பிரகடனங்களின் மொத்த எண்ணிக்கை	பகுப்பாய்வுக்கு மாத்திரமான சுங்கப் பிரகடனங்கள்	31	30	97%
	வகைப்படுத்தலுக்கு மாத்திரமான சுங்கப் பிரகடனங்கள்	6	6	100%
	பகுப்பாய்வு மற்றும் வகைப்படுத்தலுக்கான சுங்கப் பிரகடனங்கள்	54	54	100%
விதிமுறைகள் மற்றும் பிற கோவைகளின் மொத்த எண்ணிக்கை	பொருள் வகைப்படுத்தல் கிளையிலிருந்து அனுப்பப்பட்ட விதிமுறை கோவைகள்	99	98	99% 1
	பிற கிளைகளில் இருந்து அனுப்பப்பட்ட பிற கோவைகள்	49	49	100%
	மொத்தம்	**239**	**237**	**99%**

முடிவுறுத்தப்பட்ட சுங்கப் பிரகடனங்கள், விதிமுறைகள் மற்றும் விடயக் கோவைகளின் ஒப்பீட்டாய்வு - 2022



கடந்த வருடங்களுடனான ஒப்பீட்டாய்வு

வருடம்	பெறப்பட்டவை	முடிவுறுத்தப்பட்டவை	நிறைவு விகிதம்
2016	212	209	98.58%
2017	325	314	96.62%
2018	497	471	94.77%
2019	463	456	98.49%
2020	311	307	98.71%
2021	493	478	96.96%
2022	239	237	99.16%



8.3.5.3 இரத்தினக்கல் பிரிவு

இரத்தினக் கல், பெறுமதி மிக்க உலோகங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்றவற்றின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தொடர்பிலான ஆவண செயன்முறைப்படுத்தலானது இப்பிரிவில் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத்துறையில் விசேடத்துவம் பெற்ற அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவை தொடர்பிலான பெறுமதி மதிப்பிடலானது இவ் அலுவலர்களால் தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அபிவிருத்தி அதிகாரசபை அலுவலர்களது கூட்டிணைப்புடன் கணிக்கப்படுகின்றன.

- 2022ஆம் ஆண்டுக்கான சகல இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் தொடர்பிலான சாராம்சம் வருமாறு
- சகல பெறுமதிகளும் ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஏற்றுமதிகள்	
	மொத்தம் (ரூபா)
இரத்தினக் கற்கள்	65,500,216,284
வைர ஆபரணங்கள்	539,944,624
ஏனைய ஆபரணங்கள்	4,477,764,527
வைரங்கள்	70,642,303,589
கியூடா மற்றும் தாதுப்பொருட்கள்	23,575,047
கண்காட்சி/சோதனை இரத்தினக் கற்கள்	35,926,760,078
கண்காட்சி ஆபரணங்கள்	146,366,730
மொத்தம்	**177,256,930,879**

இறக்குமதிகள்	
	மொத்தம் (ரூபா)
செப்பமிடப்படாத வைரங்கள்	2,953,717,072
வெட்டப்பட்ட மற்றும் செப்பமிடப்பட்ட வைரங்கள்	14,220,215,860
இரத்தினக்கல்	7,202,970,814
வெள்ளி	121,725,581
தங்கம்	1,836,258,031
தங்க ஆபரணம்	475,917,556
வெள்ளி ஆபரணங்கள்	59,567,046
கண்டறியப்பட்டவைகள்	117,975,528
ஏனையவை (நுகரத்தக்கவை)	21,407,614
மொத்தம்	**27,009,755,103**

	மொத்தம் (ரூபா)
மீள்-இறக்குமதிகள்	31,424,063,331

தீர்வை மற்றும் ஏனைய அறவீடுகள்	
	மொத்தம் (ரூபா)
சுங்க இறக்குமதித் தீர்வை	526,438
போ.சே.க	0
தீர்வை	0
செஸ் வரி	0
ஏ.அ.சபை இறக்குமதி செஸ் வரி	41,333,825
பெ.சே.வரி	75,791,818
து.வி.அ.அறவீடு	46,818,359
ச.பா.அறவீடு	19,337,772
மேலதிக நேர கட்டணங்கள்	808,800
O E	10,510,675
ஏனையவைகள்	0
அபராதம்	0
மொத்தம்	**195,127,687**

பிரகடனங்களது எண்ணிக்கை (மொத்தம்)	
ஏற்றுமதி	7121
இறக்குமதி	2085
மீள்-இறக்குமதி	534

8.3.5.4 வரி அடையாளப்படுத்தல் இலக்கம் / பெறுமதி சேர் வரி மற்றும் சுங்க இல்ல முகவர் பதிவுசெய்தல் பிரிவு

சுங்க இல்ல முகவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் இப்பிரிவினால் வினியோகம் செய்யப்படுகின்றன. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 115(1)ஆம் பிரிவுக்கிணங்க, குறித்த தேவைப்பாட்டினை பூர்த்திசெய்கின்ற அத்தகைய நபர்களுக்கு சுங்க இல்ல முகவர்களாக செயற்படுவதற்கான அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரமளிக்கப்படுகிறது. இலங்கையிலுள்ள ஏதேனும் துறைமுகங்களில் அல்லது இடங்களில் ஏதேனும் கப்பல்கள், அல்லது ஏதேனும் பொருட்கள், அல்லது ஏதேனும் பொதிகளின் உள் வருகை அல்லது வெளியாக்கலுடன் சம்பந்தப்பட்ட வியாபாரத்தை பரிமாற்றம் செய்வதற்கான முகவராக உரிமமளிக்கப்பட்ட சுங்க இல்ல முகவர்களினால் மாத்திரமே செயல்பட முடியும். இவ் அனுமதிப்பத்திரமானது ஒரு வருட காலப்பகுதிக்கு செல்லுபடியாகும் என்பதோடு, குறித்த காலம் முடிவடைவதன் பேரில் அதனைப் புதுப்பிக்கப்படலாம்.

வரி அடையாளப்படுத்தல் இலக்கம் / பெறுமதி சேர் வரி பிரிவு

பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரங்களது எண்ணிக்கை		54
தனிப்பட்ட நபர்கள் தொடர்பிலான	இறக்குமதிகள்	77
	வாகனங்கள்	0
பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளது எண்ணிக்கை		1174
பதிவு செய்யப்பட்ட தனியுரிமையாளர் கம்பனிகளது எண்ணிக்கை		348
பதிவு செய்யப்பட்ட பங்குடமைக் கம்பனிகளது எண்ணிக்கை		89
பதிவு செய்யப்பட்ட அரசாங்க நிறுவனங்களது எண்ணிக்கை		4
பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களது எண்ணிக்கை		0
பதிவு செய்யப்பட்ட வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனிகளது எண்ணிக்கை		0
பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனிகளது எண்ணிக்கை		0
ஏனைய பதிவுகளது எண்ணிக்கை		10
பெறப்பட்ட ஆவணங்களது மொத்த எண்ணிக்கை		**1756**

சுங்க இல்ல முகவர் பிரிவு

சுங்க இல்ல முகவர்கள் தொடர்பான புதிய பதிவுகள்	106
சுரக்கு மேடை உதவியாளர்கள் தொடர்பான புதிய பதிவுகள்	131
சுங்க இல்ல முகவர்கள் தொடர்பான புதுப்பித்தல்கள்	2233
சுரக்கு மேடை உதவியாளர்கள் தொடர்பான புதுப்பித்தல்கள்	4194
சுங்க இல்ல முகவர்கள் தொடர்பில் ரத்துச்செய்யப்பட்டவை	15
சுரக்கு மேடை உதவியாளர்கள் தொடர்பில் ரத்துச்செய்யப்பட்டவை	415
வினியோகிக்கப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திரங்கள்	657

8.4 மனித வளங்கள் கொத்தணி

8.4.1 மனித வளங்கள் முகாமைத்துவப் பணிப்பகம்
8.4.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பணிப்பகம்
8.4.3 ஊழியர் சேவைகள் பணிப்பகம்
8.4.4 பொருள் விநியோகப் பணிப்பகம்

8.4.1 மனித வளங்கள் முகாமைத்துவ பணிப்பகம்

அறிமுகம்

இப்பணிப்பகத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் நோக்கில் சுங்கத் திணைக்களத்தின் தொழிற்பாடுகளை வினைத்திறன் மிக்க முறையிலும் பயனுறுதி மிக்க முறையிலும் மேற்கொள்வதற்காக மனித வளங்களை முகாமைத்துவம் செய்வதே இப்பணிப்பகத்தின் பிரதான கடமையாகும்.

இப் பணிப்பகமானது, திணைக்களத்தின் பணிநோக்கினை நிறைவேற்றுவதன் மூலம் அதன் தொலைநோக்கினை அடைந்துகொள்வதற்கான திறமையும் தகைமையும் உடைய நபர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் இந்நோக்கத்திற்குத் தேவையான மூலோபாயத் திட்டத்தினை வகுத்தல் போன்ற விடயங்களில் ஈடுபட்டு வருகிறது. மனித வளங்கள் பணிப்பகமானது, ஊழியர்களின் முழுமையான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கான பிரயத்தனங்களை எடுக்கின்ற அதேவேளை, அவர்களை ஊக்குவிப்புச் செய்து, அவர்களின் திறமைகளை இனங்கண்டு, மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கான தீர்வினை உரிய வேளையில் வழங்குவதற்குமான பிரயத்தனங்களை எடுத்து வருகின்றது.

மேலும், மனித வளங்கள் பணிப்பகமானது, ஆட்சேர்ப்பு, பதவியுயர்வுகள், இடமாற்றம் மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற விடயங்களுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றதுடன் பொதுச் சேவை ஆணைக்குழு, பொது நிருவாக அமைச்சு போன்ற அரச நிறுவனங்களால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படுகின்ற கட்டளைகள், வழிகாட்டல்கள் மற்றும் விதிகளுக்கு இசைவான செயலாற்றுகையினைப் பேணியும் வருகின்றன.

பிரதான தொழிற்பாடுகள்

- ஆட்சேர்ப்பு, நடைமுறைகளுக்கு இணங்க, பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு செய்தலும் பதவியுயர்வுகளை வழங்குதலும்
- ஊழியர் கோவையினைப் பேணல் மற்றும் இரகசியம் பேணல்
- செயலாற்றுகையினை முகாமைத்துவம் செய்தல்.
- அலுவலர்களின் ஓய்வூதியத்துடன் தொடர்புபட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளல்
- உள்ளக இடமாற்றல் கொள்கையினை அமுல்படுத்தல்
- நஷ்டஈட்டினை செலுத்துதல் மற்றும் ஊழியர்களது ஊக்குவிப்பு கொடுப்பனவுகளை முகாமை செய்தல்
- நிறுவன ரீதியான திட்டங்களை தயாரித்தல்

2022 ஆம் ஆண்டுடன் தொடர்புபட்ட செயலாற்றுகை 6.1ஆம் பகுதியிலும் மற்றும் 7ஆம் அத்தியாயத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

8.4.2 மனித வளங்கள் அபிவிருத்திப் பணிப்பகம்

இப்பணிப்பகத்தின் தொலைநோக்கு

சுங்கத் திணைக்களத்திற்கான மிகச் சிறந்த பயிற்சியளிப்புப் பிரிவாகத் திகழ்தல்.

இப்பணிப்பகத்தின் பணிநோக்கு

சர்வதேச சுங்கம், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொண்டு தடையற்ற சேவைகளை ஒருங்கிணைப்பதற்கான திறனைக் கட்டியெழுப்புதல், மேலும் நாட்டின் தேசிய சமூக-பொருளாதார வளர்ச்சியில் இலங்கையின் சுங்க சிந்தனைக் குழுவாக விளங்கி அது குறித்தான பங்களிப்பினை வழங்கல்.

அறிமுகம்

உலகின் ஒவ்வொரு நாட்டினதும் சுங்க நிருவாகங்கள் நவீனமயப்படுத்தல், பூகோளமயமாக்கல், தொழில்நுட்பவியல் ரீதியான புத்தாக்கங்கள், மீள்கட்டமைப்புச் செயலாக்கம் மற்றும் ஊழியர் மேம்பாடு போன்ற எழுச்சி பெற்றுவரும் போக்கினைக் கொண்ட பாரிய சவால்களை எதிர்கொண்டு வருகிறது. மேற்படி அனைத்துக் காரணிகளும் சுங்க நிருவாகங்களில் மனித வள அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான அதியுயர் முன்னுரிமையினை வழங்குவதன் முக்கியத்துவத்தினைச் சுட்டிக்காட்டுகின்ற சுங்க தொழில்வாண்மை அபிவிருத்தியுடன் நேரடியாக தொடர்புபட்டவையாகும்.

இலங்கைச் சுங்கமானது இலங்கையிலுள்ள மிகவும் அறியப்படுகின்ற திணைக்களங்களுள் ஒன்றாக விளங்குவதோடு, இது நாட்டின் எல்லைப்புறக் கட்டுப்பாட்டு முகவராக 200 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டு விளங்குகிறது. அரசிறைச் சேகரிப்பு, சுங்கச் சட்ட அமுலாக்கம், சட்டரீதியான வர்த்தகத்திற்கு வசதியளித்தல் மற்றும் சமூகப் பாதுகாப்பு போன்றன குறித்தான பிரதான குறிக்கோள்களைக் கொண்டுள்ள இலங்கைச் சுங்கமானது நாட்டின் சமூக பொருளாதார நலனோம்புகை குறித்தான பிரதான வகிபாகத்தினையும் வழங்கி வருகிறது.

இலங்கைச் சுங்கமானது அதன் பொறுப்புக்களை வினைத்திறன் மிக்க முறையிலும் காத்திரமான தன்மையிலும் முன்னெடுப்பதற்கு, சேவை நன்னடத்தையுடனும் நேர்மறையான மனோபாவத்துடனும் தமது பொறுப்புக்களை மேற்கொள்ளக்கூடிய அறிவும் உயர் திறமையும் உடைய பணியாளர்களை உருவாக்க வேண்டிய அதேவேளை, சேவை நெறிமுறைகளை உயர்ந்த நியமதரத்தில் நடைமுறைப்படுத்துவதும் அவசியமாகும்.

இதனை ஊக்குவிக்கும் வகையில், மனிதவள அபிவிருத்திப் பணிப்பகமானது, திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு மாத்திரமல்லாது, சுங்கத்துடனும் எல்லைப்புறப் பாதுகாப்புடனும் தொடர்புடைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஏனைய வெளியக பங்கீடுபாட்டாளர்களுக்கும் அதற்கான வசதியளிப்பதற்கும் எப்போதும் அவதானம் செலுத்துகிறது.

இப் பணிப்பகமானது, திணைக்களத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைந்துகொள்ளும் நோக்கில் ஊழியர்களின் அறிவு, திறன் மற்றும் மனோபாவம் போன்றவற்றை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கி வருகிறது.

இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடு

மனித வள அபிவிருத்திப் பணிப்பகமானது, பிரதானமாக இத்திணைக்களத்தின் ஊழியர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்து அவற்றை ஒருங்கிணைத்து வருகின்றது.
உலக வர்த்தக அமைப்பு, உலக சுங்க அமைப்பு, UNODC போன்ற சர்வதேச அமைப்புகளிடமிருந்து இலங்கைச் சுங்கம் பெறுகின்ற அழைப்பிதழ்கள்/ வாய்ப்புகளின் அடிப்படையில், மனித வளக் குழுவின் ஒப்புதலுடன் அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைக்கும் முழுப் பொறுப்பினையும் மனித வள அபிவிருத்திப் பணிப்பகம் கொண்டுள்ளது.

அத்தகைய வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களில் பன்னாட்டுத் தன்மையின் கீழான சுங்க விடயங்களுக்கு இணங்கிய கருத்தரங்குகள், செயலமர்வுப் பயிற்சிப் பாடநெறிகள், கூட்டங்கள், பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாநாடுகள் போன்றன அடங்குகின்றன.
இந்த வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் வேறுபட்ட தன்மைகளைக் கொண்டுள்ளன, இவற்றில் ஒரு சில பயிற்சிகள் வெளிநாடுகளில் நடைபெறுகின்றதனால் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள் வெளிநாட்டுக்குச் சென்று அதனைப் பெறுகின்ற அதேவேளை இன்னும் சில பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வெளிநாட்டு வளவாளர்கள் இலங்கைக்கு வருகை தந்து அவர்கள் மூலம் உள்நாட்டிலும் இடம்பெறுகின்றன.

மேலும், கூட்டங்கள், கருத்தரங்குகள், வெபினார்கள் போன்ற சில வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் இணையம் மூலம் நடத்தப்படுகின்றன.

உள்ளூர் பயிற்சியளிப்பானது போட்டித்திறன் மேம்பாட்டுடன் இணைந்திருப்பதோடு, அது திறன்கள் மற்றும் உள்ளார்ந்த திறமைகளை அடையாளங்காண்பதுடன் கூடிய தொடர்புபட்ட துறைகளில் அறிவினையும் விழிப்பணர்வுகளையும் மேம்படுத்துகின்றன.
மனித வளங்கள் பணிப்பகமானது அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த செயற்திட்டத்திற்கிணங்க சுங்கத்தின் ஒவ்வொரு மட்டத்திற்கும் உள்ளூர் பயிற்சித் திட்டங்களை நிறுவனத்திற்குள்ளே ஒருங்கிணைத்து நடாத்துகின்றது. இந்த செயற்திட்டமானது திணைக்களத்தின் இற்றைப்படுத்தப்பட்ட பயிற்சித் தேவைப்பாடுகளின் அடிப்படையில்

உருவாக்கப்பட்டதாகும். ஆண்டின் முடிவில், இப்பணிப்பகமானது திணைக்களத்தின் ஒவ்வொரு பணிப்பகத்திடமிருந்தும் ஆலோசனைகளைக் கோருவதோடு, அத்தகைய பின்னூட்டத்தின் அடிப்படையில் எதிர் வரும் ஆண்டுக்கான செயல்திட்டம் உருவாக்கப்படும்.
திணைக்களத்திலுள்ள அலுவலர்களின் திறனை விருத்தி செய்வதனையே பிரதான பொறுப்பாகக் கொண்டுள்ள அதேவேளை, இப்பணிப்பகமானது பங்கீடுபாட்டாளர்களின் திறனை விருத்தி செய்தல் மற்றும் அவர்களுக்குப் பயிற்சியளித்தல் தொடர்பான விடயங்களுக்கு உதவுவதற்கும் பொறுப்பாகவுள்ளது.

இப்பணிப்பகத்தின் பிரதான தொழிற்பாடுகள் வருமாறு.

- பயிற்சிக் கொள்கைகள் முறைமை மற்றும் நடைமுறைகளை வகுத்தலும் அமுல்படுத்தலும்.
- திணைக்களத்தின் குறிக்கோள்களை அடையும் வகையில் ஒவ்வொரு மட்டத்திலுமுள்ள ஊழியர்களினதும் திறமைகளை விருத்தி செய்வதற்கு பொறுப்பாயிருத்தல்.
- புதிதாக ஆட்சேர்க்கப்படுகின்ற ஊழியர்களுக்கும் மற்றும் பணியாற்றும் இடங்களை மாற்றுகின்ற பொழுது அனுபவம் வாய்ந்த அதிகாரிகளுக்கும் நியமதரமுடைய பயிற்சிகளை வழங்குதல்.
- ஊழியர்களுக்காக இற்றைப்படுத்தப்பட்ட பயிற்சியிகளை வழங்கும் நோக்கில், உலக சுங்க அமைப்பு மற்றும் உலக வர்த்தக அமைப்பு போன்றன உள்ளடங்கலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளுடன் கூட்டிணைந்து செயற்படல்.
- திணைக்களத்தின் இலக்குகளை அடையும் வகையிலான குறிப்பான பயிற்சித்திட்டங்களை வடிவமைத்து வழங்குதல்.
- மிகச் சிறந்த பயிற்சிகளை வழங்குவதனூடாக தொழில்வாண்மையும் திறமையும் மிக்க சுங்க அலுவலர்களை விருத்தி செய்தல்.
- புத்தாக்கமும் காத்திரமானதுமான கற்றலுக்குரிய சூழலை வழங்குதல்.
- சுங்க அலுவலர்களால் பேணப்படவேண்டிய சேவை நன்னடத்தையினை அனுபவத்தில் கொண்டிருக்கும் மட்டத்தினை மேம்படுத்தல்.
- மனித வளங்கள் முகாமைத்துவத்தில் பேணவேண்டிய சர்வதேச தேவைப்பாட்டினை பேணல்.
- பயிற்சித் திட்டங்களை வகுத்து அவற்றை அமுல்படுத்துவதன் ஊடாக பயிற்சித் தேவைப்பாடுகளுக்கு முன்னுரிமையளித்து திணைக்களத்தின் பயிற்சித் தேவைகளை மதிப்பிடுதல்.
- வருடாந்த பயிற்சித்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தல்
- பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை முன்னெடுத்தல்.
- பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்து அவற்றை மதிப்பீடு செய்தல்.
- தேவைப்படுத்துகின்ற பொழுது இலங்கை தரரைப்படை, கடற்படை மற்றும் காவல் துறை போன்ற சம்பந்தப்பட்ட வெளித் தரப்பினருக்கு தேவையான பயிற்சினை எற்பாடு செய்தல்.
- சுங்க இல்ல முகவர்களுக்கு சான்றிதழ் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளல்
- சுங்க விடயங்கள் தொடல்பில் திணைக்களத்துடன் தொடர்புபட்ட பங்கீடுபாட்டாளர்களுக்கான பயிற்சித் தேவைப்பாட்டினை நிறைவுசெய்யும் வகையில் சுங்கத்திணைக்களத்திருந்து வளவாளர்களை வழங்குதல்.
- சுங்க அலுவலர்களுக்கான நூலக வசதிகளை வழங்குதல்.

இப்பணிப்பகத்தின் பதவியணியினர்

திணைக்களம் சார் பயிற்சி இலக்குகளை அடையும் நோக்கில், பின்வரும் பதவியணினர் (அட்டவணை 1) ஏற்கனவே நிருவாகப் பணிப்பகத்தினால் அங்கிகரிக்கப்பட்டுள்ளர்.

ஆனால் தற்போது நாங்கள் மிகவும் குறைவான பதவியணியினரைக் கொண்டு இயங்கி வருகின்ற அதேவேளை (அட்டவணை 1), திணைக்களத்தின் பயிற்சி தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக சகல கடமைகளையும் பெரும் முயற்சியுடன் உரிய நேரத்தில் செய்கிறது

அட்டவணை 01 : அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போதுள்ள பதவியணி

தரம்	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ளவை
சுங்கப் பணிப்பாளர்	01	01
சுங்க சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்	02	01
சுங்க பிரதிப் பணிப்பாளர்	03	01
சுங்க பிரதி அத்தியட்சகர்	08	00
சுங்க உதவி அத்தியட்சகர்	08	05
சுங்க பரிசோதகர்	ஏற்புடையதல்ல	02
முகாமைத்துவ சேவைகள் அலுவலர்	03	03
மொத்தம்	**25**	**13**

2022 ஆம் ஆண்டில் பணிப்பகத்தின் சாதனைகள்:

உள்நாட்டு பயிற்சித் திட்டங்கள் (சுங்க அலுவலர்களுக்காக)

2022ஆம் ஆண்டின் செயல் திட்டம் மற்றும் சுங்கப் பணிப்பாளர்/மனித வள குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட பிற திட்டங்கள் என்பவற்றிற்கு இணங்க, இப்பணிப்பகமானது 2022 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் சுங்கத்தின் பணியாட்டொகுதியினருக்கு மொத்தமாக 58 உள்நாட்டு பயிற்சித் திட்டங்களை (உள்ளக மற்றும் வெளியக) வெற்றிகரமாக நடாத்தியுள்ளது. பின்வரும் அட்டவணையானது (அட்டவணை 02) அத்தகைய பயிற்சிகளில் பற்கேற்ற அலுவலர்களின் எண்ணிக்கையை (தரம் வாரியாக) விளக்குகிறது.

அட்டவணை 02: உள்நாட்டு பயிற்சி திட்டங்களுக்காக பங்கேற்ற சுங்க அலுவலர்கள் (உள்ளக மற்றும் வெளியக)

தரம்	பங்கேற்பு (உள்ளக மற்றும் வெளியக)
மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம்	01
சுங்கப் பணிப்பாளர்	01
சுங்க பிரதிப் பணிப்பாளர்	61
சுங்க அத்தியட்சகர்	127
சுங்க பதில் அத்தியட்சகர்	46
சுங்க உதவி அத்தியட்சகர்	448
முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர்	119
சுங்க பரிசோதகர்	24
சுங்க காவலர்	10
அலுவலக உதவியாளர்	17
ஏனையவர்கள்	00

பிற உள்நாட்டு பயிற்சித் திட்டங்கள் - வெளியக பங்கீடுபாட்டாளர்கள்

வெளியக பங்கீடுபாட்டாளர்களின் கோரிக்கைக்கு இணங்க, மனித வள குழுவின் ஒப்புதலுடன் மனித வள அபிவிருத்திப் பணிப்பகமானது இவ் ஆண்டுக்காலப்பகுதியில் இராணுவம், பொலீஸ், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களுக்காக பல பயிற்சித் திட்டங்களை ஒருங்கிணைத்து அவற்றை நடத்தியுள்ளது.

அத்தகைய கோரிக்ககைளின் தன்மைக்கு ஏற்ப, சில நிகழ்சித் திட்டங்கள் உள்ளக அமைப்பில் நடாத்தப்பட்டதுடன் மற்றய சந்தர்ப்பங்களில், திணைக்களத்திலிருந்து பொருத்தமான வளவாளர்கள் பயிற்சிகளை நடத்துவதற்கு வெளியில் அனுப்பப்பட்டுமுள்ளனர்

வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள்

இப்பணிப்பகமானது 2022ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் மொத்தமாக 163 வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களை வெற்றிகரமாக ஒருங்கிணைத்துள்ளது.

அட்டவணை 03 : வெளிநாட்டு கருத்தரங்குகள்/ மாநாடு/ பயிற்சித் திட்டங்களுக்கான பங்கேற்பு (தரம் வாரியாக)

தரம்	பங்கேற்பு
சுங்கப் பணிப்பாளர் நாயகம்	07
மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம்	23
சுங்க பிரதிப் பணிப்பாளர்	32
பிரதி சுங்க பிரதிப் பணிப்பாளர்	38
சுங்க அத்தியட்சகர்கள்	103
பிரதி சுங்க அத்தியட்சகர்கள்	15
சுங்க உதவி அத்தியட்சகர்கள்	155
ஏனையவர்கள்	38

அட்டவணை 04: 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற வெளிநாட்டு பயிற்சித் திட்டங்களின் வகைகள்

	1.2.3.6	நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகள்	1
(ஈ)	முடிவுறுத்தப்படுவதற்கு நிலுவையிலுள்ள விடயங்களது மொத்த எண்ணிக்கை		**3**

02. சாராம்சம்

ஆண்டுக் காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட விடயங்களத மொத்த எண்ணிக்கை (அ + இ)	0
ஆண்டின் இறுதியில் முடிவுறுத்தப்படுவதற்கு நிலுவையிலுள்ள விடயங்களது மொத்த எண்ணிக்கை	4
அப்புறப்படுத்தப்படவேண்டிய பொருட்கள் குறித்த விடயங்கள்	3
நிலுவையிலுள்ள நீதிமன்ற வழக்குகள்	1

03. அறவீடுகள் (ரூபா)				
3.1	பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களது பெறுமதி			54,311,605.46
3.2	ஆண்டின் தொடக்கத்தில் அறவிடப்படவேண்டிய அபராதங்கள் / பறிமுதல்கள்			இருக்கவில்லை
3.3	ஆண்டுக் காலப்பகுதியில் விதிக்கப்பட்ட அபராதங்கள் / பறிமுதல்கள்			1,720,000.00
3.4	**ஆண்டுக் காலப்பகுதியில் அறவிடப்பட்ட தீர்வை மற்றும் ஏனைய அறவீடுகள்**			
	3.4.1	சுங்கத் தீர்வை		140,798.09
	3.4.2	மேலதிகக் கட்டணம்		-
	3.4.3	பெ.சே.வரி		300,194.00
	3.4.4	து.வி. அறவீடு		190,916.75
	3.4.5	தே.பா.வரி		25,751.86

	3.4.6	உற்பத்தி வரி		-
	3.4.7	இறக்குமதி செஸ் வரி		41,829.00
	3.4.8	ஏ.அ.சபை செஸ் வரி		-
	3.4.9	உற்பத்தி வரி		-
	3.4.10	ஒருங்கிணைந்த வரி		-
	3.4.11	படகுக் கட்டணம்		326,600.00
	3.4.12	காப்பறைக் கட்டணங்கள்		1,767,370.00
	3.4.13	மேலதிக நேரம்		7,921,270.00
	3.4.14	கனணிக் கட்டணம்		-
	3.4.15	விசேட வைப்புகள்		-
	3.4.16	ஏனைய அறவீடுகள்		6,500.00
			மொத்தம்	**10,721,229.70**
3.5	ஆண்டுக் காலப்பகுதியில் அறவிடப்பட்ட அபராதங்களும் பறிமுதல்களும்			0
3.6	ஆண்டின் இறுதியில் அறவிடப்பட்ட மேலதிக பதிவுகள் /அபராதம்			0
3.7	பெறுமதி மதிப்பிடல் பிரிவில் அறவிடப்பட்ட மேலதிக பதிவுகள்			0

04. மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்	
4.1 துறைமுக ரோந்துகளது எண்ணிக்கை	159
4.2 தரைமார்க்க ரோந்துகளது எண்ணிக்கை	155
4.3 பதிவு செய்யப்பட்ட கப்பல் களஞ்சிய விண்ணப்பங்களது எண்ணிக்கை	496
4.4 அனுப்பப்பட்ட கப்பல்களது எண்ணிக்கை	189
4.5 கப்பல்களுக்கு வழங்கப்பட்ட வெளியாக்கல் அனுமதிகளது எண்ணிக்கை	193
4.6 அங்கீகரிக்கப்பட்ட கப்பல் களஞ்சியங்கள்/கப்பல் பத்திர நகர்வுகளது எண்ணிக்கை	1252

13. ஹம்பாந்தோட்டைத் துறைமுகம்

அ. தீர்வைகளும் வரிகளும்

விபரம்	**தொகை (ரூபா)**
சுங்க இறக்குமதித் தீர்வை	755,180.98
செஸ் வரி	11,630.00
துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	1,012,029.99
பெறுமதி சேர் வரி	1,496,051.21
தேச கட்டுமான வரி	153.00
ச.பா.அறவீடு	1,067.00
மொத்தம்	**3,276,112.18**

ஆ. ஏனைய அறவீடுகள்

விபரம்	**தொகை (ரூபா)**
மேலதிக நேர கட்டணங்கள்	8,427,836.00
கனணிக் கட்டணங்கள்	2,598,991.00
குழு(பெனல்) கட்டணங்கள்	-
பரிசோதனைக் கட்டணங்கள்	19,500.00
காப்பறைக் கட்டணங்கள்	2,300.00
மஹிந்த ராஜபக்ஷ துறைமுகத்தில் கப்பல் திருத்த வேலைக்கான விசேட அனுமதி	-
சீல் கட்டணங்கள்	900.00
ஏனைய கட்டணங்கள்	-
அபராதங்கள்	
விடுவிப்பு மற்றும் கப்பலில் பொருட்களை ஏற்றுதல் கட்டணங்கள்	10,326,910.50
கண்காணிப்பின் கீழான விண்ணப்பக் கட்டணங்கள்	-
ரைட் வெயிட்டர் கட்டணங்கள்	15,600.00
துறைமுக வெளியாக்கல் கட்டணங்கள்	3,000.00
மொத்தம்	**21,395,037.50**

8.6 சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழான பணிப்பகங்கள்

8.6.1 முறைமை மற்றும் நடைமுறை இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம்

8.6.2 நிதிப் பணிப்பகம்

8.6.3 அரசிறை இலக்குச் செயலணிப் பணிப்பகம்

8.6.5 மேல்முறையீடுகள் பணிப்பகம்

8.6.4 உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு

8.6.1 முறைமை மற்றும் நடைமுறைகள் இணக்கப்பாட்டுக் கணக்காய்வுப் பணிப்பகம்

குறிக்கோள்

இப் பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாகத் தொழிற்படுவதுடன், இலங்கைக் கணக்காளர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த அலுவலரால் தலைமை வகிக்கப்படுகின்றது. இப்புதிய பணிப்பகம் உருவாக்கப்பட்டதன் எதிர்பார்ப்புகளானது, ஒழுங்கீனங்கள் அடிக்கடி நிகழ்வதனையும் மற்றும் ஒருமைப்பாட்டிலான தளர்வுகளையும் தடுக்கும் வகையில் முறையான விருத்தியில் செயற்பாட்டு முகாமையாக உதவுதல், மற்றும் உள்ளாக்கப்படும் இடர்களுக்கு ஏற்ப உள்ளகக் கட்டுப்பாடுகளை பராமரித்தலும் விருத்தி செய்தலுமாகும்.

திறமையான முறையில் கணக்காய்வு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சகல முக்கிய செய்முறைகளில் வளப்பயன்பாட்டினை சிக்கனப்படுத்தல் மற்றும் திணைக்களத்தினூடாக சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய செய்முறைகளை ஆதரித்தல் என்பன இப்பணிப்பகத்தின் நோக்காகும்.

பிரதான தொழிற்பாடுகள்

- எவ்வேளையிலும் சாத்தியமாகின்ற கணக்காய்வுச் சேவையினை மேம்படுத்துவதன் மூலம் அமைப்பகத்திற்கான இதன் மேலதிக பெறுமதியினை உறுதிப்படுத்தும் வகையில் உள்ளகக் கணக்காய்வினை திறமையாக முகாமை செய்தல்.
- பின்வருவன உள்ளடங்கலாக நிறுவன ஆளுகை, செயற்பாடுகள் மற்றும் தகவல் என்பவற்றில் சூழ்ந்துள்ள கட்டுப்பாடுகளை திறமையான முறையிலும் போதிய வகையிலும் மதிப்பிடல்.
    - நிதி மற்றும் செயற்பாட்டுத் தகவலின் ஒருமைப்பாடும் நம்பகத்தன்மையும்
    - செயற்பாடுகளது நற்பயனளிக்கக் கூடிய தன்மையும் திறமையும்
    - சொத்துக்களைப் பாதுகாத்தல்.
    - சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் உடன்படிக்கைகளுடனான இணக்கப்பாடு.
- இடர் முகாமையினை விருத்திசெய்வதற்கான இடர் மதிப்பீட்டின் அடிப்படையிலான கணக்காய்வுத் திட்டங்களை வரைதலும் நிறுவன செயற்பாடுகளை விருத்தி செய்தலும்.
- குறிப்பிடத்தக்க இடர் வெளிப்பாடுகளையும் கட்டுப்பாட்டுப் பிரச்சினைகளையும் மற்றும் தேவைப்படும் அல்லது சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் வேண்டப்படும் பிற விடயங்களை அறிக்கையிடல்.
- உத்தேசிக்கப்பட்டவாறு செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா அல்லது நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை தீர்மானிப்பதற்காக நிறுவப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுன் அதன் விளைவுகள் எந்தளவு முரண்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் அச் செயற்பாடுகள் மற்றும் திட்டங்களை மீளாய்வுசெய்தல்.
- பின்வரும் குறிக்கோளினை நிறைவேற்றுகையில் ஆளுகைச் செயன்முறையினை மேம்படுத்துவதற்கான பொருத்தமான பரிந்துரைகளை மதிப்பீடு செய்து தயாரித்தல்.
    - நிறுவனங்களுக்கிடையே உரிய நடத்தை மற்றும் கீர்த்தியினை மேம்படுத்தல்.
    - திறமையான நிர்வாக செயலாற்று முகாமைத்துவத்தினையும் பொறுப்பினையும் உறுதிப்படுத்தல்.

இப்பணிப்பகத்தின் இணக்கப்பாட்டு அறிக்கை

இல	பொருத்தமான தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணங்கப்பட்டது / இணங்கப்படவில்லை)	இணக்கப் பாட்டின்மைக்கான விரிவான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கப்பாட்டின்மையினை தவர்க்கும் வகையில் முன்மொழியப்பட்ட உரிய நடவடிக்கைகள்
6	**உள்ளக கணக்காய்வு**			
6.1	உள்ளக கணக்காய்வுத் திட்டமானது, 134(2) DMA/1-2019 ஆம் நிதிப் பிரமாணத்திற்கு இணங்க கணக்காய்வு அதிபதியின் ஆலோசனைக்குப் பின்னர் வருடத்தின் தொடக்கத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.	நிதி ஒழுங்கு விதி 134 (2) DMA/1-2019) இற்கு ஏற்ப 2022இல் விநியோகிக்கப்படடிருந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் இணங்கிக் கொள்ளப்பட்டது.		
6.2	சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளும் ஒரு மாதத்திற்குள் பதில் அளிக்கப்பட்டுள்ளன.	17	40	உடனடியாக பதிலளிப்பினைப் பெறும் நோக்கில் பல நினைவூட்டல்களை வழங்குதல்
6.3	2018 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4)ஆம் உப பிரிவிற்கு இணங்க சகல உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள்	ஆம்		

	முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.			
6.4	134(3)ஆம் நிதி ஒழுங்கு விதிக்கிணங்க உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் சகல பிரதிகளும் கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	ஆம்		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**			
7.1	2019 ஆம் ஆண்டின் DMA சுற்றுநிரூபம் 1 ற்கு இணங்க, குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் இவ் ஆண்டுக்காலப்பகுதியில் இடம்பெற்றன.	2022 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் 3 குழுக்கூட்டங்கள் மாத்திரமே இடம்பெற்றன.	நாட்டில் நிலவிய சுகாதார நிலைமை மற்றும் ஆபாக்குவரத்துப் பிரச்சினை காரணமாக அமைந்தது.	2022 மற்றும் அதன் பின்னரான காலத்திற்கான வழிகாட்டுதல்களை கண்டிப்பாகப் பின்பற்றுதல்

8.6.2 நிதிப் பணிப்பகம்

1. நிதி முகாமைத்துவப் பணிப்பகத்தின் வகிபாகம்

அரச வருமானத்தினைச் சேகரித்துக் கணக்கிடுதல், இலங்கைச் சுங்கத்திற்கான ஆதரவுமிக்க நிதி முகாமைத்துவச் சேவையினை வழங்குதல் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற நோக்கங்களுக்காக சுங்கத் திணைக்களத்திற்குரிய வினைத்திறனும் வெளிப்படைத்தன்மையும் கொண்டதொரு நிதி முகாமைத்துவ முறைமையினை பேணுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இலங்கைச் சுங்கமானது அரசாங்கத்திற்குரிய வரி வருமானத்தில் சுமார் 50 சதவீதத்திற்கும் அதிகமானளவினை ஈட்டிக்கொள்வதில் பங்களிப்புச் செய்கின்றதொரு அரசாங்கத்தின் பிரதான உழைப்பாளியாகத் திகழ்கின்றது. இந்த வகையில் நிதி பணிப்பகமானது ஒரு பாரிய வகிபாகத்தினை வகிப்பதோடு, திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான நிதி சார்ந்த செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் பிரதான விடயங்களுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

அ. செலவினம் மற்றும் வரி வருமானம் ஆகியவற்றுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரித்தல்.
ஆ. வரி வருமானத்தினை சேகரித்தல், பதிவு செய்தல் மற்றும் அறிக்கையிடல்.
இ. அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தினுள் செலவினத்தினை முகாமை செய்தல் மற்றும் அறிக்கையிடல்.
ஈ. வழங்கப்படுகின்ற காலக்கெடுவிற்கு ஏற்ப, நிதி தொடர்பான தகவல்களை பொதுத் திறைசேரி, கணக்காய்வுத் தலைமையதிபதி மற்றும் பிற ஆர்வமுள்ள குழுக்களுக்கு சமர்ப்பித்தல்.
உ. பல்வேறு வகையான நிதிகள் மற்றும் கணக்குகளை நிருவாகித்தல்
   i. சுங்க வைப்புக் கணக்குகள்
   ii. சுங்க வெகுமதி நிதியம்,
   iii. சுங்க மேலதிக நேர நிதியம், வெளிநிலை பரிசோதனைகள் கட்டண நிதியம், தகவல் மற்றும் தொடர்பாடல் கட்டண நிதியம்,
   iv. சுங்க அலுவலர்களது முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியம்,
   v. பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைது செய்யப்பட்ட பொருள் தொடர்பிலான அதிகாரமிக்கப்பட்ட முற்பணக் கணக்கு மற்றும்
   vi. அரச உத்தியோகத்தர்கள் முற்பண "பீ" கணக்கு

ஊ. வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டம் மற்றும் தேசிய கணக்காய்வுச் சட்டம் என்பவற்றிற்கு இணங்க, மேற்கூறப்பட்ட கணக்குகளுக்கான வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து வழங்குதல்.

ஏ. கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு வினாக்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பில் பதில்களையும், விளக்கங்களையும் மற்றும் அவதானிப்புகளையும் வழங்குதல்

1.1 பிரதான தொழிற்பாடுகள்

நிதி முகாமைத்துவ பணிப்பகமானது பிரதம நிதி அதிகாரியின் நோக்கெல்லையின் கீழ் அமைந்து காணப்படுவதோடு, இவர் ஒரு இலங்கை கணக்காளர்கள் சேவையின் ஒரு விசேட தர அதிகாரியாவார். பிரதம நிதி அதிகாரி திணைக்களத்தின் உபாயம் சார்ந்த நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ள அதேவேளை, நிதி பணிப்பகத்தின் பணிப்பாளருக்கு மேற்பார்வை, ஒருங்கிணைப்பு மற்றும் திணைக்களத்தின் நிதி சார்ந்த முகாமைத்துவத் தொழிற்பாடுகளை நிருவகிப்பதற்கான பொறுப்பு வழங்கப்படுகிறது. இவருக்கு உதவியாக நான்கு பிரதிப் பணிப்பாளர்களும் ஒரு நிருவாக உத்தியோகத்தரும் உள்ளனர். மேலும், 118 எண்ணிக்கையுடைய துணை பணியாட்டொகுதியினர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவைகள் அலுவலர்கள்) நிதி பணிப்பகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி தொழிற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கில், இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் நிதி பணிப்பகமானது பின்வரும் உப பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

- வருமானப் பிரிவு
- கொடுப்பனவுகள் பிரிவு
- சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரப் பிரிவு
- நிதி முகாமைத்துவப் பிரிவு
- வரி பிரிவு
- சிறாப்பர் பிரிவு

செயலாற்றுகை

2.1 வருமானப் பிரிவு

பிரதிப் பணிப்பாளரின் (வருவாய்) நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்ற இப் பிரிவானது, இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளை மற்றும் மக்கள் வங்கியின் டியூக் வீதி கிளையில் இயக்கப்படும் இரு பிரதான சேகரிப்பு கணக்குடன் தொடர்புபடுத்தப்பட்ட 17 உப சேகரிப்பு வங்கி கணக்குகள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற 41 சேகரிப்பு நிலையங்கள் ஊடாக வருவாயினை சேகரிப்பதற்கு பொறுப்பாயுள்ளது. மேலும், இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற வருமானமானது, அரசாங்கம் தனது நிதி சார்ந்த கடப்பாடுகளை எதிர்கொள்ளும் வகையில் அதனை இயலச் செய்வதற்காக, திறைசேரியின் பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு இலத்திரனியல் முறையூடாக தினமும் அனுப்பிவைக்கப்படுகிறது.

வருமானப் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

- திணைக்களத்திற்காக வருடாந்த அரசிறை மதிப்பீட்டினை தயாரித்தல்.
- வருவாய் சேகரிப்பு நிலையங்களிலிருந்து நாளாந்த காசு பதிவு பத்திரங்களை சேகரித்தல் மற்றும் பணவைப்பு பற்றுச்சீட்டு மற்றும் வங்கிக் கூற்று என்பவற்றுடன் அவற்றினை ஒப்பீட்டு சரிசெய்தல்.
- அரச முகவர்களிடமிருந்தான வருமான நிலுவைகளைச் சேகரித்தல்.
- நாளாந்த மற்றும் மாதாந்த அரசிறை இலக்குகள் மற்றும் அரசிறை சேகரிப்பு செயலாற்றுகைகளை திறைசேரிக்கு வழங்குதல். (திறைசேரி செயற்பாடு திணைக்களம் / அரசிறைக் கொள்கைத் திணைக்களம்)
- நாளாந்த மற்றும் மாதாந்த அரசிறை வகைப்படுத்தல்களை திறைசேரிக்கு வழங்குதல் (திறைசேரி செயற்பாடு திணைக்களம் / அரச கணக்குகள் திணைக்களம் / அரசிறைக் கொள்கைத் திணைக்களம்)
- அரசிறை சேகரிப்பு தொடர்பிலான மாதாந்த தொகுப்பினை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.
- வருடாந்த நிதிக்கூற்றுக்களில் ஒருபாகமாகவுள்ள அரசிறைக் கணக்கினை தயாரிப்பதற்கு உதவுதல் மற்றும் அதனை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல்.
- சேகரிக்கப்படும் 3% பெறுமதி சேர் வரியினை நாளாந்தம் மற்றும் மாதாந்த அடிப்படையில் கணக்கிடலும் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் செயற்படுத்தப்படும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் கணக்கிற்கு மாற்றுதலும்.
- பின்வரும் மூன்று வகைகளின் கீழ் வருமானத்தினை மீளளிப்புச் செய்தல்

  i. சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 18 மற்றும் 22 இல் உள்ள ஏற்பாடுகளுக்கிணங்க, மீளளிப்பதற்காக திறைசேரியின் ஒப்புதலைப் பெறுவதற்குச் சமர்ப்பித்தல்.
  ii. நிதிப்பிரமானம் 118 இன் கீழ் கூடுதலான செலுத்துகை மற்றும் மேலதிக கொடுப்பனவுகளுக்கான மீளளிப்பு விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல்.
  iii. 1/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் கீழ், ஒன்றுக்கு மேற்பட்ட தடைவை செலுத்தல்களை மேற்கொண்டு வருகின்றன இலத்திரனியல் செலுத்துகை முறைக்கு மீளளிப்புச் செலுத்தலை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

2021 மற்றும் 2022 ஆம் நிதி ஆண்டுகளுக்கான மதிப்பிடப்பட்ட அரசிறையுடன் உண்மையாக சேகரிக்கப்பட்ட அரசிறை ஆகியவற்றுக்கியைிலான ஒப்பீட்டாய்வு கீழே குறிப்பிடப்படுகிறது

வருடாந்த மதிப்பீடு மற்றும் உண்மையாக சேகரிக்கப்பட்ட அரசிறை ஆகியவற்றின் ஒப்பீட்டாய்வு (ரூபா.மில்)

அரசிறைக் குறியீடு	விபரம்	2021		2022	
		மதிப்பிடப் பட்டது	அடையப் பெற்றது	மதிப்பிடப் பட்டது	அடையப் பெற்றது
1001.01.00	இறக்குமதித் தீர்வை	100,000	64,339	42,000	50,009
1001.02.00	ஏற்றுமதித் தீர்வை	64	47	32	41
1001.04.00	துறைமுக, விமான நிலைய அபிவிருத்தி அறவீடு	140,000	154,125	177,000	180,595
1001.05.01	செஸ் அறவீடு - இறக்குமதி	77,000	73,320	66,000	68,075
1001.05.02	செஸ் அறவீடு – ஏற்றுமதி	3,000	2,223	2,000	2,242
1001.08.00	விசேட பண்ட அறவீடு	60,000	55,828	35,000	40,194
	மொத்த சுங்க வரி வருமானம்	**380,064**	**349,882**	**322,032**	**341,156**
1002.05.01	உற்பத்தி வரி - சிகரெட்டுகள்	90,000	88,539	110,000	104,160
1002.05.02	உற்பத்தி வரி - மதுபானம்				
1002.05.03	உற்பத்தி வரி - பெற்றோலியம்	55,000	55,339	55,000	53,074
1002.05.04	உற்பத்தி வரி - மோட்டார் வாகனம்	20,000	18,113	18,000	14,504
1002.05.99	உற்பத்தி வரி – ஏனையவைகள்	6,000	6,234	6,000	5,598
	மொத்த உற்பத்தி வரி வருமானம்	**171,000**	**168,225**	**189,000**	**177,336**

1002.01.04	பெறுமதி சேர் வரி	125,000	122,751	216,000	171,452
1002.12.03	தேச கட்டுமான வரி	20	79	-	61
1003.01.00	சொகுசு வாகன வரி	1,000	654	1,000	867
1003.07.10	வாகன உரித்துடைமை அறவீடு	95	76	106	108
1004.04.02	பொருளாதார சேவைக் கட்டணம்	20	43	-	28
	மொத்த வரி வருமானம்	**126,135**	**123,603**	**217,106**	**172,516**
2003.02.17	ஆடைகள் தொடர்பில் உள்நாட்டு விற்பனை மீதான கட்டணம்	163	145	147	196
2003.03.01	தண்டங்களும் பறிமுதல்களும்	1,731	4,091	2,056	4,549
2003.02.99	இதர	213	253	-	243
2003.99.00	ஏனைய பெறுகை	142	181	-	307
	மொத்த பிற வரி வருமானம்	**2,249**	**4,670**	**2,203**	**5,295**
முழு மொத்த வருமானம்		**679,448**	**646,380**	**730,341**	**696,303**

2.2 கொடுப்பனவுகள் பிரிவு

பிரதிப் பணிப்பாளரின் (கொடுப்பனவுகள்) நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்ற கொடுப்பனவுகள் பிரிவானது, பாராளுமன்றத்தினால் ஒப்புதலளிக்கப்பட்டவாறாக வருடாந்த மதிப்பீடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற நிதி ஏற்பாடுகளின் கீழ் சகல கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளுவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. அத்துடன், சுங்க அலுவலர்கள் முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியக் கணக்கு, பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் கைதுசெய்யப்பட்ட பொருள் தொடர்பிலான முற்பணக் கணக்கு, அரச உத்தியோகத்தர்களது முற்பணக் கணக்கு, சுங்க வெகுமதி நிதியம் மற்றும் வைப்புக் கணக்குகளின் கீழான வெகுமதிக் கொடுப்பனவு ஆகியவற்றின் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரதான தொழிற்பாடுகள்

- மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத்திற்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல்.
- அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கிற்கான எல்லைகளை தீர்மானித்தல்.
- திணைக்களத்தின் இரு அலுவலக வங்கி கணக்குகளை பேணுதல்.
- வருடாந்த செலவின பாதீட்டினை ரூபா 5 பில்லியன்களாக கட்டுப்படுத்தல்.
- சம்பளங்கள், விநியோகங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிற்காக கொடுப்பனவுகளை சான்றுபடுத்துதலும் செலுத்துதலும்.
- மாதாந்த கணக்குகளை CIGAS ஊடாக திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.
- வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு என்பவற்றினை திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கும் வகையில் தயாரித்தல்.
- 2300 இற்கு மேற்பட்ட ஊழியர்களது ஊதியங்களாக அண்ணளவாக ரூபா 7 பில்லியன் தொகையினை SLIP முறைமையூடாக உரிய நேரத்தில் செலுத்துதல் (சம்பளங்கள், மேலதிக நேரம், வெகுமதிகள், குழுக் கொடுப்பனவும், பொதுவான கொடுப்பனவுகள் போன்றன).

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுக் காலத்தின் போது வருடாந்த மதிப்பீடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் சம்பந்தப்பட்ட ஆண்டுக்குரிய வரவுசெலவுத் திட்டத்துடன் கீழே ஒப்பாய்வு செய்யப்படுகிறது.

செலவின முகாமைத்துவம் (ரூபா மில்)						
விபரம்	**2020**			**2021**		
	மதிப்பிடப்படவை	**உண்மையாக அடையப்பட்டவை**	**உபயோக வீதம்**	**மதிப்பிடப்படவை**	**உண்மையாக அடையப்பட்டவை**	**உபயோக வீதம்**
மீண்டெழும் செலவினம்	3,298	2,708	82	3,610	3,185	88
மூலதனச் செலவினம்	3,322	3,102	93	1,570	1,511	96
அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு செலவினம்	62	36	58	60	41	68

2.3 சம்பளம் மற்றும் மேலதிக நேரப் பிரிவு

பிரதிப் பணிப்பாளரின் (சம்பளம் மற்றும் மேலதிக நேரம்) நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்ற இப் பிரிவானது திணைக்களத்திலுள்ள சுமார் 2300 ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. எனவே, தமது இறக்குமதி மற்றும் ஏற்றுமதியுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளை துரிதப்படுத்திக்கொள்வதற்காக பொதுவான அலுவலக நேரங்களின் பின்னர் சுங்கத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகின்ற இறக்குமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடமிருந்து அறவீடு செய்து குறித்த பணியின் போதான மேலதிக நேரத்தைக் கணிப்பிட வேண்டியுள்ளது. இவ்வாறு அறவிடப்படுகின்ற பணத்தொகையானது சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தகவல்

மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியக் கணக்குகள் போன்றவற்றுக்கு மத்தியில், அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டங்களின் பிரகாரம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

பிரதான தொழிற்பாடுகள்

- திணைக்களத்தின் 2300 இற்கும் மேலான ஒழியர்களுக்கு சம்பளங்களைச் செலுத்துதல்.
- மேலதிக நேரம், சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதிக்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினை தயாரித்தல்.
- சம்பந்தப்பட்ட தரப்பினர்களிலிருந்து (கப்பல் முகவர்கள், விமான நிறுவனங்கள், களஞ்சியசாலை) மேலதிக நேர வருவாய்களை மதிப்பீடு செய்து சேகரித்தல்.
- சகல பணியாளர்களுக்கும் மேலதிக நேர கொடுப்பனவினை மேற்கொள்ளல்.
- காலத்திற்கு காலம் மேலதிக நேர கட்டணங்களை மீளாய்வு செய்வதற்கும் அவற்றைத் திருத்துவதற்கும் சிபாரிசினை மேற்கொள்ளல்.
- சுங்க மேலதிக நேரம், சரக்கு பரிசோதனைக் கட்டணம் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதி தொடர்பிலான இறுதிக் கணக்குகளை தயாரித்தல்.

இதற்கிணங்க, கடந்த இரண்டு வருடங்களுக்கான சுங்க மேலதிக நேரம், சரக்குப் பரிசோதனைக் கட்டணங்கள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிதியக் கணக்குகள் குறித்தான ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயற்பாடுகள் பின்வருமாறு

(அ) சுங்க மேலதிகநேர நிதியம்

விபரம்	**ரூபா. மில்**	
	2021	**2022**
மேலதிக நேர வருமான பெறுவனவு	871.90	844.54
அரசாங்கத்திற்கான பங்களிப்பு	86.89	84.64
மேலதிக நேர செலவினம்	949.79	941.21
மிகை/ பற்றாக்குறை	(164.77)	(181.31)
திரட்டிய நிதி	1,959.09	1,777.77

(ஆ) சரக்குப் பரிசோதனை மற்றும் தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிதியங்கள்

விபரம்	**சரக்குப் பரிசோதனைக் கட்டண நிதியம்**		**தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிதியம்**	
	(ரூபா.மில்)			
	2021	**2022**	**2021**	**2022**
வருமானம்	253.38	228.16	14.980	14.98
செலுத்துகைகள்	94.72	142.71	11.981	11.98
அரசாங்கத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டது	94.67	129.94	2.999	2.99

(இ) சம்பளம் செலுத்துகை பற்றிய விபரங்கள் வருமாறு

வருடம்	**ஊழியர்களின் எண்ணிக்கை**	**செலுத்திய மொத்தத் தொகை (ரூபா.மில்)**
2021	2,344	1,483.89
2022	2,271	1,600.91

2.4 நிதி முகாமைத்துவப் பிரிவு

பிரதிப் பணிப்பாளரின் (நிதி முகாமைத்துவம்) நேரடி கண்காணிப்பின் கீழ் வருகின்ற இப் பிரிவானது சுங்கத் தீர்வைகள் நீங்கலாக பெறப்படுகின்ற அனைத்து வைப்புக்களையும் பெறுதல், பதிவுசெய்தல் மற்றும் கணக்கிடுதல் போன்ற பணிகளுக்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது. இத்தகைய பெறுதல்களில் அபராத விதிப்பனவுகள், விற்பனை வருமானங்கள் மற்றும் ஏனைய பல்வேறு வைப்புகள் போன்றன உள்ளடங்குகின்றன. அபராதங்கள் மற்றும் விற்பனை வருமானங்கள் போன்றன முதலில் பிரதான வைப்பனவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதோடு, விசாரணை மற்றும் மேன்முறையீட்டு நடவடிக்கைகள் நிறைவடைந்ததும், அத்தகைய பெறுகைகள், சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 152 ஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் பிரகாரம் சுங்க வெகுமதி நிதியம், சுங்க அலுவலர்கள் இழப்பீட்டு நிதியம் மற்றும் பிற பொதுவான நிதியம் ஆகியவற்றுக்கு மாற்றப்படுகின்றன.

பிரதான தொழிற்பாடுகள்

- சுங்க வெகுமதி நிதியம் மற்றும் சுங்க அலுவலர்கள் நஷ்டஈடு மற்றும் முகாமைத்துவ நிதியத்திற்கான வரவு செலவுத்திட்டங்களை தயாரித்தல்.
- அதிகாரமளிக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் (ARABA கணக்கு) எல்லைகளை தீர்மானித்தல்.
- சட்டபூர்வமான கொடுப்பனவுகள், கேள்வு வைப்புகள் மற்றும் ஏனைய நானாவித வைப்புகளுக்கான தற்காலிகத் தடுத்துவைத்தல் வைப்புக் கணக்குக்கான பண வைப்புப் பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் வங்கிகள் மற்றும் காசாளர் ஊடான வைப்புகள் மூலம் பெறப்பட்ட சகல பற்றுச்சீட்டுகளையும் பதிவு செய்தல்.

- வருமானப் பிரிவின் கணக்கிடல் மற்றும் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக, காசாளர் கரும பீடங்களுக்கான நாளாந்த காசுப் பதிவுகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்.
- வெகுமதிகள் செலுத்தும் போது, தற்காலிக பேணுகை வைப்புக் கணக்கிலிருந்து வெகுமதி நிதியம், சுங்க அலுவலர்கள் முகாமைத்துவ நிதியம், திரட்டு நிதியம் மற்றும் ஏனைய நிதியங்களுக்கு மாற்றுக் கட்டளை மூலம் பற்றுச்சீட்டுத் தொகைகளை அனுப்புதல்.
- வெகுமதிக் கோவைகள் தொடர்பிலான கொடுப்பனவுகளை செயன்முறைப்படுத்தும் போது பதியப்பட்டுள்ள விற்பனைகள் மற்றும் அபராதங்களை சரிபார்த்தல்.
- குழுக் கட்டணம், பொதுவான கட்டணம் மற்றும் பரிசோதனைக் கட்டணங்களை சுங்க அதிகாரிகளுக்கு செலுத்துவதற்கான கோரிக்கைகளைத் தயாரித்தல்.
- சுங்க வெகுமதி நிதியம், சுங்க அலுவலர்கள் நஷ்டஈட்டு மற்றும் முகாமைத்துவ நிதியம், தற்காலிக பேணுகை வைப்புகள் கணக்குகள், பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட முற்பணக் கணக்கு (ARABA) என்பவற்றுக்கான இறுதிக் கணக்குகளை அல்லது வருடாந்த கணக்கிணக்கக் கூற்றுக்களை தயாரித்தல்.

அ. இதற்கிணங்க, பின்வரும் நிதிக் கூற்றுக்கள் மாற்றியமைக்கப்பட்ட அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்படுவதோடு, அத்தகைய கூற்றுக்கள் கணக்காய்வுக்காக கணக்காய்வுத் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

- சுங்க அலுவலர்களது வெகுமதி நிதியம்
- சுங்க அலுவலர்கள் இழப்பீடு மற்றும் முகாமைத்துவ நிதியம்

விபரம்	சுங்க வெகுமதி நிதியம் (ரூபா மில்)		சுங்க அலுவர்களது முகாமைத்துவ மற்றும் நஷ்டஈட்டு நிதியம் (ரூபா மில்)	
	2021	2022	2021	2022
வருமானம்	2,848.2	3,517.7	896.5	1,553.6
செலவினம்	2,726.0	3,300.3	41.2	53.9
மிகை/ பற்றாக்குறை	122.2	217.4	855.3	1,499.7
நிலையான சொத்துகள்	-			
நிதி மீதி	1,202.8	1420.2	8,566.3	10,072.7
செலுத்தத்தகு வெகுமதிகள்	2,575.1	1944.5	1,509.2	990.5

ஆ. மேலும்,"பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் தொடர்பிலான முற்பணக் கணக்கு" எனும் முற்பணக் கணக்கானது, சட்டவிரோதமாக இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற மற்றும் சுங்கத்தினால் பறிமுதல் செய்யப்படுகின்ற பொருட்களை அல்லது பண்டங்களை அகற்றுவதுடன் தொடர்புடைய செலவினங்களை எதிர்கொள்ளும் நோக்கில், இந்தப் பிரிவினாலேயே கையாளப்படுகின்றது. இத்தகைய செலவினங்கள் குறித்த பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களை விற்றுப் பெறப்படும் வருமானங்கள் மூலம் ஈடு செய்யப்படுகின்றன.

பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்கள் முற்பணக் கணக்கு தொடர்பிலான கடந்த இரண்டு வருடங்களுக்கான விபரங்கள் பின்வருமாறு,

விபரம்	2021 (ரூபா மில்)			2022 (ரூபா மில்)		
	செலவினம்	பெறுவனவுகள்	மீதி	செலவினம்	பெறுவனவுகள்	மீதி
வரையறைகள்	18.0	4.0	85.0	18.0	6.0	85.0
உண்மை	4.1	4.05	34.4	4.4	9.1	29.7

இ. மேற்படி நிதியங்களுக்கு மேலதிகமாக, பின்வரும் வைப்புக் கணக்குகளும் இப்பிரினால் பேணப்படுகின்றன.

விபரங்கள்	வைப்புக் கணக்கின் பெயர் (ரூ.மில்)					
	கேள்வுமனு		சட்டபூர்வ செலுத்துகை பற்றிய தற்காலிக பிடிமானம்		பயணிகளால் கொண்டுவரப்பட்ட பொருட்களுக்கான வைப்புகளை நிறுத்திவைத்தல்	
	2021	2022	2021	2022	2021	2022
ஆரம்ப மீதி	82.1	59.2	13,461.4	13,687.2	8.8	7.4
ஆண்டுக் காலப் பகுதியிலான பெறுவனவுகள்	199.4	175.2	16,293.3	17,637.8	1.0	1.1
	281.5	**234.4**	**29,754.7**	**31,325.0**	**9.8**	**8.5**
ஆண்டுக் காலப் பகுதியிலான செலுத்துகைகள்	222.3	148.2	16,067.5	19,434.3	0.4	1.8
இறுதி மீதி	**59.2**	**86.2**	**13,687.2**	**11,890.7**	**9.4**	**6.7**

2.5 வரி பிரிவு

நிதிப் பணிப்பகமானது, உத்தரவாதங்களை வநியோகித்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்கும், மற்றும் திணைக்களத்தின் ஊழியர்களுக்கான உழைக்கும் போது செலுத்தும் வரி பற்றிய தரவுத் தளத்தனை நிர்வகிப்பதற்குமான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் ஊழியர்கள், தமது சாதாரண சம்பளங்களுக்கும் மேலதிகமாக மேலதி நேரக் கொடுப்பனவு, ஊக்குவிப்புப் படிகள், வெகுமதிப் படிகள், குழு பரிசோதனைப் படிகள் மற்றும் பொது ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் போன்ற இன்னோரன்ன நிதி சார்ந்த அனுகூலங்களைப் பெறுவதற்கு சலுகையுடையவர்களாக இருக்கின்ற காரணத்தினால் ஏனைய அரச ஊழியர்களுடன் ஒப்பிடுகையில் பிரதான வரி செலுத்துனர்களாக விளங்குகின்றனர். வரி பிரிவானது, ஒவ்வொரு ஊழியர்களுக்குமான உழைக்கும் போது செலுத்தும் வரியைக் (PAYE) கணிப்பிட்டு அத்தகைய அறவீடுகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கிரம அடிப்படையில் அனுப்பி வைக்கிறது.

- வரி மற்றும் இதர சேவைகள் பிரிவின் பிரதான தொழிற்பாடுகள்

  - வரிப் பிரிவு
    - திணைக்களத்தின் 2300 இற்கும் மேற்பட்ட ஊழியாகளுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் மீதான உழைக்கும் போது செலுத்தும் வரியினை (வெகுமதி, பொதுவானது, குழு) மாதாந்த அடிப்படையில் கணிப்பிடுதல்.
    - உழைக்கும் போது செலுத்தும் வரியினை அறவீடு செய்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல்.
    - வரித் தரவுத்தளத்தினைப் பேணுதல்.
    - உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் ஊழியர்களுக்கும் வரித் திரும்பல்களை (படிவம் ரீ.10) விநியோகித்தல்

  - இதர சேவைகள்
    - நிதிப் பணிப்பகத்திற்கான பொது நிர்வாக உதவியினை வழங்குதல்.
    - வரவு, விடுப்பு, களஞ்சியங்கள் போன்றவற்றைக் கண்காணித்தல்.
    - அலுவலர்களுக்கு வருமான அறிக்கைகளை விநியோகித்தல்.
    - இப் பிரிவின் tapol இனை நிர்வகித்தல்.

உழைக்கும் போது செலுத்தும் வரி பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

வரி ஆண்டு	ஊழியர்களின் எண்ணிக்கை	அறவிடப்பட்ட உழைக்கும் போது செலுத்தும் வரி (ரூ.மில்)
2020ஏப்ரல் – 2021 மார்ச்	1,507	22.688
2021 ஏப்ரல் – 2022 மார்ச்	1,598	42,084

2.6 சிறாப்பர் பிரிவு

இப்பிரிவானது பிரதிப் பணிப்பாளரின் (செலுத்துகை) கண்காணிப்பின் கீழ் நிர்வாக உத்தியோத்தர் ஒருவரின் தலைமையில் உள்ளது. தற்போது, இப்பிரிவில் சிறாப்பர்களாக பணியாற்றுவதற்காக 22 முகாமைத்துவ உதவி அலுவலர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.
அம்பாந்தோட்டை, கட்டுநாயக்க விமானநிலையம் பலாலி விமான நிலையம் மற்றும் தலைமை அலுவகம் உள்ளடங்கலாக 21 சிறாப்பர் கருமபீடங்கள் நாடளாவிய ரீதியில் உள்ளன. இந்த 21 கருமபீடங்களில், 10 கரும பீடங்கள் வாராந்தம் 24 மணித்தியாலங்களும் திறந்துள்ளன.

2.7 நிதி பணிப்பகத்தின் பணிகள் பற்றிய முக்கிய விடயங்கள்

பரிவர்தனை வகை	அளவு	ஆண்டுக்கான பெறுமதி (அண்ணளவாக)
சிறாப்பர்களிடமிருந்தான PIV பெறுவனவுகள்	ஒரு மாதத்திற்கு 125,000	ரூபா. 703 பில்.
வரி வருமான சேகரிப்பு (ஒன்லைன் வங்கி)	ஒரு மாதத்திற்கு 100,000	
செலுத்துக்கைகள்	4000 பற்றுச்சீட்டு	ரூபா. 5 பில்.
வெகுமதிகளது செலுத்துகைகள்	257 கோவைகள்	ரூபா. 3 பில்.
சம்பளங்கள் செலுத்துகைகள்	மாதாந்தம் சராசரி 2375 பணியாட்டொகுதியினர்	ரூபா. 12 பில்.
பொதுவான ஊக்குவிப்புக் கொடுப்பனவு/ குழு செலுத்துகைகள்	22 பொதுவான ஊக்குவிப்புக் கொடுப்பனவு கோவைகள்	ரூபா. 0.3 மில்.
மேலதிக நேர செலுத்துகைகள்	மாதாந்தம் சராசரி 2200 நபர்கள்	ரூபா. 1.1 மில்.
வரி அறவீடு (உழைக்கும் போது செலுத்தும் வரி)	சேகரிப்புகளது எண்ணிக்கை 122,442	ரூபா. 0.1 மில்.
பயணம்	ஒரு மாதத்திற்கு 500 ஊழியர்கள்	ரூபா. 91 மில்.

8.6.3 அரசிறை இலக்குச் செயலணி பணிப்பகம்

அறிமுகம்

அரசிறை இலக்குச் செயலணிப் பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடியான கண்காணிப்பின் கீழ் இயங்கி வருவதோடு, இப்பணிப்பகமானது ஒருமைப்பாட்டினை ஊக்குவித்தல் மற்றும் ஒழுங்கற்ற நடைமுறைகளையும் அத்துடன் சுங்கத்தின் சீரான தொழிற்பாட்டினைப் பாதிக்கின்ற ஏனைய ஏதேனும் ஒழுங்கற்ற விடயங்களையும் நீக்கும் நோக்கில், விரைந்து செயற்பட்டு, சுங்கத் திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும் கண்காணித்தல்.

இப் பணிப்பகமானது ஒரு சுங்கப் பணிப்பாளரின் தலையின் கீழ், சுங்கப் பிரதிப் பணிப்பாளர்கள், சுங்க அத்தியட்சகர்கள், சுங்கப் பிரதி அத்தியட்சகர்கள், சுங்க உதவி அத்தியட்சகர்கள், சுங்கப் பரிசோதகர்கள், சுங்க காவலர்கள் மற்றும் எழுதுவினைஞர் பணியாளர்கள் போன்றோரைக் கொண்டுளளது.

மேலும் அரசிறை இலக்குச் செயலணிப் பணிப்பகமானது, அனைத்துச் சரக்குகளும் பிற அனைத்து விதிமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய, சம்பந்தப்பட்ட அனைத்து உரிய அறவீடுகளையும் செலுத்தியுள்ளமையினை உறுதிப்படுத்தும் நோக்கில் அனைத்து இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளைக் கண்காணிப்புச் செய்வதுடன், பிரத்தியேகப் பொதிகள், அஞ்சல் மற்றும் கூரியர் பொதிகள் உள்ளடங்கலாக ஏதேனும் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்ற பொருட்களையும் விசாரணை செய்வதற்காக அவை தொடர்பில் தலையீடு செய்து அவற்றை மீள்-பரிசோதனை அல்லது பறிமுதல் செய்வதற்குரிய அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மேலும் இப் பணிப்பகமானது, விமான நிலையங்கள், விமானச் சரக்கு இல்லம், கூரியர் பொதிக் களஞ்சிய சாலைகள், பயணிகளுடன் வராத பொதிக் களஞ்சியசாலைகள், அஞ்சல் பொதி, பொதுவான சரக்கு, முதலீட்டுச்சபைச் சரக்கு, பிணைப்படுத்தப்பட்ட சரக்கு மற்றும் ஏற்றுமதிச் சரக்கு போன்றவற்றில் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்கின்றது.

இப்பணிப்பகத்தின் பிரதான குறிக்கோள், திணைக்களத்தின் ஒட்டுமொத்தச் செயற்பாடுகளையும் கண்காணிப்பதோடு முழுக் கட்டுப்பாடு தொடர்பில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பக்கபலமாகவிருத்தலுமாகும். மேலும் பொதுமக்கள் வழங்குகின்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் பணியாட்கள் திரட்டுகின்ற உளவுத் தகவல்களைக் கொண்டும் பல்வேறு சட்ட அமுலாக்கங்களையும் மேற்கொள்கின்றது.


அரசிறை இலக்குச் செயலணியானது நீள் அறை, களஞ்சியசாலைகள், விமானச் சரக்கு, தபால் மூலமான பொதி, கூரியர் சேவைகள் மற்றும் பொருள் வெளியாக்கத்திற்கான ஏனைய விசேட நடைமுறைகள் தொடர்பில் பொருட்களது வெளியாக்கல் மீதான கண்காணிப்பினையும் மேற்கொள்கின்றன.


பிரதான தொழிற்பாடுகள்

1. திணைக்களத்தினுள் ஒருமைப்பாட்டினை ஊக்குவித்து, அங்கு காணப்படுகின்ற ஒழுங்குமுறையற்ற நடைமுறைகளை நீக்குதல்.
2. முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் எழுகின்றவிடத்து அது தொடர்பில் உடனடியாக பதிலளித்தல்.
3. நெருக்கடிமிகு நிலைமைகளின் போது தேவையான வளங்கள் ஒன்றுதிரட்டி சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு உதவுதல்.
4. இறக்குமதி செய்யப்படுகின்ற அல்லது ஏற்றுமதி செய்யப்படுகின்ற எந்தவொரு பொருளையும் இடைமறித்து மீள் பரிசோதனை செய்வதோடு, அது தொடர்பில் பின்பற்றியுள்ள நடைமுறைகளின் சரியான தன்மையினையும் உறுதிசெய்தல்.
5. விமானநிலையத்திலோ அல்லது பயணிகள் உடன் வராத பொதி களஞ்சியசாலைகளிலோ பயணிகளையும் அவர்களது பொதிகளையும் இடைமறித்துப் பரிசோதித்தல்
6. தபால் பொதி, கூரியர் சேவைகள் மூலம் வருகின்ற பொருட்களின் வெளியாக்கல் மற்றும் அவற்றை வெளியாக்குதல் தொடர்பிலான ஏனைய விசேட நடைமுறைகள் என்பவற்றில் விழிப்புடனான கண்காணிப்பினை பேணுதல்.

1. மொத்த அறவீடுகள் - பிரதான அலுவலகம், பயணி உடன் வராத பொதி மற்றும் நடமாடும் பிரிவு (ரூபா)


	பயணி உடன் வராத பொதி	பிரதான அலுவலகம்	நடமாடும் பிரிவு	மொத்தம்
அபராதம் / பறிமுதல்கள் / தணிக்கப்பட்ட பறிமுதல்	164,610,891	397,343,248	287,105,755	849,059,894
தீர்வைகளும் ஏனைய அறவீடுகளும் / மே.ப(இ.மு தலைப்பபு திருத்தம்)	65,847,291	109,210,762	14,939,710	189,997,763
விற்பனை வருமானங்கள்	47,670	14,409,315	0	14,456,985
மொத்தம்	**230,505,852**	**520,963,325**	**302,045,465**	**1,053,514,642**






1.1. பிரதான அலுவலகம் : தீர்வை, அறவீடுகள், அபராதம் மற்றும் விற்பனை வருமானங்கள் 2022 (ரூபா)

மாதம்	தீர்வைகளும் ஏனைய அறவீடுகளும்	அபராதம் / பறிமுதல்கள் / தணிக்கப்பட்ட பறிமுதல்	விற்பனை வருமானங்கள்	மொத்தம்
ஜனவரி	1,953,628	16,224,964	0	18,178,592
பெப்ரவரி	110,036	30,349,125	0	30,459,161
மார்ச்	4,981,096	66,408,055	0	71,389,151
ஏப்ரல்	1,447,573	41,768,728	0	43,216,301
மே	2,233,588	32,066,020	0	34,299,608
ஜூன்	3,748,718	23,376,955	0	27,125,673
ஜூலை	3,213,757	4,309,415	0	7,523,172
ஓகஸ்ட்	6,069,479	26,794,368	5,000,000	37,863,847
செப்டம்பர்	8,475,038	24,887,402	0	33,362,440
ஒக்டோபர்	15,657,881	35,185,982	9,347,625	60,191,488
நவம்பர்	9,160,840	28,795,930	61,690	38,018,460
டிசம்பர்	21,639,630	61,176,304	0	82,815,934
மொத்தம்	**78,691,264**	**391,343,248**	**14,409,315**	**484,443,827**




1.2. பயணி உடன் வராத பொதி : தீர்வைகள், அறவீடுகள் மற்றும் அபராதம் -2022 (ரூபா)

மாதம்	தீர்வைகளும் ஏனைய அறவீடுகளும்	அபராதம் / பறிமுதல்கள் / தணிக்கப்பட்ட பறிமுதல்	விற்பனை வருமானங்கள்	மொத்தம்
ஜனவரி	3,740,040	4,165,580	0	7,905,620
பெப்ரவரி	3,050,942	1,804,584	0	4,855,526
மார்ச்	7,219,969	3,625,855	0	10,845,824
ஏப்ரல்	4,329,753	391,982	0	4,721,735
மே	4,696,771	1,953,881	0	6,650,652
ஜூன்	4,122,679	6,223,187	0	10,345,866
ஜூலை	5,070,324	3,224,391	0	8,294,715
ஓகஸ்ட்	5,937,382	24,255,579	47,670	30,240,631
செப்டம்பர்	12,392,087	17,479,104	0	29,871,191
ஒக்டோபர்	9,236,667	28,539,295	0	37,775,962
நவம்பர்	4,480,119	27,469,321	0	31,949,440
டிசம்பர்	1,570,558	45,478,132	0	47,048,690
மொத்தம்	**65,847,291**	**164,610,891**	**47,670**	**230,505,852**



1.3. நடமாடும் பிரிவு : தீர்வைகள், அறவீடுகள் மற்றும் அபராதம் – 2022 (ரூபா)

மாதம்	தீர்வைகளும் ஏனைய அறவீடுகளும்	அபராதம் / பறிமுதல்கள் / தணிக்கப்பட்ட பறிமுதல்	விற்பனை வருமானங்கள்	மொத்தம்
ஜனவரி	0	9,685,660	0	9,685,660
பெப்ரவரி	0	3,379,013	0	3,379,013
மார்ச்	0	24,813,968	0	24,813,968
ஏப்ரல்	0	36,445,509	0	36,445,509
மே	2,752,258	12,067,943	0	14,820,201
ஜூன்	0	19,178,869	0	19,178,869
ஜூலை	1,617,455	9,991,651	0	11,609,106
ஓகஸ்ட்	0	9,655,710	0	9,655,710
செப்டம்பர்	0	35,015,548	0	35,015,548
ஒக்டோபர்	9,030	52,248,836	0	52,257,866
நவம்பர்	0	50,230,406	0	50,230,406
டிசம்பர்	1,740,104	24,392,642	0	26,132,746
மொத்தம்	**6,118,847**	**287,105,755**	**0**	**293,224,602**




2. 2022 ஆண்டுக் காலப்பகுதியிலான செயலாற்றுகை (ரூபா)

மாதம்	தீர்வைகளும் ஏனைய அறவீடுகளும்	அபராதம் / பறிமுதல்கள் / தணிக்கப்பட்ட பறிமுதல்	விற்பனை வருமானங்கள்	மொத்த அறவீடுகள்
ஜனவரி	5,693,668	30,076,204	0	35,769,872
பெப்ரவரி	3,160,978	35,532,722	0	38,693,700
மார்ச்	12,201,065	94,847,878	0	107,048,943
ஏப்ரல்	5,777,326	78,606,219	0	84,383,545
மே	9,682,617	46,087,844	0	55,770,461
ஜூன்	7,871,397	54,779,011	0	62,650,408
ஜூலை	9,901,536	17,525,457	0	27,426,993
ஓகஸ்ட்	12,006,861	60,705,657	5,047,670	77,760,188
செப்டம்பர்	20,867,125	77,382,054	0	98,249,179
ஒக்டோபர்	24,903,578	115,974,113	9,347,625	150,225,316
நவம்பர்	13,640,959	106,495,657	61,690	120,198,306
டிசம்பர்	24,950,292	131,047,078	0	155,997,370
மொத்தம்	**150,657,402**	**849,059,894**	**14,456,985**	**1,014,174,281**


3. செயலாற்றுகை ஒப்பீட்டாய்வு : 2016, 2017, 2018, 2019, 2020, 2021 மற்றும் 2022 (ரூபா)

வருடம்	ஜனவரி	பெப்ரவரி	மார்ச்	ஏப்ரல்	மே	ஜூன்	ஜூலை	ஓகஸ்ட்	செப்டம்பர்	ஒக்டோபர்	நொவம்பர்	டிசம்பர்	மொத்தம்
2016	17,698,812	17,811,346	138,286,404	89,141,272	119,850,551	113,060,721	64,182,599	62,556,875	91,189,599	129,781,900	80,145,852	97,893,847	**1,021,599,778**
2017	66,144,454	75,714,798	127,269,787	69,029,645	110,082,914	123,500,044	52,390,280	80,939,513	56,554,884	68,507,892	95,581,361	93,856,568	**1,019,572,140**
2018	71,777,006	43,664,952	95,365,260	51,143,731	61,029,325	57,401,795	74,483,225	45,049,287	75,061,641	76,976,381	64,909,153	58,271,611	**775,133,367**
2019	49,698,510	39,240,402	108,407,495	109,312,985	63,012,892	35,264,648	128,786,509	83,242,220	62,247,164	69,953,464	122,664,049	86,279,538	**958,109,875**
2020	39,112,637	53,692,037	25,464,056	8,988,117	24,100,403	58,690,040	65,388,804	31,022,306	79,133,770	116,556,119	23,786,977	52,463,502	**578,398,768**
2021	36,888,630	69,252,619	75,108,398	46,358,479	45,156,992	53,449,188	48,817,749	69,930,879	60,676,187	84,035,927	56,332,065	44,886,278	**690,893,391**
2022	36,816,074	40,453,374	118,200,152	86,844,212	56,408,534	65,002,017	30,493,054	77,760,188	98,868,546	152,007,301	125,975,271	164,685,919	**1,053,514,642**



4. 2011 - 2022 வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மொத்த அறவீடுகள் (ரூபா)

	2011	2012	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022
அபராதம் / பறிமுதல்கள் / தணிக்கப்பட்ட பறிமுதல் மற்றும் தீர்வைகளும் ஏனைய அறவீடுகளும்	671,474,362	407,821,431	511,089,957	461,475,705	392,305,046	997,205,323	980,366,355	669,046,773	833,713,797	552,342,478	688,416,725	**1,039,057,657**
விற்பனை வருமானங்கள்	58,642,363	91,004,686	113,553,285	64,908,466	15,394,455	24,394,455	39,205,785	106,086,594	124,396,078	26,056,290	2,476,666	**14,456,985**
மொத்தம்	**730,116,725**	**498,826,117**	**624,643,242**	**526,384,171**	**1,021,725,682**	**1,021,599,778**	**1,019,572,140**	**775,133,367**	**958,109,875**	**578,398,768**	**690,893,391**	**1,053,514,642**



8.6.4 மேல்முறையீடுகள் பணிப்பகம்

அறிமுகம்

இலங்கைச் சுங்கத்தின் மேல்முறையீட்டுப் பணிப்பகமானது, உலக சுங்க அமைப்பின் மீளமைக்கப்பட்ட கியோட்டோ சமவாயம் மற்றும் உலக வர்த்தக அமைப்பகத்தின் வர்த்தக இலகுபடுத்தல் உடன்படிக்கை ஆகியவற்றின் ஏற்பாடுகளில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள சர்வதேச வியாபார நடைமுறைகளுக்கு இணங்க தாபிக்கப்பட்டதாகும்.

இப்பணிப்பகமானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி கண்காணிப்பின் கீழ் தொழிற்படுகின்றது.

சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமாக சமர்ப்பிக்கப்படுகின்ற மேல்முறையிடுகளை பரிசீலித்து, விடயங்களை சரிபார்த்த பின்னர் உரிய பரிந்துரைகளை மேற்கொண்டு தொடர் நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்குவதே இப்பணிப்பகத்தின் குறிக்கோளாகும்.

மேல்முறையீடுகளை மீளாய்வு செய்வதற்கும் மற்றும் பொருத்தமானவிடத்து நிருவாக நடவடிக்கையினை அல்லது பணியிலக்கினை சரிசெய்வதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்குமாக வினைத்திறன் மிக்கதொரு மேல்முறையீட்டு பொறிமுறையினை நிறுவும் வகையிலேயே இந்த மேல்முறையீட்டுக் குழு தாபிக்கப்பட்டது. சுங்கப் பணிப்பாளர் (மேல்முறையீடு) ஒருவர் தனது பதவியின் தத்துவத்தின் அடிப்படையில் ஒரு உறுப்பினராக இருக்கின்ற அதேசமயம் ஏனைய உறுப்பினர்களும் இக்குழுவில் ஒரு ஒழுங்குமுறையாக கலந்து கொண்டு அவருக்கு உதவியாக அங்கம் வகிப்பர்.

சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் குறித்த சுங்கப் பணிப்பாளருக்கு (மேல்முறையீடு) அனுப்பி வைக்கப்படுகின்ற மேல்முறையீடுகள், அவற்றின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் நோக்கம் என்பவற்றினை உறுதிப்படுத்தும் வகையில் குறித்த சுங்கப்பணிப்பாளரால் (மேல்முறையீடுகள்) பரிசீலிக்கப்படுகின்றன. மேல்முறையீட்டின் செய்முறைக்காக மேலதிக தகவல்கள் மற்றும் விடயங்களை தேவைப்படுகின்ற அத்தகைய குறித்த மேல்முறையீடுகள், சம்பந்தப்பட்ட விடயம் தொடர்பில் விரிவான அறிக்கைகள் மற்றும் மேலதிக விபரங்களை பெறுவதற்காக சம்பந்தப்படுகின்ற பணிப்பகங்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய விபரங்களை பெற்ற பின்னர் மாத்திரமே, குறித்த மேல்முறையீடு தொடர்பில் ஏதேனும் நிவாரணத்தினை பெற்றுக் கொடுப்பதற்காக, அது சுங்கப் பணிப்பாளரால் (மேல் முறையீடுகள்) மேல்முறையீட்டுக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

எனவேதான், ஒவ்வொரு வருடமும் மேல்முறையீட்டுக் குழுவுக்கு அனுப்பப்படுகின்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கையானது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த பணிப்பகத்திற்கு ஆற்றுப்படுத்தப்படுகின்ற மேல்முறையீடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அமையுமென்பது குறிப்பிடத்தக்கது.

இப்பணிப்பகத்தின் செலாற்றுகை

	செயலாற்றுகை	சதவீதம் %
2022ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மேல்முறையீடுகளது எண்ணிக்கை	96	-
2021 டிசம்பர் முடிவில் நிறைவுபெறாத மேல்முறையீடுகளது எண்ணிக்கை	23	-
2022ஆம் ஆண்டில் கருத்தில் எடுப்பதற்கான மேல்முறையீடுகளது மொத்த எண்ணிக்கை	119	-
2022ஆம் ஆண்டில் கருத்தில் எடுக்கப்பட்ட மேல்முறையீடுகளது மொத்த எண்ணிக்கை	108	90.75%
2022ஆம் ஆண்டில் நிறைவுபெற்ற மேல்முறையீடுகளது எண்ணிக்கை	84	70.58%
பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள மேல்முறையீடுகளின் எண்ணிக்கை	84	70.58%

8.6.5 உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) பிரிவு

அறிமுகம்

1990ஆம் ஆண்டின் 40ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1994ஆம் ஆண்டின் 08ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டமானது இலங்கை அரசாங்கத்தின் உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) கொள்கைகளை அமுல்படுத்துவதற்கான சட்டமாகும்.

நிதி அமைச்சின் கீழான இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற இப்பிரிவானது உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தவதற்கான பொறுப்புடனும் தேசத்தின் நலனுக்காகச் செய்யப்படும் ஒழுங்கு விதிகளுடனும் பொறுப்புள்ள அரச முகவராக முக்கிய பணியினை நிறைவேற்றுகிறது.

பிரதான தொழிற்பாடுகள்

1. சிகரெட்டுகள் மற்றும் பிற தயாரிப்பு நிறுவனங்களை கண்காணித்து அவற்றைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக உரிய அரசிறையினைத் துல்லியமாக சேகரித்தல்
2. உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) வரிச் சட்டத்திற்கேற்ப சட்ட அமுல்படுத்தல் அதிகார சபையாக செயற்பட்டு, இறக்குமதி செய்யப்படுகின்ற மற்றும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களில் இருந்து உற்பத்தி வரியினை சேகரித்தல்
3. உற்பத்தி வரியை விதித்தலுடன் தொடர்புபட்ட சகல நடவடிக்கைகளிலும் ஈடுபடல்

நோக்கெல்லையும் குறிக்கோள்களும்

இப்பிரிவின் நோக்கெல்லையானது இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்படும் பொருள் மீது விதிக்கப்படும் உற்பத்தி வரி வருமானத்தை திறமையாக சேகரிப்பதற்கும் மற்றும் அதன் மூலம் தேசிய அபிவிருத்திச் செயன்முறைக்கு உதவுவதுமாகும்.

இப்பிரிவின் குறிக்கோள்கள் வருமாறு;

அ. 1989ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினை அமுல்படுத்தல்

ஆ. பெற்றோலியம், சிகரெட்டுகள், மென் பானங்கள், பந்தய வெளியீடுகள், உள்நாட்டில் பொருத்தப்படும் வாகனங்கள், கொழுப்பு அமிலம், பழரச பானங்கள் மற்றும் ஏனைய உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களிலிருந்தான வருவாய்களை பாதுகாப்பாக சேகரித்தல்.

முறைமை மற்றும் நடைமுறைகள்

இப்பிரிவின் தொடக்கம் முதற்கொண்டு, குறித்த சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளைக் கொண்ட வர்த்தமான அறிவித்தலானது காலத்திற்குக் காலம் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும் உற்பத்தி வரியின் கட்டமைப்பானது மேற்படி ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளுக்கு ஏற்ப அமுல்படுத்தப்பட்டன.

2022 ஆம் ஆண்டுக் காலத்தில் முக்கிய மாற்றங்கள்

சிகரட்டுக்களுக்கான உற்பத்தி வரி

I. சிகரெட்டுகள் தொடர்பான 2402.20, 2402.30, 2402.40, 2402.50 மற்றும் 2402.60 ஆகிய இயைபுமுறைக் குறியீடுகள் மீளமைக்கப்பட்டன. (2312/68ஆம் இலக்க 2022.12.31ஆந் திகதிய வர்த்தமான அறிவித்தல்)
II. உள்நாட்டில் பொருத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பிலான தீர்வைகள் MIB முறையின் கீழ் பிணைப் பிரிவினால் சேகரிக்கப்படுகின்றன. அதனை சரிசெய்ய நிதி அமைச்சு மற்றும் ஏனைய தொடர்புபட்ட தரப்பினருடன் கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது.

உற்பத்தி வரி விதிக்கத்தகு பொருட்களும் 2021 மற்றும் 2022இல் சேகரிக்கப்பட்ட (உள்நாடு) வருமானம் (ரூபா மில்)

	2021	**2022**
சிகரெட்டுகள்	90,698.92	103,57**0.84**
பெற்றோலியம்	9,078.63	2,398.34
மோட்டார் வாகனங்கள் (உள்நாட்டில் பொருத்தப்பட்டவை)	824.02	1,5**5.48**
மென் பானங்கள்	2,531.75	3,184.83
பந்தய வெளியீடுகள்	9.57	11.99
மின்சாரப் பொருட்கள் (உள்ளூர்) ஏனையவை	13.86	**0**
பழரசப் பானம்	153.52	189.68

பெற்றி அமிலம்	3.68	4.00
நீதிமன்ற வருமானம்	0.22	00
பதிவுக் கட்டணம்	0.004	0.009
முழு மொத்தம்	**103,314.17**	**109,515.17**

உள்ளூர்ச் செயற்பாடுகள்

உற்பத்தி வரிச் செலுத்துகையினை மேற்கொள்ளாத தயாரிப்பாளர்களுக்கு எதிராக உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலுவைத்தொகை மற்றும் அபராதங்களை அறவீடுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

எடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	04
முன்னெடுத்துச் செல்லப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	01
இக்காலப் பகுதியில் கோவையிடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	00
இக்காலப் பகுதியில் முடிவுறுத்தப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	03(பதிவுசெய்யாமைக்காக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன)
இக்காலப் பகுதியில் அறவிடப்பட்ட தொகை	00